

இஸ்லாமும் போதைப்பொருள் ஒழிப்பும்

ஒரு சமூக உளவியல் ஆய்வு

பேராசிரியர் மாலிக் பத்ரி

இஸ்லாமும்
போதைப்பொருள் ஒழிப்பும்

ஒரு சமூக உளவியல் ஆய்வு

பேராசிரியர் மாலிக் பத்ரி

தமிழில்:
அஷ்ஷெய்க் பி.எம்.எம். இர்பான் (நளீமி)

Islamum Pothaipporul Olippum

Tamil edition of

حكمة الإسلام في تحريم الخمر دراسة نفسية اجتماعية

Prof. Malik Badri

Translated by

Ash-Sheikh PMM Irfan (Naleemi)

ISBN 978-955-8398-61-6

Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka
Printed by Millennium Graphics, Maharagama
© Abd-al-Jabbar Muhammad Zaneer (2019)

உள்ளடக்கம்

வாசகர் கடன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ் வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப் படும்போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

ஆங்கில வெளியீட்டுக்கான முன்னுரை

கி.பி ஏழாம் நூற்றாண்டில், இஸ்லாத்தை தழுவிய ஆரம்ப கால அரபிகளுக்கு மத்தியில், மதீனா சமூகத்தில், மதுவுக்கு அடிமை யாதல் என்ற பிரச்சினையை தீர்த்து வைத்தல் என்ற விடயத்தில், இஸ்லாத்தின் வெற்றிகரமான அடைவு குறித்து சில குறிப்புகளை தருவதனை இந்த ஆய்வு இலக்காக கொண்டுள்ளது.

மதுவுக்கு மிக மோசமாக அடிமையாகியிருந்த, அதனை பழக்க தோஷமாக ஆக்கிக்கொண்டிருந்த முஸ்லிம்களின் நடத்தையிலும் போக்கிலும் செயல்திறன் மிக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவிய மிக முக்கிய ஆன்மீக, சமூக, உளவியல் காரணிகளை வெளிப்படுத்த இங்கு முயற்சித்துள்ளேன்.

நவீன காலத்திலோ பழைய காலத்திலோ மனித இன வரலாற்றில் என்றும், எங்கும் காணாத அந்த தனித்துவமான நிகழ்விலிருந்து சில படிப்பினைகளை உங்களோடு இவ்வாய்வில் நான் கலநதுரையாடுகிறேன். அதுதான் மது அருந்துவதிலிருந்து கூட்டமாக, சமூகமாக தவிர்ந்து கொண்ட நிகழ்வாகும். இதன் நிறைவாக இஸ்லாமிய நாடுகளில் பரவிப்போயுள்ள மதுவுக்கு

அடிமையாதல் என்ற பிரச்சினையை தீர்த்து வைப்பதிலும் மது வுக்கு அடிமையானோருக்கு உதவுவதிலும் இஸ்லாத்தை சார்ந்த வர்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய சாத்தியப்பாடுகளையும் ஆற்றல்களையும் கலந்துரையாடியுள்ளேன்.

இந்த ஆய்வை அரபு மொழியில், பாரம்பரிய முறைமை சார்ந்த விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளில் பின்பற்றக்கூடிய மொழி நடையில் எழுத உத்தேசித்திருந்தேன். எனினும் பின்னர் ஆங்கில மொழியில் எழுதினேன். சிறுபராயத்தில் எம்மைச் சூழ மதுப் பழக்கம் காணப்பட்ட போதிலும், அல்லாஹ்வின் அருளால் நாம் பெறுமானம் கொடுத்த இஸ்லாமியப் பாரம்பரியங்கள் எமது வாலிபப் பருவத்தில் மதுப்பாவனையிலிருந்து எம்மைப் பாது காத்தன. மார்க்கத்துக்காக பணியாற்றக் கூடிய, நபியின் தூதை பரப்பக்கூடிய, முஸ்லிம்கள் வாசிக்கும் விதமான மொழிநடை யில் இந்த ஆய்வை வெளியிட விரும்பினேன். ஆய்வு முறை மைகளை பேணிக் கொள்வதோடு எனது உணர்வுகளையும் சிந்த னைகளையும் இங்கு தெரிவித்துள்ளேன். வரட்சியான, இறுக்க மான நடையைத் தவிர்த்துள்ளேன்.

இந்த ஆய்வில் உள்ளடக்கிய சிந்தனைகளை அரபு மொழி பேசாத, முஸ்லிமல்லாத ஆய்வாளர்கள் மத்தியில் தெளிவான வடிவத்தில் முன்வைப்பதற்காகவே ஆங்கில மொழியில் வெளி யிட்டேன்.

அணிந்துரை

அகிலத்தார்களின் இரட்சகனான அல்லாஹ்வை போற்றி புகழ் கிறேன். ஸலாத்தும் ஸலாமும் இறுதி தூதர் மீதும், அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் உண்டாவதாக!

மகத்தான அல்குர்ஆன் 'உலக ஆசைகளை விரும்புதல்' போன்ற அனேக மானிட தோற்றப்பாடுகளை (Human phenomena) விளக் கிக் காட்டுவதற்கு பல அணுகுமுறைகளை பயன்படுத்துகிறது. அவற்றுள் ஒன்றுதான் ''அலங்கரித்துக் காட்டுதல்'' (தஸ்யீன்) என்பதாகும். பலதரப்பட்ட தாக்கக் காரணிகள் மூலமாக மனிதனது கற்பனையிலும் சிந்தனையிலும் தாக்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சியை இப்பிரயோகம் குறிக்கிறது. பேச்சும் உரையாடலும் அத்தகைய தாக்கக் காரணிகளுள் முதன்மை பெறுகின்றன. மோச மானதை நல்லது போன்றும், நல்லதை மோசமானது போலவும், சத்தியத்தை அசத்தியம் போன்றும், அசத்தியத்தை சத்தியம் போன்றும், விருப்புக்குரியதை வெறுப்புக்குரியதாகவும், வெறுப் புக்குரியதை விருப்புக்குரியதாகவும் காட்டுவதை இது குறிக் கிறது. இவ்வாறு அலங்கரித்துக் காட்டுவது ஷைத்தானிய வழி முறை என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

''ஷைத்தான் அவர்களுக்கு அவர்களது செயல்பாடுகளை அலங் கரித்துக் காட்டி, சத்தியப் பாதையிலிருந்து அவர்களை தடுத்து விட்டான்'' (நம்ல்: 24)

''ஷைத்தான் அவர்களது (பாவச்) செயல்களை அவர்களுக்கு அலங்கரித்துக் காண்பித்து, ''இன்று உங்களை வெற்றிகொள்வோர் மனிதர்களுள் எவருமில்லை. உங்கள் பக்கத்தில் நான் இருக்கி றேன் என்று கூறினான்''. (அன்பால்: 48)

''ஒவ்வொரு நபிக்கும் மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை எதிரிகளாக ஆக்கியிருநதோம். அவர்களில் சிலர் மற்றவரை ஏமாற்றும் பொருட்டு அலங்காரமான வார்த்தைகளை இரகசியமாக சொல்லிக் கொண்டிருந்தார்கள்''. (அன்ஆம்: 113)

இந்த 'மதிமயக்கும் அந்தரங்க உரையாடல்' என்ற அணுகு முறை பற்றி மனிதகுலமும் அறிந்தே வைத்திருந்தது. அரிஸ் டோடில் இதனை 'பேச்சு' என்று அழைக்கிறார். அரிஸ்டோட்டி லிடம் இது ஒரு வகையான தேன் ஒழுக பேசும் பேச்சு அல்லது கபடத்தனமான பேச்சு என்று பொருள்படுகிறது. பேசுபவர்ஒரு விடயம் குறித்த விருப்பத்தை அல்லது வெறுப்பை கேட்பவரிடம் ஏற்படுத்தும் பொருட்டு யதார்த்தத்தில் இல்லாத ஒன்றை தனது கற்பனையிலிருந்து கேட்பவருக்கு நகர்த்துவதை இது குறிக்கிறது. உதாரணமாக, தேன் என்பதை பழித்துரைக்க விரும்பும் ஒருவர் கேட்பவரின் உள்ளத்தில் அது பற்றிய மிக மோசமான பிம்ப மொன்றை ஏற்படுத்துவதற்கு, ''தேன் என்பது பெரிய குளவி களின் மலமும் எச்சமுமே'' என்று கூற முடியும். அதன் மீதான விருப்பத்தை ஏற்படுத்த விரும்பினால், ''தேன் என்பது பூக்களி லுள்ள தேனின் சாரமாகும். அது சுவை மிக்கது; நோய்களை குணப்படுத்த வல்லது…'' என அடுக்கிச் செல்ல முடியும்.இரண்டு கூற்றுகளும் சரியானவைதான். ஆனால் ஒவ்வொன்றுக்கும் தனி யான பொருள் கோடல் உள்ளது.

நவீனகால தொடர்பு சாதனங்கள் -அதிலும் குறிப்பாக விளம் பரக் கலை- முழுமையாக இந்த தத்துவத்தின் அடிப்படையில்தான் செயல்படுகின்றன. மனித சிந்தனைகளில் தாம் விரும்பியதை நல்லதாக அல்லது கெட்டதாக சித்தரித்துக் காட்ட இந்த தத்து

வத்தை அவை பயன்படுத்துகின்றன. தகவல் மற்றும் விளம்பரப் புரட்சியின் பின்னரான காலப்பகுதியில் இத்தகையதொரு அரசியலையே அவை கடைப்பிடிக்கின்றன. இந்த தத்துவத்தின் அடிப்படையில்தான் மென்பானங்கள், சிகரட் வகைகள், மதுபானங்கள், ஆடைகள், பல்வேறு பாவனைப் பொருட்கள், கோட்பாடுகள், சிந்தனைகள், ஆட்சி ஒழுங்குகள், தலைமைகள் ஆகிய அனைத்துமே விளம்பரப்படுத்தப்படுகின்றன. அதனால்தான் இந்த விளம்பர பிம்பங்கள் விரைவிலேயே சாயம் வெளுத்து அவற்றுக்கு மாற்றமான உண்மைகள் வெளிவருகின்றன,

இந்த வகையில் மது என்பது மனிதன் தன்னைத்தானே முட்டாளாக்கிக் கொள்ள முயன்ற முதன்மையான விடயங்களுள் ஒன்று எனலாம். பல்வேறு மௌட்டீக சமூகங்கள் அது பற்றிய பிம்பத்தை மக்கள் மனங்களுக்கு அழகாக்கிக் காட்ட முயன்றிருக்கின்றன. ஒரு ஜாஹிலிய்ய கவிஞர் பாடுவதைக் கேளுங்கள்:

‘‘நாம் அதனை அருந்தினால்
எம்மை அது மன்னர்களாகவும்
மோதத் தயங்காத சிங்கங்களாகவும் மாற்றி விடும்’’

இதனை ஒருவர் நம்பி ஏற்றுக் கொண்டு விட்டால், அதனை அருந்தியதுமே தான் ஓர் அரசனாக அல்லது மிகைக்க முடியாத வீரனாக மாறி விடலாம் என எண்ண முடியும்.

மது பற்றிய கவிதைகள் ஜாஹிலிய்யா காலத்திலும் இஸ்லாம் தோன்றிய பின்னரும் சுவாரசியமான, உள்ளத்தை தொடக் கூடிய, மிகவும் பிரபல்யமான கவிதைகளாக இருந்திருக்கின்றன. ஜாஹிலிய்யா கால மக்களுக்கு மது மிகவும் விருப்பத்துக்குரிய ஒன்றாக காணப்பட்டது. மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே அதன் கோர நகங்களிலிருந்து தப்பியிருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் இன்றைய மது உற்பத்தியில் அரைவாசிக்கு மேல் நுகர்பவர்களாக உள்ளனர். பழங் கால அரபிகளும் இதுபோலவே அல்லது இதனைவிட அதிகமாகவே மதுவின் மீது மையல் கொண்டவர்களாகவே இருந்தார்கள். அவர்களது இலக்கியங்கள் இதற்குச் சான்றாகும்.

இத்தகைய மனிதனது நிலை உண்மையில் ஆச்சரியமானது தான். ஏனெனில் வாழ்க்கைப் பயணத்தில் வழிகாட்டுவதற்கே அல்லாஹ் அவனுக்கு பகுத்தறிவை கொடுத்தான். பொறுப்பை நிறைவேற்றவும், அல்லாஹ்வுடனான ஒப்பந்தத்தை பேணவும், பிரதிநித்துவ பணியையும் உலகை வளப்படுத்தும் பணியையும் சரியாக மேற்கொள்ளவும், சோதனைகளுக்கு முகம்கொடுத்து வெற்றி பெறவும் இந்த அறிவு மனிதனுக்கு அவசியமானது. இந்த அறிவின் மூலமே தவறுகளை அவனால் தவிர்த்துக் கொள்ள முடியும். மனோஇச்சைக்கு கட்டுப்படாமல் விலக முடியும். தனது போக்கை சீர்திருத்த முடியும்.

'அலங்கரித்துக் காட்டுதல்' என்ற உபாயத்தை ஷைத்தான் பயன் படுத்தும்போது இந்த அறிவையே அவன் மழுங்கடிக்க முயற் சிக்கிறான். ஊசலாட்டங்களை ஏற்படுத்துவதற்கான அவனது ஆற்றல் அதிகரிக்கும். தனக்கு அலங்கரித்து காட்டப்படுவதை தவிர்ப்பதற்கும், தன்னை சுய விமர்சனத்துக்கு உற்படுத்துவதற் கும் அப்போதுதான் மனிதனிடம் அறிவோ மனச்சாட்சியோ இல் லாது போகும். இந்நிலையில்தான் அவன் போதைப்பொருளை நாடிச் செல்வான். சோர்வுற்ற அவனது கற்பனை ஷைத்தானோடு சமரசமும் செய்து கொள்ளும். அது மனித ஷைத்தானாகவோ ஜின் ஷைத்தானாகவோ இருக்கலாம். அப்பொழுது அவனது உள்ளத் திலே மதி மயக்கும் கற்பனைகள் தோன்றும். பாவங்களின் தாயாகிய மது பெரும் விருப்புக்குரியதாய் மாறும்.

அல்லாஹ் தன்னை நோக்கிய அழைப்புப் பணியை அதிகமாக தூண்டியுள்ளான். சுவனங்களை வர்ணித்துள்ளான். மனிதனுக்கு தான் சொரிந்த உள்ளார்ந்த வெளிப்படையான அருள்கள் பற்றி தெளிவுபடுத்தியுள்ளான். என்றாலும் இங்கெல்லாம் அவன் 'அலங் கரித்துக் காட்டுதல்' என்ற சொல்லை பயன்படுத்தவில்லை. மாற்ற மாக அறிவுபூர்வமான அணுகுமுறை, அழகிய உபதேசம் போன்ற சொற்களையே பயன்படுத்தியுள்ளான்.

''உங்களது இரட்சகனின் பாதையின்பால் அறிவுபூர்வாகவும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப்பு விடுப்பீராக!

(தேவையேற்படின்) அழகிய வழிமுறை மூலமாக அவர்களுடன் தர்க்கம் புரிவீராக!'' (அந்-நஹ்ல்: 125)

ஈமானோடு தொடர்பான விடயம் விளக்கப்படும் போது கூட 'விருப்பத்தை ஏற்படுத்தினான்' (ஹப்பப) என்ற சொல்லைத் தொடர்ந்தே 'அலங்கரித்துக் காட்டினான்' (ஸய்யன) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது:

''ஈமானை அவன் உங்களுக்கு விருப்பமுடையதாக்கி, உங்களது உள்ளத்தில் அதனை அலங்கரித்து காட்டினான். இறை நிராகரிப்பையும் (குப்ர்), பாவச் செயலையும், வரம்பு மீறலையும் உங்களுக்கு அவன் வெறுப்பாக்கினான்''. (அல்-ஹுஜுறாத்: 07)

ஏனெனில் 'அலங்கரித்துக் காட்டுதல்' என்பது -ஏலவே நாம் பார்த்தது போன்று- கற்பனையில் தங்கியிருப்பது. யதார்த்தத்தையோ, நடைமுறையையோ அது அடிப்படையாக கொண்டிருப்பதில்லை. அல்லாஹ்வின் பால் மக்களை அழைப்பவர்கள் கற்பனையின் பால் அழைக்காது உண்மையின்பால் அழைக்க வேண்டும். சத்தியத்தின்பால் மக்களை அவர்கள் செலுத்த வேண்டுமே தவிர அசத்தியத்தின்பால் அன்று.

அறிவை மறையச் செய்து, ஆற்றல்களை மழுங்கடிக்கச் செய்வதற்கான மனிதவிருப்பு என்பது அவனது இயலாமையின் வெளிப்பாடாகும். தான் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முன்னால் அல்லது வாழ்வின் உண்மைகளுக்கு முன்னால் அவன் இயலாமையை உணரும்போது, அறிவார்ந்த அணுகுமுறையிலிருந்து அல்லது தீர்வு தேடும் முனைப்பிலிருந்து விரண்டோடுகிறான். சிலபோது அவ்வாறு சவால்களுக்கு முகம்கொடுப்பதும் தீர்வு தேடுவதும் மது அருந்துவதை விட அல்லது போதைப் பொருள் பாவனையை விட இலகுவானதாக இருக்க முடியும். என்றாலும் அவன் அறிவை போக்கிக்கொள்வதையும், பிரச்சினைகளிலிருந்து தப்பியோடுவதையும், மதுவின் மடியில் வீழ்வதையுமே தேர்ந்தெடுக்கிறான்.

விபச்சாரம், களவு போன்றவற்றின் தண்டனையோடு ஒப்பிடும் போது மது அருந்தியதற்காக இஸ்லாம் வழங்கும் தண்டனை

குறைவானதாக கருதப்பட்டாலும், மதுவின் மீதும் இதர போதைப் பொருட்களின் மீதும் அது வெறுப்பூட்டி இருப்பது போன்று வேறு எதன் மீதும் வெறுப்பூட்டவில்லை. ஏனெனில் மனிதனுக்கு போதை ஏறிவிட்டால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத வித மாக அவன் நடந்துகொள்வான். அவதூறு பேசுவான். விபச்சாரம் செய்வான். கொலை புரிவான். திருடுவான். எவ்வளவு பெரிய பாவத்தையும் தயக்கமின்றிச் செய்வான். ஏனெனில் அவனது அறிவால் அவனது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ நிறுத் தவோ முடியாது. அறிவு நீங்கிவிட்ட நிலையில் அவன் அறிவை பயன்படுத்துவான் என்று எப்படி எதிர்பார்கக முடியும்? இந்த வகையில்தான் இஸ்லாம் மதுவை மிகக் கடுமையாக வெறுக்கிறது.

இஸ்லாம் தோன்றியபோது மதுவிலிருந்து மக்களை மீட்பதற் காக அதுகையாண்ட முறைமை தனித்துவமானது; வேறு பல பிறழ்வுகளைக் கையாள்வதற்கு அது பின்பற்றிய சிகிச்சை முறை களை விட வித்தியாசமானது. அதன் தீங்குகளை வெளிப்படுத்து வதிலும், ஜாஹிலிய்ய இலக்கியங்கள் அலங்கரித்துக் காட்டிய அசத்தியத்தை தோலுரிப்பதிலும் இஸ்லாம் படிமுறையான அணுகு முறையைக் கையாண்டது. அரேபிய உளவியலை கவனத்தில் கொண்டதாக அது அமைந்திருந்தது. பிற பெரும் பாவங்கள் தொடர்பாக நாம் காணாத வித்தியாசமானதோர் அணுகுமுறை அது. அறபிகள் ஒரு நாளில் காலையிலும் மாலையிலுமாக இரு தடவை மது அருந்துவோராக காணப்பட்டனர். காலையில் அருந் தும் மதுவை 'ஸப்பூஹ்' என்றும், மாலையில் அருந்தும் மதுவை 'கபூக்' என்றும் அவர்கள் அழைத்தனர். இரண்டுக்கும் என தனித் துவமான சம்பிரதாயங்களும் வர்ணனைகளும் அவர்களிடம் காணப்பட்டன. இந்த அன்றாட நேரசூசியை இஸ்லாம் மாற்றி யமைத்தது. அதற்கு முன்னர் மதுவில் சில பயன்கள் இருந்தாலும் பெரும் தீமையொன்றும் உள்ளது என்ற மறுக்க முடியாத உண்மையை அவர்களது உள்ளங்களில் ஆழப்பதியச் செய்தது.

''மதுவையும் சூதாட்டத்தையும் பற்றி (நபியே) அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். கூறுங்கள்: அந்த இரண்டிலும் மனிதர் களுக்குப் பெரும் தீங்கும் சில பயன்களும் இருக்கின்றன.

எனினும், அவற்றின் பயனைவிட தீமையே மிகப் பெரியது''. (அல்-பகறா: 219)

''நீங்கள் கூறுவதை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதனால், போதையுடன் இருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்''. (நிஸா: 43)

இதன் மூலம் பழக்கம், ஈர்ப்பு, அன்றாடம் செய்பவை (Routine) போன்றவற்றின் ஆதிக்கம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. குறித்த நேரங்களுடன் பிணைக்கப்பட்ட மதுப் பழக்கத்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். மது பரிமாறப்படும் நேரங்களும் குறைக்கப்பட்டன. அந்த இடைவெளிகளில் மது மயக்கத்துக்கும் விழிப்பு நிலைக்கும் இடையிலான வேறுபாட்டை சுவைக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவையனைத்தும் பின்னர் வரவிருக்கும் தடைக்கு மிக அவசியமான முன்னேற்பாடாக அமைந்திருந்தன. பின்னர் மதுவின் மோசமான தீமைகளின்பால் அவர்களது கவனம் கடுமையாக ஈர்க்கப்பட்டது. மது தொடர்பாக தீர்க்கமானதொரு கட்டளை இறங்கும் என்று பலரும் எதிர்பார்க்கக் கூடியவாறு அல்லது அப்படி இறங்க வேண்டும் என்று ஆசைப்படக் கூடியவாறு நிலைமை மாற்றியமைக்கப் பட்டது. இறுதியாக மதுத்தடை வந்தபோது உள்ளங்கள் முழுத் தயார் நிலையோடு அதனை ஏற்றுக்கொண்டன.

விசுவாசிகளின் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: ''அல்குர்ஆனில் ஆரம்பமாக அருளப்பட்ட அத்தியாயங்களில் சுவர்க்கமும் நரகமும் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. மக்கள் இஸ்லாத்தின் மீது பற்றுக் கொண்ட போதே ஹலால், ஹறாம் தொடர்பான வசனங்கள் அருளப்பட்டன. மது அருந்த வேண்டாம் என்று ஆரம்பத்திலேயே கூறப்பட்டிருந்தால், 'நாம் மதுவை ஒரு போதும் விட மாட்டோம்' என்று அவர்கள் கூறியிருப்பார்கள். விபச்சாரம் செய்ய வேண்டாம் என்று கூறப்பட்டிருந்தால் 'நாம் ஒருபோதும் விபச்சாரத்தை விட மாட்டோம்'' என்று கூறியிருப் பர்கள்''. (புகாரி)

ஐரோப்பாவும் அமெரிக்காவும் இஸ்லாத்தைக் கண்டடைந்து அதன் பெறுமானங்களை தத்தெடுப்பதன் மூலமாக அடையக்

கூடிய பயன்களுள் முதன்மையானது, மது மற்றும் போதைப் பொருள் பாவனையின் தீங்குகளிலிருந்து மனித குலத்தை பொது வாகவும் இவ்விரு கண்டங்களை குறிப்பாகவும் காப்பாற்றுவதே. அதே சமயம் ஐரோப்பாவில் வாழ்கின்றவர்கள் தமது புதிய சூழலுக்கும் அயலவர்களுக்கும் சுமந்து செல்ல முடியுமான மிக முக்கியமான செய்தியும் இதுதான். மட்டுமன்றி, இன்று ஐரோப் பாவுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படையான வேறு பல இஸ்லாமியப் பெறுமானங்களையும் சுமந்து செல்ல வேண்டிய கடமைப்பாடு அவர்களுக்கு உள்ளது.

அல்குர்ஆன் மதுவை தடை செய்ததன் விளைவுகளும், அது முஸ்லிம்களில் ஏற்படுத்திய தாக்கமும், அந்த தெய்வீக கட்ட ளைக்கு அவர்கள் உடனடியாக கட்டுப்பட்ட விதமும் மனித குலம் ஆழ்ந்து கவனிக்க வேண்டியவை. அதன் மூலமாக இன்று பல அழிவுகளிலிருந்து தன்னைக் கடைத்தேற்றுவதற்கான வழி வகை களை அது கண்டடைய முடியும். 1932ஆம் ஆண்டு அமெரிக்கா மதுவை தடை செய்வதற்கு எடுத்த முயற்சியின் விளைவுகளை யும், அல்-குர்ஆன் மதுவை தடைசெய்ததன் விளைவுகளையும் மேலோட்டமாக ஒப்பீடு செய்தாலே இஸ்லாத்துக்கு மாத்திரம் தான் மனித குலத்துக்கு பூரண சிகிச்சை வழங்கும் ஆற்றல் உள்ளது என்பது தெளிவாகி விடும். இந்த இரு நிலைகளின் பெறுபேறுகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் எவராலும் எதிர்காலம் இந்த மார்க்கத்துக்கே என்ற உண்மையை ஏற்காதிருக்க முடியாது.

சகோதரர் கலாநிதி மாலிக் பத்ரி அவர்கள் உளவியல் துறைப் பேராசிரியர். அதன் பல்வேறுபட்ட பிரிவுகளிலும் அவருக்கு ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் உண்டு. உள்ளத்தைக் கட்டி யெழுப்புவதிலும் நெறிபிறழும் போது அதனை சீரமைப்பதிலும் இஸ்லாத்தின் எல்லையற்ற ஆற்றல்களை நிரூபிப்பதற்கு பெரு முயற்சியையும் நீண்ட காலத்தையும் அவர் செலவிட்டிருக்கிறார். இன்றைய உலகில் குற்றச் செயல்களதும் பிறழ்வுகளதும் வரிசை யில் கொலை மற்றும் பணம் சார்ந்த குற்றங்களை அடுத்து மூன்றாவது அபாயகரமான விடயமாக ஆய்வாளர்கள் கணிக்கின்ற -அதேவேளை துர்ச்செயல்களின் தாய் என நாம் கருதுகின்ற- சமூக,

உளவியல் பிரச்சினையொன்று குறித்த ஆய்வாக அவரது இந்நூல் அமைந்துள்ளது. இதுபோன்ற பிரச்சினைகளை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் எவ்வாறு ஆய்வு செய்வது என வழிகாட்டும் ஆக்கமாகவும் இது அமைந்துள்ளது. அறிவாய்வின் அடிப்படையில் 'அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்' என்பதற்கான செயன்முறை ஒன்றை இங்கு அவர் வரைந்தளித்திருக்கிறார். ஒப்பீடு, விமர்சன நோக்கு, வசனங்களை நுணுக்கமாகவும் ஆழமாகவும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றுக்கும் இது வழிகாட்டுகிறது.

இந்த நூல் நாம் நீண்ட நாட்களாக வெளியிடஎதிர்பார்த்திருந்த ஒன்று. ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரம் இருக்கிறது. இது வெளிவராமல் தாமதித்ததற்கான சில காரணங்களை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். எவ்வளவு தாமதித்தாலும் இந்நூல் நாம் காத்திருக்கத் தகுதியானதுதான்.

நூலின் உள்ளடக்கம் தொடர்பாக நான் விரிவாக எதனையும் குறிப்பிட விரும்பவில்லை. அதனை வாசகர்களுக்கே விடுகின்றேன். வாசகர்களே இந்நூலின் சிறப்பம்சங்களை கண்டறிந்து அதன் பயன்களை நேரடியாக அறுவடை செய்யட்டும்.

இதன் மூலம் அல்லாஹ் முஸ்லிம் சமூகத்துக்கு சிறந்த பயனை வழங்குவானாக! ஏனைய அனைவரும் இதன்மூலம் பயன் பெறுவதற்கான பாதையை இலகு படுத்துவானாக! மனித இனத்துக்கு இந்த மார்க்கம் எவ்வளவு தேவையானது என்பதை அவர்கள் அறியும் வாய்ப்பை வழங்குவானாக!

தான் விரும்பி ஏற்றுக் கொள்ளும் செயல்களை நோக்கி நம் அனைவரையும் அவன் ஆற்றுப் படுத்துவானாக!

நிச்சயமாக அவன் அனைத்தையும் கேட்பவன்; பிரார்த்தனையை ஏற்பவன்.

கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி

முன்னுரை

Islam and Alcoholism *(இஸ்லாமும் மதுவும்) என்ற நூல் 1976 ஆம் ஆண்டு* American Trust Publication *ஆல் வாஷிங்டனில் பதிப்பிக்கப்பட்டது. அல்லாஹ்வுடைய அருளால் அது நான் எதிர் பார்த்ததை விட பரவலாக விநியோகமானது. வெளியீட்டகத்தின் வெளியீடுகளில் மிகத் தேவையான நூல்களின் பட்டியலில் இந்த நூல் இரண்டாவது இடத்தில் காணப்பட்டதாகவும், முதலிடத்தில் ஸையித் அபுல் அஃலா மௌதூதியுடைய 'இஸ்லாத்தின் அடிப் படை' என்ற நூல் இருந்ததாகவும் 1970களின் இறுதிப் பகுதியில் விநியோக முகாமையாளராக இருந்த எனது சகோதரர் உஸ்தாத் இப்ராஹீம் தஸூகி அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்று முதல் இந்நூல் பல பிரதேசங்களில் பல பதிப்புகளைக் கண்டது.*

ஸையிதா ஸைனப் லூக்ஸ்பியாதி இதனை மலாய் (இந்தோ னேசிய, மலேசிய) மொழிக்கு மொழிபெயர்த்தார். லிபியாவின் தாருல் அரபிய்யா இதனை விநியோகித்தது. பிற்காலத்தில் இதாரதுல் புஹூத் அல் இல்மிய்யா வல் இப்தாஃ என்ற சவூதி அரேபிய நிறுவனமும் அதன் இஸ்லாமிய நூல்களில் ஒன்றாக இதனை விநியோகித்தது. மது மற்றும் போதைப் பொருளுக்கு

எதிரான அதிகமான மாநாடுகளிலும் ஆய்வுகளிலும் இந்நூல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது அரபு மொழிக்கு மாற்றப்பட்ட கதை சுவாரசியமானது. ஆரம்பத்தில் இந்த சிந்தனை 1984 களில் கலாநிதி ஸைதுல் ஹுஸைன் அவர்களுக்கு ஏற்பட்டது. அரபு மொழி வாசகர்களும் பயனடைய வேண்டும் என்றும், இதனை மன்னர் பைஸல் சமூக சேவை அமைப்பு வெளியிட வேண்டும் என்றும் அவர் கருதினார். அவர் அங்கு மொழிபெயர்ப்பு, மற்றும் வெளியீட்டு துறைகளில் கண்காணிப்பாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார். மொழிபெயர்ப்புப் பணியை செய்யுமாறு கலாநிதி கமால் ஹல்பாவி அவர்களை நாம் வேண்டிக்கொண்டோம். துருக்கியில் நடைபெறும் இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வருகை தரும்போது அங்கு சில நாட்கள் தங்குவதாகவும், அதன் போது மொழிபெயர்ப்பு பணியை அவசரமாக பூர்த்தி செய்வதாகவும், ரியாத் நகருக்கு வரும்போது அதனை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். ரியாதுக்கு வந்ததன் பின்னர் மொழிபெயர்ப்பை பூரணப்படுத்தி விட்டதாகவும் ஆனால் துருக்கியிலிருந்து ரியாத் வரும்போது பயணப்பொதி தவறி விட்டதாகவும் அவர் தெரிவித்தார். அது மீண்டும் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்; கிடைக்கவேயில்லை. நம்பிக்கையை இழந்து விட்டோம். இந்நிலையில் கலாநிதி கமால் ஹல்பாவி அவர்கள் மீண்டும் மொழிபெயர்க்கத் தொடங்கினார்கள். இதற்கு காலம் எடுக்கப்பட்டது. இந்நிலையில் நானும் காட்டூம் பல் கலைக் கழகத்தில் இணைந்து கொள்வதற்காக சூடான் செல்ல வேண்டியேற்பட்டது.

காட்டூமில் வைத்து மொழிபெயர்ப்பை வாசித்துப் பார்த்தேன். அது சிறப்பாகவும் உஸ்தாத் ஹல்பாவியின் பிரபலமான எழுத்து நடைபோன்றே சரளமானதாகவும் இலகுவான அரபு மொழியிலும் காணப்பட்டது. என்றாலும் இந்நூல் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வாழ்கின்ற புதிய முஸ்லிம்கள் அல்லது முஸ்லிமல்லாதவர்களை நோக்கி எழுதப்பட்டதாகும். எனவே

அதிகமான தலைப்புகளை மாற்றியமைப்பது பொருத்தம் என்று கருதினேன். அதனை எவ்வித மாற்றங்களுமின்றி மொழி பெயர்த்துக் கொடுப்பது அரபு வாசகர்களுக்குப் போதாது என்றும், அதன் சிலபகுதிகள் அவர்களுக்கு மேலோட்டமானவையாக தென்படும் என்றும் கருதினேன். எனவே அவற்றை புதிதாக எழுதுவதென்று தீர்மானித்தேன். புதிய தலைப்புகளையும் இணைத்துக் கொண்டேன். புதிதாக அரபு மொழியில் எழுதிய நூலின் ஒரு சிறிய பகுதி போன்று மொழிபெயர்க்கப்பட்ட பகுதி மாறிவிட்டது. இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் காட்டூம் கிளை இதனை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்தது. அச்சுப் பிரதி எடுக்கப்பட்டு வெளியிடுவதற்கும் தயாராக இருந்தது. அதனையும் ஏனைய கையெழுத்துப் பிரதிகளையும் கைப்பையில் இட்டு காரில் வைப்பது எனது வழக்கம். ஒருமுறை நான் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த போது உம்துர்மான் நகரில் சில பொருட்களை வாங்குவதற்காக காரை நிறுத்தி வைத்துவிட்டுச் சென்றேன். நான் வீட்டுக்கு வந்து பார்த்தபோது கைப்பை திருடப்பட்டிருந்தது. அதனை மீளப்பெறுவதில் பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்கிய போதிலும் அது மீளக் கிடைக்கவில்லை. அதன் பிறகு சிறிது காலமாக அதனை மீள எழுதும் உறுதி என்னிடம் இருக்கவில்லை.

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்தேச நிறுவனத்தின் காட்டூம் கிளையில் சகோதரி ஸித்தினா ஹம்த் இதனை மீள எழுதுவதிலும் ஆய்வுக்கு உட்படுத்தவதிலும் எனக்கு உதவினார். அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்க வேண்டும். அவருடைய கையெழுத்தில் எழுதிய சில பிரதிகள் காணப்படுவதாக அவர் என்னிடம் குறிப்பிட்டார். அவற்றையெல்லாம் சேர்த்து புதிதாக ஒரு பிரதியை தயார்படுத்தினார். அத்துடன் முன்னர் என் எண்ணத்தில் தோன்றியிராத புதிய பல விடயங்களையும் சேர்த்தேன். அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். பின்னர் அவற்றை கணணியில் பதிக்கவும் மூலப் பிரதியை வீட்டில் வைக்கவும் தீர்மானித்தேன்.

மொழிபெயர்ப்பதற்கு தீர்மானித்து சுமார் 10 வருடங்களுக்கு

பின்னர் இது வெளியிடப்படுகின்றது. இதில் வாசகர்களுக்கு பிரயோசனமானவைகள் இருந்தால் அதற்காக அல்லாஹ்வை புகழ்கிறேன். எனக்காக துஆ செய்யுங்கள். இதில் பயனில்லாத விடயங்கள் இருந்தால் இந்த வரிகளை எழுதிய ஏழையை நொந்துகொள்ளுங்கள்.

இந்த நூல் வெளிவருவதில் பல வகையிலும் உதவிய இஸ்லாமிய சிந்தனைக்கான சர்தேச நிறுவனத்தின் காட்டூம் கிளையில் பணியாற்றுகின்ற உஸ்தாத் அப்துல்லாஹ் மக்கி, மதிப்புக்குரிய சகோதரி ஸித்தினா முஹம்மத் அல் ஹம்த், உஸ்தாத் இப்றாஹீம் அலி போன்றோருக்கு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன். அத்தோடு இந்நூலை பதிப்பிப்பதில் காட்டிய முயற்சிகளுக்காக இஸ்லாமிய சிந்தனைக்கான சர்தேச நிறுவனத்தின் தலைவரும், மலேஷியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் தலைவருமான கலாநிதி தாஹா ஜாபிர் அலவானி அவர்களுக்கும் எனது பூரணநன்றியை தெரிவிக்கிறேன்.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியது.

மாலிக் பத்ரி
மலேஷியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம்
4 / துல்கஃதா / 1413 ஹி.
25/4/1993 கி.பி.

பதிப்புரை

போதைப்பொருள் பாவனை முழு மனித சமுதாயத்தையும் பெரும் அல்லல்களுக்கு ஆளாக்கி வரும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதன் தீங்குகள் பற்றிய தெளிவுகள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. அரச மட்டங்களிலிருந்து, அதனை அழித்தொழிக்கும் கைங்கரியங்கள் பலவும் அமுல்படுத்தப்படுகின்றன.

போதைப்பொருள்கள் குறித்து இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன? போதைக்கு ஆளாகியோர் நிவாரணங்கள் ஏதும் கண்டு கொள்ள இஸ்லாம் காட்டும் வழிமுறைகள் யாவை? என்பன வற்றையெல்லாம் ஆழ்ந்த ஆய்வுகள் மூலம் பேராசிரியர் மாலிக் பத்ரி வெளிக்கொண்டு வருகின்றார். போதை வயப்பட்டோரை மீட்டெடுக்கும் பணியில் உழைத்து வருவோரும், சமூக நலன் களில் அக்கறை கொண்டு உழைப்போரும், எமது இளையோரும் கலாநிதி மாலிக் பத்ரியின் இந்த ஆக்கத்திலிருந்து பெறக்கூடிய பயன்களைக் கருத்தில் கொண்டு ‘இஸ்லாம் போதைப்பொருள் ஒழிப்பும் - ஒரு சமூக, உளவியல் ஆய்வு’ எனும் இந்த நூலை வெளியிட்டு வைக்கின்றோம்.

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக.

மே, 2019 *Fuzin Texts*

அத்தியாயம்: 01

நிச்சயமாக மது தடைசெய்யப்பட்டு விட்டது என அறிந்து கொள்ளுங்கள்!

அனஸ் இப்னு மாலிக் (ரலி)[1] அவர்கள் காய்ந்ததும் அரைப் பழுத்ததுமான ஈத்தம் பழங்கள் மூலம் தயார்படுத்தப்பட்ட போதை தரக்கூடிய ஒரு பானத்தை எடுத்துக் கொண்டு அபூ துஜானா (ரலி), அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி), முஆத் இப்னு ஜபல் (ரலி), அபூ தல்ஹா (ரலி) போன்றோரிடம் கொடுக்கின்றபோது... விருந்தாளிகளின் தலைவர்களுக்கு மது பரிமாறப் பட்டுக் கொண்டு இருக்கும்போது... தூரத்திலிருந்து ஒரு சப்தம் எதிரொலிப்பதைக் கேட்கின்றார்கள். ‘‘அறிந்து கொள்ளுங்கள்: மது அருந்துவது தடுக்கப்பட்டு விட்டது’’[2] என்பதுதான் அந்த சப்தம். அவருக்கும் அவரது விருந்தாளிகளுக்கும் மதுவைக் கொட்டு வதையும் மதுக் கிண்ணங்களை உடைப்பதையும் தவிர வேறு வழி இருக்கவில்லை. வுழூ செய்பவர்கள் வுழூ செய்து கொண் டார்கள்; குளிப்பவர்கள் குளித்துக் கொண்டார்கள். அதன் பின்னர் மது அருந்துவதை ஒட்டுமொத்தமாக தவிர்ந்து கொண்டார்கள்.

இந்த தனித்துவமான தோற்றப்பாடு அபூ புரைதா (ரலி) தன் தந்தையிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸிலும் வெளிப்படுகிறது: ''நாம் மூன்று அல்லது நான்கு நபர்கள் ரம்லா என்ற இடத்தில் மதுபானங்களுடன் கூடியிருந்தோம். பெரிய பாத்திரங்களும் எங்க ளிடம் இருந்தன. நாம் மது அருந்திக் கொண்டிருந்தோம். நான் எழும்பியபோது நபி (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். நான் அவருக்கு ஸலாம் சொன்னேன். அப்போதுதான் மது தடைசெய் யப்படும் வசனம் அருளப்பட்டது.

''ஈமான் கொண்டவர்களே! மதுபானமும் சூதாட்டமும் வணக் கத்திற்காக நட்டு வைக்கப்பட்டுள்ள சிலைகளும், குறிபார்க்கும் அம்புகளும் அருவருக்கத்தக்க ஷைத்தானிய செயல்களாகும். அவற்றை தவிர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகை மையையும் வெறுப்பையும் உண்டுபண்ணுவதையும், அல்லாஹ் வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்து விடுவதையும் ஆகும். எனவே அவற்றை விட்டும் நீங்கள் விலகிக்கொள்வீர்களா? (அல்-மாஇதா 90,91).

நான் எனது நண்பர்களிடம் வந்து ''நீங்கள் விலகிக்கொள் வீர்களா?'' என்ற வசனம் வரை ஓதிக் காண்பித்தேன். சிலரிடம் மதுக் கிண்ணம் இருந்தது; பாத்திரத்திலே மது இருந்தது. சிலர் உதட்டில் மதுவை வைத்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் பாத்திரத்திலிருந்தவற்றை கொட்டிவிட்டார்கள். 'எமது ரட்சகனே, நாம் விலகிக் கொண்டோம்' என்றும் கூறினார்கள்.[3]

முன்னைய சமூகம் இறை கட்டளைகளுக்கு இப்படித்தான் கட் டுப்பட்டது. அவர்கள் மதுவில் திளைத்திருந்தார்கள். வசனத்தை செவிமடுத்தவுடன் தவிர்ந்து கொண்டார்கள். தமது வயிற்றிலுள்ள மதுவை வாந்தியெடுத்து வெளியேற்றுகின்ற அளவுக்கு சில மனி தர்கள் நடந்துகொண்டார்கள்.

'மது தடுக்கப்பட்டுவிட்டது' என்ற செய்தி மதீனாவின் ஒவ் வொரு வீட்டிலும் வேகமாக பரவிக்கொண்டிருந்தது. மதுவைத்

தயாரிக்கின்ற பிரமாண்டமான ஆடம்பரமான பாத்திரங்களும், மதுவால் நிரம்பியிருந்த கிண்ணங்களும் உடைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பேரீச்சை, திராட்சை, தேன் என்பன கலந்து செய்யப்பட்டிருந்த மது வகைகள் வீடெங்கும் கொட்டப்பட்டி ருந்தன. மதீனாவின் பாதைகளில் மது ஆறு ஓடியது.(4) மனித இன வரலாற்றில் போதைப்பொருளுக்கு எதிரான மிகப்பெரிய இயக் கம் என்பதற்கு இதுவே சான்றாக அமைந்தது.

மதீனா முனவ்வறாவில் மஸ்ஜிதுன் நபவியில் நபி (ஸல்) அவர்கள் அனைத்து வகை மதுவும் சூதும் தடுக்கப்பட்டு விட்டன என்ற செய்தியை மனித குலத்துக்கு அறிவித்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களது வதனம் பாதுகாப்பையும் அமைதியையும் ஆழ்ந்த சிந்தனையையும் வெளிப்படுத்துகின்றன. அன்னாரைச் சூழ பெருமளவு விசுவாசிகள் அமைதியாக அமர்ந்து உள்ளச்சத் துடன் செவி சாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது தலை களில் பறவைகள் அமர்ந்து விட்டனவோ என்று நினைக்கு மளவிற்கு அமைதி நிலவுகிறது. அரபு மொழியில் அமைந்த, உள்ளத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய, தெளிவான அறபு மொழியில் அல்குர்ஆனியப் போதனைகள் அங்கு வழங்கப் படுகின்றன. அரபு மொழி வல்லுநர்கள் கூட அடங்கிப் பணிந்த அற்புதமான -சட்ட வசனங்களின் உத்தியோகபூர்வ தோரணை அற்ற- எளிமையானநடை அது:

''ஈமான் கொண்டவர்களே! மதுபானமும், சூதாட்டமும், வணக் கத்திற்காக நட்டு வைக்கப்பட்டுள்ள சிலைகளும், குறிபார்க்கும் அம்புகளும் அருவருக்கத்தக்க ஷைத்தானிய செயல்களாகும். அவற்றை தவிர்ந்து கொள்ளுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும் சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமை யையும் வெறுப்பையும் உண்டுபண்ணுவதையும், அல்லாஹ்வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்து விடு வதையுமே. எனவே அவற்றைவிட்டு நீங்கள் விலகிக்கொள்வீர் களா?'' (அல்-மாஇதா : 90,91)

நபியவர்கள் ஓதுவதனை நிறுத்திக் கொள்கிறார்கள். அதுவரை வஹியை செவிமடுத்துக் கொண்டிருந்தவர்கள் உறுதியான தோரணையில், ''எமது ரட்சகனே, நாங்கள் நிறுத்திக் கொண்டோம்; எமது ரட்சகனே, நாங்கள் நிறுத்திக் கொண்டோம்''[(5)] என்கிறார்கள்.

அல்லாஹ்வுடைய கட்டளைக்கு முன்னால் இந்த கட்டுப்பாட்டையும் பூரண கீழ்ப்படிவையும் நபி (ஸல்) அவர்கள் காண்கிறார்கள். அதன்பின் எஞ்சியிருந்த மதுக்களையும் ஸஹாபாக்கள் தேடித்தேடி கொண்டு வருகிறார்கள். இது அன்னாருடைய முன்னேற்றகரமான பாதைக்கு உறுதுணையாக அமைகிறது. ஹராம் என்பதன் விரிந்த கருத்தை தமது உரைகளில் அவர்கள் விவரிக்கின்றார்கள். தூய்மையான ஒரு சமூகத்துக்குள் மதுவின் சிறிதளவு கசிவும் நுழைந்து விடாத வண்ணம் கச்சிதமாக அது பற்றி விளக்குகிறார்கள். மது தயாரிக்கப் பயன்படும் பாத்திரங்களை தமது அருள் நிறைந்த கரங்களால் தகர்த்த பின்னரே அன்னார் ஓயந்தார்கள்.

இப்னு உமர் (ரழி) அறிவிக்கிறார்: நான் நபி (ஸல்) அவர்களுடன் மஸ்ஜிதில் இருந்தேன். நபியவர்கள் அமர்ந்திருந்தார்கள். ''யாரிடம் மது இருக்கிறதோ அவர் அதனை கொண்டு வரட்டும்!'' என்றார்கள். தோழர்களும் கொண்டு வரலானார்கள். ஒருவர் சொன்னார்: 'என்னிடம் மதுவை சுமக்கும் ஒரு கால்நடை உண்டு'.அடுத்தவர், 'என்னிடம் மதுவை சேமிக்கும் பாத்திரமொன்று உண்டு' என்றார். ஒவ்வொருவரும் தங்களிடம் இருப்பதனை கூறினார்கள். ''அனைத்தையும் இந்த வெட்ட வெளியில் ஒன்று சேருங்கள். அதன் பின்னர் எனக்கு அறியத்தாருங்கள்'' என்றார்கள் நபியவர்கள். அவ்வாறு செய்துவிட்டு அறிவிக்கப்பட்டதும் அன்னார் எழுந்தார்கள். நானும் சேர்ந்து எழுந்தேன். நான் அன்னாருக்கு வலப்புறமாக சென்றேன். அவர்கள் என்மீது சாய்ந்து நின்றிருந்தார்கள். அபூ பக்கர் (ரழி) எம்மை முந்திச் சென்றார். நபி (ஸல்) அவர்கள் என்னை பின்னால் அனுப்பி விட்டு அவ்விடத்துக்கு அபூ பக்கர் (ரழி) யை எடுத்துக் கொண்டார்கள். என்னை இடப்புறமாக ஆக்கிக் கொண்டார்கள். பின்பு உமர்

(ரழி) அவர்கள் எம்மை முந்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் என்னை பின்னால் அனுப்பி விட்டு இடப்புறமாக உமர் (ரழி) யை எடுத்துக்கொண்டார்கள். பின்னர் இருவருக்குமிடையில் நின்ற நிலையில் மது இருந்த இடத்தை அடைந்தார்கள். பின்னர் ''இது என்னவென்று தெரியுமா?'' என வினவினார்கள். அதற்கு அங்கிருந்தவர்கள், 'அல்லாஹ்வுடைய தூதரே, இது மது' என்றார்கள். அதற்கவர்கள், ''உண்மைதான். நிச்சயமாக அல்லாஹ் மதுவை காய்ச்சுபவர், காய்ச்சுமாறு வேண்டுபவர், குடிப்பவர், புகட்டுபவர், சுமப்பவர், சுமக்கப்படும் இடம், விற்பவர், வாங்குபவர், அதன் பெறுமதியை அனுபவிப்பவர் ஆகிய அனைவரையும் சபித்துள்ளான்'' என்று கூறினார்கள். பின்னர் ஒரு கத்தியை எடுத்து வருமாறு வேண்டினார்கள். கொண்டு வரப்பட்டதும், ''அதனை தீட்டுங்கள்'' என்றார்கள். அவ்வாறே செய்யப்பட்டது. பின்பு அதனை எடுத்து மது சுமக்க பயன்படுத்தப்படும் தோலாலான பாத்திரத்தை வெட்டிவிட்டார்கள். நான் வெட்டுகிறேன் என்று உமர் (ரழி) கூறிய போதும் இல்லை என மறுத்துவிட்டார்கள்.

ஹதீஸை அறிவிப்பவர் கூறுகிறார்: 'தோலால் ஆன பாத்திரத்தில் பிரயோசனம் இருக்கிறதல்லவா?' என்று மக்கள் கேட்டார்கள். அதாவது அதனை அழிப்பதனை அவர்கள் வீண் விரயமாக கருதினார்கள். ஏனெனில் நபியவர்கள் ஓடும் ஆற்று நீரில் வுழூ செய்கின்ற விடயத்தில் கூட வீண் விரயத்தை தடுத்துள்ளார்கள்.(6)

ஆயினும் நபியவர்கள் தோலாலான அந்தப் பாத்திரத்தை தொடர்ந்தும் சிதைத்துக் கொண்டிருந்தார்கள். ''உண்மைதான். என்றாலும் நான் அல்லாஹ்வுக்காக கோபப்பட்டு இதனை செய்கிறேன். ஏனெனில் இவ்விடயத்தில் அல்லாஹ்வின் கோபம் இருக்கிறது'' என்று அமைதியான குரலில் கோபத்தோடு நபியவர்கள் கூறினார்கள்.(7)

ஷாம் போன்ற தூர தேசத்திலிருந்து மதீனாவுக்கு விற்பனைக்காக மது எடுத்துவந்திருந்த வியாபாரிகள்கூட இதற்கு கட்டுப்பட்டார்கள். இலாபகரமான வியாபாரத்தையும் அவர்கள் விட்டுவிட்டார்கள். மதுவை விற்பதற்கோ, குடிப்பதற்கோ, கொடையாக

கொடுப்பதற்கோ கூட அவர்கள் முயற்சிக்கவில்லை. அது ஹரா மாக்கப்பட்டு விட்டது; சபிக்கப்பட்டு விட்டது. அல்லாஹ்வும் றஸூலும் சபித்த மதுவை கொட்டிவிடுவதால் ஏற்பட்ட நட்டம் குறித்து புதிய மார்க்கத்துக்கு உயிராலும் செல்வத்தாலும் தியாகம் செய்த அவர்கள் கொஞ்சமும் கவலைப்படவில்லை.

சில மணித்தியாலங்களிலேயே மதீனா முழுமையாக இறை கட்டளையை நிறைவேற்றிவிட்டது. மது அருந்துவதை அது தவிர்ந்துகொண்டது. போதைக்கு அடிமையாவதற்கு எதிராக மனிதகுலம் தொடுத்த மிக வெற்றிகரமான நடவடிக்கை மிக ஆச்சரியப்படத்தக்க வகையில் வெற்றிகண்டது. முஸ்லிம்கள் மதுவை தவிர்ந்துகொண்டது மாத்திரமல்ல; மீண்டும் அதனை நோக்கிச் செல்லாதவர்களாகவும் இருந்தார்கள். இதுவும் முன்னையதை விட குறைத்து மதிப்பிட முடியாத மிக முக்கியமான இஸ்லாமிய சாதனைதான்.

நபி (ஸல்) அவர்களின் வரலாற்றை எழுதிய ஆய்வாளர்கள் அன்னாரின் வாழ்வோடு தொடர்பான விடயங்களை உறுதிப் படுத்தவதில் மிக நுணுக்கமாக நடந்து கொண்டார்கள். அவர்களது மனைவிமார்களோடு தொடர்பான விடயங்கள், வேறு தனிப்பட்ட விவகாரங்களில் அன்னார் நடந்துகொண்ட முறைகள், குளித்த முறைமை, உணவு உண்ட முறை என்பவை கூட நுணுக்கமாக பதியப்பட்டுள்ளன.

எனவே மது அருந்தியவர்களுக்கான பகிரங்க தண்டனை போன்ற முக்கிய பதிவுகள் விடுபட்டிருக்கும் என்று கற்பனை செய்ய முடியாது. எனினும் மது அருந்தியோருக்கான தண்டனை தொடர்பாக ஏழு நிகழ்வுகளே பதியப்பட்டுள்ளன.(8) இன்று போதையை நோக்கி போவோரின் எண்ணிக்கையுடன் இதனை ஒப்பிட்டு நோக்கினால் ஏழு என்ற இந்த சிறிய எண்ணிக்கை உளவியல் உலகில் ஆச்சரியமான ஒன்று. அத்தோடு ஒரு வசனத்தை செவிமடுத்த மாத்திரத்தில் ஒட்டுமொத்த சமூகமும் மதுவை தவிர்ந்து கொண்டமையும் ஆச்சரியமான ஒன்றுதான்.

முஸ்லிம் உலகை நோக்கிய மேற்குலக அத்துமீறல்கள் தொடர்ந்த போதிலும் நபி (ஸல்) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள மதீனா முனவ்வறா நகரம் இன்றும் கூட போதைப்பொருட்கள் அற்ற நகரமாக காணப்படுகிறது. இது இந்த வரலாற்று நிகழ்வை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு பெரிய ஆதாரமாகும்.

அத்தியாயம்: 02

மதுவுக்கு எதிரான பிரசாரம் வெற்றி பெற்றதற்குப் பின்னாலிருந்த ஏக காரணி இஸ்லாம் மாத்திரமா?

சில தனிப்பட்ட நிகழ்வுகளுக்கும் நிலைப்பாடுகளுக்கும் மிகை முக்கியத்துவம் அளித்து, சமூகங்களின் உருவாக்கத்துக்கும் நாக ரிகங்களின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பின்னாலிருந்த பிரதான காரணி அவையே என வியாக்கியானப்படுத்த முயல்கின்ற சில வரலாற்றாசிரியர்களை சமூக விஞ்ஞானமும் பிறமானிடவியல் கலைகளும் விமர்சனத்துக்கு உட்படுத்துகின்றன. நாகரிக மாற்றங் களையும் சிக்கலான தோற்றப்பாடுகளையும் இத்தகைய ஒற்றைக் காரணிதான் ஏற்படுத்துகின்றது என அவர்கள் விளக்க முற்படு வதே இவ்விமர்சனத்துக்கான காரணமாகும். சாதாரண பொது மக் கள் தாம் காணும் சமூக மாற்றங்களை ஏதோ ஓர் ஒற்றைக் காரணி யுடன் சுருக்கி விடுவது போன்றதே இதுவும்.

சாதாரண முஸ்லிம்கள் நிச்சயமாக இத்தகைய வரலாற்றாசிரி யர்களை அடியொற்றியே செல்வர். மதீனாவில் மதுத்தடை வெற்றி அடைந்தது இஸ்லாத்தின் அற்புதத்தினால் மாத்திரமே என்று அவர்

கள் நம்பவும் செய்வர். சிக்கலானதொரு சமூகவியல் தோற்றப் பாட்டை இஸ்லாம் என்ற ஏக காரணிக்குள் மாத்திரம் இவ்வாறு சுருக்கி விடுவது சரியா?

நவீன சமூகவியல் கற்கைகள் ஊடாக இக்கேள்விக்குப் பதில ளிக்க வேண்டுமாயின், சாதாரண வாதங்களை விட அதிக திருப்தி தரக்கூடிய பகுப்பாய்வும் சான்றுகளும் அவசியம்.

சமூக மாற்றத்துக்குரிய தனியாள் கோட்பாடு என எதுவு மில்லை என்று நவீன சமூகவியல் விற்பன்னர்கள் கருதுகின்றனர். அவ்வாறே சமூக மாற்றம் குறித்த முழுமையான வியாக்கியா னங்களைத் தேடுவதும் நேரத்தை வீணடிக்கும் செயல் என சிலர் வலியுறுத்துவர். அந்தவகையில் தனிநபரது சமூகவியல் நோக்கு என்பது ஒரு கற்பனா வாத நம்பிக்கை என்பதற்கப்பால் எதுவு மில்லை என்பதில் இவர்கள் அனைவரும் உடன்படுகின்றனர். ஏனெனில், கூட்டு மனித நடத்தை புரிந்துகொள்ளக் கஷ்டமானது. தனித் தனியான காரணங்கள் மீது நடத்தை நெறியியலாளர்கள் மேற்கொள்ளும் அவதானங்களால் அதனை பூரணமாக வியாக்கி யானப் படுத்த முடியாது. தனித்தனியான காரணங்களுக்குப் பின் னாலும் தனிநபர் சார்ந்த அல்லது குழு சார்ந்த வேறு காரணங்கள் இருக்கும். பின் அவற்றின் விளைவுகளால் தோன்றும் தாக்கங்கள் புதிய காரணங்களாக விருத்தியடையும். இவ்வாறு சமூகவியல் கட்டமைப்பின் சிக்கலான வலையமைப்பில் காரணங்களும், அவற்றின் விளைவுகளும், பின் அவற்றின் தாக்கங்கங்களும் விருத்தியடைந்து கொண்டே செல்லும்.

சமூகமாற்றம் குறித்த இப்புதிய நோக்கின் அடிப்படையில், மதீனாவில் போதைப்பொருளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் வெற்றி அடைந்தமைக்கான ஏக காரணியாக அல்லது ஏக அடிப்படைக் காரணியாக இஸ்லாம் மட்டுமே இருந்தது என நாம் கருதுவது சரியா? 'ஆம்; இஸ்லாம் மட்டும்தான் ஏக கார ணியாக இருந்தது என்பதில் கடுகளவும் ஐயமில்லை' என்பதுதான் இதற்கான பதில். மதச் சார்பியம் சிறிதும் இன்றி இப்பதிலை ஒருவரால் கூற முடியும்.

இது நுணுக்கமற்ற ஒரு நிலைப்பாட்டினால் தெரிவிக்கப்பட்ட கூற்றன்று. சமூகமாற்றத்துக்கு இட்டுச் செல்லும் காரணிகள் பல வாகும் என வலியுறுத்துகின்ற நவீன சமூக அறிவியலின் போக்குக்கு முரணானதுமன்று. சமூக மாற்றத்துக்கான ஒற்றைக் காரணி இஸ்லாம்தான் என்று நாம் பேசுகின்றபோது அதன் கருத்தென்ன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம்.

அந்தவகையில், தமது கரங்களால் செதுக்கிய சிலைகளை தாமே வணங்குவோராக இருந்த மௌட்டீக அறபிகளை 'அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை' என சான்று பகரும் வகையில் முழுவதுமாக மாற்றியமைத்த ஓரிறைக் கொள்கையின் தாக்கம் பற்றி இங்கு நாம் பேசுகிறோமா? அல்லது அச்சமூகத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திய முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆளுமை பற்றிப் பேசுகிறோமா? ஏனெனில், வேறெந்த மனிதனும் நேசிக்கப்படாத அளவிற்கு முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்களால் நேசிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் தனது குடும்பம், செல்வம், உயிர், பிறமனிதர்கள் முதலிய அனைவரையும் விட அன்னாரை அதிகமாக நேசிக்காவிட்டால் அவனது இறைவிசுவாசம் பூரணமடைவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

அல்லது மனிதர்கள் இரவின் இருளில் தங்களது ரட்சகனுடன் உரையாடும் வகையில் தனித்தும் கூட்டாகவும் நிறைவேற்றுகின்ற இஸ்லாமிய வணக்கங்களாலும் கிரியைகளாலும் ஏற்பட்ட ஆழ்ந்த தாக்கம் பற்றிப் பேசுகிறோமா? ஏனெனில், கூட்டான தொழுகை, ரமழான் நோன்பு, ஸகாத் என்பன ஆரம்ப முஸ்லிம்களில் வாழ்வில் மிகத் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அல்லது மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் சவால் விடுக்கும் அற்புத மொழியமைப்பைக் கொண்ட அல்-குர்ஆனின் தாக்கம் பற்றிப் பேசுகிறோமா? அல்லது அறபிகளது மௌட்டீக வாழ்வை வேரறுக்க இஸ்லாம் கைக்கொண்ட விழுமியங்களையும் சட்டங்களையும் பற்றிப் பேசுகிறோமா?

இஸ்லாம் பற்றி நாம் பேசும்போது தனித்ததோர் ஒற்றைக் காரணி பற்றி மாத்திரமே நாம் பேசுகிறோம் என்பது அதன்

பொருளன்று. 'மதம்' என்ற சொல்லின் மிக வரையறுக்கப்பட்ட பொருளில் பேசுவதாகவும் அது அமையாது. ஏனெனில், இஸ் லாம் என்பது ஒரு வாழ்க்கை முறை. அங்கு ஆன்மீகம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல், அழகியல் முதலிய அனைத்தும் உண்டு. தொட்டில் முதல் மண்ணறை வரை முஸ்லிம் தனிமனித னில் பாதிப்புச் செலுத்துகின்ற அனைத்தையும் அது விளக்குகிறது.

இஸ்லாம் என்பது மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக வந்த புதியதொரு மாற்றமல்ல. மாறாக, வாழ்க்கைக்குப் புதியதொரு வடிவத்தைக் கொடுப்பதற்கும், மனிதன், வாழ்க்கை, பிரபஞ்சம் என்பவற்றுக்குப் புதிய விளக்கத்தை வழங்கி தெய்வீக நாகரிக மொன்றைக் கட்யெழுப்புவதற்கும் வந்ததொரு மார்க்கமாகும். வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் இணைத்து முழுமையாக நோக்கிய இந்தப் புதிய பார்வைதான் மதீனாவில் இடம்பெற்ற அந்த ஆச்சரியமான மாற்றத்தின் பின்னால் தொழிற்பட்டது. மதுவிலிருந்து அனைவரும் கூட்டாக விலகிக் கொள்வதற்கும், மீண்டும் அதன்பால் சென்றுவிடாத உறுதியை எடுப்பதற்கும் வலிமையை வழங்கியது அதுவே.

இந்த விடயத்தை இன்னும் தெளிவாக புரிந்துகொள்வதற்கு இஸ்லாத்திற்கு முந்திய அரேபியர்களின் வாழ்க்கை பற்றியும், அவர்களது தனிப்பட்ட -சமூக நடத்தைகளில் மது பெற்றிருந்த செல்வாக்கு பற்றியும் விரிவாக விளக்குவது பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

அத்தியாயம்: 03

மதுவும் ஜாஹிலிய்யா கால பழக்க வழக்கங்களும்

மதீனாவில் முஸ்லிம்கள் தமது புதிய மார்க்கத்துக்கு ஏற்ப வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த சமயம் அரபுத் தீப கற்பத்திலே ஏனைய குழுக்கள் ஜாஹிலிய்ய வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஜாஹிலிய்யக் காலத்தில் ஏனைய பிரதேசங் களில் வாழ்ந்தவர்களை விட அரபிகளுக்கு மது அதிகம் தேவைப் பட்டது. ஜாஹிலிய்யக் கால அரபிகள் பாரம்பரிய நடவடிக்கை கள் மூலம் கோத்திரப் பெருமையையும் தன்னம்பிக்கையையும் மிக உச்ச அளவுக்கு உயர்த்திப் பிடிக்கத் தேவையான அனைத்தை யும் செலவு செய்தார்கள். ''உனது சகோதரன் அநியாயக்காரனாக இருந்தாலும் அநியாயம் இழைக்கப்பட்டவனாக இருந்தாலும் அவனுக்கு உதவி செய்'' என்ற வாசகம் அவர்களிடம் பிரபலமாக இருந்தது. அவர்களது கோத்திர வெறியின் சாராம்சத்தை இது சுருக்கிக் காட்டுகின்றது.(1) தனிமனிதனிடமிருந்து அல்லது அவ னது கோத்திரத்திலிருந்து வெளிப்படும் சிறிய சைக்கினைக்கும் உடனடியாக அங்கு பதில் கிடைத்தது. தனிமனிதனையோ கோத் திரத்தையோ புகழ்ந்து பாடுபவர் பெரும் புகழ் பெற்றார். யுத்தத்

திற்கும் சமாதானத்திற்கும் கவிதைக்கும் வரலாற்று உரைகளுக் கும் கருவாகவும் இவையே அமைந்தன.

ஒரு பிரபல்யமான கவிஞர் ஒரு கோத்திரத்தைப் பற்றி நல்ல தொரு கவிதையைப் பாடினால் அதனைப் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதினார்கள். அத்தகைய கவிதைகள் மிக வேகமாக அரபுத் தீபகற்பமெங்கும் பரவிவிடும். புகழப்பட்ட கோத்திரப் பெருமையும் அதனுடன் சேர்ந்து பரவும்.

இக்கவிதைகள் அரபிகளின் உணர்வுகளை வெளிப்படுத்தின. உள்ளத்தில் மண்டியிருந்த கோத்திர வெறி அவற்றினூடாக தூண் டப்பட்டன. அற்ப காரணங்களுக்காக உணர்வுகளைக் கிளறி பாரிய யுத்தங்களை ஏற்படுத்த கவிதைகளால் முடியுமாக இருந்தது.

உதாரணமாக அல்-பஸூஸ் என்ற யுத்தத்தை நோக்கினால், அது பக்ர் மற்றும் தஃலப் கோத்திரங்களுக்கிடையே ஏற்பட்டது. கோத்திரத் தலைவர்களில் ஒருவரான குலைப் என்பவர் பஸூஸ் பின்த் முன்கித் என்பவரது ஒட்டகத்தின் பால்மடியை வெட்டி யதன் காரணமாக ஏற்பட்ட இந்த யுத்தம் 40 வருடங்கள் தொடர்ந் தது. குலைப் கூட கொல்லப்பட்ட அந்த கொடிய யுத்தத்தை அவரது சகோதரரான முஹல்ஹல் தாக்கம் மிக்க வார்த்தைகளில் இப்படி பாடினார்:

‘‘இரு கோத்திரங்களும் அழிந்து போயின

தாய்மார்கள் பிள்ளைகளை இழந்தனர்

குழந்தைகள் அநாதைகளாகினர்

கண்ணீர் காயவில்லை

உடல்கள் புதைக்கப்படவில்லை’’

தனி மனித மற்றும் கோத்திர கௌரவம் குறித்த எல்லை மீறிய இந்த உணர்வும் உயிர் பாதுகாப்பு குறித்த உணர்வும் ஆழ்ந்து தொடர்புபட்டிருந்ததால், ஒவ்வொரு மனிதனும் தனது கோத்தி ரத்தின் மீது அதீத பற்று கொண்டிருந்தான். அதன் கொடி உயர்ந்து பறக்க வேண்டும் என்பதற்காக தனது உயிரையும் உடமைகளையும் அர்ப்பணித்தான். அந்த வகையில் எதிர்பாராத யுத்தங்கள் மூண்டன.

ஒரு சிறு தப்பபிப்பிராயம் கூட குறித்ததொரு கோத்திரம் அல்லது நபர் தோற்கடிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தியது. புகழ் பாக்களைப் பாடிய கவிஞர்களே வசைப் பாக்களையும் பாடினர். அந்தப் பாக்கள் அரபுத் தீபகற்பமெங்கும் விரைந்து பரவின. இகழ்ந்து பாடப்பட்ட கோத்திரத்தில் எவரும் தலை தூக்க முடியாத நிலை கூட தோன்றிவிடும். ஜரீர் என்ற கவிஞர் இத்தகைய தாக்கமுள்ள பல கவிதைகளைப் பாடியுள்ளார். இத்தனைக்கும் இவர் ஒரு ஜாஹிலிய்யாக்கால கவிஞரும் அல்லர். நுமைர் கோத்திரத்தை மிகக் கடுமையாகத் தாக்கிக் கவிதை படித்தார். அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த கவிஞரான அபூ ஜன்தல் இப்னு முஆவியா அந்-நுமைரியையும் அவர் வசை பாடினார். இது நுமைர் கோத்திரத்திற்குப் பெரும் இழிவாக மாறி விட்டது. ஒரு கீர்த்தி மிக்க நீண்ட வரலாறு நுமைரிய்யீன்களிடத்தில் காணப்பட்டது. இந்தக் கவிதை காரணமாக அவர்கள் தமது வாழிடங்களிலிருந்து புறப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஜரீரின் இந்தக் கவிதையை அரபிகள் ''மான பங்கப் படுத்தும் கவிதை'' என்று அழைத்தனர் என இப்னு ருஷைக் குறிப்பிடுகின்றார்.[3] இந்தக் கவிதை பரவியதன் பின்னர் தமது பெயரைப் பயன்படுத்த நுமைரிய்யூன்கள் வெட்கப்பட்டார்கள். அவர்களது கோத்திரத்தைப் பற்றிக் கேட்டால் பனூ ஆமிர் இப்னு ஸஃஸஆ என்றே அவர்கள் கூறினர் என நுவைரி[4] தனது ''நிஹாயதுல் அரப் பீ புனூனில் அதப்'' என்ற நூலில் குறிப்பிடுகிறார். அபூ ஜன்தலின் காரணமாகவே இக்கவிதை கூறப்பட்டது. அதனால் அவர் கவிதை இயற்றுவதையே நிறுத்திவிட்டார். அதே வருடம் அவர் மரணித்தும் விட்டார். இக்கவிதையின் காரணமாகவே அவர் மரணித்து விட்டதாக இப்னு ஸலாம்[5] என்பவர் குறிப்பிடுகின்றார்.

இஸ்லாத்தின் ஒளி பரவி ஜாஹிலிய்ய கோத்திரப் பண்புகள் பல ஒழிக்கப்பட்டிருந்த காலத்திலேயே இத்தகைய ஒரு நிலை காணப்பட்டது என்றால், இஸ்லாத்துக்கு முந்திய அரபுக் கோத்திரங்களில் கவிதையின் செல்வாக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

சிலை வணக்கமே ஜாஹிலிய்யப் பண்பையும் கோத்திர வெறியையும் பலப்படுத்தியது எனலாம். அருளும் சர்வ சக்தியும் கொண்டு அனைத்தையும் படைத்த ஏகனான அல்லாஹ்வை நம்புவதும், ஒரு கோத்திரத்தை வெறித்தனமாக நேசிப்பதும் ஒரே உள்ளத்தில் இணைந்திருக்க முடியாது. அனைத்துக் கோத்திரங்களும் அல்லாஹ்வின் முன்னிலையில் சமம். ஆனால் கோத்திர சிலை வணக்கத்தில் பல தெய்வங்கள் இருந்தன. ஒரு கோத்திரம் தனக்கான கடவுளை வடிவமைத்துக் கொள்ளும் போது அது ஏனைய கோத்திரங்களுக்கு எதிராக தமக்கு உதவும் என்றும், தூய்மையான தண்ணீரைப் பெற்றுத் தரும் என்றும், எதிரியைத் தோற்கடிக்கச் செய்யும் என்றும் கற்பனை செய்து கொண்டது. அந்த வகையில், சிலை வணக்கமும் கோத்திரமுறைமையும் ஒரு நாணயத்தின் இரு பகுதிகளாக இருந்தன. ஜாஹிலிய்ய வாழ்வின் சமூகக் கட்டமைப்பையும் அதுவே பலப்படுத்தியது.

ஜாஹிலிய்யாக் காலக் குடும்ப முறையும் இங்கு கவனிக்கத் தக்கதாகும். பெண்கள் தொடர்பான ஜாஹிலிய்ய நோக்கு மிக இழிவானதாகவே காணப்பட்டது. மனைவி என்ற பெயரில் பெண்ணுக்கு பல அநீதிகள் இழைக்கப்பட்டன. சொத்துப் பங்கீட்டில் அவளுக்கு உரிமை இருக்கவில்லை. பொருட்கள் வாரிசுகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவது போன்று பெண்ணும் பகிர்ந்தளிக்கப்பட்டாள். கணவன் மரணித்து விட்டால், மூத்த மகனின் வாரிசுச் சொத்தாக அவள் மாறினாள். விரும்பினால் அவளை திருமணம் முடித்துக்கொள்ளவோ, 'மஹர்' பெற்றுக் கொண்டு இன்னொருவருக்கு திருமணம் முடித்துக் கொடுக்கவோ அவனுக்கு உரிமை இருந்தது.(6)

சிலபோது கணவன் மரணிக்கும் போது மூத்த மகன் சிறுவனாக இருந்தால், அவன் வளர்ந்து பெரியவனாகும் வரை மனைவி சிறைப்படுத்தி வைக்கப்பட்டாள். பெரியவனான பிறகு அவன் விரும்பினால் அவளை மணந்து கொள்ளலாம்; அல்லது பிரிந்து விடலாம்.(7)

ஒரு பெண்ணின் பிழையான நடத்தைக்கான தண்டனையாக அல்லது அவளைப் பழிவாங்குவதற்காக கணவன் அவளை தான் விரும்பிய கால அளவுக்கு விவாக விடுதலை வழங்காமலும் மனைவியாக பாவிக்காமலும் விட்டு வைத்தான். தான் நாடிய காலம் வரை இவ்வாறு உடல்-உள ரீதியான அவளை சிறைப் படுத்தலுக்கு உட்படுத்தி விட்டு விரும்பிய போது விடுவித்தான். விவாக விடுதலை என்பது அங்கு பரவலாக காணப்பட்டது. கணவனின் விருப்பு வெறுப்புகளால் குடும்ப அமைப்பே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தது.

பெண் பிள்ளைகளை குழிதோண்டிப் புதைக்கும் காட்டுமிராண்டிப் பழக்கமும் ஜாஹிலிய்ய அரபிகளிடம் காணப்பட்டது. மைதானி என்பவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.''அரபுக் கோத்திரங்கள் அனைத்திலும் பெண் பிள்ளைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் பழக்கம் காணப்பட்டது. சிலர் அதனை நடைமுறைப்படுத்த, பலர் நடைமுறைப்படுத்தாது விட்டதும் உண்டு... சிலபோது அவர்கள் பெண் பிள்ளைகளை கொல்பவர்களாகவும், வேறுசிலபோது மிகக் கொடூரமாக உயிருடன் புதைப்பவர்களாகவும் இருந்தனர். தந்தையின் பிரயாணம் அல்லது வேலைப்பழு காரணமாக இவ்வாறு உயிருடன் புதைப்பது சிலபோது தாமதமாகிவிடும். எனினும் அவள் வளர்ந்து பெரியவளாகி விடயங்களை புரிந்து கொள்ளத் தொடங்கிய பிறகும் கூட அதனை நிறைவேற்றினார்கள். இந்நிலை பற்றி அரபிகளே பல சோகக் கதைகளை கூறியிருக்கிறார்கள். சிலர் தமது பெண் பிள்ளைகளை உயரமான மலையிலிருந்து தள்ளிக் கொன்றதும் உண்டு.[8] இத்தகைய அதிர்ச்சியான நிகழ்வுகளால் தாயும் குடும்பத்தின் ஆண் பிள்ளைகளும் வேதனைப்படுவது இயல்பானதே. இவ்வாறான பல துரதிஷ்ட நிகழ்வுகளை அக்கால வரலாறு பதிந்து வைத்துள்ளது.[9]

ஜாஹிலிய்யாக் காலத்தில் ஆண் பிள்ளைகளை நினைத்துப் பெற்றோர் பெருமை கொண்டனர். எனினும் அப்பிள்ளைகள் உணர்வு ரீதியாகத் தந்தையை விட்டும் ஒதுங்கியே இருந்தனர்.

தந்தையர் தமது கோத்திரப் பெருமைக்காகவும் அதனை பலப் படுத்திக் கொள்ளவுமே ஆண் பிள்ளைகளை வளர்த்தனர்.

பெற்றோர் தம்மீது அன்பைக் காட்டுகிறார்கள் என்பதை பிள் ளைகளால் உணர முடியாதிருந்தது. பிள்ளைகளை முத்தமிடல், அவர்களுடன் விளையாடுதல் போன்ற உணர்வு பூர்வமான அடை யாளங்கள் அங்கு காணப்படவில்லை. இஸ்லாம்தான் ஜாஹிலிய் யாக் கால அரபு மக்களிடம் புதிதாக இவற்றை ஏற்படுத்தியது. உமர் (ரழி) அவர்களின் பிரபல சம்பவம் இதற்கு ஆதாரமாகும்.

தனது பிள்ளைகளை முத்தமிடுவதையும் அவர்களுடன் விளை யாடுவதையும் பார்த்து ஆச்சரியமடைந்த கவர்னர் ஒருவரை கலீபா உமர் (ரழி) பதவி நீக்கிவிட்டார். அந்த நபருக்கு பத்துப் பிள்ளைகள் இருந்தும் ஒருவரைக் கூட அவர் முத்தமிட்டது கிடையாது.

ஒழுக்கச் சீர்கேடும் விபச்சாரமும் குடும்பக் கட்டமைப்பைச் சிதைக்கின்ற மிக முக்கியமான காரணிகளாக இருந்தன. உடல் வலிமையும் அறிவும் உள்ள குழந்தை ஒன்றைப் பெற விரும்பும் கணவன் தனது மனைவியை அத்தகைய உடல் வலிமையும் அறிவும் உள்ள ஒருவரிடம் அனுப்பி வைக்கும் வழக்கம் அப்போது இருந்தது. மனைவி மாதவிடாயிலிருந்து சுத்தமாகிய பின்னர் அவளை ஒட்டகத்தை கருவூட்ட அனுப்புவது போன்று அவன் அனுப்பி வைப்பான் கரு தரித்ததும் அவள் திரும்பி வந்துவிடு வாள்.(10)

ஒழுக்கம் கெட்ட பெண்கள் ஆண்களிடம் போய் ஒவ்வொரு வராக அழைத்து உடலுறவு கொள்வார்கள். கருத்தரித்தால் குழந் தைக்கு தந்தை யார் என்பதை தெரிவு செய்யும் உரிமை அவளுக்கு இருந்தது.(11)

விபச்சாரத்துக்கான பாரம்பரிய முறைகளும் காணப்பட்டன. விஷேடமான கொடிகள் நடப்பட்டுள்ள வீடுகளை நாடி ஆண்கள் செல்வார்கள்.(12)

இத்தகைய ஜாஹிலிய்ய சமூகத்திலே மதுவின் அவசியம் இயல்பானதாக காணப்பட்டது. பெண்கள் கூட தமக்கு ஏற்படும் கடுமையான அழுத்தங்களை தாங்கிக் கொள்வதற்காக மதுவின் பால் ஈடுபாடு காட்டியிருப்பார்கள் என்பதை இங்கு சாதாரண மாகவே அனுமானிக்க முடியும். சிறு வயதில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற நிலை, கிடைக்க வேண்டியவற்றை இழந்தமை போன்ற விடயங்கள் ஒருவர் மதுவை நாடுவதற்கு காரணங்களாக அமைவதாக நவீன உளவியல் ஆய்வுகளும் கண்ணோட்டங்களும் கூட தெரிவிக்கின்றன. மது இருக்கின்ற ஒரு சூழலில் குடும்ப மும் சிதைவுற்று உணர்வுத் தாக்கங்களும் ஏற்பட்டால் அதன் விளைவு எப்படியிருக்கும்? ஜாஹிலிய்யச் சூழமைவு மதுவை சார்ந்திருந்தோருக்கும் போதை விரும்பிகளுக்கும் வாய்ப்பான தாகவே காணப்பட்டது.

அதிகமாக மது அருந்துவது, கொடை கொடுப்பது, உணவ ளிப்பது போன்ற பண்புகள் ஜாஹிலிய்யாக் கால கோத்திரப் புகழையும் தனிமனித சிறப்பையும் எடுத்துக் காட்டுவனவாய் அமைந்திருந்தன. கோத்திர வெறி, தீட்சண்யம், கொடை, வீரம், உதவி கோருவோருக்கு உதவுதல்,எல்லை மீறிய மதுப் பாவனை, விருந்தினருக்கு உணவளித்தல், நீர் கொடுத்தல் போன்ற பண்பு களை ஜாஹிலிய்யாக் கால கவிதைகள் மிக அதிகமாகவே மெச்சிப் பேசின. ஜாஹிலிய்யாக் காலத்தில் பிரபல்யமாக இருந்த தரபா இப்னுல் அப்தின் கவிதைகள் இதற்குச் சான்றாகும்.[13]

‘தம்மை தீங்கிலிருந்து காக்கும் வீரன் யார் என்று மக்கள் கேட்டால், தன்னைத்தான் அவர்கள் அழைக்கிறார்கள் என்ற உறுதியோடு அவன் சோம்பலின்றி விரைந்து செல்வான். எதிரிகள் தன்னைக் கண்டு விடுவார்கள் என்றோ, விருந்தாளிகள் வந்து தங்கிவிடுவார்கள் என்றோ பயந்து பள்ளத்தாக்குகளின் நீரோடை களுக்கப்பால் அவன் ஒளிந்திருப்பதில்லை. எதிரியுடன் போராடு வதில் வீரனாகவும், விருந்தாளிகளுக்கு உணவளிப்பதில் வள்ள லாகவும் அவன் இருப்பான்’ என்கிறது ஒரு கவிதை.

மது விற்பனை செய்யப்படும் இடங்களில் மக்கள் திரண்டிருப்பார்கள். அது பிரபலமான இடமாகவும், தொடர்ந்து மக்கள் வருகை தரும் இடமாகவும் இருக்கும். இத்தகைய இடத்தில் இருப்பதை பெருமையாகவும் அவர்கள் கருதினார்கள்.

வியாபாரி (அல்-தாஜிர்) என்ற சொல் மது விற்பவருக்கே பயன்படுத்தப்படும் அளவுக்கு மது அனைவருக்கும் பழக்கப்பட்டிருந்தது. மது விற்பனை செய்யப்படும் இடங்கள் இரவு பகலாக திறந்திருந்தன. அதற்கான விஷேட கொடி ஒன்றும் காணப்பட்டது. இப்படித்தான் அரபிகள் பலதரப்பட்ட உள்நாட்டு மது வகைகளையும் தூர தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மது வகைகளையும் பற்றிய விசாலமான அறிவையும் சுவையுணர்வையும் பெற்றிருந்தனர்.[14] யூதர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு முத்திரை இடப்பட்டு அனுப்பி வைக்கப்படும் உயர்ந்த வகை மது பற்றிய மைமூன் இப்னு கைஸ் அல்-அஅஷ்ஷீ பாடிய வர்ணனை இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.[15]

அரபிகள் மதுவுக்குப் பல பெயர்களை வைத்திருந்தனர். பலதரப்பட்ட மது வகைகளின் பண்புகளை அல்லது தரங்களை அல்லது எவ்வகைப் பொருட்களிலிருந்து அவை தயாரிக்கப்பட்டன என்பதை அப்பெயர்கள் சுட்டின.[16] கம்ர், கஹ்வா, ஷாமூல், ஸலாபா, கர்கப், ராஹ், முஸ்ஸா, மிஸாஃ ஹத்து, ஹம்யா, முஅத்தகா, நபீத், அஸ்ல், ஸகர்கா, ஸஹா, பழீஹ், மிஸ்ணர்... என பலவாறாக அப்பெயர்கள் அமைந்திருந்தன.

மதுப் பாவனையால் ஏற்படும் உடல், உள ரீதியான பாதிப்புக்கள், முரண்பாடுகள் பற்றியும் அரபிகளிடம் பல அனுபவங்கள் இருந்தன. அவை பற்றிய பல கவிதைகளை நுவைரி பகிர்ந்துள்ளார்.[17]

மது அருந்துவது தொடர்பான ஒரு கவிதையில், காலையிலும் மாலையிலும் குடிப்பவரது நிலை பற்றி அஅஷ்ஷீ பிரஸ்தாபிக்கின்றார். காலையில் குடிப்பவர் உள்ளம் உடைந்துபோய் கவலை தோய்ந்த நிலையில் காணப்படுவார். மாலையில் குடிப்பவர் உடலில் மது நிறைந்து விட்ட மனநிறைவுடன் குதூகலமாக

இருப்பார். தியாகங்கள் செய்யத் தயாரானவராக அவரை காண லாம். இதன் காரணமாகவே மது அருந்த விரும்பும் பலர் இருந்தார்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார். மது அருந்துவதில் செல்வந்தன், ஏழை என்ற வித்தியாசம் இருக்கவில்லை.[18]

ஜாஹிலிய்யாக் கவிஞரான இம்ரஉல் கைஸ்,[19] மது மனித னின் அறிவைச் சிதைக்கிறது என கருதினார். ''அளவையும் நிறத்தையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவர்கள் அதிகமாக குடித்தார்கள். குதிரையை சிறியதொரு ஆட்டுக் குட்டி யாக நினைக்குமளவு அவர்களது அறிவு போய்விட்டது. கரிய நிறக் குதிரையை அவர்கள் வெந்நிறமாக கருதினர்'' என்று அவர் குறிப்பிடுகிறார்.

நிகழ் காலத்திலோ எதிர்காலத்திலோ வரவுள்ள அபாயங்கள் குறித்த உணர்வற்ற, வெறும் தனிமனித- கோத்திரவாதத்தை முற்படுத்துகின்ற கற்பனாவாத சமூகமொன்றின் மாந்தர்கள் மதுவால் வயிற்றை நிரப்பிக் கொள்ளுதல் என்பது இயல்பானது தான். உள அமைதியை, தனி மனித -கோத்திரப் பெருமையை போதை மயக்கத்தின் கற்பனைகளால் அடைய அவர்கள் முனைந்த னர். பழைய அரபுக் கவிஞரான முனக்கல் அல் யஷ்கரி இதனைத் தன் கவிதையில் விபரித்துள்ளார்.

ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரழி) இஸ்லாத்துக்கு முந்திய ஜாஹிலிய்யாக் காலத்தில் மது பெற்றிருந்த உயர் அந்தஸ்தை இப்படி விவரிக்கின்றார்: ''மதுவுக்கு நிகராக வேறெந்தப் பானமும் இருக்கவில்லை. பெருமை, வரட்டு கௌரவம் போன்ற எண்ணங் களால் ஆளப்பட்டு போரில் ஈடுபட்ட அந்த சமூகத்தின் உள்ளத் தில் மதுவுக்கு பெரும் அந்தஸ்து காணப்பட்டது''.

இஸ்லாத்துக்கு முந்திய அவரது கவிதைகளில், ''ஏனைய அனைத்து பானங்களும் மதுவுக்கு அர்ப்பணமாகி விட்டன'' என மதுவை புகழ்ந்து பாடுகிறார். ஜாஹிலிய்யாக் காலத்தில் மதுவுக் குக் காணப்பட்ட உளவியல் தாக்கத்தையும் அடையாளப்படுத்து கிறார். ஜாஹிலிய்யாக் காலப் பெருமை, கோத்திரப் பெருமை போன்றவற்றிலும் மதுவின் பாதிப்பை விபரிக்கிறார்.

மதுவின் போதையில் கிரீடம் அணிவிக்கப்பட்ட மன்னராக வும், எதிரியை சந்திக்கும்போது கர்ச்சிக்கின்ற சிங்கமாகவும் அவர் கள் தம்மை கருதிக் கொள்வார்கள் எனவும் அவர் கூறுகின்றார்.[20]

இந்த இறுதிக் கருத்தைத் தரும் கவிதையை ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரழி) தனது ஜாஹிலிய்யாவாழ்வின் இறுதிக் கட்டத்தில் பாடினார் என்றும் கூறப்படுகின்றது. ஒரு தடவை இளைஞர்கள் சிலர் இணைந்திருந்து மது அருந்தியதை அவர் கடுமையாக ஆட் சேபித்தார். அப்போது அங்கிருந்தவர்கள், ''இதனை நாங்கள் உங்களிடமிருந்துதானே பெற்றுக் கொண்டோம். நீங்கள்தானே 'மது அருந்தும் போது எம்மை நாம் அரசர்களாகவும் சிங்கங்களாக வும் கருதிக் கொள்வோம்' என்று கூறினீர்கள்'' எனச் சொன்ன போது,''அது நான் ஜாஹிலிய்யாக் காலத்தில் கூறியது. முஸ்லிமான பின்பு நான் குடிக்கவில்லை'' என அவர் பதிலளித்ததாக ஓர் அறி விப்பு உண்டு.[21]

ஆக- இப்படித்தான் ஜாஹிலிய்ய அரபு சமூகத்தின் தேவையாக மதுவும் அதனை அபரிமிதமாகக் குடிப்பதும் காணப்பட்டது. குடும்பங்களில் பிள்ளைகளோடு தந்தைமார்கள் மிகவும் கடுமை யாக நடந்து கொண்டார்கள். பெண் பிள்ளைகளை உயிருடன் புதைத்து விட்டார்கள். பெண்கள் இழிவு படுத்தப்பட்டார்கள். பொருட்கள் போன்று அவளது உரிமை மாறி மாறிச் சென்றது. முடிவில்லாத போராட்டங்களில் ஆண்கள் ஈடுபட்டார்கள். உரை களாலும் கவிதைகளாலும் கோத்திர வெறி தூண்டப்பட்டுக் கொண்டிருந்தது.

உண்மையில் யாரும் அங்கு பாதுகாப்பாக இருக்கவில்லை. எந்தளவு அந்தஸ்து உயர்வாக இருந்தாலும் உயிர், செல்வம், மானம் என்பவற்றுக்கு உத்தரவாதம் இருக்கவில்லை. எந்த வேறு பாடுமின்றி பலர் கொல்லப்பட்டனர்; காயமுற்றனர்; சிறைப் பிடிக்கப்பட்டனர்; அடிமைகளாக மாற்றப்பட்டனர். மானமும் அந்தஸ்தும் செல்வமும் சூறையாடப்பட்டன. கவிஞர்கள் தமது கவிதைகளில் கோத்திரங்களை புகழ்ந்து பாடி, மக்களை மதி யிழந்தவர்களாக ஆக்கி, தாம் விரும்பியவாறு பொதுக் கருத்தை

மாற்றி வைத்திருந்தார்கள். புகழ்ப்பா அல்லது இகழ்ப்பா மூலம் உயர்வையும் இழிவையும் அவர்கள் கட்டமைத்தனர்.

இந்தப் பகுப்பாய்வின் முடிவில் நவீன சமூகவியல் மற்றும் மானிடவியல் அறிஞர்களின் பல கள ஆய்வுகள்[22] உறுதிப்படுத்தும் ஒரு விடயத்தை பதிவது பயன் தரும் என்று கருதுகின்றேன். ஒரு சமூகத்தில் அல்லது நாகரிகத்தில் போதைப் பொருளின் பரவல் மூன்று பிரதான காரணிகளால் தாக்கமடைவதாக அவை உறுதிப் படுத்துகின்றன:

(1) அந்த நாகரிகம் சமூகத்தில் ஏற்படுத்தும் மன அழுத்தங்களும் பதகளிப்பும் பதற்றமும்.

(2) போதைப் பொருள் பாவனை குறித்து அந்த சமூகத்தில் நிலவும் மனப்பாங்கு.

(3) போதைப் பொருள் பாவனைக்கு ஊக்கியாக அமைந்த அழுத்தங்களையும் பதற்றங்களையும் கையகப்படுத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான மாற்று வழி களையும் செயற்பாடுகளையும் முன்வைப்பதற்கு அந்த நாகரிகம் கொண்டுள்ள ஆற்றல்.

சமூகத்தில் மன அழுத்தங்களின் காரணமாக மதுவை நாடு வோர் தொடர்பாக ஹோர்டன்[23] என்பவர் கள ஆய்வுகளை மேற்கொணடார். 56 தொன்மைச் சமூகங்களை அவர் ஆய்வுக்கு உட்படுத்தினார். மன அழுத்தம், பாதுகாப்பின்மை என்பவற்றி னாலேயே அதிகமானோர் மதுவை நாடி நிற்கிறார்கள் என்பதை அவர் கண்டறிந்தார்.

ஹோர்டனின் ஆய்வுக்கு பல்லாண்டுகளுக்குப் பிறகு ஷேய்பர்[24] என்பவர் 57 கோத்திர சமூகங்கள் மீது அதே ஆய்வினை மேற் கொண்டார். போட்டிச் செயற்பாடுகளும், அழுத்தங்களும், தாம் வணங்கக் கூடிய மூதாதையர்களின் ஆவி தம்மைப் பழிவாங்கும் என்ற பயமும் நிறைந்த சிலை வணங்கிச் சமூகங்களின் அங்கத்த வர்கள் எல்லைமீறி மது அருந்தியதாக தனது ஆய்வில் அவர் கண்டறிந்தார். அதேவேளை, சிலை வணங்கிகளாக இருந்தாலும்

நெருக்கமான குடும்பப் பிணைப்பும் சிலை வணக்க நம்பிக் கைகளின் குறைவான அழுத்தமும் கொண்ட கோத்திரங்களில் மதுப் பயன்பாடு குறைவாகக் காணப்பட்டதாகவும் அவர் கண்ட றிந்தார்.

மட்டுமன்றி, தென் வெனிசுவெலா மற்றும் வட பிரேஸில் பிரதேசங்களில் வாழ்ந்த நாடோடிக் கோத்திரங்கள் அரபுக் கோத்திரங்களைப் போன்றே தொடர் யுத்தங்களிலும் அத்துமீறல் களிலும் ஈடுபட்டு வந்ததாக ஷெக்னன்(25) என்பவர் கண்டறிந் தார். அவர்களுக்கும் அரபிகளுக்குமிடையில் பாரிய நாகரிக இடை வெளி காணப்பட்ட போதிலும், மதுப் பாவனை மிக அதிகமாக அவர்களிடம் காணப்பட்டதாக அவர் கூறுகிறார். தான் வசித்த ஒரு கிராமத்தைச் சேர்ந்த கோத்திரம் பக்கத்திலுள்ள கோத்தி ரங்களுடன் 19 மாதங்களுக்குள் 25 யுத்தங்களை மேற்கொண்டதை அவர் அவதானித்தார்.

ஜாஹிலிய்யாக் கால அரபிகளிடம் சிலை வணக்கமும் முடி வற்ற கோத்திர யுத்தங்களும் கட்டு மீறிய மதுப் பாவனையோடும் பெண் மக்களை உயிருடன் புதைப்பதோடும் தொடர்புபட்டு காணப்பட்டது போன்றதொரு நிலையே செக்னன்(26) ஆய்வுக் குட்படுத்திய கோத்திரங்களிலும் காணப்பட்டது. சிலை வணக்க மும் மதுப்பாவனையும் கோத்திரப் போர்களும் நிலவிய அக் கோத்திரங்களில் பெண் பிள்ளைகளை கொல்லும் வழக்கமும் இருந்துள்ளது. யுத்தங்களில் ஈடுபடவும், கோத்திரத்தைப் பாது காக்கவும் ஆண்கள் தேவைப்பட்ட அந்த சமூகத்தில் பெண் பிள்ளைகள் அவசியமற்ற சுமையாக கருதப்பட்டார்கள். இவ்வாறு பெண்களை சிறுவயதிலேயே கொன்று விடுவதன் காரணமாக தமக்கு தேவையான பெண்களை பிற கோத்திரங்களிலிருந்து கையகப்படுத்திக் கொள்வதும் பிரேஸிலியக் கோத்திரங்கள் மேற் கொண்ட போர்களின் நோக்கமொன்றாக அமைந்திருந்தது.

இந்த ஆய்வுப் பெறுபேறுகள் குறித்து இங்கு நாம் அதிகம் பேச வேண்டியதில்லை. மதுப் பரவலில் தாக்கம் செலுத்தும் மேற் குறித்த மூன்று காரணிகளும் ஜாஹிலிய்ய அரபுத் தீபகற்பத்தில்

மிக வளமான மண்ணையும் வாய்ப்பான சூழலையும் கண்டு கொண்டன. மதுவுக்கென்றே பொருத்தமாக அமைந்த சுற்றுச் சூழ லும் உளச் சமூகவியல் காரணிகளும் மதுவை நோக்கி மக்களை ஈர்த்தன. இதனால் அவர்கள் மதுவில் திளைத்தார்கள். நாம் ஏற்கனவே விளக்கியது போல உள அழுத்தங்கள், பாதுகாப்பற்ற உணர்வு, கோத்திரங்களின் சிலை வணக்கம், தீவிரச் சண்டைகள், குடும்பச் சிதைவு என்பன இதற்கு முதற்காரணியாகின.

இரண்டாவதாக, ஜாஹிலிய்யாக் காலத்தில் மதுவுக்கு உயர்ந்த தொரு பெறுமானம் காணப்பட்டது. இதனையும் நாம் ஏற்கனவே விளக்கியுள்ளோம்.

மூன்றாவதாக, ஜாஹிலிய்யா சமூகம் பிரிந்து பிளவுபட்டுக் காணப்பட்டதனாலும், அங்கு நிலவிய சிலை வணக்கத்தின் கார ணமாகவும் உள அழுத்தங்களை மிகைக்கக் கூடிய மாற்று ஏற் பாடுகளைக் காண முடியாத நிலையில் அது காணப்பட்டது. இந் நிலை மதுவின்பால் மனிதர்களை இன்னும் அதிகம் தூண்டியது.

நாம் இப்போது மதீனா சமூகத்தை நோக்கி மீள்வோம். அவர்கள் இஸ்லாத்தின் முதல் தேசத்தை அங்கு நிர்மாணித்தார் கள். அவர்கள் ஏலவே தங்களது மூதாதையர்களும் கோத்திரங் களும் கொண்டிருந்த பெருமை, கர்வம் போன்ற ஜாஹிலிய்ய சிலை வணக்கப் பண்புகளோடு வளர்ந்தவர்கள்தான். ஆயினும் முஹம்மத் (ஸல்) அவர்கள் உயர்த்திய ‘‘லா இலாஹ இல்லல் லாஹ்’’ என்ற கொடியின் கீழ் திரண்ட அவர்கள் மத, சமூக மாற்றங்களின் நிழலில் சில விடயங்களை தாமாகவே தவிர்ந்து கொண்டார்கள். இஸ்லாம் அவர்களிடம் விழிப்புணர்வையும், புதியதொரு சமூக, பொருளாதார, அரசியல் மரபையும் தோற்று வித்தது. மக்காவிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்கள் ஜாஹிலிய்ய வாழ்வில் மூழ்கிக் கிடந்த போது மதீனா வித்தியாசமாகக் காட்சியளித்தது.

இதனால்தான் மதீனத்து முஃமின்களிடம் ஏற்பட்ட நடத்தை மாற்றங்களுக்கான காரணி இஸ்லாமன்றி வேறில்லை எனநாம் உரிமையோடு நம்புகிறோம்.

சிக்கலான தோற்றப்பாடுகளை புத்திசாதுரியமாக அல்லது அளவு கடந்து எளிமைப்படுத்தும் முனைப்பாக இது வெளிப் பார்வைக்கு தோன்றினாலும், தூய பரிசோதனை நோக்கு கூட நமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவே அமைந்துள்ளது.

A என்ற காரணி உண்மையாகவே B இல் மாற்றத்தைக் கொண்டுவந்ததா இல்லையா என்பதை ஓர் ஆய்வாளன் எப்படி உறுதிப்படுத்த முடியும்? தூய விஞ்ஞானத்திலும், உளவியலிலும், சமூகவியல் கலைகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோ தனை முறைமையானது ஒத்த தன்மை கொண்ட இரு மாதிரி களின் மீதே தங்கியிருக்கும். ஒன்று பரிசோதிக்கப்படும் மாதிரி (Experimental Group), மற்றையது கட்டுப்படுத்தும் மாதிரி (Control Group). பரிசோதனைமாதிரியின் மீது ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தை மேற்கொள்வார். அச்செயற்பாடானது சார்பு மாறி (Dependent variable) என அழைக்கப்படுகிறது. பின்னர், கட்டுப்படுத்தும் மாதிரியுடன் பரிசோதனை மாதிரியில் ஏற்பட்ட மாற்றத்தை அவர் ஒப்பிட்டு அவதானிப்பார். அதன் மூலமாக பரிசோதனை மாதிரியின் மீது தான் ஏற்படுத்திய மாற்றத்தின் விளைவை அவரால் அளவிட முடியும். பிற மாறிகள் எந்த மாற்றத்துக்கும் உட்படாமல் கட்டுப் படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே குறித்த பரிசோதனை மாதிரியின் மீது தான் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவை துல்லியமாக அவரால் அளவிட முடியும்.

மருத்துவத் துறையை உதாரணமாக நோக்குவோம். மலேரியா நோயாளர்களிலிருந்து வேறு வேறான இரு மாதிரிகளை எடுத்துக் கொள்ளும் ஆய்வாளர், பரிசோதிக்கப்படும் மாதிரிக்கு (Experi mental Group) புதிய மருந்தை -அதன் வினைத்திறனை உறுதிப் படுத்தும் நோக்குடன்- காப்ஸூல் (Capsule) வடிவத்தில் வழங்கு வார். வெறுமனே காப்ஸூல் வடிவம் மாத்திரம் பரிசோதனை யின் மீது தாக்கம் செலுத்தாது என்பதை உறுதிப் படுத்துவதற்காக அதேபோன்ற வடிவமும் நிறமும் கொண்ட காப்சூல்கள் கட்டுப் படுத்தும் மாதிரிக்கும் (Control Group) வழங்கப்படும். ஆனால் அவற்றில் மருந்து எதுவும் அடைக்கப்படாமல் சீனி போன்ற ஏதாவதொன்று அடைக்கப்பட்டிருக்கும். இரு குழுக்களுக்கும்

ஒரே நேரத்திலேயே இவை வழங்கப்படும். இரு சாராருக்கும் ஒரே வகை உணவுகள், பானங்கள், வாழ்க்கை வசதிகள் என்பனவும் வழங்கப்படும். குறித்த நேரம் முடிவடைந்த பின்னர், கட்டுப் படுத்தும் மாதிரியை விட பரிசோதிக்கப்படும் மாதிரியில் கணிச மான எண்ணிக்கையினர் குணமடைந்திருக்கிறார்களா என்பதை ஆய்வாளர் அவதானிப்பார்.

கல்வி மற்றும் சமூகவியல் துறைகளிலும் இதே விஞ்ஞான முறையே பயன்படுத்தப்படும். எனினும் இதற்கான பரிசோதனை வடிவமைப்பின் போது -பல சந்தர்ப்பங்களில் -பரிசோதனை மாதிரியையும், கட்டுப்பாட்டு மாதிரியையும் முற்றாக வேறு படுத்த வேண்டியிருக்கும். இரு மாதிரிகளும் அருகருகே இருக் கும் போது ஒன்று மற்றொன்றின் மீது தாக்கமேற்படுத்தலாம் என்பதே இதற்கு காரணமாகும்.

இவ்வகையில் நோக்கினால், மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம் கள் ஒரு பாரிய பரிசோதனை மாதிரியை (Experimental Group) பிரதிநிதித்துவம் செய்தார்கள். மக்காவிலும் அதனைச் சூழவும் வாழ்ந்த அரபுக் கோத்திரங்கள் கட்டுப்படுத்தும் மாதிரியை (Control Group) பிரதிநிதித்துவம் செய்தன. கட்டுப்படுத்தும் மாதிரி யிலிருந்து பரிசோதிக்கப்படும் மாதிரியை வேறு படுத்தும் பாரிய நிகழ்வாக ஹிஜ்ரத் அமைந்தது. இப்பரிசோதனைக் கண்ணோட் டத்தின் அடிப்படையில், பரிபூரண வாழ்வு நெறியாகிய இஸ் லாத்தை நாம் சார்பு மாறியாக (Dependent variable) அதாவது தாக்கமேற்படுத்தும் காரணியாக கொள்ள முடியும். இப்போது -மது ஒழிப்பு உட்பட- விசுவாசிகள் சமூகத்தின் மீது ஏற்பட்ட அந்த மகத்தான மாற்றத்தை சிலை வணங்கிக் கோத்திர சமூகத் துடன் ஒப்பிட்டுப் புரிந்து கொள்வது நமக்கு இலகுவானது.

தீமைகள் செய்கின்றவர்களையும் நம்பிக்கை கொண்டு நற் செயல்களில் ஈடுபடுவோர்களையும் நாம் சமமாக ஆக்குவோம் என்று (தீமை புரியும்) அவர்கள் நினைத்து விட்டார்களா? அவர் கள் உயிருடன் இருப்பதும் மரணமடைந்து விடுவதும் சமமே. அவர்கள் முடிவு செய்து கொண்டது மிகவும் கெட்டதாகும். *(ஜாஸியா: 21)*

இது ஓர் இஸ்லாமிய களப்பரிசோதனை. ஆயிரக்கணக்கான மனிதர்கள் இதில் கலந்து கொண்டனர். வானமும் பூமியும் உள்ளளவும் மனித இனத்துக்கு ஒளி விளக்காக அமையக் கூடிய மிகச் சிறந்த தலைமுறை ஒன்றை அந்தப் பரிசோதனை உருவாக் கிக் காட்டியது.

ஆயினும் விடை காணப்பட வேண்டிய கேள்வி இன்னும் பாக்கி உள்ளது: மதீனாவில் மது அருந்தும் நிலை மொத்தமாக களையப்பட்ட அற்புதம் எப்படி நிகழ்ந்தது? அருள் நிறைந்த அந்த மாற்றத்திலிருந்து நாம் சுருக்கிப் பெறக்கூடிய உளவியல் அடிப்படைகள் என்ன?

அடுத்த அத்தியாயத்தில் இதனை விளக்க முயல்வோம்.

அத்தியாயம்: 04

மதுப் பழக்கத்தை மதீனாவாசிகள் கூட்டாக கை விட்டமை

-ஓர் உளவியல் பார்வை-

மதீனாவில் இருந்தவர்கள் மொத்தமாக மது அருந்துவதை தவிர்ந்து கொண்ட நிகழ்வைப் பற்றி சிந்திக்கும் மனிதர்கள் அது இஸ்லாத்தின் மூலம் நிகழ்ந்த ஒரு அற்புதம் என்றே கருது கின்றார்கள். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாலைவன அரபிகளால் இத்தகைய மாற்றத்தை எப்படி ஏற்படுத்த முடிந்தது? இன்றைய காலத்திலுள்ள ஓர் உள மருத்துவமனை போதையால் பாதிக்கப் பட்ட சிலரை சிகிச்சை செய்து குணப்படுத்தினால் அதனை எத் துணை பெரிய சாதனையாக கருதுகிறோம்! ஆனால் மதுவை பயன்படுத்துவதால் சிறுநீரகத்தில் (Kidney) பாதிப்பு ஏற்படும் என்ற அறிவோ, அதன் பாதிப்பை உடலிலிருந்து நீக்குவதற்கான முறைமைகளோ, நடத்தைசார் பாதிப்புக்களை சீராக்க மருத்துவ நிலையங்களோ, அதற்கான மருந்துகள் தொடர்பான அறிவோ அன்றைய மதீனாவாசிகளிடம் இருக்கவில்லை.

மதீனாவில் வாழ்ந்தவர்களில் பதிக்கப்பட்ட ஆழ்ந்த இறை விசுவாசமே இந்த உறுதியை அவர்களிடத்தில் ஏற்படுத்தியது. போதையில் இருந்தவர்கள்கூட வாயிலிருந்த மதுவை துப்பிவிடும்

அளவுக்கு அந்த ஈமானிய தாக்கம் காணப்பட்டது. ஒரு மறை வசனமே இந்த அடிப்படையான மாற்றத்தைஏற்படுத்தியது. இத்தகைய ஒரு மாற்றத்தை மனித சமூகம் அன்றோ இன்றோ கண்டதில்லை. உண்மையில் மது அருந்துவதை ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஒரு சமூகமாக தவிர்ந்துகொண்டமை ஓர் அற்புத நிகழ்வுதான்.

இருபதாம் நூற்றாண்டிலே அமெரிக்கா மது அருந்துவதை தடுக்க நிறைவேற்றிய சட்டங்களோ, எடுக்கப்பட்ட முயற்சிகளோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது தோல்வியைத் தழுவின.(1)

இத்தகைய வெளிப்படையானதொரு மாற்றம் ஏற்படுவதற்கான ஆன்மீக, சமூக தூண்டல் காரணிகளை விளக்கவும், அத்தகைய காரணிகளுக்கும் நவீன உள சிகிச்சைகள் மற்றும் சமூகவியல் ஆய்வு நடைமுறைகளுக்கும் இடையிலான தொடர்பை விளக்கி நவீன பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சில ஆலோசனைகளை முன்வைக்கவும் இங்கு விரும்புகிறேன். இந்த ஆலோசனைகள் குறிப்பாக முஸ்லிம் நாடுகளுக்குப் பொருந்தும் என கருதுகிறேன்.

சிக்கலான சமூகவியல்தோற்றப்பாடுகளை இவ்வாறு உளவியல் ரீதியாக விளக்கும்போது தனியாள் உளவியல், சமூகவியல், நாகரிகம் என்பவை தொடர்பான எண்ணக்கருக்களுக்கு இடையிலான பாரிய வேறுபாட்டை நாம் புறக்கணிக்கவில்லை. ஆயினும் சாதாரண வாசகனுக்கு புரிந்து கொள்ளச் சிரமமான இத்தகைய சிக்கலான சமூக, நாகரிக தோற்றப்பாடுகளை இக்கண்ணோட்டத்தில் விளக்குவது இலகுவாகவும் பயனுள்ளதாகவும் அமையும் என்று கருதுகின்றோம்.

மட்டுமன்றி, இந்த உளவியல் பகுப்பாய்வில் இறங்க முன்னர் ஓர் உண்மையை நாம் வலியுறுத்த வேண்டும். அதாவது, அந்த மகத்தான இஸ்லாமிய தோற்றப்பாட்டை நவீன சமூக-உளவியல் பகுப்பாய்வுக்குள் முழுமையாக எம்மால் கொண்டு வந்து விட முடியாது என்பதே அவ்வுண்மை. ஏனென்றால் நவீன ஆய்வுகள் மனிதனை ஒரு சமூகப் பிராணியாகவும், சடரீதியாகவும் மாத்திரமே

கற்பிதம் செய்து விளக்குகின்றன. இஸ்லாமிய, ஆன்மீக, சமூக, உளவியல் மாற்றமோ தெய்வீக வழிகாட்டலால் நிகழ்ந்த ஒன்று. பூமி சார்ந்த சடவாதச் சூழ்நிலைகள் மாத்திரம் அதற்கு காரண மன்று.

''பூமியில் உள்ள அனைத்தையும் நீங்கள் செலவு செய்தாலும் நீங்கள் அவர்களது உள்ளங்களுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்த முடியாது. அல்லாஹ்வே அவர்களுக்கிடையில் பிணைப்பை ஏற்படுத்தினான்''. (அன்பால் 63)

ஆனால் நவீன சமூக-உளவியல்கோட்பாடுகள் இந்த தெய்வீகப் பிரவாகத்தை கவனத்தில் எடுப்பதில்லை. அவற்றை உருவாக்கிய பலர் ''உலக வாழ்வின் மேலோட்டமான அம்சங்களையே அறிவார்கள். மறுமை பற்றி அவர்கள் அறியாதிருக்கின்றனர்''. (அர்-ரூம்: 07)

இந்த வகையில்தான், 'மதம் என்பது வெறுமனே ஒரு சமூக வியல் தோற்றப்பாடுதான். துர்க்ஹெய்ம் போன்ற மேற்குலக ஆய்வாளர்களதுகோட்பாடுகளின் ஊடாக அதனை ஆய்வு செய்து விட முடியும்'என்று நம்பி எழுதத் தொடங்கிய நவீன முஸ்லிம் ஆய்வாளர்கள் பெறும் தவறில் விழுந்தனர். இது மிகத் தொலைவிலுள்ள ஒரு நட்சத்திரத்தின் அல்லது கிரகத்தின் பண்புகளை அறிந்து கொள்ள தொலைநோக்கியை (Telescope) தலை கீழாக புரட்டிப் பார்ப்பதை போன்றாகும்.

எனினும், இந்த நவீன சமூக -நாகரிக- உளவியல் கலைகள் வரையறுக்கப்பட்ட எல்லை கொண்டவையாக இருந்த போதி லும், இஸ்லாமிய சமூக மாற்றத்தில் காணப்பட்ட அற்புதத் தன்மையை பல வகையில் அவை உறுதிப்படுத்துகின்றன எனலாம். அந்த வகையில், மதுவை கட்டம் கட்டமாக தடுத்தல் என்ற அற்புதத்தினூடாக முழு சமூகமும் மதுவை கைவிட்டமை தொடர்பாக ஆய்வு செய்வதனூடாக நமது இக்கருத்தை உறுதிப் படுத்த முயல்வோம்.

நாகரிக பரிமாற்றுத் தடை (Cultural Reciprocal Inhibition) நோக்கில் படிப்படியான மதுத் தடை

அல்குர்ஆனின் கட்டளைக்கு மதீனத்து முஸ்லிம்கள் கூட்டாக கட்டுப்பட்டமை ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் ஏற்படுத்துவது உண்மைதான். ஆயினும், அந்த இறுதி நிலைக்கு வர முன்னர் பல வருடங்களாக கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட நுணுக்க மான திட்டமிடலை நாம் கவனித்தால், அதன் பின்னாலுள்ள தர்க்க நியாயம் தெளிவாகி விடும். மது தடுக்கப்பட மூன்று அல்லது நான்கு கட்டங்கள் காணப்பட்டன. அனைத்தும் படிமுறை ரீதி யானவை. மனிதனைப் படைத்தவனும் அவனது இயல்புகளை நுணுக்கமாக அறிந்தவனுமாகிய ஒருவனால் மாத்திரம்தான் அந்தக் காலகட்டத்தில் இத்தகையதொரு நுணுக்கமானதொரு திட்டத்தை முன்வைக்க முடியும் என்பதனை அவை உறுதிப் படுத்துகின்றன. அந்த நுணுக்கமான திட்டமானது இன்று அறியப் படுகின்ற நடத்தை மாற்ற சிகிச்சைக்கு, அதிலும் குறிப்பாக ''படி முறையாக உணர்வு மாற்றம் செய்தல்'' (Systematic Desensiti zation) என்ற முறைமைக்கு ஒப்பானது. இம்முறைமையானது சிகிச்சைசார் உளவியல் துறையில் கடந்த நூற்றாண்டில் ஐம்பது களில்தான் அறிமுகமாகி வளர்ந்தது.

ஓர் உள நோயாளியை பதட்டத்தையும் பயத்தையும் ஏற்படுத்தும் சூழ்நிலைகளுக்கு படிப்படியாக பழக்கப்படுத்துகின்ற அதே வேளை, மன அமைதியையும் நிம்மதியையும் ஏற்படுத்தும் எதிர்த் தூண்டல்களையும் அதே சூழ்நிலைகளில் கிளர்த்துவதே ''படி முறையாக உணர்வு மாற்றம் செய்தல்'' என்ற சிகிச்சை முறை பின்பற்றும் வழிமுறையாகும்.

உதாரணமாக ஒருவர் மக்கள் திரளுக்கு முன்னால் எழுந்து உரையாற்ற அல்லது கருத்துக் கூறப் பயப்படுபவராக (Social Phobia) இருந்தால், அப்பயத்தை நீக்குவதற்காக உளவியல் மருத் துவர் அக்குறித்த நபரை சமூக சூழமைவுகளுக்கு அல்லது தூண்டல்களுக்கு பிரமிட் வடிவிலான படிமுறை அமைப்பிலும் நுணுக்கமாகவும் உட்படுத்துவார். முதலில் சிறிதளவு பயத்தை

மாத்திரம் கிளர்த்தக் கூடிய சாதாரண சமூக சூழமைவுகளிலிருந்து இது ஆரம்பிக்கும். உதாரணமாக சிறுவர்களுடன் அல்லது அவரை விட அந்தஸ்தில் குறைந்த சிலருடன் கதைத்துக் கொண்டிருத்தல் போன்ற விடயத்திலிருந்து அது ஆரம்பிக்கும். இறுதியாக, கடும் விமர்சனப் பண்பு கொண்ட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திரளின் முன்னால் கூட உரை நிகழ்த்தும் துணிவுக்கு அவரை கொண்டு செல்லும் வரை இது தொடர முடியும்.

குறித்த நபர் முதலில் மருந்து மூலமாக அல்லது அறிதுயில் (hypnotheraphy) மூலமாக அல்லது தசைத் தளர்வு மூலமாக முழுமையான உளவியல் தளர்வு நிலைக்கு கொண்டு செல்லப் படுவார். பின்னர் ஓர் இலகுவான, சாதாரண பயத்தை ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பமொன்றை கற்பனை செய்யுமாறு அவர் வேண் டப்படுவார். அவரது நனவிலி மனதில் குறித்த சந்தர்ப்பம் தொடர் பான பயம் விலகி, தற்போதிருக்கும் மன அமைதி நிலையுடன் தொடர்புபட்டதாகப் பதியும் வரை அதனை மீண்டும் மீண்டும் கற்பனை செய்யுமாறும் வேண்டப்படுவார். அவரது உள்ளத்தில் தன்னம்பிக்கை ஏற்பட்டதும் யதார்த்த வாழ்வில் அத்தகைய சூழ்நிலைகளை நடைமுறையில் எதிர்கொள்ளுமாறு வேண்டப் படுவார். பின்னர் படிப்படியாக கடினமான சந்தர்ப்பங்களை நோக்கி அவர் நகர்த்தப்படுவார். ஏலவே முடியாது என்று அவர் கருதிய விடயங்களைக் கூட தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் இயலுமையைப் பெறும்வரை இது தொடரும்.

சூடான் நாட்டிலுள்ள சில பழக்க வழக்கங்களுக்கும் உளவி யல் கோளாறுகளுக்கும் இடையிலான தொடர்புபற்றி கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன்.[2] மருத்துவமனையிலுள்ள மன நோயாளி ஒருவரின் தவறான உளவியல் பழக்கமொன்றை மாற்றுவதற்கு ‘‘படி முறையாக உணர்வு மாற்றம் செய்தல்’’ (Systematic Desensitization) என்ற செயன்முறையை அமுல்படுத் துவதற்கும்,ஒரு நாகரிகத்தின் முழு மொத்தப் பழக்க வழக்கங் களையும் நடத்தைகளையும் மாற்றுவதற்கும் இடையில் எவ் வாறு தொடர்பை ஏற்படுத்தலாம் என அதில் விளக்கியுள்ளேன்.

முழுமொத்த சமூகப் பழக்க வழக்கங்களை மாற்றும் செயன் முறையை அங்கு நான் 'நாகரிக பரிமாற்றுத் தடை' (Cultural Reciprocal Inhibition) என்றே அழைத்துள்ளேன். இவ்விடயத்தில் உளநோயாளியைப் போன்றுதான் சாதாரண மனிதர்களும் காணப் படுகிறார்கள். நாகரிக மாதிரிகளும் பழக்க வழக்கங்களும் ஏலவே நிலவும் சமூக பாரம்பரியங்களோடும் உணர்வுகளோடும் தொடர் புற்றவை என்ற வகையிலேயே மனிதர்களும் அவற்றுடன் கூட் டாக தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறான பழக்க வழக்கங்கள் இறுதியில் அழிவடையவும் முடியும். ஆனால் அவ்வாறு அழிவடைவதற்கு காலம் மட்டுமே காரணம் என்று கூறி விட முடியாது. கலாசார பரிமாற்றத் தடையின் வடி வங்களுள் ஒன்று இடம்பெறுவதனூடாகவும் அது நடந்தேறுகிறது.

உயர் தொழிநுட்ப நாகரிகம் கொண்ட மேற்கு நாடொன்று பாரம்பரிய ஆபிரிக்க நாகரிகமொன்றின் மீது ஏற்படுத்தும் சித்தாந்த மற்றும் சிந்தனைப்பாங்கு ரீதியான மாற்றத்தின் போது இந்த நாகரிக பரிமாற்றுத் தடையின் தாக்கத்தை தெளிவாக கண்டு கொள்ள முடியும். குறித்த பாரம்பரிய நாகரிகம் முன்னேற்ற மடைந்த நாகரிகத்தின் சிந்தனா மற்றும் சித்தாந்தக் கூறுகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பத்தில் தயங்கினாலும் அதன் தொழில் நுட்பத்தை ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு நவீன சடவாத நாகரிகத்தின் கவர்ச்சிக்கு ஆட்படத் தொடங்கும் பாரம்பரிய நாகரிகம் அதன் பெறுமானங்களையும் படிப்படியாக உள்வாங்கத் தொடங்கும். இறுதியில்,அதன் முன்னோர்கள் எந்த சித்தாந்தங் களை எதிர்த்துப் போராடினார்களோ அவற்றையே ஏற்கும் நிலைக்கு அது ஆளாகி விடும்.

தோல்வியடையும் நாகரிகம் வழக்கமாக வெற்றி கொண்ட நாகரிகத்தின் தொழில்நுட்பக் கூறுகளை -அவற்றில் இன்பமும் இலகுத் தன்மையும் இருப்பதால்- ஏற்றுக்கொள்ளத் தொடங்கு கிறது. அதன் மூலமாக இரு நாகரிகங்களுக்கும் இடையிலான சிந்தனா மற்றும் சித்தாந்த முரண்பாட்டை சமநிலைப்படுத்தும் நிர்ப்பந்தத்துக்கு அது உள்ளாகிறது. இந்த வகையில் சடவாத

ஏற்புக்கும் சித்தாந்த ஏற்புக்கும் மத்தியில் தோன்றும் இடை வெளியானது கால ஓட்டத்தில் படிப்படியாக சுருங்குகிறது. இது ஓக்பர்னின் (Ogburn) பிரபலமான சமூகவியல் கோட்பாடாகிய 'நாகரிக இடைவெளி'யை (Cultural Lag) உளவியல் நோக்கில் நமக்கு விளக்குகிறது.

சமூக மாற்றத்திலே தொழிநுட்பமும் சட நாகரிக அம்சங் களும் முக்கியமானவைதான். எனினும் ஆன்மீக ரீதியான அல்லது சித்தாந்த ரீதியான வேறுகூறுகளாலும் நாகரிக மாற்றத்தை ஏற் படுத்த முடியும். அக்கூறுகள் குறித்த சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறவும், எதிர்க்காரணிகளை மிகைக்கவும் ஆற்றல் பெற்றிருக்கு மாயின் அந்த மாற்றம் இன்னும் விரைவாக நடந்தேற முடியும்.

சமூக மாற்றம் என்பது சுமுகமாகவும் தொடர்ச்சியாகவும் இடம்பெற இரு பிரதான நிபந்தனைகள் அவசியம். முதலாவது, குறித்த கலாசார சட்டகங்களை மாற்றும் போராட்டத்தினால் உருவாகக் கூடிய பதட்டத்தைத் தணிப்பதற்கான உளவியல் ரீதியான கூட்டு எதிர்வினை காணப்படல் வேண்டும். இரண்டா வது, தேவையான மாற்றம் படிமுறையாக இடம்பெற வேண்டும்.

சமூக இணக்கம் (Social Compliance) என்ற தோற்றப்பாட்டை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட 'ஏற்கச் செய்தல்' (Persuasion) மற்றும் 'தண்டனையும் வெகுமதியும் வழங்குதல்' (Incentive Manipulation) முதலிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் கோட்பாடுகளுக்கு இது இன்னும் ஆழ மான பரிமாணமொன்றை வழங்கும் என நான் நம்புகின்றேன்.

மது என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் கைக் கொண்ட வழிமுறை நீண்ட காலத்தை அடிப்படையாக கொண்டி ருந்தது. மாற்றத்துக்கான பாதையை எளிமையாகவும் மென்மை யாகவும் செப்பனிடுகின்ற -பிரமிட் வடிவிலான- கட்டங்களில் அது அமைந்திருந்தது. எதிர்காலத்தில் வரவிருந்த பாரிய மாற்றங் களுக்கு அது கட்டியம் கூறியது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் போவதற்கு முன்னதாக மக்கா வின் பிந்திய காலப் பகுதியிலேயே போதை தொடர்பான முதல்

வசனம் அருளப்பட்டது. மட்டுமன்றி அது பிரச்சினையின் கோணங் களை மிக இலகுவாகவே தொட்டுச் சென்றது:

''பேரீச்சை, திராட்சை என்பவற்றின் கனிகளிலிருந்து நீங்கள் போதையையும் நல்ல உணவையும் நீங்கள் பெறுகிறீர்கள். சிந் திப்பவர்களுக்கு நிச்சயமாக இதில் அத்தாட்சி இருக்கிறது''. (அந்-நஹ்ல்: 67)

இந்த வசனம் போதையை நல்ல உணவிலிருந்து மாறுபட்ட ஒன்றாகக் காட்டுகிறது. உமர் (றழி)(3) போன்ற கூருணர்ச்சி கொண்ட சில முஸ்லிம்களிடம் மது அருந்துதுல் தொடர்பான ஐயங்களைப் கிளப்பிவிட இந்த வசனம் மாத்திரமே போதுமாக இருந்தது. ஜாஹிலிய்யா காலத்தில் உமர் அதிகமாக மது அருந் துபவராக இருந்தார். போதையின் காரணமாக பல அத்துமீறல் களிலும் ஈடுபட்டிருக்கிறார். மதுவின் தீங்குகளை அவர் அறிந்தத னாலேயே அதனை கடுமையாக எதிர்ப்பவராகவும் மாறியிருக்கக் கூடும். அந்த வகையிலேயே மது அருந்துவதை தொடர்வதில் என்ன பயன் இருக்க முடியும் என அறிவுள்ள சில முஸ்லிம்கள் நபி (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். மது அருந்துவது அது வரை தடுக்கப்படாதிருந்த போதிலும்,சிலர் தாம் அருந்தும் மது வின் அளவை குறைத்துக் கொள்ள அல்லது முற்றாக தவிர்த்துக் கொள்ள முயற்சிக்கத் தொடங்கியும் இருக்கலாம்.

ஆக- மது என்பது சிறந்த ஆகாரம் அல்ல என்பதனை உணர்த் தும் விதமான ஆரம்ப ஏற்பாடாக இது காணப்பட்டது என்று கூறலாம். இதன் பிறகே மதுவை தடுப்பதற்கான உண்மையான முதல் கட்டம் ஆரம்பிக்கிறது. இதன்போது குறித்த பிரச்சினையை வஹீ நேரடியாக கையாண்ட போதும், மிக எச்சரிக்கையாகவும் அனைத்து நிலைகளையும் கருத்தில் கொண்டதாகவும் அது அமைந்திருந்தது. மது மற்றும் சூது தொடர்பான மதீனாவாசிகளது கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாக அது காணப்பட்டது.

''அவர்கள் மது பற்றியும் சூதாட்டம் பற்றியும் உங்களிடம் கேட்கிறார்கள். கூறுங்கள்: அவ்விரண்டிலும் பெரும் தீங்கு

இருக்கிறது. மனிதர்களுக்கு சில பயன்களும் உண்டு. எனினும் பயனைவிட தீங்குதான் பெரியது''. (பகரா 219)

இந்த வகையில், இறையச்சமும் பேணுதலும் தீட்சண்ய நோக்கும் கொண்டிருந்தோர் மதுவில் பெரும் தீங்கு உள்ளது எனக் கொண்டிருந்த நிலைப்பாட்டை இவ்வசனம் தெளிவாக உறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும், இந்த வசனம்கூட மதுப் பாவனையை தடுக்கவில்லை. எனவே அதிகமான முஸ்லிம்கள் மது அருந்திக் கொண்டுதான் இருந்தார்கள். குறிப்பாக -வழக்கம் போன்று- காலைநேரத்தில் அருந்துவதனையும் (ஸபூஹ்), பிற் பகலில் அல்லது மாலையில் அருந்துவதனையும் (கபூக்) அவர்கள் விடவில்லை. எனினும் குடிப்பவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. தொடர்ந்து குடித்துக் கொண்டிருந்த பலர் கூட குடிப்பது பாவமானது 'அல்லது குடிப்பது பயனற்றது' என்ற குற்ற உணர்வுடனேயே அதில் ஈடுபட்டார்கள்.

மதுவில் தீங்குள்ளது என்ற வசனம் அதன் தீமைகள் பற்றிய எச்சரிக்கையுணர்வை முஃமின்களிடத்தில் தட்டியெழுப்பியது. அது குறித்து கவனமாக இருக்க அவர்களைத் தூண்டியது. ஜாஹி லிய்ய காலத்தில் கூட அறபிகள் மதுவின் தீங்கை ஓரளவு புரிந்தே வைத்திருந்தார்கள். இதனை ஜாஹிலிய்ய கால கவிதைகள் உணர்த்துகின்றன. கைஸ் இப்னு ஆஸிம் அல்-மின்கரி என்பவர் ஒருமுறை மது மயக்கத்தில் தனது மகளோடு காதல் வயப்பட்டு விட்டார். மயக்கம் தெளிந்த பிறகு தனது தவறைப் புரிந்து கொண்ட அவர், அதன் பிறகு மதுவை தனக்குத்தானே தடை செய்துகொண்டார். தனது கவிதை ஒன்றில் மதுவின் தீங்குகளை அவர் இவ்வாறு பாடுகிறார்:

''மது ஓர் அடங்காப்பிடாரி
நிதானமான மனிதனையும் அது சீர்கெடுக்கும்.
வாழ்வில் இனி நான் மது அருந்த மாட்டேன்..
மருந்தாகக் கூட எவருக்கும் அதை கொடுக்க மாட்டேன்!
தன்னை அருந்தியவரை அது அவமானப்படுத்தி விடும்..
பெரும் கஷ்டத்துக்குள் அவரை தள்ளி விடும்..!''

ஜாஹிலிய்யா காலத்திலேயே மதுவை அவர் தவிர்ந்து கொண்டமை அவரது நல்லியல்பின் உண்மைநிலையை எடுத்துக் காட்டுகிறது. இதனால்தான் பின்னர் அவர் பனூ தமீம் கோத்திரத்தாருடன் நபியவர்களிடம் சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். நபி (ஸல்)அவர்கள் அவரை 'நாட்டுப்புற சமூகத்தின் தலைவர்' (சையிதுல் வபர்) என்று கூறுமளவுக்கு இஸ்லாத்தை தூய்மையாக கடைப்பிடித்து வாழ்ந்தார். அவரது சமூகத்தின் ஸகாத்தை வசூலிக்க ஆமிலாகவும் அனுப்பப்பட்டார்.[(4)]

தறபா இப்னுல் அப்த் என்ற கவிஞரோ மதுப் பழக்கத்தின் சமூக, பொருளாதார தாக்கங்களைப் பற்றிப் பாடுகிறார். அதிகமாக மது அருந்துவதற்காகவும் கேளிக்கைகளுக்காகவும் அவர் தன்னிடம் இருந்த அனைத்தையும் செலவு செய்ததாகவும்,தொழு நோயாளியிடமிருந்து சுகதேகி விலகி ஓடுவது போன்று தனது சமூகத்தவர் தன்னிடமிருந்து விலகி ஓடியதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். மதுப் பழக்கத்தினாலும் வறுமையினாலும் சொறி பிடித்த கழுதை போன்று தான் ஆகி விட்டதாக அவர் வர்ணிக்கிறார்.[(5)]

ஒருவர் மதுவுக்கு அடிமையாகி இருப்பதற்கான வெளிப்பாடுகளை அல்-அஅஷ்ஷி என்பவர் மிக நுணுக்கமாக இப்படி வர்ணிக்கிறார்: ''மதுவுக்கு அடிமையானவன் இரவில் வெகுநேரம் வயிறு மதுவின்றி வெறுமையாக இருந்த காரணத்தினால் அதிகாலையில் ஒருவித நடுக்கத்தையும், தடுமாற்றத்தையும் உணர்வான்''. இரவின் நீண்ட மணித்தியாலங்களில் இரத்தத்திலுள்ள அல்கஹோலின் அளவு குறைவடைவதால்தான் மதுவுக்கு அடிமையானவருக்கு இத்தகைய நடுக்கம் ஏற்படுகிறது என்பது இன்று பரவலாக அறியப்பட்ட உண்மையாகும். அதிகாலையில் மது அருந்துவதும், அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்தும் நோக்குடன் போதிய மதுவை இரவில் மறைத்து வைத்துக் கொள்வதும் ஒருவர் மதுவுக்கு அடிமைப் பட்டிருப்பதற்கான முக்கிய அறிகுறிகள் என நவீன உளவியல் மருத்துவம் கண்டறிந்துள்ளது. இத்தகைய நிலையில் இருப்பவருக்கு காலையில் மது அருந்த தாமதம் ஆக ஆக கலக்கமும் பதட்டமும் நடுக்கமும் அதிகரிக்கும். மதுவுக்கு

விலையாக அவர் தன்னிடமுள்ள எந்தப் பெறுமதியையும் இழக்கத் தயாராகி விடுவார். மது கையில் கிடைத்ததும் தன் சமநிலையை மீட்டெடுத்துக் கொள்வதற்காக ஆவலோடும் ஆசையோடும் அதனை பருகுவார்.

நுணுக்கமான, அழகான கதை வடிவக் கவிதையில் அல்-அஅஷ்ஷி இதனை வர்ணிக்கிறார்: ‘‘பொழுது புலர முன்னர் அதிகாலை வேளையில் ஓர் இளைஞன் அஅஷ்ஷியின் வீட்டுக் கதவை தட்டுகிறான். மது அருந்துவதற்காக தன்னுடன் வரும்படி அவரிடம் கேட்கிறான். சேவல்கள் கூட கூவித் தொல்லை தராத ஆழ்ந்த அமைதியான அந்த நேரத்தில் இருவரும் பதட்டத்துடன் வெளியேறிச் செல்கிறார்கள். மது மாத்திரம்தான் அவர்களது பதட்டத்தை நிறுத்தும் மருந்தாக அமையும். அப்படி இல்லை யென்றால், இந்த அதிகாலையில் அவர்கள் தமது படுக்கையை யும் தூக்கத்தையும் விட்டுச்சென்றிருக்க மாட்டார்கள்.

இதோ இருவரும் மது விற்பவரின் வீட்டை அடைந்துவிட்டார் கள். அங்கே நீலக்கண்களையுடைய வேற்று நாட்டவன் ஒருவன் இருக்கிறான். மிக சிறந்த பழங்களால் தயாரிக்கப்பட்ட மதுவை ஒரு பெறுமதியான புதையலைக் காக்கும் காவற்காரனை போன்று அவன் காத்து நிற்கிறான். பிரமாண்டமான கரிய பாத்திரத்தை தெரிவுசெய்ய அல்-அஅஷ்ஷி அவசரப்படுகிறார். ‘‘இதுதான். இதனை தந்துவிடு. வேண்டியதை எடுத்துக்கொள்!’’ என்று கூறு கிறார். அந்தக் காலை வேளையில் முடிந்தளவு அவசரமாக குடிப்பதுதான் அவரது மனக் கலக்கத்தைக் போக்கும். அவர் கடுமையான ஆசையோடும் அவசரத்தோடும் அதனைக் கேட்கி றார். மது வியாபாரியோ அவசரம் காட்டாமல் அதிக பணம் கேட்கிறான். ‘‘கேட்கும் பணத்தைக் கொடுத்து விடு’’ என்று பணியாளனுக்கு அல்-அஅஷ்ஷி கூறுகிறார். என்றாலும் மது விற்பவன் அந்த இருளின் மங்கிய ஒளியில் திர்ஹம்களின் எண்ணிக்கை சரியாக உள்ளதா? அவை அனைத்தும் நல்ல நாண யங்கள்தானா? என்று கூர்ந்து பார்க்கிறான். அஅஷ்ஷியின் பதட்டம் அதிகரிக்கிறது. ‘‘எமது அனைத்து திர்ஹம்களும் நல்லவையே.

எண்ணிக்கையும் சரியாகவே உள்ளது. எம்மை தாமதப்படுத்தாதே''
என்று சத்தமிடுகிறார்.

அதன் பிறகு மதுவின் உற்சாகம் உடலின் பாகங்களெங்கும் எவ்வாறு பரவியதுஎன அஅஷ்ஷி விபரிக்கிறார். எவ்வாறு பரவியது? ஆரம்பத்தில் காணப்பட்ட நடுக்கம் போதை, மதுவின் தரம், சுவை காரணமாக எவ்வாறு நீங்கியது என்பது பற்றி அவர் வர்ணித்துச் செல்கிறார்.[6]

மதுவுக்கு அடிமையாகும் கட்டத்தில் ஒருவருக்கு ஏற்படும் கவலை, அவநம்பிக்கை என்பவற்றை அல்-அஅஷ்ஷியின் கவிதைகள் விளக்குகின்றன. அவர் தனது கௌரவத்தை இழக்கிறார்; தொழிலையும் குடும்பத்தையும் புறக்கணிக்கிறார்; பெருமைக்காக வீண் விரயம் செய்கிறார். இதனால் பல்வேறு கவலைகளுக்கு ஆளாகிறார். இத்தகைய கவலைகளே சித்தப்பிரமைக்கும் பிதற்றலுக்கும் ஆரம்பமாக அமைவதாக நவீன அறிவியலும் விளக்குகிறது. இத்தகைய நோய் நிலை காலை வேளைகளில் கடுமையாகிறது. மாலையாகும் போது மதுவின் கிறக்கத்தில் அது குறைவடைகிறது.

கெஸல் (Kessel)[7] என்ற மருத்துவர், ''மதுவுக்கு அடிமையானவர்களில் பலர் தமது சம்பளத்தைப் பெற்றுக் கொண்டதும் மதுக்கடைக்குள் நுழைகின்றனர். தமது வீரப் பிரதாபங்களையும் பெருமைகளையும் பறைசாற்றுவதற்காக முழுப் பணத்தையும் செலவழித்து விட்டு வெளியே வருகின்றனர்'' என குறிப்பிடுகின்றார்.

நவீன அறிவியல் உண்மைப்படுத்திய மதுவின் தீங்குகளை ஜாஹிலிய்ய மக்களும் அறிந்து வைத்திருந்தார்கள் என்பதனை அஅஷ்ஷியியின் கவிதைகள்[8] மீண்டும் உறுதிப்படுத்துகின்றன. மதுவின் மீதான மனச்சாய்வுடன் ஆரம்பிக்கும் மதுப் பழக்கம் பின்னர் அதற்கு அடிமையாகும் நிலைக்கு இட்டுச் செல்வதை அனைவரையும் விட ஆழமாக அவை விளக்குகின்றன. ஆரம்பத்தில் தான் மதுவை இன்பத்துக்காகவும் உற்சாகத்துக்காகவும்

அருந்தத் தொடங்கி, பின்னர் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் வலிகளுக்கு நிவாரணமாக அருந்தியதாக அவர் குறிப்பிடுகிறார்.

நவீன உலகம் இதனை இப்படி விளக்குகிறது. ஒரு மனிதன் ஆரம்பத்தில் மதுவை இன்பத்துக்காகவும் உற்சாகத்துக்காகவும் அருந்துகிறான். பின்னர் அதேயளவு இன்பத்தையும் உற்சாகத்தை யும் எட்ட அவனுக்கு அதிகளவு மது தேவைப்படுகிறது. கால ஓட்டத்தில் மதுவுக்கு அடிமையாதல் என்ற வெற்று வளையத் தினுள் சுற்றத் தொடங்குகிறான். உடல் உறுப்புகள் அதற்கு பழக்கமாகி விடுகின்றன.

ஜாஹிலிய்யா கால மக்கள் மதுவின் உடல்ரீதியான பாதிப்பை அறிந்து வைத்திருந்தார்கள். அவர்களது கவிஞர் ஒருவர் மது வினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களின் இறுதிக் காலகட்டத்தை அருவருக்கத்த விதமாக வர்ணிக்கிறார்.(10) உடல் வீங்குமளவுக்கு இரவிலும் பகலிலும் மது அருந்தியவர்கள் பிரசவ வேளையில் பெண்ணின் கருப்பையிலிருந்த வெளியேறும் கெட்டியான மஞ்சள் திரவம் போன்று வாந்தியெடுக்க வேண்டிவரும் என்கி றார். இருதயத்தும் உடலில் இடமில்லாத அளவு வீங்கத் தொடங்கி விடும் என்கிறார்.

மதுவுக்கு அடிமையானவரின் உடலில் மது நஞ்சாக மாறுகிறது; ஈரலை வீக்கமடையச் செய்கிறது; பயனுள்ள புரத உணவின் மீது விருப்பமின்மையை ஏற்படுத்துகிறது. உணவுக்குப் பதிலாக மது வில் காணப்படும் அதியுயர் கலோரியின் மீது அவர் பெருமளவு தங்கியிருப்பதால், வயிறு ஊதிப் பருத்து விடுகிறது. எடை அதிகரிக்கிறது. குருதியில் பிளாஸ்மா புரதம் குறைவடைந்து நீர் கட்டத் தொடங்குகிறது(11) இதனையே மேலே கவிஞர் வேறு வார்த்தைகளால் வர்ணிக்கிறார்.(12)

ஜாஹிலிய்யா காலத்தில் மது அருந்தாத சிறு தொகையினரும் இருக்கவே செய்தனர். அத்தகையோர் இஸ்லாத்தை ஏற்றதும் மதுவின் தீமை குறித்து விளக்கிக் காட்டினர். இவ்வகையில் உஸ்மான் இப்னு அப்பான் (றழி) குறிப்பிடத்தக்கவராவார்.

‘ஜாஹிலிய்யா காலத்தில் மது அருந்தாமல் உங்களை தடுத்தது எது?’ என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, ‘‘அது அறிவை மொத்தமாகவே போக்கி விடுவதை நான் கண்டேன். மொத்த மாகச் சென்று மொத்தமாகத் திரும்பும் எதனையும் நான் கண்ட தில்லை’’ எனக் கூறினார்.[13]

உஸ்மான் (றழி) அவர்களது சமகாலத்தில் வாழ்ந்த நாட்டுப்புற அரபி ஒருவரும் மது அருந்த மறுத்திருந்தார். காரணம் கேட்கப் பட்டபோது, ‘‘எனது அறிவைக் குடித்து விடும் ஒன்றை நான் குடிக்க மாட்டேன்’’ எனப் பதிலளித்தார்.

‘‘மொத்தமாக போவது மொத்தமாக திரும்பாது’’ என்ற உஸ்மான் (றழி)யின் உள்ளுணர்வானது மது மனித புத்தியில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நவீன ஆய்வுகளின் கருத்தை உறுதிப்படுத்துகிறது. மிருகங்களிலும் மனிதர்களிலும் செய்யப்பட்ட ஆய்வுகள் இதனை உறுதி செய்கின்றன. புரொயின்ட் (Freund) மற்றும் வோல்கர் (Walker) ஆகிய இருவரும் செய்த ஆய்வுகளை இதற்கு உதாரணமாக கூறலாம். ‘‘இரண்டு எலிகள் போதையூட்டப்பட்ட உணவுகளை ஐந்து மாதங்களாக சாப்பிடுகின்றன. பின்னர் முப்பது தினங்களாக சாதாரண உணவு வழங்கப்படுகிறது. எனினும் பிற எலிகளுடன் ஒப்பிடும் போது கற்றல், ஞாபக சக்தி போன்ற விடயங்களில் அந்த எலிகள் முன் பிருந்ததைவிட பலவீனமடைந்திருப்பது கண்டறியப்பட்டது’’.[14] மனிதர்களில் செய்யப்பட்ட ஆய்வில் டாக்டர் நோபல் அவர்கள் கீழ்வரும் விளைவை அவதானித்தார்: ‘‘நீண்ட காலத்துக்கு கொஞ் சம் மதுவையேனும் அருந்துவது கற்றலுக்கான ஆற்றலிலும் ஞாபக சக்தியிலும் நிலையான பாதிப்பை ஏற்படுத்தமுடியும்’’.[15]

இஸ்லாத்தில் மது தடுக்கப்பட்ட படிமுறைகளில் அடுத்த கட்டத்தை இனி நோக்குவோம். மதுவின் வரையறுக்கப்பட்ட பயனை விட அதன் தீமைகளை முஸ்லிம் சமூகம் இப்போது புரிந்து கொண்டாயிற்று. அது பாவமானது என்பதையும் அறிந்து கொண்டு விட்டது. இக்காலகட்டத்திலும் மது அருந்துவதில் ஈடுபட்டிருந்தோரது நடவடிக்கைகள் இறை விசுவாசத்தினாலும்

தொழுகையினாலும் பண்படத் தொடங்கியிருந்த சஹாபாக்களின் உள்ளங்களில் மதுவின் தீங்குகள் பற்றிய பார்வையை மேலும் ஆழப்படுத்தியிருக்கலாம். அப்படியான ஒரு நிகழ்வைத்தான் அலி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அலி (றழி) அவர்கள் தனக்குச் சொந்தமான இரு ஒட்டகைகளை ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிபும் அன்ஸாரித் தோழர்களும் மது அருந்தகூடிய ஒரு வீட்டு முற்றத்தில் தரித்துநிற்க வைத்தார்கள். அங்கு போதையுடன் ஒரு பணிப்பெண் பாடிக்கொண்டிருந்தாள். அப்போது ஹம்ஸா வாளுடன் வேகமாக வந்து ஒட்டகைகளின் முதுகுகளை வெட்டினார். அவற்றின் வயிறுகளையும் இடுப்புகளையும் கீறிக் கிழித்து ஈரலைக்கூட வெளியே எடுத்துவிட்டார். அலி (றழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் சென்று இது பற்றி முறையிட்டார்கள். நபியவர்கள் ஹம்ஸாவை அதற்காக கடிந்து கொண்டார்கள். ஆனால் மது அருந்தி கண்கள் சிவந்த நிலையில் காணப்பட்ட ஹம்ஸா, நபி(ஸல்) அவர்களையும் ஸைத் இப்னு ஹாரிதாவையும் பார்த்து ''நீங்கள் எனது தந்தையின் அடிமைகள் அல்லவா?'' என்றார். அவர் போதையில் இருப்பதை உணர்ந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். உடன் வந்த சஹாபாக்களும் சென்றுவிட்டார்கள். இது மது ஹராமாக்கப்படுவதற்கு முன்னர் நடந்த ஒரு சம்பவமாகும்.(16)

மதீனாவில் இருந்த குழுவினர் மதுவிலிருந்து இயல்பாக தங்களை விடுவித்துக்கொள்ள தயாராகிய போது படிமுறை ரீதியாக இரண்டாவது கட்டம் வருகிறது. அது மது அனுமதிக்கப் பட்டது என்ற வட்டத்தை இன்னும் சுருக்கியது. போதையோடு தொழ வேண்டாம் என்ற கட்டளையே அது.

''ஈமான் கொண்டவர்களே, நீங்கள் பேசுவதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதால்,மது அருந்தி போதையுடன் இருக்கும் நிலையில் தொழுகையை நெருங்காதீர்கள்''. (அந்-நிஸாஉ: 43)

இவ்வசனம் அருளப்பட நேரடிக் காரணம் ஒரு முஹாஜிர் மது அருந்திய நிலையில் இமாமாக தொழுகை நடாத்திக் கொண்டிருந்ததே. போதையின் காரணமாக ஓதுவதில் அவருக்கு தடு

மாற்றம் ஏற்பட்டு விட்டது.[17] ஆனால் இந்த வசனம் மருத்துவ, உளவியல், பொருளாதார கண்ணோட்டத்தில் மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்த பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. ஒரு நாகரிக சமூகத்தை இறுதி கட்டத்தை நோக்கி அது நகர்த்துகிறது.

ஒரு புறத்தில் இஸ்லாத்தின் மிக முக்கியமான வணக்கமாகிய தொழுகைக்கு நேரெதிராக இங்கு போதை நிறுத்தப்படுகிறது. ''விடயங்களில் தலையாயது இஸ்லாமாகும்; அதன் தூண் தொழுகையாகும்''[18] என்றார்கள் நபியவர்கள். தொழுகையை விடுவது மதம் மாறியதைப் போன்றது எனசில இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.[19]

இன்னொரு விதமாக நோக்கினால் ஒரு நாளில் ஐந்து முறை தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அதனை குறித்த நேரங் களில் நிறைவேற்றவும் வேண்டும். போதையோடு தொழவும் முடியாது. இதன் கருத்து என்ன? போதை ஏற்படுமளவுக்கு குடிக்க முடியாது. இது ஒரு தெளிவான விடயம். தொழுகை இரவிலும் பகலிலும் உள்ளது. இஷாவுக்கும் சுபஹுக்கும் இடை யிலான நேரம்தான் மீதமுள்ளது. இது இரவு நேரம். குடித்ததன் அடையாளம் நீங்க முன்னர் பஜ்ருடைய நேரம் வந்துவிடும்.

புதிய கட்டளைக்கும் பழைய பழக்கத்துக்குமிடையில் தெளி வானதொரு முரண்பாடு இங்கு தோன்றுகிறது. அதிகாலையில் பிந்திய நேரத்தில் குடிக்கும் பழக்கம் (ஸபூஹ்), மாலையில் அல்லது இரவின் ஆரம்ப நேரத்தில் குடிக்கும் பழக்கம் (கபூக்) ஆகிய இரண்டும் தொழுகை நேரங்களை அண்டியவை. இந்த நேரங்களில்தான் அவர்கள் குடிப்பதற்காக ஒன்று கூடினார்கள். இஷா தொழுவதற்காக பள்ளிவாசலுக்கு போதையுடன்தான் சென்று கொண்டும் இருந்தார்கள். ஆனால், குறித்த வசனம் இறங்கிய பின்னர், ''தொழுகைக்கு விரைந்து வாருங்கள்'' என்று அழைப்பு விடுப்பவர் ''போதையுடன் இருப்பவர் தொழுகையை நெருங்க வேண்டாம்'' என்றும் கூறலானார்.[20]

மதீனா பள்ளியில் நபி (ஸல்) அவர்களுடன் கூட்டாக தொழுவதை ஒருவர் தவற விடுவது எத்துணை குற்றவுணர்வை

ஏற்படுத்தும்! நெருங்கிய நண்பர்கள் அவருக்கு நோய் ஏற்பட்டு விட்டதோ என்று நினைத்து வீட்டுக்கு வந்து தரிசிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம். அப்போது தொழுகைக்கு வராமலிருந்த தற்கான காரணம் மது அருந்தியமைதான் என்று கூறுவது எவ் வளவு சங்கடமானது! கூட்டு தொழுகைக்கு செல்லாமல் இருப் பது வீட்டிலும் சமூகத்திலும் அவரது கௌரவத்தை இழக்க காரணமாகிவிடும். கூட்டுத் தொழுகையும் இஸ்லாமிய சகோத ரத்துவ உணர்வும் மதுவை தவிர்ந்துகொள்ள முடியாது என்று நினைப்பவர்களின் உள்ளத்தில் எத்தகைய உணர்வை ஏற்படுத்தி யிருக்கும்!

இந்த வசனம் இறங்கும் வரை மது அருந்துவதை குறைக்க ஆரம்பித்திராதவர்கள் இப்போது போதையிலிருந்து விடுபடு வதற்கு உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கடும் போராட்ட மொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மது அருந்துவதிலி ருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாமல் போனவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருக்கவில்லை. கட்டாயம் குடித்தே ஆகவேண்டும் என்ற நிலையிலிருந்தோர் (Compulsive alcoholics), மது அருந்தும் சபைகளுக்கு பழக்கப்பட்டவர்கள், விரைவில் உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள், உடலளவில் மது வுக்கு அடிமைப்பட்டிருந்தவர்கள் என பலதரப் பட்டவர்கள் அவர்களில் இருந்தனர். திடீரென்று மதுவை நிறுத்திக் கொள்வது அவர்களுக்கு கஷ்டமானதுதான்.

வெறும் மருத்துவக் கண்ணோட்டத்தில் நோக்கினால் கூட மதுவை தவிர்ந்து கொள்வதில் இது முக்கியமான கட்டமாகும். மதுவிலிருந்து முற்றாக விடுபடுவதன் தாக்கங்களையும் நோய்க் குறிகளையும் (Withdrawal Symptoms) வெல்வதற்கு அவர்களுக்கு போதுமான கால அவகாசம் தேவைப்பட்டது. ஏனெனில் அவ் வாறு தவிர்ந்து கொள்ளும்போது ஏற்படும் வேதனைகளை நிறுத்தவோ குறைக்கவோ மருந்துகளும் கிடையாது. மருத்துவ ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் இங்கு ஒரே வழிதான் உள்ளது. நோய்க் குறிகள் முழுமையாக நீங்கும் வரை குறித்த நபருக்கு

மதுவை படிப்படியாக குறைத்து கொடுத்து வருவதுதான் அந்த வழி. ஆரம்ப முஸ்லிம்கள் உடல் ரீதியாகவும் மருத்துவ ரீதியாக வும் மதுப் பழக்கத்தை ஒட்டுமொத்தமாக கைவிடுவதற்கான தயார்நிலையை அடைந்திருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. மதுவை முழுமையாக தவிர்ந்துகொண்ட காரணத்தினால் எவரும் மரணித்ததாகவோ உடற் கோளாறுகளுக்கு உட்பட்டதாகவோ எந்த நிகழ்வும் அக்கால கட்ட வரலாற்றில் பதியப்படவில்லை என்பதே இதற்கான சான்றாகும்.

உடம்பிலே போதையின் ஆதிக்கத்தை படிப்படியாக குறைக் கும் முறையானது இன்றைய காலகட்டத்தில் உளவியல் மருத் துவம் பயன்படுத்துகின்ற வழிமுறைகளுள் ஒன்றாகும். குறிப்பாக பார்படியூரேட்ஸ் (Barbiturates) போன்ற போதைப் பொருள் களுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்கும் போது இம் முறை பின்பற்றப்படுகிறது.[21]

மருந்துகளும், உள்ளத்தை அமைதிப்படுத்தும் நவீன சாதனங் களும், ஆய்வுகூட பரிசோதனைகளும் வளர்ந்துள்ள இக்காலத்தில் போதைக்கு அடிமையாகியோர் மது அருந்தாது தவிர்ந்துகொள் ளும் காலப்பகுதியில் அதற்கு பகரமாக Chlordizepoxide போன்ற மாத்திரைகளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். இது தவிர்ந்து கொள்ளும் காலப்பகுதியில் ஏற்படும் அழுத்தத்தை குறைக்கிறது அல்லது நீக்குகிறது என்று கருதுகிறார்கள். மதுவை தவிர்ந்து கொள்ளும் காலப்பகுதியில் ஏற்படக்கூடிய கடுமையான தலை வலி, சமிபாட்டுக் கோளாறுகள் போன்றவற்றிலிருந்து விடுபடு வதற்கான இலகுவான வழியாக மாத்திரை பயன்படுத்துவதை மருத்துவர்களும் சிகிச்சை பெறுவோரும் கருதுகிறார்கள். அதாவது மருத்துவ மனையில் இருக்கின்ற நோயாளி மதுவுடன் தொடர் பான அம்சங்களிலிருந்து தடுக்கப்படுவார். ஆனால் அவருக்கு அதிகமான மாத்திரைகள் வழங்கப்படும். இது அவர் மது அருந் தாத போதிலும் கடும் போதையில் இருக்கும் நிலைக்கு சமனா னதுதான். இதன் காரணமாகத்தான் அவர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியதும் மீண்டும் மது அருந்தத் தொடங்குகிறார்.

ஆனால் மதுவை தவிர்ந்திருந்த காலத்தில் உடல் ரீதியாக கஷ்டப் பட்டு வேதனைப்பட்டு அதனை தாங்கிக் கொண்டவர்கள் மீண்டும் மதுவின்பால் நாடுவதற்கு தயங்குவார்கள்.

மதுவை அருந்தாமல் இருக்கும்போது ஏற்படக்கூடிய வலி களை சகித்துக் கொண்டவர்கள்தான் மீண்டும் மதுவை நாடாது இருந்தார்கள் என்பதற்கு அமெரிக்காவின் 'உம்மதுல் இஸ்லாம்' (Nation Of Islam) என்ற அமைப்பின் வெற்றிகரமான செயல் திட்டங்கள் சான்றாகும். அது போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்கியது. கருப்பின அமெரிக்கர் மத்தியில் அது பணியாற்றியது.(22) அவர்கள் மது அருந்தாத காலப்பகுதியில் ஏற் பட்ட வலிகளை தவிர்க்க மாத்திரைகளை பயன்படுத்தவில்லை. மெல்கம் எக்ஸ் (Malcom x) இதனை அவரது பிரபலமான சுய சரிதை நூலில் குறிப்பிடுகிறார்.

அவர்கள் இறை நிராகரிப்பிலிருந்து விடுபட்டு இறைவனுக்கு கட்டுப்பட்டு தமது வாழ்வு முறையை மாற்றியமைப்பதாக உறுதி எடுத்த பின்னர், மதுவையும் போதைப்பொருள் பயன் பாட்டையும் விட்டுவிடுமாறு கேட்கப்பட்டனர். மது பயன்படுத் தாத தினங்களில் ஏற்படக்கூடிய வலிகளைத் தணிப்பதற்கு நாட்ட சக்தியை (Will Power) பலப்படுத்தும் விதமான தூண்டுதல்களே அவர்களுக்கு வழங்கப்பட்டன. வேதனையை குறைப்பதற்காக இஸ்லாமிய சகோதரர்கள் இரவு பகலாக அவர்களுடன் இருந்து முயற்சித்தார்கள். அந்த வாழ்க்கைப் போக்கை மெல்கம் எக்ஸ் சுருக்கமாக இப்படி விளக்குகிறார்: ''மதுவுக்கு அல்லது போதை பொருட்களுக்கு அடிமையானவர்கள் அதனை பயன்படுத்தாது தவிர்த்துக் கொள்ளும்போது உரத்த குரலெலுப்பி கத்துவார்கள். தமது சகோதரர்கள் சில மிடறுகளாவது தர மாட்டார்களா என்று ஏங்குவார்கள். எனினும் அன்பையும், அரவணைப்பையும், உண் மையான தூண்டுதல்களையும் தவிர வேறெதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. தாங்கொணா வேதனைகளை அவர்கள் அனுபவித்தார்கள். மூக்கிலிருந்து நீர் வடியும், இரு சிவந்த கண் களிலிருந்தும் கண்ணீர் கொட்டும். உச்சி முதல் உள்ளங் கால் வரை

உடல் வியர்க்கும். தலையால் சுவரில் முட்டி மோத முயல்வார்கள். சகோதரர்களோடு சண்டையிடுவார்கள். கடுமையாக வாந்திபேதியால் பாதிக்கப்படுவார்கள். தலைவலி மண்டையை பிளக்கும். மதுவின் அல்லது போதைப் பொருளின் நச்சுத் தன்மையிலிருந்து உடல் சுத்தமாகும் வரை இந்நிலை தொடரும். அதன் பின்னர் ஊட்டச்சத்து மிக்க 'சூப்' வகைகளும் இதர உணவுகளும் அவர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் மீண்டும் தமது சொந்தக் கால்களில் எழுந்து நிற்க அவை உதவும்.[23]

இஸ்லாத்தினதும் இந்த வழிமுறையினதும் சிறப்பினால் மதுவுக்கும் போதைக்கும் எதிரான இந்த அற்புதம் இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் நடந்தேறியது. அவர்களுள் மீண்டும் தீய வழிக்கு போனவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்பட்டது. மட்டுமன்றி, முன்பு போதைக்கு அடிமைப்பட்டு விடுபட்டவர்களில் பலர் போதையால் பாதிக்கப்பட்டிருப்போருக்கு அதிலிருந்து விடுபட உதவுபவர்களாகவும், 'உம்மதுல் இஸ்லாம்' அமைப்பின் உற்சாகமான அங்கத்தவர்களாகவும் மாறினார்கள்.

இனி நாம் இறைத்தூதர் (ஸல்) அவர்களது மதீனாவை நோக்கித் திரும்புவோம். ''போதையோடு இருக்கும் நிலையில் தொழுகையை நெருங்க வேண்டாம்!'' என்ற மறைவசனம் சிந்திக்கும் திறனும் நாட்ட சக்தியும் கொண்ட பலரை மதுவிலிருந்து பூரணமாக தவிர்ந்துகொள்ளத் தூண்டியது. சிலர் மது அருந்துவதையும் மதுவுக்காக செலவழிப்பதையும் படிப்படியாக குறைத்துக் கொண்டார்கள். இவர்கள் மதுவை தவிர்ந்து கொள்ளும் காலத்தில் பல துன்பங்களுக்கு ஆளாகியிருப்பார்கள். மதுவை எல்லை மீறிப் பயன்படுத்திய சிலர் அதனை விட்டுவிட்ட காரணத்தினால் கடும் தலைவலி, சமிபாட்டுக் கோளாறுகள், நடுக்கம், வலிப்பு, மயக்கம் என்பவற்றுக்கும் ஆளாகி இருப்பார்கள்.

அத்தகையோர் போதுமானளவு தேன் அருந்தச் செய்யப் பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தேனில் பல நோய்களுக்கு மருந்து இருப்பதாக நபி (ஸல்) அவர்களும் சொல்லி இருக்கிறார்

கள். 'தேனீ' என்ற பெயரில் அல்-குர்ஆனில் ஒரு அத்தியாயம் கூட காணப்படுகிறது. அதில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

''உமது இரட்சகன் தேனீக்களுக்கு 'நீ மலைகளிலும் மரங்க ளிலும் அவர்கள் கட்டுபவைகளிலும் கூடுகளை அமைத்துக் கொள்!' என்று உள்ளுணர்வை கொடுத்தான். பின்னர் நீ எல்லா விதமான கனிகளிலிருந்தும் உணவருந்தி உன் இறைவன் காட்டித் தரும் எளிதான வழிகளில் உனது கூட்டுக்கள் சென்றுவிடு என்ற உள்ளுணர்வையும் உண்டாக்கினான். அதன் வயிறுகளிலிருந்து பலவித நிறங்களுடைய ஒரு பானம் வெளியாகிறது. அதில் நோய் நிவாரணி உண்டு. சிந்தித்து உணரக்கூடியவர்களுக்கு நிச்சயமக இதில் அத்தாட்சி இருக்கிறது''.(அந்-நஹ்ல்: 68,69)

மது அருந்துவதை நிறுத்தியோருக்கு மாற்றீடாக வழங்கு வதற்கு மிகப் பொருத்தமான ஒன்றுதான் தேன். இவ்வியத்தில் தேனின் சக்தி பலவாறு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேனில் தயமினும், பல்வேறு விட்டமின் பீ சேர்மானங்களும், புரக் டோஸும் நிறைந்திருப்பதாக இன்று நாம் அறிகிறோம்.

போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதற்கு தேன் உகந்தது என்ற விடயத்தை பல தொடரான சோதனைகளின் பின் னர் மருத்துவம் மீள உறுதிப்படுத்தியுள்ளது. கலாநிதி டிகிர்[(24)] என்பவர் செய்த ஆய்வில், மதுவுக்கு அடிமைப்பட்டோருக்கு தேனில் மிகப்பெரிய பயன் இருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளார். பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் மருத்துவ சஞ்சிகை ஆக்கங்களையும் இதற்கு சான்றாக முன்வைத் துள்ளார். பிரான்ஸிய, இத்தாலிய, ஜேர்மனிய ஆய்வாளர்கள் கூட இதனை உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிடுகிறார். போதை யின் காரணமாக இழந்த விடமின்களை மீளப்பெற்றுக்கொள் வதில் தேனின் பங்கு அளப்பரியது. மது உடலில் ஏற்படுத்திய நச்சு அமிலங்களை சுத்தம் செய்வதிலும் தேனின் பங்கு மகத்தானது. எனவேதான்இதற்காக 125 கிராம் தேனை தொடராக பயன் படுத்துமாறு கலாநிதி லார்ஸின் உபதேசிக்கிறார்.[(25)]

இவை மதுவுக்கு அடிமைப்பட்டோருக்கு சிகிச்சை வழங்கு வதில் தேனின் பயனை காட்டும் சில ஆதாரங்களாகும். எனவே அன்று மதுவை கைவிட்டதால் கடுமையான பக்க விளைவுகளுக்கு உட்பட்டவர்கள் அதற்கு நிவாரணமாக தேனைப் பயன்படுத்தி இருக்கலாம். எனினும் மது அருந்துவதற்கு நன்கு பழக்கப்பட்டி ருந்த பெரும்பான்மை முஸ்லிம்கள் அதனை கைவிட்ட போது இலேசான பக்க விளைவுகளாவது அவர்களிடம் வெளிப்பட்டி ருக்கும் என்பதில் ஐயமில்லை. வழமையாக அருந்தும் மதுவின் அளவை திடீரென்று குறைக்கும் போது இரத்தத்தில் அல்கஹோ லின் செறிவு குறைவடைவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். எனினும் அவர்களில் பலர் இந்தப் பாதையில் இறுதிவரை பய ணித்தார்கள். ஒன்றில் அவர்கள் மது அருந்துவதை முற்றாகத் தவிர்ந்துகொண்டார்கள்; அல்லது சமூக நிகழ்வுகளின் போது மாத்திரம் அருந்தினார்கள். மது அருந்துவதை விட்டுவிட்டபோது உடலிலும் மனதிலும் ஏற்பட்ட மாற்றம் அதனை விட்டுவிட இன்னும் அவர்களை தூண்டியிருக்க வேண்டும். சமிபாட்டுக் கோளாறுகள், உணவில் விருப்பமின்மை, குற்றவுணர்வு, மலச் சிக்கல் என்பவற்றை இம்மாற்றங்களுக்கு உதாரணமாக கூறலாம்.

மதுவை தடைசெய்யும் படிமுறைகளுள் ஒன்றான இக்கட்டம் பொருளாதார ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்தியது எனலாம். மது விற்பனையை தமது பிரதான வருமான மூலமாக கொண்டி ருந்த பலர் இனி வியாபாரம் செய்வதற்கு வேறு பண்டங்களை தேட வேண்டும் என நிச்சயம் உணர்ந்திருப்பார்கள். ஏனெனில் ''மதுவின் பயனைவிட தீங்கு பெரியது'' என்ற வசனம் அருளப் பட்டது முதலே மது விற்பனை குறைவடையத் தொடங்கி இருக் கும். ''மது அருந்திய நிலையில் தொழுகையை நெருங்க வேண் டாம்'' என்ற கட்டளை மது விற்பனையை இன்னும் குறைத் திருக்கும். ஏற்கனவே மது விற்பனையில் ஈடுபட்டு வந்த இறை யச்சமும் பேணுதலும் உள்ள முஸ்லிம்கள் அதனை அல்லாஹ் வின் கூலியை எதிர்பார்த்து பூரணமாக தவிர்ந்து கொண்டிருப் பார்கள் என்றும் நாம் ஊகம் செய்யலாம்.

எது எவ்வாறாயினும், ''போதையோடு தொழுகையை நெருங்க வேண்டாம்'' என்ற வசனமானது மது விரைவில் முற்றாக தடை செய்யப்பட்டு விடும் என்ற தெளிவான எச்சரிக்கையை யூத கிறிஸ்தவ மது வியாபாரிகளுக்கும் கூட முன்வைத்தது.

ஆக- மதீனாவில் படிமுறை ரீதியாக மதுப் பாவனை குறைக்கப் பட்டமையானது பாரிய பொருளாதார முக்கியத்துவம் உடைய தாகும். திடீரென்று ஒரேயடியாக மது தடுக்கப்பட்டிருந்தால் பொருளாதார நெருக்கடி தோன்றியிருக்க முடியும். ஏனெனில் பல வியாபாரிகள் பொருளாதார ரீதியாக மது விற்பனையிலும், அதற் கான பழவகைகள் மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றின் விற்பனையிலும்தான் பெரியளவு தங்கியிருந்தார்கள்.

மதுப் பாவனையை குறைத்துக் கொண்டமையானது இந்த கட்டத்தின் பயனை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மதீனா, மதுவை ஒட்டுமொத்தமாக தவிர்த்துக் கொள்வதற்கான இறுதிப் படிகளில் ஏறுவதற்கு தன்னை தயார்படுத்திக் கொண்டது. அதிக மாக மது அருந்தக் கூடியவர்கள் அதனை தவிர்க்கும்போது தோன்றும் நோய்களிலிருந்து முற்றாக குணமாகிவிட்டார்கள். ஒரு சமநிலையான புதிய நிலைக்கு வந்துவிட்டார்கள். பலர் பழைய பழக்கத்தையே விட்டுவிட்டார்கள். அதனை அதிகமாக பயன் படுத்தும் சிலர்கூட பள்ளிவாசலில் போதையுடன் தொழும் குற்ற உணர்வினால் அதனை விட்டுவிட்டார்கள். எனவே அவர்களும் இறுதிக்கட்டத்துக்கு ஓரளவு தயாராகி விட்டார்கள்.

இப்படித்தான் மது தடுக்கப்படும் இறுதிக்கட்டம் வந்தது. ''ஈமான் கொண்டவர்களே! நிச்சயமாக மதுபானமும், சூதாட்ட மும், வணக்கத்துக்காக நட்டு வைக்கப்பட்டிருக்கும் சிலைகளும், குறிபார்க்கும் அம்புகளும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல் களாகும். ஆகவே இவற்றை தவிர்ந்து கொள்ளுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தையும் சூதாட்டத்தையும் கொண்டு உங்களிடையே பகைமையையும குரோதத்தையும் ஏற்படுத்துவதும், அல்லாஹ் வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களை தடுத்து

விடுவதுமே. எனவே அவற்றைவிட்டு நீங்கள் விலகிக் கொள் வீர்களா?'' (அல்-மாஇதா: 90,91)

''எமது இரட்சகனே, நாம் விலகிக் கொண்டோம்! எமது இரட்ச கனே, நாம் விலகிக் கொண்டோம்!'' என உடனடியாக அவர்கள் இதற்குப் பதிலளித்தார்கள். மூன்று வருடங்களுக்கு மேலாக படிமுறையான கட்டுப்பாட்டினால் ஏற்பட்ட விளைவுதான் இது. இதன் அடிப்படை என்ன? முஸ்லிம் சமூகத்தின் ஈமான் என்ற நம்பிக்கையும், ஆன்மீக-பண்பாட்டு ஒத்துழைப்புமே இதற்கான அடிப்படை. மதுவை தடுப்பதற்கான திட்டத்தின் ஒவ்வொரு கட்டமும் உரிய விளைவை தந்த போது முஸ்லிம் சமூகம் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்பட்டது. அதன் மூலமாக மதுவை முழு சமூகமும் இணைந்து தவிர்ந்து கொள்ளும் அற்புதம் நடந்தேறி யது. இந்த படிமுறை ரீதியிலான ஒவ்வொரு கட்டத்திலும் தனி மனிதர்கள் அறிவு ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும் சிகிச்சை பெற்றுக் கொண்டு முன்னேறிச் சென்றார்கள்.

தனிமனித வேறுபாடுகளுக்கேற்ப சில முஸ்லிம்கள் ஆரம்ப கட்டத்திலேயே மதுவை தவிர்ந்துகொள்ள முந்திக் கொண்டார் கள். இன்னும் சிலர் ஒட்டுமொத்த தடை விதிக்கப்படும்வரை மதுவை தவிர்ந்துகொள்வதை பிற்போட்டார்கள். இறுதிக் கட்டத் துக்கு அனைவரும் தயாராகவே இருந்தார்கள். எனவேதான் அனை வரும் இறுதிக் கட்டத்தை திருப்தியுடன் ஏற்றுக் கொண்டனர்.

மது அருந்துவதை கைவிட்டமைக்கான உண்மையான தூண்டற் காரணி

முஸ்லிம்கள் மத்தியில் இந்த மகத்தான மாற்றம் ஏற்படுவதற் கான காரணம் மூன்று வருடங்களை கொண்ட இந்த படிமுறை யான அணுகுமுறை மாத்திரம்தானா? படிமுறையான அணுகு முறையினால் மாத்திரம் இத்தகைய மகத்தான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?

ஒரு சமூகத்தில் கட்டுக்கோப்பும் மாற்றமும் ஏற்பட வேண்டு மாயின் அதற்கான பலமான, நேர் நிலையான (Positive) தூண்டல்

காரணியொன்று அந்த சமூகத்தின் மாந்தரிடம்காணப்பட வேண்டும் என்பதனை ஏற்கனவே கண்டோம். குறைந்த பட்சம் அந்த மாற்றத்தை எதிர்க்காத வகையில் அவர்கள் சமநிலைப்படுத்தப் படுவது அவசியம்.

ஒரு சமூகத்தில் புதிதாக ஏற்படுத்தப்படுகின்ற அளவுகோல் களையும் முறைமைகளையும் அது திருப்தியோடு ''இது பொருத்த மானது; பழையது பொருத்தமற்றது'' என்று ஏற்றுக்கொள்ளாத வரையில் அங்கு எந்த மாற்றமும் நிகழாது என்று சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். 'திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளச் செய்தல்' (Persuation)[26] என்ற பிரயோகத்தினால் இது குறிக்கப் படுகிறது. சமூகக் கட்டுக்கோப்பின் மற்றொரு வகை 'தூண்டல் மூலமாக தாக்கம் விளைவித்தல்' (Incentive Manipulation) என அழைக்கப்படுகிறது. இது வெகுமதி அல்லது தண்டனை மூலம் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் முறையாகும்.

இஸ்லாம் ஒரு மார்க்கமாகவும் வாழ்க்கை வழியாகவும் அமைந் திருந்தமையே மது வெற்றிகரமாக தடுக்கப்பட்டதன் பின்னா லிருந்த பிரதான தூண்டற் காரணியாகும். மது அருந்துதல் என்ற பிரச்சினையை சுட்டிக்காட்ட வந்த வசனங்களில் மேற்குறித்த இரு முறைமைகளும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இதற் கான தூண்டுதல் பல வருடங்களுக்கு முன்பிருந்தே வழங்கப்பட்டு வந்துள்ளது. மூன்று வருடங்களை விட அதிக காலம் இதற்காக எடுக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று வருடங்களுக்கு முன்பே இதற் கான வித்து விழுந்து விட்டது. இஸ்லாம் என்ற சூரியனின் கதிர்கள் மக்காவின் மேடு பள்ளங்களில் பரவிய போதே அந்த வித்து ஊன்றப்பட்டு விட்டது.

இஸ்லாம் அறிமுகமாகியது முதலே அறபிகளின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்த பிழையான நம்பிக்கைகளையும் பண்பாடு களையும் அது களையத் தொடங்கி விட்டது. மது அருந்துவது போன்ற பிழையான பழக்க வழக்கங்களுக்கு எதிரான போராட் டத்தை அது ஆரம்பத்தில் முன்னெடுக்கவில்லை. ஜாஹிலிய்யா காலத்தின் அடிப்படையாக சிலை வணக்கமும், கோத்திர

முறையும் அது சார்ந்த சில பழக்கங்களும் காணப்பட்டன. இதுவே சூது, விபச்சாரம், மது அருந்துதல் என்பவற்றுக்கான அடிப்படையாக காணப்பட்டது.

இதன் காரணமாகத்தான் இஸ்லாம் பதின்மூன்று வருடங்களில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்பி, ஓரிறைக் கொள்கை, மறுமை நாள், சுவனம், நரகம், மலக்கு, நபி, புனித வேதம் போன்ற கருத்தாக்கங்களைப் பதிக்க விரும்பியது.

இது இலகுவான ஒரு விடயமாக இருக்கவில்லை. ஒரு ஜாஹிலிய்ய மனிதன் புதிய மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்போது புதிய மனிதனாக மாறுகிறான். புதிய நம்பிக்கைக் கோட்பாடு அவனுக்கும் கற்சிலைகளை வணங்கும் அவனது கோத்திர நடை முறைக்கும் இடையில் தடையாக அமைகிறது. மட்டுமன்றி இது அரபுக் கோத்திரங்களுக்கு எதிரான நிலைப்பாடுமாகும். ஏனெனில் இத்தகைய கோத்திர நடைமுறைகளை வைத்துத்தான் அவர்கள் திருட்டு, அத்துமீறல், பெண்பிள்ளைகளை உயிருடன் புதைத்தல், சூது விளையாடல், மது அருந்துதல், விபச்சாரம் செய்தல் போன்ற துர்ச் செயல்களை நியாயப்படுத்திக் கொண்டிருந்தார்கள். புதிய மார்க்கம் வந்த பிறகே உண்மையான படைப்பாளனை அறிமுகப்படுத்தும் அல்குர்ஆனை அவர்கள் செவிமடுக்கத் தொடங்குகிறார்கள்:

''நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம். அவனது மனதில் தோன்றும் எண்ணத்தையும் நாம் அறிவோம். பிடரி நரம்பைவிட அவனுக்கு நாம் சமீபமாக இருக்கிறோம்''. (காப்: 16)

''மறைவானவற்றின் திறவுகோல்கள்அவனிடமே இருக்கின்றன. அவற்றை அவனன்றி எவரும் அறியார். கரையிலும் கடலிலும் உள்ளவைகளையெல்லாம் அவன் அறிவான். அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருளில் இருக்கும் சிறு வித்தாயினும், உலர்ந்த அல்லது ஈரப்பதனான எதுவாயினும் அவனது பதிவேட்டில் குறிக்கப்பட்டே உள்ளது''. (அன்ஆம்: 59)

அவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்திருந்த -மரணித்த- கடவுளர்களை விட இந்த இறைவன் ஆற்றலும் சக்தியும் கொண்டவன். அவன் அரபிகளுக்கு மாத்திரம் உரியவனல்லன். சர்வ உலகுக்குமானவன். வானங்களதும் பூமியினதும் இறைவன். அவர்களுக்குத் தெரிந்த, தெரியாத அனைத்துப் படைப்புகளதும் கடவுள். இங்கு கோத்திரங்களின் குறுகிய சிந்தனைகளோ பிடிவாதமோ இல்லை. அவன் அருளாளன் அன்பாளன். அனைத்து மனிதர்களையும் படைத்து பரிபாலிப்பவன். ஈமான் என்ற நம்பிக்கையும் நற்செயல்களும்தான் ஒருவனை சிறந்தவனா இல்லையா என்று கணிப்பதற்கான அளவுகோல்.

''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். பின்னர் நீங்கள் ஒருவர் ஒருவரை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் அல்லாஹ்வை மிகவும் அஞ்சுபவராக உள்ளாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவனும் நிபுணனுமாவான்''. (அல்-ஹுஜுறாத்: 13)

இந்த அல்குர்ஆனிய வசனத்தின் விளக்கத்தை பிரதிபலிக்கும் விதமாகத்தான் நபியவர்கள், ''மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போன்று சமமானவர்கள்'' என்றார்கள். ''இறையச்சம் மூலமாக ஓர் அறபியை விட அஜமி உயர்ந்தவராகலாம்'' என்றார்கள்.

பூரண மனிதாபிமானத்தை வெளிக்காட்டிய புதிய மார்க்கத்தையும் குறுகிய சிந்தனையுள்ள கோத்திர முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இஸ்லாத்துக்கு முன்னர் அரபுத் தீபகற்பத்தில் கோத்திர வெறியும் பகையுமே பரவி கோலோச்சின. ''எமக்கு தாகம் ஏற்பட்டால் தூய நீரை அருந்துவோம். அடுத்தவர்கள் சகதி நிறைந்த கலங்கிய நீரையே அருந்துவார்கள்!'' எனஒரு கவிஞர் இதனை படம் பிடித்துக் காட்டுகிறார்.

இரண்டுக்குமிடையில் மிகப்பெரும் இடைவெளி காணப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இந்த இடைவெளியை முஸ்லிம்

களால் நிரப்ப முடிந்தது. இதற்காக வேண்டி அவர்கள் உடல்-உள ரீதியான கஷ்டங்களை தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. மக்கத்து தலைவர்கள் அவர்களை கடுமையாக வதைத்தார்கள். இப்படி கஷ்டப்பட்டவர்களிடையே ரோமைச் சேர்ந்த ஸுஹை பும் (ஸுஹைப் அர்-ரூமி), அடிமையான பிலாலும் (பிலால் அல்-ஹபஷி), பாரசீகத்தை சேர்ந்த ஸல்மானும் (ஸல்மான் அல்-பார்ஸீ) காணப்பட்டார்கள். அரபியரல்லாத இவர்களே பின்னர் மதீனாவில் உருவாக்கப்பட்ட புதிய நாட்டின் கீர்த்தி மிகு தலைவர்களாக மாறினார்கள்.

அல்குர்ஆன் பதின்மூன்று வருடங்களாக மக்காவில் மறுமை யுடன் தொடர்பான உண்மைகளை உரைத்துக் கொண்டிருந்தது. முஸ்லிம்கள் அதன் வேதனைக்குப் பயந்தார்கள். அதன் இன்பங் கள் மீது ஆசை கொண்டார்கள். அவர்களது உள்ளங்களில் மறுமை ஆழப் பதிந்திருந்தது.

''வானம் பிளந்துவிடும் போது... நட்சத்திரங்கள் உதிர்ந்து விடும் போது... கடல்கள் பிளக்கப்படும் போது... புதைகுழிகள் புரட்டப்படும் போது... ஒவ்வோர் ஆத்மாவும் தான் எதனை முற்படுத்தி அனுப்பியது, எதனை பிற்படுத்தி வைத்தது என்ப தனை அறிந்துகொள்ளும்'' (அல்-இன்பிதார்: 1-5)

அரபு முஸ்லிம்கள் சிலை வணக்கத்தையும் கோத்திர வெறி யையும் துறந்த போது ஜாஹிலிய்ய மரம் தனது வேர்களை இழந்தது. மது அருந்துதல், சூதாட்டம், விபச்சாரம் போன்ற சமூகப் பழக்க வழக்கங்கள் அழிவின் விளிம்பில் நின்ற ஜாஹிலிய்ய விருட்சத்தின் உயிரற்ற கிளைகளாக மாறியிருந்தன.

இவ்வாறுதான் இறை நம்பிக்கை உள்ளங்களில் ஆழப் பதிந்த தால் அரேபியக் குடும்பத்தின் ஸ்திரமின்மைக்கு காரணமாக இருந்த பல பாரிய பிரச்சினைகளையும் மதுப் பழக்கத்தையும் அந்த நீண்ட பல வருடங்களில் இலகுவாக இஸ்லாத்தினால் தீர்க்க முடிந்தது. இஸ்லாம் பெண் பிள்ளைகளை உயிருடன் புதைப்பதை தடைசெய்வதோடு மாத்திரம் நின்று விடவில்லை. பெண் பிள்ளை பிறப்பதை இழிவாகக் கருதும் பழக்கத்தையும்

மிகக் கடுமையாக ஆட்சேபித்தது. மறுமையின் பயங்கரங்களை விளக்கும் வசனங்களிலேயே இந்தக் குற்றத்தையும் அல்-குர்ஆன் உயிரோட்டத்துடன் எடுத்துக் காட்டுகிறது:

''உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தை, 'எந்தக் குற்றத் திற்காக கொல்லப்பட்டது?' என்று கேட்கப்படும்போது''. *(அத்-தக்வீர்: 8,9)*

''அவர்களில் ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்திருப்பதாக நன்மாராயாம் கூறப்பட்டால், முகம் கறுத்து கோபம் கொண்ட வராக மாறி விடுவார். நன்மாராயம் கூறப்பட்ட செய்தியை மறைப்பதற்காக சமூகத்தை விட்டு ஒளிந்து கொள்வார். அதனை இழிவோடு தொடர்ந்து வைத்துக்கொள்வதா? அல்லது உயிரோடு புதைத்து விடுவதா? என்று குழப்பம் அடைவார். அவர்களது தீர்மானம் மிகக் கெட்டதுதான்''. *(அந்-நஹ்ல்: 58,59)*

பெண்களோடும் குடும்பக் கட்டமைப்போடும் அதன் பணி களோடும் தொடர்பான பல தீமைகளை இஸ்லாம் ஒழித்தது. பெற்றோரிடம் இருந்தும், நெருங்கிய உறவினர்களிடம் இருந்தும் அனந்தரச் செல்வம் பெறும் உரிமை கூட பெண்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது:

''பெற்றோரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத் தில் ஆண்களுக்கு ஒரு பங்கு உண்டு. அவ்வாறே பெற்றோரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் ஒரு பங்கு உண்டு''. *(அந்-நிஸாஉ: 07)*

சொத்துப் பங்கீடு தொடர்பான இப்பொதுக் கொள்கை பெண் களுக்கான உரிமையை வழங்கியதோடு சிறுவர்களது உரிமை களையும் பாதுகாத்தது. கொலை செய்வதன் மூலமாகவும் உயி ருடன் புதைப்பதன் மூலமாகவும் இந்த உரிமைகளை ஜாஹிலிய்ய சமூகம் விழுங்கி ஏப்பமிட்டிருந்தது. ஜாஹிலிய்ய சமூகத்தில் ஒருவர் மதிக்கப்பட வேண்டுமாக இருந்தால், அவர் யுத்தத்தில் பங்கு பற்ற வேண்டும்; அல்லது உழைக்க வேண்டும். குடும்ப மகிழ்ச்சி, அதன் ஸ்திரத்தன்மை என்பவையெல்லாம் அங்கு கருத்தில் எடுக்கப்படவில்லை.

இஸ்லாமிய தெய்வீக வழிகாட்டல் வந்த போது முதலில் மனிதனுக்குரிய கண்ணியமும் பெறுமதியும் மீள வழங்கப்பட்டது. பின்னர் மானிட ஒழுங்கில் மீளமைக்கப்பட்ட குடும்பச் சூழலில் அவனது கடமைகள் குறித்தும் உரிமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. அதனூடாக அன்பு, இரக்கம், மனித நேயம் என்பன சமூக வாழ்வில் தோற்றுவிக்கப்பட்டன. அநீதி, கடும் போக்கு, குடும்பச் சிதைவு என்பன ஏற்படுத்தியிருந்த மன அழுத்தங்களும் மறைந்து போயின.

பெண்களை நிர்ப்பந்தமாக திருமணம் செய்து வைக்கும் வழக்கத்தையும் இஸ்லாம் மாற்றியமைத்தது. பெண்ணிடம் அனுமதி கேட்கப்பட வேண்டும்; தனது கணவனை தெரிவு செய்யும் உரிமை அவளுக்கு உண்டு என்பது இஸ்லாம் ஏற்படுத்திய மாற்றமாகும். ''விதவைப் பெண் தனது விவகாரத்தில் அவளது பொறுப்பாளரை (வலி) விட தானே அதிக உரிமை பெற்றிருப்பாள். கன்னிப்பெண்ணின் விவகாரத்தைப் பொறுத்த வரை அவளிடமும் சம்மதம் கேட்கப்பட வேண்டும். அவள் அமைதியாக இருப்பது சம்மதமாகக் கருதப்படும்''.[28]

அதேபோன்று தந்தையின் மனைவியரை வாரிசாக பெற்றுக் கொள்ளும் மோசமான பழக்கத்தையும் இஸ்லாம் தடை செய்தது.

''முன்னர் நடந்து போனதைத் தவிர, நீங்கள் உங்களது தந்தையர் மணம் முடித்த பெண்களிலிருந்து எவரையும் விவாகம் செய்து கொள்ளாதீர்கள். நிச்சயமாக இது மானக்கேடானதும் வெறுப்புக்குரியதும் கெட்ட வழியும் ஆகும்''. (அந்-நிஸாஉ: 22)

சுருங்கச் சொல்வதாயின், மதுவால் அடிமையாவோர் எதிர்காலத்தில் பெருகுவதற்கு அடிப்படை மூலமாக அமையக் கூடியது குடும்பமே எனக் கருதும் உளவியல் அறிஞர்களுக்கு இஸ்லாம் நடைமுறைப்படுத்திக் காட்டிய ஒழுங்கில் பெரியதொரு பாடம் இருக்கிறது. இது விடயமாக முஸ்லிம் உளவியல் அறிஞர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து மக்களுக்கு விளக்குவது அவசியம்.

மதீனாவில் முஸ்லிம் சிறுவர்கள் அன்பையும் சகிப்புத் தன்மையையும் தாராளமாக உணர்ந்தார்கள். முஸ்லிம்களுக்கு முன்மாதிரியாக இருந்த நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்கு தலைமை வகிக்கும் வேளையில் சிலபோது தமது சிறிய பேரப் பிள்ளைகளை முதுகில் சுமந்துகொண்டிருப்பார். அன்னார் ஜமாஅத் தொழுகையில் ஸுஜூதில் இருக்கும்போது பெரிய பேரப்பிள்ளை முதுகில் ஏறிக் கொள்வார். அவராகவே இறங்கும் வரை நபியவர்கள் தொடர்ந்து ஸுஜூதில் இருப்பார்கள். பின்னாலிருந்து தொழுவோர் ஆச்சரியப் படுமளவுக்கு சிலபோது ஸுஜூது நீண்டு செல்லும்.[29]

இவ்வகையில் நோக்கும்போது முஸ்லிம் குடும்பத்தில் அமைதி, நிம்மதி, பாதுகாப்புணர்வு என்பன அதிகமாக காணப்பட்டன. முஸ்லிம் பெண்கள் கண்ணியத்தையும் கௌரவத்தையும் பெற்றார்கள். குடும்பத்தில் நிம்மதியும் அன்பும் பரவ அது காரணமாகியது. மது அருந்தியவர்கள் அதிலிருந்து விடுபட்டபோது ஏற்பட்ட பிரச்சினைகளையும் இது தணித்தது.

ஜாஹிலிய்யா காலத்தில் நிலவிய போலியான கோத்திரப் பெருமையினால் தோன்றக் கூடிய மனக் கலக்கத்திலிருந்து பெரிதும் விடுபட்டவர்களாகவே முஸ்லிம் குடும்பப் பிள்ளைகள் வளர்ந்தனர்.

ஆயிஷா (றழி) அவர்கள் நபியவர்களின் மரணத்தின் பின்னர் கூறிய சில வார்த்தைகளை இதற்கு ஆதாரமாக எடுத்துக்கூற விரும்புகிறேன். மக்களிடம் அவர்களது பழக்கங்களை மாற்றிக் கொள்ளுமாறு கூறப்பட முன்னர் ஈமான் எவ்வாறு விதைக்கப் பட்டது என்பதனை அவர் சிறிய வார்த்தைகளில் இவ்வாறு விளக்குகிறார்:

‘‘அல்-குர்ஆன் ஆரம்பத்தில் இறங்கியபோது சுவர்க்கம், நரகம் பற்றி பேசியது. இஸ்லாத்தில் அவர்கள் உறுதியடைந்தபோது ஹலால், ஹறாம் பற்றிய வசனங்கள் இறங்கின. ஆரம்பத்திலேயே ‘மது அருந்த வேண்டாம்!’ என்று இறங்கியிருந்தால், ‘நாம்

மதுவை விட்டுவிடவே மாட்டோம்!' என்று அவர்கள் கூறியிருப்பார்கள். 'விபச்சாரம் செய்ய வேண்டாம்!' என்று இறங்கியிருந்தால், 'விபச்சாரத்தை ஒருபோதும் விடமாட்டோம்!' என்று கூறியிருப்பார்கள். நான் மக்காவில் சிறுபிள்ளையாக விளையாடிக் கொண்டிருந்தபோது அல்-கமர் என்ற அத்தியாயத்தின் 46 வது வசனம் இறங்கியது. நான் அன்னாருடன் இருக்கும்போது தான் அல்-பகறா, அந்-நிஸா ஆகிய அத்தியாயங்கள் அருளப் பட்டன''.[30]

அத்தியாயம்: 05

மது தடுக்கப்பட்டமை தொடர்பான நவீன சமூகவியல் கருத்தாக்கமும் படிப்பினைகளும்

போதைப் பொருட்களிலிருந்தும் மதுவிலிருந்தும் தவிர்ந்து கொள்வதற்கான பிரதான காரணி இறை நம்பிக்கைதான் என்பதனை உறுதிப்படுத்திய பின்னர், அந்தப் புரட்சியை ஏற்படுத்திய சமூகக் காரணிகள் சிலவற்றையும் நோக்கலாம் என்று விரும்புகிறோம். அந்த வகையில் நவீன சமூகவியல், உளவியல், நாகரீக ஆய்வுகள் விளக்கிய அதே காரணிகள் இங்கும் தொழிற்பட்டுள்ளதை நாம் கண்டுகொள்ள முடியும். மதீனத்து சமூகத்தின் முன்மாதிரி தலைவர் என்ற வகையிலும், புனிதமான உயர் அந்தஸ்து உள்ளவர் என்ற வகையிலும் நபி (ஸல்) அவர்களின் உள-சமூக-ஆன்மீக பாதிப்புத்தான் இந்த மாற்றத்துக்கான முழு முதற்காரணி என்று நம் உள்ளத்தில் தோன்ற முடியும்.

நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து உயர்வானது என்பதில் சந்தேகமில்லை. அன்னார் இறைத்தூதர்களின் தலைவர்; பரஸ்பரம் மோதி சிதறிக் கிடந்த கோத்திர மாந்தர்களை உள்ளங்களால் ஒன்று

படுத்தியவர்; வஹியின் ஒளியில் அவர்களை புதிதாக வார்த்தவர். எனவே, நவீன மானிடவியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளின் கோட்பாடுகளுக்குள் அன்னாரது ஆளுமையை சுருக்கி விட முடியாது. ஏலவே நாம் குறிப்பிட்டது போன்று, இந்த ஆய்வுகள் மனிதன் பற்றிய சடரீதியாக கோட்பாட்டுச் சுவர்களுக்குள் மாத் திரம் தம்மை சிறைப்படுத்திக் கொண்டவை. எனவேதான், நபி யவர்களை நவீன கருத்தாக்கங்களுக்கு ஏற்ப ஒரு 'சமூக சீர்திருத்த வாதி'யாக அல்லது 'தீட்சண்யம் கொண்ட தலைவ'ராக அல்லது 'தளபதி'யாக மாத்திரம் நோக்கிய எழுத்தாளர்கள் இஸ்லாத்தை யும் நபியவர்களையும்உரிய வகையில் புரிந்து கொள்ளத் தவறி விட்டனர். ஊசித் துவாரத்தால் ஒட்டகத்தைப் பார்ப்பது போன்று தான் அவர்களது பார்வை உள்ளது. ஒரு மகத்தான தளபதியை அல்லது தலைவரை மதிப்பிடுவதற்கு மேற்குலக அறிஞர்கள் வகுத்த அளவீடுகள் கூட நபி (ஸல்) அவர்களின் ஆளுமையை அளவீடு செய்யப் போதுமானதல்ல.

இந்த இடத்திலே அமெரிக்காவின் தலைசிறந்த பௌதீகவியல் அறிஞரும் வரலாற்றாசிரியரும் வானவியலாளருமான கலாநிதி மைகல் ஹார்ட் எழுதிய 'The Hundred' என்ற அருமையான நூல் எனது நினைவுக்கு வருகிறது. மனித வரலாற்றில் தாக்கம் ஏற் படுத்திய சர்வதேச ஆளுமைகளை அவர் ஆய்வுக்கு உட்படுத்தி னார். நுணுக்கமான அளவுகோல்களை வைத்து அவர்களுக்கு புள்ளி வழங்கினார். ஆய்வு முடிந்த பின்னர் புள்ளிகளை கூட்டிப் பார்த்தபோது ஆச்சரியமடைந்தார். அதிக புள்ளிகளை முஹம்மத் (ஸல்) அவர்கள் பெற்றிருந்தார்கள். எனவே அன்னாரை முதல் நபராக தெரிவு செய்தார். அவர் ஒரு கிறிஸ்தவர். மேற்குலக எழுத்தாளர். வரலாற்றின் மகத்தான மனிதர்களுள் முதல்வராக முஹம்மத் (ஸல்) அவர்களை தெரிவு செய்வதற்கான நியாயங் களை ஒன்றன் பின் ஒன்றாக அவர் முன்வைக்கிறார். அவர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:[(1)]

''இந்த பட்டியலில் முதல் நபராக முஹம்மத் (ஸல்) அவர் களை நான் தெரிவு செய்தேன். இதனைப் பார்த்து பலர்

ஆச்சரியப்பட முடியும். என்றாலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் மாத்திரம்தான் உலகம், மறுமை என்ற இரு அளவுகோள்களிலும் வெற்றிபெற்ற ஒரே நபியாவார். நான் தெரிவு செய்த அதிகமான மனிதர்கள் பிறந்ததும் வளர்ந்ததும் அரசியல் மற்றும் சிந்தனா ரீதியான நாகரிகங்கள் வளர்ந்த இடங்களிலாகும். ஆனால் முஹம்மத் அவர்கள் கி.பி. 571 இல் நாகரிக கலாசாரங்கள் வளராத பின்தங்கிய ஒரு பிரதேசத்தில் பிறந்தார்கள்''.

மேலும் அவர் கூறுகிறார்:''அரபுக் கோத்திரங்களை வரலாற்றில் முதன் முறையாக ஒன்றுபடுத்தியவர் முஹம்மத் நபிதான். அவர்களிலே அவர் நம்பிக்கையை நிரப்பினார். ஒரே இறைவனை நோக்கி அனைவருக்கும் வழிகாட்டினார். எனவே மனித வரலாற்றிலே சிறியதொரு முஸ்லிம் குழுவினரால் மகத்தான பெரிய படைகளை வெற்றி கொள்ள முடிந்தது. அல்லாஹ்வையும் வேதத்தையும், தூதரையும் நம்பிய இந்த நாடோடிகளால் இந்தியா முதல் அத்திலாந்திச் சமுத்திரம் வரை நீண்ட விசாலமான ஒரு சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்ப முடிந்தது. இது இன்றைவரையான காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட மகத்தானதொரு சாம்ராஜ்யமாகும்''.

மேலும் அவர் கூறுவதாவது:''இந்தப் பட்டியலில் முதலாவது இடம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஈஸா (அலை) மூன்றாம் இடத்திலும் மூஸா (அலை) பதினாறாவது இடத்திலும் இருக்கின்றார்கள். இதனைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படலாம். எனினும் இதற்கு காரணங்கள் உண்டு.இஸ்லாத்தின் அடிப்படைகள், ஷரீஆ சட்டங்கள், சமூக நடத்தைகள், பண்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் என்பவை தொடர்பான அனைத்து விதிமுறைகளையும் மக்களது உலக-மறுமை விவகாரங்களில் ஆழப் பதிப்பதற்கு தூதர் முஹம்மதே முழு முதல் பொறுப்பாளராக நின்று இயங்கினார்கள் என்பது அக்காரணங்களுள் ஒன்று''.

''நபி (ஸல்) அவர்கள் (உலக விவகாரங்களில் முன்மாதிரியாக இருந்த) ஈஸா நபிக்கு மாற்றமான முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்... அவர்கள் ஒரு கணவராகவும் தந்தையாக இருந்தார்கள்.

யுத்தம் செய்தார்கள். யுத்தத்தில் காயமடைந்தார்கள். ஓர் அடக்கு முறையாளராக அவர்கள் ஒருபோதும் இருக்கவில்லை. வரலாற் றின் மிகச் சிறந்த அரசியல் தலைவர் என்று அவர்களை நாம் கூற முடியும். வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தால், பெரும் தலை வர்கள் இன்றி நடைபெற்ற நிகழ்வுகள் அதிகமாகக் காணப்படு கின்றன. ஆனால் நாடோடிகளைப் பொறுத்தவரையில் குறிப் பாகவும், அரபிகளையும் அவர்களது விரிந்த சாம்ராஜ்யத்தையும் பொறுத்தவரையில் பொதுவாகவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் இன்றி அது சாத்தியமில்லை''.(2)

முதல் இஸ்லாமிய சமூகத்தில் மது தடுக்கப்பட்டமை தொடர் பில் முஹம்மத் (ஸல்) அவர்களின் அருள்நிறைந்த முன்மாதிரி யின் முக்கியத்துவத்தை விளக்குவதனை இத்துடன் போதுமாக் கிக் கொள்கிறேன். வஹியினால் பலப்படுத்தப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்களது முன்மாதிரிக்கும், சாதாரண தலைவர்களது முன் மாதிரிக்கும்இடையிலுள்ள பாரிய வேறுபாட்டை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் ஒரு சமுதாயத்தின் பண் பாட்டு-நாகரிக மாற்றத்தில் 'தளபதி'யின் அல்லது 'தீட்சண்யத் தலைவ'ரின்பாத்திரத்தை சமூகவியல், வரலாற்று, மானிட, உள வியல் ஆய்வுகள் எவ்வாறு வலியுறுத்துகின்றன என்பதை தெளி வாகக் கண்டு கொள்ள முடியும்.

இவ்விடயத்தில் கவனத்தைக் குவித்த ஒரு சமூகவியல் அறி ஞர்தான் மெக்ஸ் வெபர். இவர் தனது சமூக மாற்றக் கோட் பாட்டை சமூகத்தில் நிலவும் நம்பிக்கைகள், பெறுமானங்கள் என்பவற்றின் அடிப்படையில் நிறுவினார். சமூக மாற்றத்தில் மதமும் பௌதீகம் சாராத காரணிகளும் வகிக்கும் பாத்திரம் குறித்து மிக நேர்மையாக நோக்கிய கோட்பாட்டாளராக 'வெபரை' நாம் கருத முடியும். அவரது புத்தகங்களின் பல இடங்களில் சமூ கங்களையும் நாகரிகங்களையும் உருவாக்குவதில் மதநம்பிக்கை களின் தாக்கம் வலிமையானது என்பதனை நிரூபிக்கிறார். மனித இன வரலாற்றில் ஏற்பட்ட மகத்தான மாற்றங்கள் பெரிய மதங்கள் மூலம் ஏற்பட்டவைதான் என்பதனை அவர் உறுதிப்படுத்துகிறார்.

சமூக மாற்றத்தில் மதங்களின் பங்கு குறித்து அதிகமாக ஈடுபாடு காட்டியதன் காரணமாக, பிற நவீன சமூகவியல், நாகரிக ஆய்வாளர்களின் சிந்தனைகளில் தோன்றாத பல விடயங்களையும் வெபர் பேசியுள்ளார். பிற நவீன சமூகவியல், நாகரிக ஆய்வாளர்களோ -சடவாத சிந்தனைத் தாக்கம் காரணமாக -பௌதீக, பொருளாதாரக் காரணிகளை மாத்திரமே பேசுகிறார்கள். அனைத்து சமூக, ஆன்மிக, பண்பாட்டு மாற்றங்களையும் அந்த கண்ணோட்டத்திலிருந்தே விளக்குகிறார்கள்.

உதாரணமாக, வெபர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் முதலாளித்துவம் எவ்வாறு வெற்றி அடைந்தது என்பதுபற்றிப் பேசும்போது, அந்நாடுகளில் செல்வாக்குச் செலுத்திய புரட்டஸ்தாந்து மதப் பெறுமானங்களே அதற்கான அடிப்படைக் காரணியாக அமைந்தன என விளக்குகிறார். ஏனெனில் புரட்டஸ்தாந்து மதப் பெறுமானங்கள் தொடர்ச்சியான உழைப்புக்கும், செல்வக் குவிப்புக்கும், தனிநபர் சொத்துடைமைக்கும் தூண்டுதல் அளிக்கின்றன.[3]

சமூக மாற்றத்தில் மதங்களின் தாக்கம் குறித்த இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்த வெபர், அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஒரு 'நபி' அல்லது 'தீட்சண்யம் மிக்க ஆன்மீகத் தலைவர்' பெறும் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தி இருப்பார் என்பது எதிர்பார்க்கத் தக்கதுதான். அத்தகைய தலைவர்களை ஒரே நேர் கோட்டில் பிணைக்கக் கூடிய தனிப் பண்பை அவர் 'தெய்வீகக் கொடை' (Charisma) என்ற பதத்தினால் குறிக்கிறார். இத்தலைவர்களின் அனேக பின்பற்றாளர்கள் ஒரு வகை நெருக்கடியிலும் துன்பத்திலும் வாழ்ந்தவர்கள் என்றும், அசாதாரண தகுதிகள் கொண்ட தீட்சண்யத் தலைவர்கள் வாக்களிக்கும் ஒளிமயமான எதிர்காலமொன்றை ஆசித்திருந்தவர்கள் என்றும் அவர் நம்புகிறார்.

வெபரின் கருத்தின்படி, தீட்சண்யம் மிக்க தளபதி தனது சிந்தனைகளையும் முன்மாதிரிகளையும் அன்றாட வாழ்வின் நடத்தை சார் வடிவங்களாக மாற்றி, அந்த வடிவங்களின் மீது தனது பின்பற்றாளர்களின் நடத்தையை வார்த்தெடுப்பதனூடாக சமூக

மாற்றத்தை ஏற்படுத்துவார்.பிற சமூகவியல் காரணிகளின் முக்கியத்துவத்தையும் வெபர் இங்கு புறக்கணிக்கவில்லை.[(4)]

ஆனால் தோமஸ் கார்லைல் (Thomas Carlyle) போன்ற வரலாற்றாசிரியர்கள் மனித வரலாற்றை விளக்கும்போது, தீட்சண்யம் மிக்க தளபதியின் வகிபாத்திரத்துக்கு ஒருதலைப்பட்ச முக்கியத்துவம் அளித்து ஏனைய சமூக நாகரிகக் காரணிகளை புறமொதுக்குகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை வரலாறு என்பது அத்தகைய வீரத் தளபதிகளின் சரிதைகளாலான சங்கிலித் தொடர் மட்டுமே. தெளிவாகவே இது ஒரு தீவிர நிலையாகும். ஏனெனில் நபிமார்களுக்கு கூட அவர்களது அழைப்பை பரப்பவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் உதவக்கூடிய மனிதர்களையும் சமூக-நாகரிகச் சூழமைவுகளையும் அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்திருந்தான்.

சமூக மாற்றத்திலும், தாக்கம் விளைவிப்பதிலும் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து சமூக உளவியல் ஆய்வுகள் ஏராளமாக உள்ளன. வெற்றிகரமான தலைவரின் பண்புகள் மற்றும் தனித்துவங்கள் பற்றி பல சோதனைக் கூட ஆய்வுகளும் கள ஆய்வுகளும் செய்யப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் சமூக உளவியல் துறையானது தலைவர்களிடம் காணப்படுகின்ற வரையறுக்கப் பட்ட தனித்துவமான பண்புகளை அவர்களது பின்பற்றாளர்களின் ஆளுமைகளோடு ஒப்பிட்டு நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் அவர்களை பின்பற்றுவோரின் ஆளுமையுடன் இது ஒப்பிடப்பட்டது. ஆனால் இது வரையறுக்கப்பட்ட பெறுபேறுகளைத் தரவில்லை.[(5)] மிகப் பொதுவான பண்புகளையே அது எடுத்துக் காட்டியது. எனினும் இப்பண்புகளும் தனித்துவங்களும் கூட நபிமார்களிடம் இயல்பாகவே காணப்பட்ட விழுமியப் பண்புகளை சுட்டி நின்றன. பின்பற்றுவோர் குறித்து கவனம் செலுத்துதல், அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளல், அன்பு, இரக்க உணர்வு, மென்மையான போக்கு, குழுவின் ஒழுங்குகளை தெளிவுபடுத்துவதும் உறுதிப்படுத்துவதும், இலக்குகளை நிறைவேற்ற ஒன்றாகப் பயணித்தல்... என்பவற்றை இத்தகைய பண்புகளுக்கான உதாரணமாக குறிப்பிடலாம்.

மதீனத்து சமூகம் மதுவிலிருந்தும் அதற்கு அடிமையாவதி லிருந்தும் விடுபடுவதற்குத் துணைபுரிந்த இன்னொரு முக்கிய மான காரணி கூட்டு நிலைப்பாடாகும் (Consensus). கூட்டமாக கட்டுப்படுவதற்கான மிகப் பிரதான தூண்டற் காரணி இது வென்று நவீன சமூக-நாகரிக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.(6) ஒரு குறித்த விடயத்தில் பொதுக்கருத்தை உருவாக்குவதற்கு போது மான சந்தர்ப்பம் ஒரு சமூகத்துக்கு வழங்கப்பட்டு, அதனை சமூ கத்திலுள்ள பெரும்பான்மையினர் ஏற்றுக் கொண்டால் கட்டுப் படுதல் அல்லது மாற்றம் என்பது வெற்றிகரமாக நிகழும். இது பெரியதொரு சமூக மாற்றத்தை நோக்கி இட்டுச் செல்லும். இந்த சமூக ஒருமைப்பாடு ஏற்படுவதற்கான போதுமான அவகாசம் வழங்கப்படா விட்டால் சமூகம் அதனை நிராகரித்துவிடும்.

நாம் இந்த விடயத்தை அதிகம் கலந்துரையாடத் தேவை யில்லை. மது தடுக்கப்படுவதற்கு போதுமான கால அவகாசம் படிமுறை அடிப்படையில் வழங்கப்பட்டது என்பது மிகவும் தெளிவானது. இதற்கான சாதகமான பதிலை சமூகமும் வழங் கியது. உமர் இப்னுல் கத்தாப் (றழி) போன்ற சில முஸ்லிம்கள் மது மொத்தமாக தடுக்கப்படும் கட்டம் தாமதமாகிக் கொண்டி ருப்பதாக எண்ணும் அளவுக்கு மதுத்தடைக் கட்டங்கள் மெது வாக அமுல்படுத்தப்பட்டன.

நவீன ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்ற மூன்றாவது சமூகக் காரணி ஒன்றும் உண்டு. மது தடைசெய்யப்பட்டதைக் கூட்டாக ஏற்றுக்கொள்ளச் செய்வதில் இக்காரணிக்கும் பாரியதொரு செல் வாக்கு இருந்திருக்க முடியும். 'சமூகப் பிணைப்பு' (Social cohe sion) என இது அழைக்கப்படுகிறது. ''சமூக அங்கத்தவர்களை அந்த சமூகத்தினுள்ளேயே தக்க வைத்துக் கொள்ள முடியுமான சக்திகளால் மட்டுமே அதன் அபிப்பிராயங்களிலும் மனப்பாங்கு களிலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்'' என்று பிரபலமான சமூகவியல் அறிஞர் ஒருவர் கூறுமளவுக்கு இக்காரணி முக்கியத் துவம் பெறுகிறது.(7)

ஆக- சமூக அங்கத்தவர்களுக்கு இடையிலான தொடர்பும் பிணைப்புமே அதன் மனப்பாங்கு மாற்றத்துக்கு வழியமைக்கும் பிரதான காரணியாக உள்ளதெனலாம். இந்தப் பிணைப்பு அதிகரிக்க அதிகரிக்க, சமூகம் தனது அங்கத்தவர்களது பெறுமானங்களிலும் அளவீடுகளிலும் ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அளவும் அதிகரிக்கும்.

சமூகத்தில் பிணைப்பை ஏற்படுத்துவதற்கு மிகப் பலம் பொருந் திய சக்திகளுள் மதமும் ஒன்று என்பதை நவீன சமூக-நாகரிக ஆய்வுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்கின்றன. சமூகப் பிணைப்பை ஏற்படுத்துவது மதங்களின் பிரதான பணிகளுள் ஒன்று என அதிகமான சமூகவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.[8] மதங்களை எதிர்மறையாக நோக்குவோரால் கூட இந்த சிறப்பம்சத்தை மறுக்க முடியவில்லை. அமில் டர்க்ஹெய்ம் (Durkheim) போன்றவர்கள், மதத்தின் பணியே இந்த சமூகப் பிணைப்பை ஏற்படுத்துவது மாத் திரம்தான்''[9] என்று கருதுகின்றனர்.

சமூக மாற்றச் செயற்பாட்டில் சமூகப் பிணைப்புக்கு இத்தகைய செல்வாக்கும், அந்தப் பிணைப்பை ஏற்படுத்துகின்ற பிரதான காரணிகளுள் ஒன்றாக மதமும் காணப்படுகின்றது எனில், மதுவை கூட்டாக தவிர்ந்து கொள்ளல் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய சமூகப் பிணைப்பை ஏற்படுத்துவதில் இஸ்லாத்தின் வகிபாத்திரம் என்ன?

நபியின் காலத்தில் முஸ்லிம்கள் தங்களுக்கிடையே ஏற்படுத்தி யிருந்த பரஸ்பர அன்பு, நேசம், சமூகப் பிணைப்பு போன்று பூமி யில் எந்தவொரு சமூகத்திலும் காணப்பட்டதில்லை. இந்த உண் மையை முஸ்லிம் அறிஞர்களும் கூறுகிறார்கள்; முஸ்லிம் அல் லாத வரலாற்றாய்வாளர்களும் உறுதிப்படுத்துகிறார்கள்.

இஸ்லாத்தில் சமூகப் பிணைப்பு என்பது வீட்டில் குழந்தையின் ஆரம்பப் பருவத்திலிருந்து ஆரம்பிக்கிறது. இஸ்லாம் முஃமின் களையும் அவர்களது பிள்ளைகளையும் அன்பு, கருணை, மன நிம்மதி மூலம் பிணைக்கிறது.

''நீங்கள் ஆறுதல் பெறுவதற்குரிய மனைவியரை உங்களிலிருந்தே படைத்திருப்பதும், உங்களுக்கிடையே அன்பையும் கிருபையையும் உண்டாக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்''. (அர்-ரூம்: 21)

''உம்முடைய இறைவன், அவனையன்றி வேறு எவரையும் நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மைசெய்ய வேண்டும் என்றும் விதித்திருக்கிறான். அவ்விருவரில் ஒருவரோ இருவருமோ முதுமையை அடைந்து விட்டால் அவர்களுக்கு 'சீ' என்று கூட சொல்ல வேண்டாம். அவ்விருவரையும் விரட்டவும் வேண்டாம். அவ்விருவரிடமும் கண்ணியமாக பேசுங்கள். அவர்களுக்கு இரக்கமும் பணிவும் காட்டுங்கள். மேலும், 'என் இறைவனே, நான் சிறுபிள்ளையாக இருந்தபோது என்மீது இவர்கள் அன்பு காட்டி வளர்த்ததுபோல அவர்கள் இருவர் மீதும் நீ அன்பு காட்டுவாயாக' என்றும் பிரார்த்திப்பீராக!'' (அல்-இஸ்றா: 23, 24)

இங்கிருந்து உறவினர்களை நோக்கி அல்-குர்ஆன் நகர்கிறது. இன பந்துக்களைப் பேணுமாறு அது தூண்டுகிறது. இரத்த உறவு (அர்-ரஹிம்) என்பதை 'அர்-ரஹ்மான்' என்ற இறை நாமத்துடன் பிணைக்கிறது இஸ்லாம். இரத்த உறவை பேணுபவனை அல்லாஹ் பேணிக் கொள்வான்; அதனைத் துண்டிப்பவனை அல்லாஹ்வும் துண்டிப்பான் என்கிறது நபிமொழி.[10]

இரத்த உறவுகளைத் துண்டிப்பது பூமியில் விஷமம் புரிவதற்கு நிகரானது என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. ''நீங்கள் (போருக்கு வராது) பின் வாங்குவதனால், பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் சுற்றத்தாரை துண்டித்து விடவும் முனைந்தீர்களா?'' (முஹம்மத்: 22).

பரஸ்பரக் கூட்டுறவு, பலீவனர்களுக்கும் அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும் உதவுதல் என்பவற்றுக்கும் இஸ்லாம் தூண்டுதல் அளிக்கிறது. ''நானும் அநாதைகளை அரவணைப்போரும் சுவனத்தில் இப்படி இருப்போம்'' என்று கூறி சுட்டு விரலையும் நடு விரலையும் இணைத்துக் காட்டினார்கள் நபியவர்கள்.[11]

''விதவைகளுக்கும் வறியோருக்கும் உதவுபவர் இறை பாதையில் போரிடுபவரைப் போன்றவராவார்; இடைவிடாது தொழுது, தொடராக நோன்பு நோற்றவர் போலாவார்'' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(12)

உதவிக்கும் பிணைப்புக்குமான இஸ்லாத்தின் வட்டம் இன் னும் விரிவடைந்து அயலவர்களையும் வழிப்போக்கர்களையும் கூட உள்ளடக்குகிறது:

''அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணை யாக்காதீர்கள். பெற்றோருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை யிலுள்ள உறவினர் களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும், பிரயாணிகளுக் கும், அடிமைகளுக்கும் உபகாரம் செய்யுங்கள்...'' (அந்-நிஸா: 36)

முஸ்லிமல்லாத அயலவர் கூட இந்த வட்டத்தினுள் அடங்குவர். அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்களது வீட்டில் ஆடு ஒன்று அறுக்கப்பட்டது. அவர் வீட்டுக்கு வந்ததும், 'நமது யூத அயலவருக்கு இதிலிருந்து கொடுத்தீர்களா?' என்று கேட்டு விட்டு இவ்வாறு கூறினார்: ''அண்டை வீட்டாரும் வாரிசுச் சொத் தில் பங்காளரே என்று கூறிவிடுவாரோ என்று நான் நினைக்கு மளவுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் அண்டை வீட்டார் தொடர் பாக எனக்கு உபதேசித்தார்கள்'' என நபியவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன்.(13)

வட்டம் இன்னும் விசாலிக்கிறது. அனைத்து முஃமின்களும் அங்கு உள்ளடக்கப்படுகிறார்கள். தனக்கு விரும்புவதனை தனது சகோதரனுக்கு விரும்பாதவனின் ஈமான் பூரணமடையாது. இஸ் லாமிய சமூக பிணைப்புக்கான மிகச் சிறந்த உதாரணம் அன்சாரி களும் (மதீனாவாசிகள்) முஹாஜிர்களும் (மக்காவாசிகள்) இணைந்த நிகழ்வாகும். நபியவர்கள் முஹாஜிர்களை அன்சாரி களுடன் பிணைத்து விட்டார்கள். அந்த வரலாற்றுக் கட்டத்தில், தன்னல மறுப்பிலும் தியாகத்திலும் அற்புதமான நிகழ்வுகள் நடந்தேறின. அத்தகைய நிகழ்வுகள் மனித வரலாற்றில் என்றுமே நடைபெற்றதில்லை. அந்த புதிய சகோதரத்துவம் ஆழமான

பாதிப்புக்களையும் இரத்த உறவை விட தூய்மையான தொடர்பையும் ஏற்படுத்தியது.

மதீனத்து செல்வந்தர்கள் பலர் ஏழை முஹாஜிர்களுக்கு தமது சொத்தை பிரித்து வழங்க முன்வந்தார்கள். முஹாஜிர்களுக்காக அன்சாரிகள் பல விடயங்களை விட்டுக் கொடுத்தார்கள். இந்த சகோதரத்துவ வாஞ்சையை அல்குர்ஆன் பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

''எவர்கள் தம்வீடுகளையும் சொத்துக்களையும் விட்டு வெளியேற்றப்பட்டார்களோ அந்த ஏழை முஹாஜிர்களுக்கும் (அப்பொருளில்) பங்குண்டு. அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் அவனது திருப்பொருத்தத்தையும் தேடுகின்றார்கள்; அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் உண்மையாளர்கள். முஹாஜிர்களுக்கு முன்னரே தமது வீடுகளையும் ஈமானையும் தயார்படுத்திக்கொண்ட அன்சார்களுக்கும் (அதில் பங்குண்டு). அவர்கள் ஹிஜ்ரத் வந்தவர்களை நேசிக்கின்றார்கள். முஹாஜிர்களுக்கு வழங்கப்பட்டது தமக்கும் தேவை என்று அவர்கள் நினைக்கவில்லை. தமக்கு தேவை இருந்த போதிலும் முஹாஜிர்களை அவர்கள் முற்படுத்துகிறார்கள். இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்களோ அத்தகையவர்கள்தான் வெற்றிபெற்றவர்கள்''. (அல்-ஹஷ்ர்: 8,9)

'அல்குர்ஆனின் நிழலில்' என்ற தப்ஸீரில் ஷஹீத் சையித் குத்ப் அவர்கள் இந்த வசனத்துக்கு பின்வருமாறு விரிவுரை எழுதுகிறார்:

''இது அன்சார்களது தனித்துவமான அடையாளங்களை வெளிக்காட்டக்கூடிய ஒளி மிக்க உண்மை வடிவமாகும். இத்தகைய தனித்துவப் பண்புகளால் அவர்கள் சிகரங்களை தொட்டார்கள். இது உண்மையாகவே நிகழ்ந்திராவிட்டால் சிறகு முளைத்த கற்பனை என்றே மனிதர்கள் எண்ணியிருப்பார்கள்...

முஹாஜிர்களுக்கு முன்னரே தமது வீடுகளையும் ஈமானையும் தயார்படுத்திக் கொண்ட அன்சார்களுக்கும் (அதில் பங்குண்டு).

அவர்கள் ஹிஜ்ரத் வந்தவர்களை நேசிக்கின்றார்கள். முஹாஜிர் களுக்கு வழங்கப்பட்டது தமக்கும் தேவை என்று அவர்கள் நினைக்கவில்லை. தமக்கு தேவை இருந்த போதிலும் முஹாஜிர் களை அவர்கள் முற்படுத்துகிறார்கள். இவ்வாறு எவர்கள் உள்ளத் தின் கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்களோ அத்தகைய வர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்.

முஹாஜிர்களை அன்சார்கள் மகத்தான நேசத்தோடும் தாராளத் தன்மையோடும் வரவேற்றது போன்றதொரு கூட்டு நிகழ்வு மனித வரலாற்றில் என்றுமே நிகழவில்லை. முஹாஜிர்களின் எண்ணிக் கையை விட அவர்களுக்குப் புகலிடம் அளிக்க ஆர்வம் கொண்ட அன்சார்கள் அதிகமாக இருந்ததால் குலுக்கல் முறையில்தான் முஹாஜிர்கள் அன்ஸார்களது இல்லங்களில் குடியமர்த்தப்பட் டார்கள்''.(14)

ஆக- இவ்வாறு பரஸ்பரம் இறுகப் பிணைந்து நின்ற அந்த சமூகம் ''ஒரு பகுதி மற்றொரு பகுதியை பலப்படுத்தும் கட்ட டத்தைப் போன்றது''(15) என்றும் ''ஓர் உடலைப் போன்றது; அதன் ஓர் உறுப்பு நோய்வாய்ப்பட்டால் முழு உடலும் தூக்கமின்மை யாலும் காய்ச்சலாலும் வருந்தும்''(16) என்றும் நபியவர்களால் வர்ணிக்கப்படுவதற்கு அருகதை கொண்டதுதான். சமூகப் பிணைப்பை அதன் நவீன அர்த்தத்தில் எடுத்துக் காட்டும் மிக ஆழமான வர்ணனை இது,

சகோதரத்துவமும் தன்னல மறுப்பும் நிரம்பிய இத்தகைய சூழலில் மதுவை கூட்டாக களைந்து விடுவதென்பது இலகு வானதும் எளிதுமாகும். இஸ்லாமிய சமூகத்தின் உயர்வுக்காக கோத்திர வெறியை மிகைத்து நின்ற சமூகம் அது. அங்கு ரோமரும், அபிஸீனியரும், பாரசீகரும் ஒன்றாக இருந்தார்கள். அல்லாஹ்வும் தூதரும் சபித்த மதுவை விட்டுவிடுவது அவர்களுக்கு கஷ்டமான ஒன்றாக இருந்திருக்குமா? தனது சொத்தில் அரைப் பகுதியை தனது சகோதரனுக்கு தானம் செய்ய தயாராக இருந்தவர்கள் மதுவிலிருந்து விலகியபோது ஏற்பட்ட கஷ்டங்களை தாங்கிக் கொள்ள மாட்டார்களா?

உண்மையில் விடயம் இதனைவிட பாரியதாய் இருந்தது. மது மொத்தமாக தடுக்கப்பட்ட பின்பு இஸ்லாமிய சகோதரத்துவமும் பரஸ்பர உதவியும் பீறிட்டு பாய்ந்தன. அது நவீன சமூகவியல் ஆய்வாளர்களின் கற்பனையை விஞ்சியதாக காணப்பட்டது. அழி யக்கூடிய உலக வாழ்வினாலோ இடத்தினாலோ காலத்தினாலோ வரையறுக்க முடியாத சகோதரத்துவமாக அது இருந்தது. நபி (ஸல்) அவர்களது காலத்தில் மதுவிலிருந்து மதீனாவை பூரணமாக சுத்தமாக்கும் விடயத்தில் பரஸ்பரம் உதவிக் கொள்வதிலும் உள்ளத்தோடு போராடுவதிலும் மாத்திரம் அந்த சகோதரத்துவம் சுருங்கியிருக்கவில்லை. மாற்றமாக மறுமை வாழ்வு குறித்தும் அவர்கள் சிந்தித்தார்கள். மது தடைசெய்யப்படுவதற்கு முன்னர் மதுவை தமது வயிற்றில் சுமந்து கொண்டு மரணித்த முஸ்லிம் களுக்காகவும் ஷஹீதானவர்களுக்காகவும் கூட அவர்கள் கவ லைப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்களிடமும் அது பற்றி அவர்கள் வினவினார்கள். எனவேதான் அல்குர்ஆன் அது பற்றிய தெளி வொன்றை இவ்வாறு வழங்கியது:

''நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தவர்கள்மீது (முன்னர் தடுக்கப்பட்டவற்றை) சாப்பிட்டமை குறித்து குற்றமில்லை. அவர் கள் அல்லாஹ்வை அஞ்சி, நம்பிக்கை கொண்டு, நற்கருமங்களில் ஈடுபட்டு பின்னர் அல்லாஹ்வை அஞ்சி, நம்பிக்கை கொண்டு, பின்னரும் அல்லாஹ்வை அஞ்சி நன்மைகளை செய்து வந்தால் (முன்னர் செய்தவை குற்றமாகாது). அல்லாஹ் நன்மை புரிபவர் களை நேசிக்கிறான்''. (அல்-மாஇதா: 93)

அல்குர்ஆனின் அல்லது ஹதீஸின் வசனம் இன்றி ஒன்றை தடுக்க முடியாது; தண்டனை வழங்கவும் முடியாது. புதிதாக வந்த ஹராம் சட்டத்தைக் கொண்டு ஏலவே நடந்து முடிந்த ஒன்றுக்கு தீர்ப்பு வழங்கவும் முடியாது. தமது வயிற்றில் மதுவை வைத்துக் கொண்டு மரணித்தவர்கள் அல்லது ஷஹீதானவர்கள் மது தடுக்கப் பட முன்பு மரணித்துவிட்டார்கள். எனவே, அது அவர்களுக்கு பாவமாகாது.

சமூகத்தின் அளவுகோள்களையும் மனப்பாங்குகளையும் மாற்றியமைப்பதில் சமூகப் பிணைப்பு வகிக்கும் வினைத்திறன் மிக்க பாத்திரத்தை நவீன சமூகமானிடவியல் ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. இந்த வகையில் மதீனாவிலே அன்சார்களையும் முஹாஜிர்களையும் மீள வார்த்தெடுப்பதில் இஸ்லாம் எவ்வளவு மகத்தான பணியை ஆற்றியிருக்கும் என்பது நமக்கு தெளிவாகி றது. வாழ்வுக்கும் இறை நம்பிக்கைக்குமான பரிபூரண நெறிமுறை யாகவும், உள-ஆன்மீக சக்திகளின் இயக்கியாகவும் நின்று இஸ் லாம் இப்பணியை ஆற்றியுள்ளது. ஏனெனில் மதுவை ஒழிப்ப தில் சமூகப் பிணைப்பும் பிற சமூக காரணிகளும் கண்ட வெற்றி என்பது உண்மையில் உள்ளங்களில் ஆழப் பதிந்திருந்த இறை விசுவாசத்தின் மாசற்ற பிரதிபலிப்பே அன்றி வேறில்லை.

தனிமனித மனப்பாங்குகளில் விளம்பரங்களும் பரப்புரை களும் ஏற்படுத்தும் தாக்கம் பற்றியும், போதைப்பொருள் ஒழிப் பில் அவற்றின் பயன்பாடு பற்றியுமே இந்த சமூக-உளவியல் பகுப்பாய்வின் இறுதியில் நாம் நோக்க விழைகிறோம். இவ் விடயத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்த நவீன சமூக-உள வியல் ஆய்வு முடிவுகளை இங்கு விவரிக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை. ஏனெனில் நாட்டை ஆளும் தலைவர்கள் முதல் தலைக்குப் பயன்படுத்தும் ஷாம்பூ வரை எதனை தெரிவு செய்வ தாயினும், அதில் விளம்பரங்கள் வகிக்கும் தலையாய பாத்திரம் இன்று அனைவரும் அறிந்ததே!

நபி (ஸல்) அவர்கள் விளம்பரம் குறித்து நன்கு புரிந்து கொண்டு, மதீனா பிராந்தியத்தில் மதுப் பாத்திரங்கள் எல்லாம் உடைத்து வீசப்படும் அளவுக்கு சிறப்பாக அதனைப் பயன் படுத்தினார்கள். எனினும் இந்த உண்மையை மிக மேம்போக் காகக் கூறி கடந்து செல்ல நான் விரும்பவில்லை.

மது அருந்துவதை மொத்தமாக தடுக்கின்ற வசனம் இறங்கிய போது முஸ்லிம்கள் அதனை குறுகிய நேரத்துக்குள் மதீனா முழுவதும் அசுர வேகத்தில் பரப்பி விட்டார்கள். நபியவர்கள் இவ்விடயத்தை அதனோடு மாத்திரம் போதுமாக்கிக் கொண்டிருக்க

முடியும்.[17] ஆனால் இந்த மதுத்தடைச் செய்தி உரிய வகையில் விளம்பரப் படுத்தப்பட வேண்டும் என அன்னார் விரும்பினார் கள். குறித்த வசனம் அருளப்பட்டதும் மக்களிடமுள்ள அனைத்து மதுவையும் எடுத்து வருமாறு நபியவர்கள் வேண்டினார்கள். பின்னர் மதீனாவில் ஒரு குறித்த இடத்தில் அவற்றை திரட்டுமாறு கூறினார்கள். தோழர்களோடு அந்த இடத்தை சென்றடைந்த அன்னார், மதுவோடு நின்றிருந்த அனைவரையும் நோக்கி, ''இதனை உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அனைவரும், 'ஆமாம், அல்லாஹ்வின் தூதரே! இதுதான் மது' என்றார்கள். ''உண்மைதான்!'' எனக் கூறிய நபியவர்கள், மது தடுக்கப்பட்டமை தொடர்பான விபரங்களை விளக்கினார்கள். பின்னர் கூர்மையான கத்தியொன்றை வரவழைத்து மதுவைச் சேமித்து வைக்கும் தோலால் ஆன பை ஒன்றை வெட்டி விட் டார்கள். அங்கு குழுமி நின்ற விசுவாசிகளின் முன்னால் பீறிட்டு பாய்ந்த உயர்ந்த ரக மதுவை சுடு மணல் உறிஞ்சிக் குடித்தது.

நவீன அளவுகோலின் படி நோக்கினால், நபி (ஸல்) அவர்கள் ஊடகத்தை மிகச் சிறப்பாக பயன்படுத்தினார்கள் என இதனை நாம் கூறலாம். போதைப் பொருளுக்கு எதிரான பிரசாரத்தில் ஊட கங்களின் அனைத்து வழிமுறைகளும் -இஸ்லாமிய வரையறை கள் மீறப்படாத வகையில்- அழகாக இங்கு பின்பற்றப்பட்டுள்ளன.

இவ்வகையில்தான் சமூகத்தின் மனப்பாங்கையும் பெறுமா னங்களையும் மாற்றியமைப்பதிலும் போதனைகளுக்கு கட்டுப் படச் செய்வதிலும் தலைமைத்துவம், முன்மாதிரி, சமூகப் பிணைப்பு, ஒருமித்த நிலைப்பாடு, ஊடகம் முதலிய காரணி களுக்கு இவ்வளவு பெரும் பங்கு இருப்பதாக நவீன சமூக-மானிடவியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. மதீனத்து அரசின் கீழ் வாழ்ந்த முஸ்லிம்கள் மதுத்தடையை கூட்டாக எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பதை இத்தகைய நவீன கருத்தாக்கங்களின் ஊடாக ஒருவருக்கு இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த அருள் நிறைந்த அனுபவத்திலிருந்து பல முக்கிய பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடிகின்றது. மதுப் பரவலுக்கும் மதுவுக்கு அடிமையாவதற்கும் இட்டுச் செல்லக்கூடிய உள, சமூக, பொருளாதார, ஆன்மீகக் காரணிகளை அறிந்து கொள்ளாமல் வெறும் சட்டங்களால் மாத்திரம் அப்பிரச்சினையை தீர்க்க முடியாது. ஒரு சமூகம் உரிய வகையில் தயார்படுத்தப்படாமல் வெறும் சட்டங்கள், தடைகள், தண்டனைகள் மூலம் மதுவை தடைசெய்ய முனைவது தோல்விக்கு இட்டுச் செல்வது மட்டுமன்றி, நிலைமை மோசமாவதற்கும் காரணமாக அமையலாம். மக்கள் கறுப்புச் சந்தைகளில் அதிக விலை கொடுத்து மதுவை வாங்கிக் குடிக்கும் நிலைகூட ஏற்படலாம்.

அமெரிக்காவில் மது தடுக்கப்பட்டமை தோல்வியைத் தழுவ இதுவே காரணமாகும். வரலாற்றாய்வாளர்களும் சமூகவியல் அறிஞர்களும் இதனை விளக்கியுள்ளனர். அல்கஹோல் உள்ள பானங்கள் திடீரென அங்கு தடைசெய்யப்பட்ட போது, எதிர்பாராத பாரிய அதிர்வொன்றை அது ஏற்படுத்திவிட்டது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அடிமை முறை தடைசெய்யப்பட்டபோது ஏற்பட்டது போன்றதொரு பேரதிர்வாக அது அமைந்திருந்தது.(18)

அடிமை முறையை நீக்க இஸ்லாம் முன்வைத்த தீர்வும் படிமுறை அமைப்பையே கொண்டிருந்தது. இதன்போது உள, சமூக, ஆன்மீகக் காரணிகளுக்கு அது முதலில் சிகிச்சை வழங்கியது. மனிதனைப் படைத்தவனும் அவனது சமூக-உளவியல் ரகசியங்களை அறிந்தவனுமாகிய அல்லாஹ்விடமிருந்தே இந்த ஷரீஆ வந்தது என்பதை அறிவு படைத்த எவரும் ஏற்கக்கூடிய அற்புத ஒழுங்கில் இஸ்லாம் அதனை நிகழ்த்திக் காட்டியது. இந்த நியதிகளை அமெரிக்கா உரிய வகையில் பின்பற்றாததால்தான் இன்று வரை அது இனப் பாகுபாட்டினால் அவதியுறுகின்றது. இந்த இனப்பாகுபாடு கூட ஒருவகையில் பழைய அடிமை முறையின் சட்டபூர்வக் குழந்தைதான் என்பது வேறு விடயம். இப்போது நமது பேசுபொருள் அதுவல்ல.

1919 பெப்ரவரி 16ஆம் திகதி அல்கஹோல் பானங்களை தடை செய்வதற்கான சட்டம் வெளியிடப்பட்ட போதும் ஒரு வருடம் கழித்தே அது நடைமுறைப்படுத்தப்படும் என முடிவு செய்யப் பட்டிருந்தது. மதுவை உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது, ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வது என்பவற்றுக்கான தடையும் குறித்த சட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருந்தது. சுமார் 14 வருடங்களுக்கு சில வாரங்கள் குறைவான காலம் அமுலில் இருந்த இச்சட்டம் தோல்வியடைந்துவிட்டதாக அமெரிக்க அரசு பின்னர் அறிவித்தது. இறுதியாக 1933 டிசம்பர் 5ஆம் திகதி அது ரத்துச் செய்யப்பட்டது.(19)

மது தடுக்கப்படுவதற்கு முன்னர் அதன் தீமைகள் பற்றியும், அதனை தடுக்க வேண்டிய அவசியம் பற்றியுமான வாதப் பிரதி வாதங்கள் நீண்ட நாட்களாக தொடர்ந்தன. எனினும் இந்த பாரதூர மான விடயத்தில் அரசுடன் ஒத்துழைக்கும் விதமாக அமெரிக்க குடிமக்கள் தயார்படுத்தப்படவில்லை. படிமுறைச் செயற்பாடு, பண்பாட்டு-ஆன்மீகப் பயிற்சி, கூட்டுத் தயார்நிலை முதலியவற் றுக்கான நீண்ட கால முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படாமல், அப்போது நிலவிய குழப்ப நிலைக்கு முடிவு கட்டும் நோக்குடன் திடுதிப்பென்று அச்சட்டம் அமுல் படுத்தப் பட்டமையே தோல் விக்கு காரணமாக அமைந்தது.

மது தடுக்கப்பட்டமை தோல்வியைத் தழுவியது தொடர்பாக ஆய்வு செய்ய பல ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை யனைத்தும் சமூக, ஆன்மீக, பயிற்றுவித்தல் குறைபாடுகளையே தோல்விக்கு காரணமாக ஒருமித்துக் கூறின. மேலிருந்து அவச ரமாக அமுல்படுத்தப்பட்ட சட்டம் மக்கள் மயப்படவில்லை. மதுவைத் தடுக்க முன்னர் அது தொடர்பான விழிப்புணர் வையோ பயிற்றுவித்தலையோ அரசாங்கம் வழங்கவில்லை(20) என்று அந்த ஆணைக்குழுக்களுள் ஒன்றுதெரிவித்தது. சட்ட, பண் பாட்டுக் காரணிகளை விட சமூக-பொருளாதார சக்திகளே குறித்த சட்டம் தோல்வியடைய பின்னின்று ஊக்கின(21) எனவும் அது வலியுறுத்தியது.

''பண்பாட்டு-ஆன்மீக காரணிகள் தூண்டப்படாமைதான் இது தோல்வியை தழுவ பிரதான காரணம்'' என இன்னொரு ஆணைக் குழு தெரிவித்தது. மதுத்தடைச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட கால எல்லையில் மதுக் கடத்தல் வீதம் அதிகரித்திருந்ததாகவும், கருப்புச் சந்தை வியாபாரிகளின் வருமானம் உயர்ந்திருந்ததாக வும் மற்றொரு ஆணைக்குழு குறிப்பிட்டது. இள வயதில் மது அருந்துவோரின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததாகவும், சட்டத் துக்கு சவால் விடும் மனப்பாங்கு அவர்களிடம் பரவிக் காணப் பட்டதாகவும் கூட அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.[22]

மது தடுக்கப்பட்டமை அமெரிக்காவில் தோல்வியை தழுவிய மையால் ஏற்பட்ட மிக பாரதூரமான விளைவு என்னவென்றால், எதிர்காலத்தில் இதேபோன்ற ஒரு முடிவு சரியாக எடுக்கப்பட்டா லும் மக்கள் பழைய விளைவு ஏற்படலாம் என்று அஞ்சுவதாகும். அதன் பிறகு மக்களை திருப்திப்படுத்துவது மிகுந்த சிரமமாகி விடும். புதிய பரிசோதனைக்கு அவர்கள் தயங்குவார்கள். உண் மையில் மது என்பது கட்டுப்படுத்த முடியாத அரக்கன் போன் றது. அது ஒரு சமூகத்தில் பாதம் பதித்துவிட்டால் அதன் உடல், உள்ளம், செல்வம் முதலிய அனைத்தையும் ஒக்டோபஸ் போன்று சுருட்டிப் பிடித்துக் கொள்ளும். இந்நிலையில், மது அருந்து வோர், அதற்கு அடிமையானோர், மதுத் தொழிற்சாலையில் பணி புரிவோர், அதன் விற்பனையாளர்கள், அதற்குரிய பழங்களை உற்பத்தி செய்வோர், அதன் வரியிலிருந்து பயன் பெறுவோர், அதனை விளம்பரப்படுத்துவோர், ஏற்றி இறக்குவோர் முதலிய அனைத்துத் தரப்பினரும் ஏலவே ஏற்பட்ட தோல்வியையும் அதன் பாதகமான அம்சங்களையும் மட்டுமே பேசிக் கொண்டிருப்பர். மதுவின் மிக மோசமான தீங்குகள் தெளிவாகவே கண்ணுக்குத் தெரிந்தாலும், மதுப் பரவலை தடுக்கின்ற அனைத்து யத்தனங் களையும் அவர்கள் நிராகரித்து விடுவர்.

இன்று அமெரிக்காவின் முதன்மை பிரச்சினை மதுதான். மெக் கோனெல் (McConnel) என்பவர் போதைப்பொருள் தொடர் பான அமெரிக்க நிறுவனமொன்றின் ஆய்வை ஆதாரம் காட்டி

கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்: அமெரிக்காவில் இன்று பொதுவாக மது அருந்தும் எழுபது மில்லியன் பேரில் மதுவுக்கு அடிமை யானோர் கிட்டத்தட்ட 6 மில்லியன் பேர் உள்ளனர். இவர்களுள் நீண்ட கால மதுப் பழக்கத்தால் வருடாந்தம் 12000 பேர் மரணிக் கிறார்கள். போதையுடன் வாகனம் செலுத்துவதனால் வருடாந்தம் 25000 பேர் மரணிக்கிறார்கள்.(23)

இதனைவிடப் புதிய சில புள்ளிவிபரங்களைகோல்மன் (Coleman) என்பவர் பின்வருமாறு முன்வைக்கிறார்: வேண்டு மென்றே மேற்கொள்ளப்படும் கொலைகளில் பாதியளவு மது வின் காரணமாகவே நிகழ்கின்றன. 40% உடல் ரீதியான அத்து மீறல்கள், 35% கொள்ளைச் சம்பவங்கள், 30% தற்கொலைகள் என்பவற்றுக்கும் மதுப் பழக்கமே காரணம் என்று கண்டறியப் பட்டுள்ளது. விபத்துகள், சிகிச்சைச் செலவுகள், வேலைக்கு சமூகமளிக்காமை என்பவற்றினால் வருடாந்தம் குறைந்தது 25 பில்லியன் டாலர்களை அமெரிக்கா இழக்கிறது.(24)

சமூகம் உரிய வகையில் தயார்படுத்தப் பட முன்னர் சட்டங் ளை மேலிருந்து விதிப்பதாலும், அவசரப்பட்டு மதுவை மொத்த மாக தடை செய்வதாலும் ஏற்படக்கூடிய தோல்வியின் அபாயம் சிலபோது குறித்த பிரதேசத்தின் எல்லைகளைத் தாண்டிக் கூட பாதிப்புச் செலுத்த முடியும். பிற நாடுகளில் அறிவார்ந்த முறை யிலும் கட்டம் கட்டமாகவும் மதுவை தடை செய்யும் முனைவு கள் கூட தடுக்கப்படும் அபாயமே அது. பல ஐரோப்பிய எழுத் தாளர்கள் அமெரிக்காவின் தோல்வியடைந்த அனுபவம்தான் தமது நாடுகளில் மதுவின் பிடி இன்னும் தொடர்வதற்கு காரணம் என கூறுகின்றனர். ஆச்சரியம் என்னவெனில், சில இஸ்லாமிய நாடுகளில்கூட மதுத் தடைக்கு எதிராக இத்தகைய தர்க்கங் களையே சிலர் முன்வைக்கின்றனர்.

உண்மையில் படிமுறையான அணுகுமுறையும், சமூகத்தின் தயார் நிலையும் அட்சரம் பிசகாமல் வேறுபட்ட சூழமைவுகளுக் கும் நாகரிகங்களுக்கும் முழுமையாக நகர்த்தப்படுதல் சாத்திய மானதல்ல. ஏனெனில் ஒரு சமூகத்தின் தேசிய இனங்கள்

அதிகரிப்பதற்கும் நிலங்கள் விரிவடைவதற்கும் ஏற்ப தயார் படுத்தலுக்கான காலம் நீடிக்கலாம்; அதிக முயற்சியும் தேவைப் படலாம். அவ்வாறு போதிய காலமும் முயற்சியும் செலவிடப் படும் போதே சமூகத்தின் கருத்தொருமைப்பாட்டுக்கும் பிணைப் புக்குமான காரணிகள் கைகூடி வரும். மட்டுமன்றி, குறித்த தீமையை விட்டு விலகுதல் என்பது பொதுக் கருத்தாகவும் அப் போதுதான் மாறும். குடிமக்களிடம் பொதுவாகவே காணப்படும் பண்பாட்டு -ஆன்மீக ஊக்கிகளும் கூட அதற்கு ஆதரவாக தொழிற்படும்.

ஆனால், மதுவையும் போதைப் பொருட்களையும் தடுப்பது தொடர்பான மத, நாகரிக, பண்பாட்டுப் பின்னணியொன்றை ஏலவே கொண்டுள்ள சமூகங்களை பொறுத்த வரை,அங்கு மது எதிர்ப்புப் பிரசாரம் வினைமையுடன் மேற்கொள்ளப்படுமாயின், மதுவை முற்றாக தடுப்பதற்கும் போதைப் பொருட்களை ஒழிப் பதற்கும் மக்களைத்தயார் படுத்த நீண்ட காலம் தேவைப்படாது.

இஸ்லாமிய சமூகங்களில் மதுவை பூரணமாக தடுத்துவிடச் சாத்தியமான சூழல் காணப்படுகிறது. அதற்கான ஆன்மீக, பண் பாட்டு தயார்நிலையும் இருக்கிறது. இதற்காக அங்கு படிமுறை யான அணுகுமுறையோ தயார் நிலையோ அவசியமில்லை என்று கூறி விட முடியாது. அதேவேளை 'படிமுறை' என்ற இப்பிரயோகம் தவறான நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் அபாயமும் உள்ளது. ஏனெனில் மது அருந்துவோரும், அதற்கு அடிமைப்பட்டிருப்போரும், பொருளாதார ரீதியாக அதில் தங்கி யிருப்போரும் கூட இன்று படிமுறை ரீதியாக அணுகுமுறை பற்றியும், ஆன்மீக பண்பாட்டு பயிற்சியின் பின்னர் மது தடை செய்யப்படுவது பற்றியும் பேசுகின்றார்கள். மதுத்தடையை பிற் படுத்தச் செய்யவும், தமது கருத்தை பலப்படுத்திக் கொள்வதற் காகவுமே நபியவர்களின் அணுகுமுறைகளைக் கூட சாதகமாக இவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

மதுத் தடைக்கான படிமுறையான அணுகுமுறை, அறிவார்ந்த தயார்நிலை, முஸ்லிம்களில் மதுவுக்கு அடிமைப்பட்டிருப்

போருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அவசியமான முன்னாயத்தம் என்பவற்றை நாம் மீள வலியுறுத்தும் அதேவேளை, படிமுறை யான அணுகுமுறை வினைமையுடன் அமையவில்லையெனில், அது ஒருவகை இழுத்தடிப்பதாக மாறி விடும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம். மட்டுமன்றி, ஆன்மீக பயிற்றுவித்தல் என்பது அல்கஹோல் என்ற வேதனை மிக்க யதார்த்தத்தை எதிர்கொள்ள முடியாத பின்வாங்கலாகவும், ஆரம்ப இஸ்லாமிய அனுபவத்தை சான்றாக கொள்வதென்பது ஒருவகை ஏமாற் றாகவும் கூட மாறி விட முடியும். கடிகார முட்களை நாம் பின்னோக்கி நகர்த்த முடியாது. அல்-குர்ஆனின் படிமுறையான மதுத்தடை வசனங்களை மீளவும் இங்கு முன்வைக்க முடியாது. ஏனெனில் மதுவை இஸ்லாம் ஒட்டுமொத்தமாகத் தடைசெய்து விட்டது. மதுவின் அனைத்து வாயில்களையும் அது அடைத்து விட்டது. அதற்கான தண்டனைகளையும் வரையறுத்து தந்து விட்டது. ஆயினும், படிமுறையான மதுத்தடையுடன் இணைந்த வகையில் பயிற்றுவித்தலும் விழிப்புணர்வும் ஈமானிய வழி காட்டல்களும் தொடர்வதில் எந்த தடையுமில்லை. ஒவ்வொரு பகுதியும் அடுத்த பகுதியை பலப்படுத்துவதாகவே அது அமையும்.

சில இஸ்லாமிய நாடுகளில் குறிப்பிடத்தக்க படிமுறையோ தயார் படுத்தலோ தாமதமோ இன்றி மதுவை தடை செய்த நவீன அனுபவங்களின் விகிதாசார வெற்றிகள் இக்கருத்தை பலப் படுத்துகின்றன. லிபியா, சூடான், ஈரான் போன்ற நாடுகளை இதற்கு உதாரணமாக கூறலாம். இத்தகைய சில நாடுகளில் மது அருந்துவதற்கான தண்டனையும் அமுல்படுத்தப்பட்டது.

சூடானில் நிமேரியின் ஆட்சிக் காலத்தில் மது அருந்துவது தடைசெய்யப்பட்டது. தடையை தோல்வியுறச் செய்யக் கூடிய சூழ்நிலைகளிலேயே அது அமுலுக்கு வந்தது. ஏனெனில் அவசர காலச் சட்டத்துடன் இணைந்த வகையிலேயே அது அமுல்செய் யப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலையும் அடிமட்டத்தை அடைந்திருந்தது. தடையைக் கொண்டு வந்தவர் நாட்டிலுள்ள அனைவராலும் வெறுக்கப்பட்ட ஓர் இராணுவ ஆட்சியாளர்.

இத்தனைக்கு மத்தியிலும் கூட மதுத்தடையும் மது அருந்து வோருக்கான தண்டனை அமுலாக்கமும் அங்கு பெரியளவுக்கு வெற்றியைக் கொடுத்தன. மதுக் கடைகள் மூடப்பட்டன. மது பரிமாறப்படும் இடங்கள் வெறிச்சோடிப் போயின. மனிதர்கள் மது போதையில் பாதைகளில் தள்ளாடித் திரியும் காட்சிகள் இல்லாது போயின. போதையோடு தொடர்பான விபத்துகள் குறைந்தன. மதுவோடு தொடர்பான குற்றச் செயல்கள் வீழ்ச்சி அடைந்ததாக காவல் துறைக் கணக்கெடுப்புகளும் உறுதிப்படுத் தின. விரும்பியோ நிர்ப்பந்தமாகவோ மதுவிலிருந்து விலகிய வர்களது குடும்ப நிலவரங்கள் சீர்பெறலாயின. இந்த விளைவு கள் மிலாம் (Milam)[25] என்ற அறிஞரது ஆய்வு முடிவுகளுக்கும் வலு சேர்ப்பவையாய் அமைந்திருந்தன. ஏனெனில் போதைக்கு அடிமையானவர் தானாகவே சிகிச்சை பெற முன்வந்தால்தான் சிகிச்சை பலனளிக்கும் என மேற்குலக உளவியலாளர்களிடம் நிலவிய நம்பிக்கை தவறானது என மிலாமின் ஆய்வுகள் உறுதிப் படுத்தின. மதுவுக்கு அடிமையானவர்களுள் பெரும்பான்மை யினர் சிகிச்சை பெறுமாறு ஆரம்பத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டா லும், தமது உடல்-உள நிலைகள் படிப்படியாக சீர்பெறுவதைக் காணும்போது தொடர்ந்து சிகிச்சை பெற அவர்கள் தூண்டப்படு கிறார்கள் என அவர் கண்டறிந்தார். அதாவது போதைக்கு அடி மையானவர் அதிலிருந்து விடுபடுவதற்கும் தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்குமான ஊக்கத்தை சிகிச்சை ஆரம்பித்த பிறகு பெறு கிறாரே அன்றி சிகிச்சை தொடங்க முன்னர் அல்ல என்பது அவரது முடிவாகும்.

மது அருந்துதல், அதனை உற்பத்தி செய்தல், இடம்பெயர்த் துதல், விற்பனை செய்தல் போன்றவை அமெரிக்காவில் தடை செய்யப்பட்டபோது ஏற்பட்ட தோல்வி கூட பயனின்றிப் போக வில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் குறிப்பிட தவறக் கூடாது. கிறிஸ்தவ திருச்சபைகளுக்கான பெடரல் அமைப்பு (Federal Council of Churches)[26] பரந்தளவில் மேற்கொண்ட முழு மையான கள ஆய்வின் முடிவுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட

அறிக்கை இதனை உறுதிப்படுத்துகிறது. அந்த அறிக்கையின்படி, அமெரிக்காவின் இந்த தீர்மானம் தோல்வியை தழுவிய போதிலும் கூட அமெரிக்க தொழிலாளர்களது சமூக-பொருளாதார நிலை முன்னேற்றம் கண்டுள்ளது. குடும்பத் தலைவிகளது கைக்குக் கிட்டும் பணத்தின் அளவு அதிகரித்ததோடு, பொதுவாக குடும்ப உறவுகளும் சீரடைந்துள்ளன. அமெரிக்க வர்த்தக சங்கத்தின் (American Chamber of Commerce)[27] அறிக்கையின்படி, மதுத் தடை அமுலில் இருந்த காலத்தில் அமெரிக்காவின் பொருளாதார நிலையும் தெளிவாகவே முன்னேற்றம் அடைந்துள்ளது.

இவை அனைத்திலும் இருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். முஸ்லிம் சமூகம் ஈமானிய பலத்துடனும் உரிய தயார்படுத்த லோடும், நல்லதொரு தலைமைத்துவத்தின் கீழ் வருமாயின், அங்கு போதைப்பொருளை ஒழித்துக்கட்டுவது இலகுவானது என்பதே அந்த முடிவு. ஏனெனில் ஈமான் என்பது ஒரு பலமான தூண். அதில்தான் மதுவிலிருந்து விலக துணைபுரியும் பிற சமூக-உளவியல் காரணிகளும் தங்கியிருக்கின்றன.

இந்த சமூகவியல் பகுப்பாய்விலிருந்து மற்றொரு பாடத்துக் கும் இது நம்மை கொண்டு செல்கிறது. மதுபானமும் போதைப் பொருளும் பரவுவதை தடுப்பதில் மதம் எத்தகைய பங்கை வகிக்கிறது என்பதே அந்தப்பாடம்.

மதீனாவில் நிகழ்ந்த அந்த மாற்றம் தனித்துவமானதொரு தோற்றப்பாடு என்றும், அதுபோன்று மனித வரலாற்றில் இனி எப்போதும் நிகழாது என்றும் சிலர் கூற முடியும். ஆனால் போதைப்பொருளை தடுப்பதில் இஸ்லாத்தினதும் பிற மதங்கள தும் முக்கியத்துவம் போதைப்பொருள் பாவனை நிறைந்துள்ள இன்றைய உலகிலும் மிகத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உணரப்படுகிறது.

போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் மதத் தின் முக்கியத்துவம் ஐரோப்பியர்களாலும் அமெரிக்கர்களாலும் கூட உணரப்பட்டுள்ளது. அங்கு கிறிஸ்தவ மதத்தின் ஆன்மீக-

பண்பாட்டு தாக்கத்துக்கு உட்பட்ட போதை ஒழிப்பு மற்றும் சிகிச்சை நிறுவனங்களிடம் அவர்கள் தஞ்சம் புகுகின்றார்கள். Alcoholics Anonymous என்ற நிறுவனம் அவற்றுள் பிரபல்யமான ஒன்று. இதனை W. Bill என்பவர் நிறுவினார். Moral Rearmament என்ற கிறிஸ்தவ அமைப்பின் நிறுவனரான கலாநிதி Buchman உடைய சிந்தனைகளால் கவரப்பட்டிருந்த இவர் கலாநிதி Bob என்பவருடன் இணைந்து 1935 ஆம் ஆண்டு இந்த அமைப்பை தோற்றுவித்தார்.

மதுவுக்கு அடிமைப்பட்டிருந்த பில் அதிலிருந்து விடுபட பலமுறை முயன்றும் தோற்றுப் போயிருந்தார். இந்நிலையில், கலாநிதி புச்மனின் மதப் போதனைகளை செவிமடுத்த அவர் அவற்றின் உதவியோடு மதுவிலிருந்து மீண்டார். பின்னர் வெற்றி கரமான சத்திர சிகிச்சை நிபுணரான கலாநிதி Bob என்பவரை பில் தொடர்பு கொண்டார். போப் அப்போது மதுவினால் மாண்டு போகும் நிலையில் இருந்தார். ஆயினும் பில் தான் ஏலவே புச்மனின் போதனைகளில் இருந்து கற்றிருந்த அதே முறைமை யினால் போபை மதுவிலிருந்து காப்பாற்றினார். பின்னர் இரு வரும் இணைந்து மேற்குறித்த தொண்டு நிறுவனத்தை அமைத்த னர். இந்த நிறுவனத்தின் செயற்பாடு ஏலவே போதைக்கு அடி மையாகியிருந்து விடுபட்டவர்களிலேயே பெரிதும் தங்கியிருந் தது. இருவரும் இணைந்து தமது அமைப்பின் 12 கட்டச் செயற் பாடுகளை உருவாக்கினர். அவை ஒவ்வொன்றிலும் மத ரீதியான பரிமாணம் தெளிவாக வெளிப்படுகிறது.

மதுவுக்கு அடிமையானவர் தான் அதிலிருந்து மீள்வதற்கு எந்த ஆற்றலும் தனக்கு இல்லை என்பதை ஏற்றுக் கொள்வது அவற் றுள் முதல் அம்சமாகும்.

தனது நாட்ட சக்தியை (Will power) விட பலமான சக்தியொன்று இருக்கிறது என்றும், அதுவே தனக்கு நிவாரணம் தர வல்லது என்றும் விசுவாசம் கொள்வதாக அவர் உறுதியளிப்பது இரண் டாவது அம்சமாகும்.

தனது வாழ்வையும் விருப்பு-வெறுப்பையும் இறைவனின் பொறுப்பில் (இறைவன் பற்றிய அவரது நம்பிக்கைக்கும் புரிதலுக்கும் ஏற்ப) விட்டு விடுமாறு வேண்டப்படுவது மூன்றாவது அம்சமாகும்.

அடுத்த ஏழு அம்சங்களும் மதுவுக்கு அடிமையானவர் தனது உறவினருக்கும் பிறருக்கும் இழைத்த தவறுகளையும் உரிமை மீறல்களையும் ஒப்புக் கொண்டு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவதோடு, மீறப்பட்ட உரிமைகளையும் பறிக்கப்பட்ட உடமைகளையும் உரியவர்களுக்கு மீளக் கொடுத்து அவர்களிடம் மன்னிப்புக் கோருவதுடன் தொடர்பானவை. (இச்செயற்பாடு அவருக்கோ அவரது உறவினருக்கோ இருப்பதை விட பாரிய தீங்குகளை ஏற்படுத்தி விடாது பார்த்துக் கொள்வது அவசியம்.)

பதினொன்றாவது அம்சம் தொழுகையின் முக்கியத்துவத்தையும் அல்லாஹ்வுடனான தொடர்பின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. (அவரவர் நம்பிக்கையின் பிரகாரம் உணர்வு பூர்வமாக இதனை அவர் செய்ய வேண்டும்.)

இறுதியாக,அவர் போதையிலிருந்து முழுமையாக விடுதலை பெற்று ‘ஆன்மீக விளிப்பு’ நிலையை அடைந்த பின்னர், போதைக்கு அடிமையான பிறரை இதே பாதையை நோக்கி அழைக்குமாறு வேண்டப்படுவார்.

அவ்வாறே ‘அடிப்படை’ என்னும் அவர்களது நூல் இறைவனின் மீது முழுமையாக தங்கியிருக்க அழைப்பாளர்களை பயிற்றுவிக்கிறது. அந்நூல் குறிப்பிடுவது போல், தந்திரமும் பலமும் குழப்பம் ஏற்படுத்தும் இயல்பும் கொண்ட எதிரியான மதுவை எதிர்த்துப் போரிட வேண்டும் எனவும் அவர்களுக்கு அது நினைவூட்டுகிறது. அந்த எதிரியை மிகைப்பதற்கு அதனை விட பலமான ஒருவரது உதவி அவர்களுக்கு தேவை. அவன்தான் ஆற்றலும் அடக்கியாளும் வல்லமையும் மிக்க அல்லாஹ்.

அழைப்பாளர்கள் ஆரம்பத்திலிருந்தே ஆன்மீக விடயங்கள் குறித்தும், இத்துறையில் தமது பிரத்தியேக அனுபவங்கள்

குறித்தும் போதைக்கு அடிமையானவர்களுடன் -அவர்கள் நாத்தி கர்களாக இருந்தாலும்- வெளிப்படையாக பேச வேண்டும் என இந்நிறுவனம் வலியுறுத்துகிறது. போதைக்கு அடிமையானவர் தன்னைவிட பாரிய 'ஏதோவொரு சக்தி' உள்ளது என்றும், அதனால் தனக்கு உதவி செய்ய முடியும் என்றும், தனது வாழ்வின் அழுக்குகளை துடைத்தெறிய அது தயாராக இருக்கிறது என்றும் ஆரம்பத்திலிருந்தே விசுவாசிக்க வேண்டும் என்பதே இங்கு முக்கியமானது. இவ்விடயத்தில் தனது மனைவி மற்றும் குடும்பத் தினர் உட்பட வேறெவரையும் அவர் நம்பியிருக்கக் கூடாது எனவும் எதிர்பார்க்கப் படுகிறார்.

போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் இந்த நிறுவனம் மகத்தான வெற்றிகளை ஈட்டியுள்ளது. நவீன மருத்துவ, உளவியல் அணுகுமுறைகளால் கூட சிகிச்சை அளிக்க முடியாது போனவர்களுக்கு இந்த நிறுவனம் வழங்கிய சிகிச்சைகள் வெற்றி பெற்றுள்ளதாக பல கள ஆய்வுகள் ஒருமித்து உறுதிப்படுத்துகின் றன. மத, ஆன்மீக அணுகுமுறையே இந்த வெற்றிக்கான காரணம் என்பது இதனால் நிரூபணமாகிறது.

இந்த நிறுவனத்தின் கீழ் அமெரிக்காவில் மாத்திரம் பத்தாயிரத் துக்கு அதிகமான குழுக்களும், ஒரு மில்லியனுக்கு அதிமான அங்கத்தவர்களும் காணப்படுவதாகவும், ஐரோப்பாவிலும் ஏனைய பல நாடுகளிலும் பல கிளைகள் காணப்படுவதாகவும் Coleman[(28)] குறிப்பிடுகிறார்.

இஸ்லாம் உலகில் ஏற்படுத்தியதாக்கத்திற்கு ஆதாரம் சொல்லத் தேவையில்லை. இன்று இஸ்லாமிய நாடுகளில் பல பிரச்சினை கள் உள்ளன.பல நாடுகள் இஸ்லாத்தின் தூய்மையையும் அதன் சட்டங்களையும் விட்டு வெகு தொலைவில் உள்ளன. ஆயினும், மதுவுக்கு அடிமையான முஸ்லிம்களின் விகிதாசாரம் மிக குறைவு; மதுவை விட்டு விலகி இருப்போரின் எண்ணிக்கை மிக அதிகம்.

ஏனைய மதங்களை எடுத்து நோக்கினால் கூடபொதுவாக அவற்றின் தாக்கம் துலாம்பரமானது. மது ஒழிப்புக்கு அரசு எந்த

முயற்சியும் மேற்கொள்ளாத போதும்,மது தடுக்கப்பட்ட ஒன் றாகவும் மது அருந்துவது துர்ப்பழக்கமாகவும் கருதப்படும் மதங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற சூழலில் குழந்தைகள் வளர்க்கப் படுவதால் கூட மதுபான நுகர்வு பாரியளவு வீழ்ச்சி யடைகிறது. பல புள்ளி விபரங்கள் திடுக்கிடச் செய்யும் வகையில் இந்த உண்மைக்கு வலு சேர்க்கின்றன.

மோர்மோன்ஸ் (Mormons) பிரிவைச் சேர்ந்த அமெரிக்க கிறிஸ் தவர்கள் மதுவையும் போதைப்பொருட்களையும் மட்டுமன்றி, புகை பிடித்தல், தேநீர், கோப்பி என்பவற்றையும் கூட தடை செய்யப்பட்டவையாக கருதுகின்றனர். பிற அமெரிக்கர்களுடன் ஒப்பிடும்போது இவர்களுக்கு மத்தியில் மது அருந்துபவர்களது விகிதாசாரம் ஆச்சரியப்படும் அளவுக்கு குறைவாக உள்ளதாக கண்டறியப்பட்டது.(29) யூதர்களிடமும் பழமைவாத கிறிஸ்தவர் களிடமும் கூட இதே தோற்றப்பாட்டை அவதானிக்க முடியும்.(30)

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரை அவை முற்றாகவே மதுவில் மூழ்கிக் கிடக்கின்றன. உலக சனத்தொகை யில் 15%ஆக இருக்கின்ற ஐரோப்பியர்கள் உலக மது உற்பத்தி யில் அரைவாசியை அருந்துகிறார்கள்.(31) மதுவுக்கு எதிரானமத அடிப்படைகளைக் கொண்டிராத நாடுகளிலும் ஏறக்குறைய இதே யளவு விகிதாசாரமே காணப்படுகிறது. மேற்கத்திய சடவாத நாகரிகத் தாக்கத்துக்கு உட்பட்ட ஜப்பான், நியூஸிலாந்து, ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளும் இதில் அடங்கும். 1982 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், Barry(32) என்ற அறிஞர் இதனை உறுதிப்படுத்துகிறார். இந்த நாடுகளும் ஐரோப்பிய- அமெரிக்க நாடுகளும் சேர்ந்து உலக சனத்தொகையில் 20% ஐ கூட எட்டியிராத போதும்,உலக மது உற்பத்தியில் 80% ஐ நுகர் வதாக அவர் உறுதி செய்கிறார்.

மதுவை ஒழிப்பதில் மதத்தின் பங்கை இவ்வாய்வுகளும் பிற ஆய்வுகளும் தெளிவுபடுத்துகின்றன. அதேபோன்று மத அடிப் படையில் பிள்ளைகளை வளர்ப்பதும், போதைக்கு எதிரான மனப்பாங்கில் அவர்களை பயிற்றுவிப்பதும் அவசியம் என்பதை

யும் இவை விளக்குகின்றன. மது அனுமதிக்கப்பட்ட ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற கட்டுப்பாடுகளற்ற நாடுகளிலேயே நெறிப்படுத்தப்படாத மத வழிகாட்டல்களால் இத்தகைய ஆழ மான பாதிப்பை ஏற்படுத்த முடிந்ததெனில், அந்த மதம் இஸ் லாமாகவே இருந்தால் விளைவு எப்படியிருக்கும்! சமூகமும், அதன் ஆட்சியாளர்களும், நிறுவனங்களும், ஊடகமும் ஒன்றுபட்டு இளைஞர்களை போதை எதிர்ப்பாளர்களாக வளர்த்தெடுத்து, நாட்டை அசுத்தங்களில் இருந்து தூய்மைப்படுத்தினால் விளைவு எத்தகையதாய் இருக்கும்!

போதைக்கு எதிரான போராட்டத்தில் இவ்வளவு சிறந்த ஆன்மீக, சமூக கையிருப்பை கொண்டுள்ள ஒரு சமூகத்தின் தலைவர்கள் தமது இஸ்லாமிய நாடுகளில் நிலவும் போதைப் பொருள் பிரச்சினையை ஒழிப்பதற்கு 'வலதுசாரி' யிலும் 'இடது சாரி' யிலும் தீர்வு தேடிக் கொண்டிருப்பது உண்மையில் ஆச் சரியமானதுதான். போதைக்கு அடிமையானவர்களது பிரச்சினை களை தீர்ப்பதிலோ, பைத்தியக்காரத்தனமாக எகிறிக் கொண்டி ருக்கும் போதைப்பொருள் நுகர்வை நிறுத்துவதிலோ தோல்வி கண்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உபதேசங் களை எவ்வித திருத்தமும் இன்றி நடைமுறைப்படுத்த இந்த தலைவர்கள் முயற்சிக்கிறார்கள்.

இன்றைய முஸ்லிம் நாடுகளில் நிலவும் போதைப்பொருள் நெருக்கடியானது உண்மையில் தலைமைத்துவம், பிணைப்பு, முன்மாதிரி என்பவை சார்ந்த நெருக்கடியே. சமூகப் பிணைப்பை பாதுகாக்கும் மிகப் பலமான காரணிகளுள் ஒன்றாக மதம் உள்ளது என முன்னர் கண்டோம். ஆயின் இஸ்லாம் என்ற சட்டகத்துக்கு வெளியே அந்தப் பிணைப்பையும் நெருக்கத்தையும் நாம் எங்கு தான் பெற முடியும்? இந்தப் பிணைப்பு பலவீனமடைந்து விட்டால், மது அருந்துவதை நாகரிகத்தின் வெளிப்பாடாகக் கருது கின்ற சமூகங்களிடமிருந்து முஸ்லிம் சமூகம் எடுத்துக் கொண்ட மனப்பாங்குகளை மாற்றியமைப்பது எங்கனம்? மட்டுமன்றி, தலைவர்களே மதுவில் திளைத்தவர்களாக இருந்தால் அவர்கள்

குடிமக்கள் மீது தாக்கம் ஏற்படுத்துவது எப்படி? எத்தகைய முன் மாதிரியைத்தான் மக்களுக்கு அவர்களால் வழங்க முடியும்? காலையில் மது ஒழிப்பு மாநாடுகளில் மதுவுக்கு எதிரான மறை வசனங்களையும் நபிமொழிகளையும் முழங்கி விட்டு, அதே தினம் மாலையில் உயர்ந்த ரக மது விழாக்களில் கலந்து கொள் கின்ற தலைவர்களை மக்கள் எப்படி எடை போடுவார்கள்! தலைவர்கள் மதுவுக்கு எதிராக கண்டனம் தெரிவிக்கும் அதே வேளை, அவர்களது தேசங்களின் தொலைத்தொடர்பு சாதனங்கள் -நேரடியாகவோ மறைமுகமாகவோ- அதற்கு முரண்பாடான விளம்பரங்களை காண்பிப்பதை மக்கள் எந்த வகையில் புரிந்து கொள்வது!

எவ்வாறாயினும், இத்தகைய முரண்பாடுகளுக்கும் தீமை களுக்கும் பண்பாட்டு வீழ்ச்சிக்கும் மத்தியில் ஈமானிய வித்து இறந்து விடாமல் இன்னும் உள்ளங்களில் மறைந்திருக்கிறது. சூழ் நிலைகள் மாற்றமடைந்து, மறைந்து கிடக்கும் இஸ்லாத்தையும் ஈமானையும் உண்மையாகவும் அர்ப்பணிப்போடும் வெளிக் கொணரக் கூடிய தலைவர்கள் தோன்றிவிட்டால், நண்பர்கள் மட்டு மன்றி எதிரிகளும் வியப்படையும் மாற்றம் நிச்சயம் தோன்றும். அத்தகைய முன்மாதிரியும் செயலூக்கமும் கொண்ட சிறந்த தலை வர்கள் தோன்றுவதும், மதுத் தடைக்கு இலகுவாகவே கட்டுப் படும் வகையில் சமூகத்தை அவர்கள் மாற்றுவதும் எப்போது என்பதுதான் இன்றுள்ள கேள்வி!

மதீனாவில் மது விலக்கு தொடர்பான அல்லாஹ்வின் கட்ட ளைக்கு இறை விசுவாசிகள் எவ்வாறு கூட்டாக கட்டுப்பட்டார் கள் என்பதையும், மதுப்பாத்திரங்களை கூட தகர்த்தெறிந்து அந்த அசுத்தத்திலிருந்து எவ்வாறு விடுபட்டார்கள் என்பதையும் முன் னர் கலந்துரையாடினோம். அதில் சில படிப்பினைகளையும் கற் றுக் கொண்டோம். மது தடுக்கப்பட்டு விட்டது என்று கூறியதும் அதிலிருந்து இவ்வாறு அவர்கள் முற்றாக விலகிக் கொண்டமை அற்புதமானதுதான். ஆனாலும் மதுவின் பிடியிலிருந்து விடு பட்டதன் பிறகு அந்த விடுதலையில் அவர்கள் திடமாக நிலைத்

திருந்தமை அதனை விட பேரற்புதம் என்றே சொல்ல வேண்டும். மதீனத்து சமூகம் மீண்டும் மதுவை நோக்கி சென்று விடாமல் பாதுகாக்கும் அற்புதத்தைஇஸ்லாம் எவ்வாறு சாதித்தது? அடுத்து வரும் அத்தியாயத்தில் இது பற்றி நாம் கலந்துரையாடுவோம். அதனை சாத்தியப்படுத்திய சமூக, உளவியல், ஆன்மீக காரணி களையும் அங்கு கண்டறிய முயல்வோம்.

அத்தியாயம்: 06

மதீனத்து சமூகம் மீண்டும் மதுவை நாடிச் செல்லாமல் பாதுகாக்கப் பட்டமை

சமூக, உளவியல், ஆன்மீக காரணிகள்

இறை கட்டளைக்கு கட்டுப்படவும் மதுவிலிருந்து கூட்டாக விடுபடவும் மதீனத்து சமூகத்தை ஊக்கிய அதே உள, சமூக, ஆன்மீக காரணிகளைத்தான் அந்த சமூகம் மீண்டும் மதுவை நோக்கிச் சென்று விடாமல் பாதுகாப்பதற்கும் இஸ்லாம் பயன் படுத்தியது. அக்காரணிகள் குறித்தும் வேறு சில காரணிகள் குறித் துமே இங்கு நாம் கலந்துரையாட உள்ளோம். ஆயினும் அருள் நிறைந்த மதீனத்து சமூகம் மது என்ற பேயிடமிருந்து எவ்வாறு தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டது என்ற கோணத்திலிருந்து அக் கலந்துரையாடல் இங்கு அமையவுள்ளது. இவ்விடயத்தை நவீன மானிட கற்கைகளின் நோக்கில் முன்வைத்து, மதீனத்து சமூகம் அடைந்த அந்த வெற்றியையும் தற்காலத்தில் மதுப் பாதுகாப் புக்காக மேற்கொள்ளப் படுகின்ற முயற்சிகளையும் ஒப்பிட்டு நோக்க நாம் விரும்புகிறோம். மதுவிலிருந்து மக்களை பாது காப்பதற்கு தற்காலத்தில் மேற்கொள்ளப்படும் பல முயற்சிகள் காற்றில் கரைந்து விடுவது வெளிப்படை.

முதலில் நாம் மத-ஆன்மீகக் காரணியிலிருந்து ஆரம்பிப் போம். ஏனெனில் அதுதான் சமூகமும் தனிமனிதர்களும் மதுவின் பால் மீண்டும் கவர்ந்திழுக்கப் படாமல் பாதுகாக்கின்ற அடிப் படையாகும். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப் படும் வகையில் பயிற்றுவிக்கப்பட்ட மனித உள்ளங்களில் இருந்துதான் உண்மையான பாதுகாப்பு வேர் விடும்.

''நீங்கள் அல்லாஹ்வை நேசிப்போராக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அப்போது அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்களது பாவங்களையும் மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்ப வனாகவும் அன்பாளனாகவும் இருக்கிறான் என்று நபியே நீங்கள் சொல்லுங்கள்''. *(ஆல இம்ரான் 31)*

ஆன்மா என்னும் இந்த அத்திவாரத்தின் மீதுதான் சட்டங்களா லான பாதுகாப்புச் சுவர் கட்டியெழுப்பப்படுகிறது. அல்லாஹ் மதுவை சபித்து அதனை விட்டு விடுமாறு கட்டளை இட்ட போது மதீனத்து விசுவாசிகள் அதனை முற்றாக வெறுத்து ஒதுக்கியதும் இதனால்தான். நேற்று வரை போதைக்கு அடிமைப் பட்டிருந்தவர் இன்று ஒரு மிடறு மது அருந்துவதற்கு சன்மானமாக உலக இன் பங்கள் முழுவதுமாக கிடைத்தாலும் அவற்றை ஏற்க மறுப்பவ ராக மாறியது மட்டுமன்றி, ஒரு துளி மது அருந்துவதை விட அழுக்குகளை உண்பதை மேலாக கருதியதும் இதனால்தான்.

இதோ அபூ மூஸா (ரழி) கூறுகிறார்:''வளமான நிலங்களுக் குரிய பல வருட வரியை எனக்குத் தந்து திராட்சை மதுவை அருந்தச் சொன்னாலும் அதற்காக நான் மகிழ மாட்டேன்''.[1]

ஸஃத் பின்அபீ வக்காஸ் (ரழி) அவர்களிடம் ஒரு தோட்டம் இருந்தது. அதில் அதிக திராட்சை விளைந்தபோது அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தவர் ஸஃதுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்: ''தோட்டத்திலுள்ள திராட்சைகள் வீணாகி விடுமோ என்று நான் பயப்படுகிறேன். நீங்கள் அனுமதித்தால் அதிலிருந்து என்னால் மது பிழிய முடியும்''. இதற்குப் பதிலளித்த ஸஃத் (ரழி),''இந்தக் கடிதம் கிடைத்தவுடன் எனது தோட்டத்தி

லிருந்து விலகிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணை யாக, இதன் பிறகு நான் உங்களை எதற்காகவும் நம்பப் போவ தில்லை'' என எழுதி அனுப்பினார். குறித்த நபரில் ஏற்பட்ட சந்தேகமே ஸஃதின் தீர்மானத்திற்கு காரணமாக அமைந்தது.[2]

மவ்ரிக் (ரழி) அவர்கள் ''பழீஹ் என்ற உயர்தர திராட்சை மதுவை அருந்துவதை விட கழுதையின் சிறுநீரை அருந்து வதையே நான் விரும்புவேன்''[3] என்கிறார்.

உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்களோ, திராட்சை மதுக் கோப் பையை விட மரணக் கோப்பையை மேலாகக் கருதுகிறார். அவர் கூறியதாக அபூதமீம் இவ்வாறு அறிவிக்கிறார்: ''நபீத் என்ற திராட்சை மதுவை அருந்துவதை விட எனது வயிற்றில் பல முறை ஈட்டியால் குத்தப்படுவதையே நான் விரும்புவேன்''.[4]

இது மாத்திரமல்ல. நேற்று காலையிலும் மாலையிலும் மதுவில் திளைத்திருந்தவர்கள் இன்று அதனை ஒரு வகையான சிலை வணக்கமாகவே கருதத் தொடங்கி விட்டார்கள். இதோ அபூ மூஸா (ரழி) கூறுகிறார்: ''அல்லாஹ்வை விடுத்து 'ஸாரியா' என்ற இந்தச்சிலையை வணங்குவதும், மது அருந்துவதும் என் னைப் பொறுத்தவரை ஒன்றுதான்''.[5]

இத்தகைய பேச்சுக்களும் உணர்வுகளும் நடத்தைகளும் உயர் ந்த ஈமானிய உயிரோட்டத்தின் வெளிப்பாடுகளே. அது உள்ளத் தில் நிரம்பி அவயவங்களால் வெளிப்படுகிறது. ஜாஹிலிய்ய அளவு கோல்களை அது தலைகீழாக புரட்டி விடுகிறது. எனவே இங்கு போதையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கோ, மீண்டும் அதனை நோக்கிப் போகாமல் தடுப்பதற்கோ சட்டம் தேவை யில்லை. அரச பயங்கரவாதமும் அவசியமில்லை. இந்த உயிரோட் டம்தான் தூய மதீனத்து சமூகத்தை -அதிலும் குறிப்பாக இறைத் தூதரை சுற்றி நின்று உதவிய அந்தக் குழுவினரை- மிகைத்திருந்தது.

மதீனத்து மக்கள் அனைவரும் ஒரே தரத்தில் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் மறுமைவரை அவர்களை முன்மாதிரி யாக கொள்ள முடியாது போயிருக்கும். ஏனைய சமூகங்கள்

போன்றே அந்த சிறந்த நூற்றாண்டில் வாழ்ந்த சமூகத்திலும் பலதரப்பட்டவர்கள் காணப்பட்டார்கள். அதனால்தான் இரட்ச கனை சார்ந்திருந்தஅந்த சமூகத்திற்கு சட்டமும் தண்டனையும் தேவைப்பட்டன. அந்த சமூகம் பூமியில் வாழ்வோருக்கு முன் மாதிரியாய் அமைந்ததும் இதனால்தான். இல்லையெனில் வானு லகில் வாழ்வோருக்கே அது முன்மாதிரியாக இருந்திருக்கும்.

அங்கே இரண்டாவது ஒரு குழுவினரும் இருந்தார்கள். பிற முஃமின்களை விட எண்ணிக்கையில் குறைந்த அவர்கள் மதுத் தவிர்ப்பை இறுதி நிமிடங்கள் வரை பிற்போட்டிருந்தார்கள். மது பூரணமாக தடுக்கப்பட்ட போது அவர்களும் உத்வேகத்தோடு அதனை கை விட்டார்கள். ஆயினும் அவ்வாறு சட்டென தவிர்ந்து கொண்டதன் விளைவுகளும் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினை களும் சேர்ந்து கால ஓட்டத்தில் காலை மதுவை அல்லது மாலை மதுவை நாடக் கூடிய நிலைக்கு அவர்களை தள்ளின. இத்தகை யோரின் நெஞ்சுறுதியை பலப்படுத்தி மதுவை தவிர்ந்து கொள்ளும் பாதையில் நிலைக்கச் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை அப்போது இருந்தது. இவர்களுக்கு இஸ்லாம் என்ன செய்தது? இது குறித்த இஸ்லாமிய அனுபவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக் கூடியபாடங்கள் என்ன?

நாடோடி அறபிகளும் அங்கு காணப்பட்டார்கள். அவர்கள் மதீனாவுக்கு வந்து அல்குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் தேவையான அறிவை பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்று விடுவார்கள்.

குறைந்த எண்ணிக்கையிலான நயவஞ்சகர்களும் இறை நிரா கரிப்பாளர்களும்கூட மதீனத்து சமூகத்தில் வாழ்ந்தார்கள். ஈமானிய ஒளி ஊடுருவாதபடி மூடுண்ட உள்ளம் கொண்டிருந்த அவர்கள், சிலபோது தமது யூத நண்பர்களின் உதவியோடு மதீனத்து சமூ கத்தினுள் மதுவை மீண்டும் கொண்டு வருவதற்கான வழிகளை தேடிக் கொண்டிருந்தனர். இஸ்லாத்தின் மீதான குரோதம் மட்டு மன்றி, மது விற்பனையால் ஏலவே பெரும் செல்வம் பெற்று வந்தவர்கள் மீண்டும் அத்தகைய செல்வத்தை பெறும் நோக்கமும்

அங்கு இருந்திருக்க வேண்டும். இத்தகைய சதி முயற்சிகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை இஸ்லாம் எவ்வாறு பாதுகாத்தது?

1. இறை விசுவாசமே மதுவின்பால் மக்கள் மீளாதிருந்ததற்கான அடிப்படைக் காரணம்

மதீனாவில் வெற்றி பெற்று மிகைத்து நின்ற முஃமின்களை மதுவிலிருந்து விடுவிப்பதற்கான உறுதியான அத்திவாரமாக இஸ்லாம் ஈமானையும் இறையச்சத்தையும் அவர்களது உள்ளங் களில் ஆழமாகப் பதித்தது. இறையச்சம் காரணமாக அவர்களது உள்ளங்கள் விழிப்போடு இருந்தன. உயர்ந்த ஆன்மீகப் படித் தரங்களை நோக்கி அவை தொடர்ச்சியாக அவா கொண்டிருந்தன. எல்லா இறை விசுவாசிகளுக்கும் ஆதர்ஷமாக அவர்கள் இருந் தார்கள்.

இத்தகைய உயர்ந்த தரத்திலான இறை நம்பிக்கையே மனோ திடம்,அன்பு, நிம்மதி என்பன முழு சமூகத்திலும் பரவ காரண மாகியது. மதுவையும் போதையையும் ஊக்குகின்ற அனைத்துக் காரணிகளையும் அது வேரோடு களைந்தது. இதனால் முன்னர் பெரும் மலைகள் போன்று மக்களுக்குத் தென்பட்ட ஜாஹி லிய்ய அழுத்தங்களும், கோத்திரப் போட்டிகளும், வெறித்தனமான மோதல்களும் அற்பமானவையாய் மாறத் தொடங்கின. முன்னர் தங்களது தோள்களை அழுத்திக் கொண்டிருந்த இப்பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க அல்லது அவற்றிலிருந்து தப்பிக் கொள்ள மதுவில் மூழ்கி விடுவதுதான் அவர்களது வழக்கமாக இருந்தது. ஆனால் இறை விசுவாசம் கொண்ட பின்பு சரளைக் கற்களைப் போன்று தமது காலணிகளால் அவற்றை மிதித்துக் கொண்டு அல்லாஹ்வை நோக்கிய ஆன்மீக பயணத்திலே கட்டம் கட்டமாக உயர்ந்து சென்றார்கள். இஸ்லாத்தை ஏற்ற பின்னர் தமது பழைய முரண்பாடுகளும் அழுத்தங்களும் அவர்களுக்கு சிறுபிள்ளைத் தனமான சண்டைகளாகவும் பிரச்சினைகளாகவும்தெரிந்தன.

மதுவுக்கு அடிமைப்பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதிலும், மீண்டும் மதுவை நோக்கி ஈர்க்கும் காரணிகளை மிகைப்பதிலும்

இறை நம்பிக்கையின் முக்கியத்துவம் தற்காலத்தில் மீண்டும் பலமாக வெளிப்படத் தொடங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியை ஏலவே மதுப் பாவனையில் மதம் ஏற்படுத்தும் தாக்கம் தொடர் பாக பேசும் போது சுருக்கமாக முன்வைத்தோம். மதுவை நோக்கி மீளவும் திரும்பாமல் தடுப்பதில் மதம் பெறும் முக்கியத்து வத்தை இங்கு கலந்துரையாடுவோம்.

இறை நம்பிக்கை என்ற காரணி (Faith Factor) -அது திரிபுற்ற மத நம்பிக்கையாக இருந்தாலும்- பெரும் சக்தி வாய்ந்தது என்ப தனை பரிசோதனை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இரத்த அழுத்தம், குடல் புண், சில வகையான தோல் நோய்கள், ஆஸ்துமா போன்ற உடல் சார்ந்த பிரச்சினைகளை கூட அது தீர்க்க வல்லது.[6]

சரியான விசுவாசத்திற்கும் இறையச்சத்திற்கும் வேறு பல நல்ல விளைவுகளும் உண்டு. மதுவை விட்டு விலகுவதையும், மீண்டும் போதையை நோக்கி செல்லாதிருப்பதையும் அந்த விளைவுகள் உத்தரவாதப்படுத்துகின்றன. அவற்றுள் முதன்மையாக, இறை விசு வாசத்திலிருந்து பிறக்கும் இஸ்லாமிய கிரியைகளது விளைவு களை குறிப்பிடலாம். இறை விசுவாசமானது முஃமின்களின் சமூக அந்தஸ்தை உயர்த்தி விடுகிறது. அந்நிலையில் போதைப் பொருள் என்பது பெரும் குற்றமாகவும், மது என்பது பொது வாகவே சமூகத்தினால் வெறுக்கப்படும் அசூயையாகவும் மாறி விடுகின்றன.

இஸ்லாத்தின் பிரதான கிரியைகளான தொழுகை, நோன்பு, ஹஜ், உம்றா போன்றவற்றை மேற்கொள்வதால் ஒரு முஃமின் பெறுகின்ற மாபெரும் பயன் குறித்து முதலில் உரையாடுவோம். மது அருந்துவதை ஊக்கப்படுத்தும் காரணிகளுக்கு சிகிச்சை அளிப்பதோடும், மதுவை மேலும் வெறுக்கச் செய்வதோடும் இக்கிரியைகள் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதையும், அப்பண்பை பொதுவாகவே சமூகத்தில் எப்படி அவை பரவச் செய்கின்றன என்பதையும் கூட இங்கு கவனிப்போம்.

2. மதுவை நோக்கி மீளவும் செல்வதனை தடுப்பதில் தொழுகை மற்றும் இஸ்லாமிய வணக்கங்களின் தாக்கம்.

தொழுகையின் முக்கியத்துவம், அது இரவிலும் பகலிலுமாக அமைந்துள்ளமை, அதனை இஸ்லாம் எவ்வாறு மது தடுக்கப் பட்ட படிமுறைகளுடன் தொடர்புபடுத்தியது என்று ஏலவே நாம் நோக்கினோம். இப்பொழுது நாம் மதுவிலிருந்து நீங்கிய விசு வாசியை வணக்கங்கள் எவ்வாறு பலப்படுத்துகின்றன என்பது தொடர்பான சில கருத்துக்களை நோக்குவோம். இவ்விடயத்தில் தொழுகையானது அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதில் சந்தேகமில்லை. இஸ்லாத்தை பொறுத்தவரையில் தொழுகை பிரதானமான தூணாகும். ஐந்து நேர தொழுகையின்றி ஈமானிய பயணம் தொடர முடியாது. மிகவும் கஷ்டமான நிலைகளின் போது கூட அதனை விட்டுவிடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதி இல்லை என்பது அதன் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்து கிறது. போர்க்களத்திலே காயம் பட்டு, எதிரிகளால் சூழப்பட்டு, அனைத்து திசைகளாலும் கண்காணிக்கப்பட்டு இருக்கும் நிலை யிலும் கூட தொழ வேண்டும். கட்டிலில் மரணப்படுக்கையில் இருப்பரும் உணர்வுடன் இருந்தால் தொழுகையை விட முடி யாது. விரல்களால் அல்லது சைக்கினையால் அல்லது அசைவு களால் அல்லது உள்ளத்தாலாவது அவர் தொழ வேண்டும்.

உள்ளங்களை தூய்மைப்படுத்துவதில் தொழுகையின் பங்கை அல்-குர்ஆன் தெளிவாக குறிப்பிடுகிறது. அது பாவச் செயல்களி லிருந்து தடுத்துவிடும். நடத்தைகளை சீரமைக்கும். மானக் கேடானவற்றை விட்டு விலக்கும். நாட்ட சக்தியை அதிகரிக்கும். ''வேதத்திலிருந்து வஹியாக தரப்பட்டதனை நீங்கள் ஓதுங்கள். தொழுகையையும் நிலைநாட்டுங்கள். நிச்சயமாக தொழுகை யானது மானக்கேடானவற்றையும், பாவங்களையும் விட்டு தடுக் கிறது''. *(அன்கபூத் 45)*

தொழுகையில் உள்ளச்சமும் வெட்கமும் இருக்கிறது. மது அருந்துவது போன்ற பெரிய பாவத்தை செய்தவன் அல்லாஹ்வின்

முன்னிலையில் வெட்கப்படுவான். இதில் தொழுகை மாத்திரமே வழங்குகின்ற உள அமைதியும் இருக்கிறது. ''... அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலமாக உள்ளங்கள் அமைதியடைகின்றன''. (ரஃத்: 28).

மதுவை விட்டு விட்டவனுக்கு இந்த ஆன்மீக-உள அமைதி மிகவும் அவசியமாகும். அதன் மூலம் அவன் பலமடைவான். மது அருந்துவதற்கான தூண்டுதல்களுக்கு முன்னால் அவன் பலவீனப்பட மாட்டான். உடல்-உள அழுத்தங்களுக்கு பணிய மாட்டான். இந்த வசனங்களுக்கு ஷஹீத் சையித் குத்ப் தனது அழகான வசனங்கள் மூலம் கீழ்வரும் விளக்கத்தை தருகிறார்:

''அல்லாஹ்வை ஞாபகப்படுத்துவதன் மூலம் முஃமின்களின் உள்ளங்கள் அமைதியடைகின்றன. அல்லாஹ்வின் தொடர்பு, அவனது அருகாமை, பாதுகாப்பு என்பவை பற்றிய உணர்வினால் அவை அமைதியடைகின்றன. படைப்பு, தொடக்கம், முடிவு என்பவற்றின் பின்னாலுள்ள நோக்கத்தை புரிந்து கொள்வதன் மூலமாக தனிமையின் கலக்கத்திலிருந்தும் பாதையின் தடுமாற்றத்திலிருந்தும் அவை விடுபடுகின்றன. இறை ஞாபகத்தின் மூலமாக கிட்டும் இந்த அமைதி ஓர் ஆழ்ந்த உண்மை.இறை விசுவாசம் கொண்டு அல்லாஹ்வுடன் தொடர்புபட்ட உள்ளங்களால் மாத்திரமே அந்த உண்மையை உணர்ந்து கொள்ள முடியும். பிறருக்கு அதனை விபரித்துக் காட்ட அவர்களிடம் வார்த்தைகள் இல்லை. ஏனெனில் அது வார்த்தைகளுக்கு வசப்படாதது. அது உள்ளாரப் பரவும்போது மனம் அமைதியும் நிம்மதியும் ஆனந்தமும் அடையும். இந்தப் பிரபஞ்சத்தில் தான் தனித்து விடப்படவில்லை என்று உணரும். சூழவுள்ள அனைத்தையும் நட்பாக நோக்கும். ஏனெனில் அவை அனைத்தும் அதனை பாதுகாப்பவனாகிய அல்லாஹ்வின் படைப்புகள்''.

அவர் தொடர்ந்து கூறுகிறார்: ''அல்லாஹ்வின் நெருக்கத்தினால் கிட்டும் மன நிம்மதியை இழந்தவரை விட துரதிஷ்டசாலி உலகில் எவரும் இருக்க முடியாது. தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சப் படைப்புகளோடு தொடர்பறுந்து பயணிப்பவரை விட

துரதிஷ்டசாலியும் கிடையாது.நான் ஏன் வந்தேன்? எங்கே போகிறேன்? வாழ்வின் ஏற்படும் இத்தனை துன்பங்களும் ஏன்?.. என ஆராய்ந்து பார்க்காமல் வாழ்பவரை விட துர்ப்பாக்கியசாலி எவரும் இல்லை''.[7]

தொழுகையில் நாவு அல்லாஹ்வை துதிக்கிறது. அந்த ஆழமான இறையச்சத்தின் நடுவே அல்-பாத்திஹாவின் வசனங்களும், அல்லாஹ்வின் தூய்மையையும் புகழையும் மாட்சிமையையும் துதிக்கும் வாசகங்களும் திரும்பத் திரும்ப உச்சரிக்கப் படுகின்றன. அதனுள் மறைந்திருக்கும் ஆன்மீக ரகசியங்களை நவீன அறிவியலால் ஆழ்ந்து புரிந்து கொள்ள முடியாது. ஆயினும், தொழுகையின் சில உளவியல் -சிகிச்சைப் பயன்களை நவீன பரிசோதனை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மது உள்ளிட்ட போதைப்பொருட்ளின் பிடியிலிருந்து பாவனையாளர்களை விடுவிப்பதிலும், உடல்-உள ரீதியாக அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் தளர் நிலையும் (Relaxation) ஆழ்நிலைத் தியானமும் (Transcendental Meditation) பெறும் முக்கியத்துவம் குறித்து அறிவியலாளர்கள் இன்று பேசுகின்றனர். ஒரு நோயாளி தியானத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு, தனது நம்பிக்கைக் கோட்பாட்டிலிருந்து பெறப்பட்ட சில வார்த்தைகளை திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது, அவரில் தெளிவான உள-உடல் மாற்றங்கள் ஏற்படுவதாக பரிசோதனை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. பாதுகாப்பை உணர்தல், பதட்டம் நீங்குதல், இரத்த அழுத்தம் பெருமளவு குறைதல், பல்வேறு உடற்கூற்று மாற்றங்கள் என்பவற்றை இம்மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.[8] இத்தகைய ஆய்வுகளே போதைக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விடுபட உதவக்கூடிய பதினேழு வகையான ஆய்வுத் திட்டங்களுக்கு முதலீடு செய்ய அமெரிக்க பெடரல் அரசை தூண்டியது.[9]

கலாநிதி பென்ஸன்[10] என்பவர் கண்டறிந்த உண்மைகள் இதனை விட ஆச்சரியமானவை. இமய மலைச் சிகரங்களில் சில பௌத்த துறவிகளை அவர் கண்டார். அவர்கள் யோகா பயிற்சி

களுடன் கூடிய ஆழ் தியானத்தில் மூழ்கி இருந்த போது அவர்கள் மீது நுணுக்கமான உடற்கூற்றியல் பரிசோதனைகளை அவர் மேற்கொண்டார். வெண் பனியால் மூடப்பட்ட இமய மலைச் சிகரங்களின் கடும் குளிரில் தமது கைகால்களின் வெப்ப நிலையை 130 அளவுக்கு அதிகரித்துக் கொள்ள அவர்களால் முடிகிறது என்பதை இதன் மூலம் அவர் கண்டறிந்தார்.

ஒருவர் தியானத்திலும் மன அப்பியாசங்களிலும் தொடர்ச்சியாக ஈடுபடுவதாலும், தனது நம்பிக்கையுடன் தொடர்பான வார்த்தைகளை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதாலும் உள அமைதியையும் நிம்மதியையும் பெறுகிறார் என்பதை இது காட்டுகிறது. அவரது உளவியல் கட்டுமானம் இதனால் பலமடைகிறது. போதைக்கு அடிமையானவராக அவர் இருந்தால், அதிலிருந்து விடுபட்டு வாழும் ஆற்றலை இதன் மூலம் பெறுகிறார். இலகுவில் உணர்ச்சிவயப்படுபவராக இருந்தால், அவரது பதட்டத்தை இது குறைக்கிறது. மட்டுமன்றி, சில வகையாக உடல் உபாதைகளை குணப்படுத்துவதற்கு கூட இது உதவுகிறது. தளர் நிலை (Relexation) மூலம் சிகிச்சையளித்தல் தொடர்பான பிரபல நூலை எழுதியவரான கலாநிதி பென்ஸன் இவ்வாறு கூறுகிறார்: ஆழ் மன தியானத்துடன் கூடிய தளர்வு நிலையை அப்பியாசம் செய்பவர் கட்டாயம் உளவியல் மருத்துவரது கட்டிலில் படுத்துக் கொண்டுதான் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. தொடர் பயிற்சிகள் மூலமாக அவர் பௌத்த துறவிகள் போன்று சம்மணமிட்டு அமர்ந்த நிலையிலும் தளர் நிலை அடையலாம். தனது காரியாலயத்தில் அமர்ந்து கொண்டு அல்லது வீதியில் நடந்து கொண்டு அல்லது ஓடிக் கொண்டு கூட இதனை அவர் அடையலாம்.

கடமையான தொழுகையில் இது போன்ற இரகசியங்கள் குவிந்து கிடந்த போதிலும் இது போன்ற கண்ணோட்டத்தில் ஆய்வுகள் செய்யப்படவில்லை. குறைந்த அளவில் தொழுகையை நாம் நோக்கினால் கூட, ஒரு முஃமின் இரவிலும் பகலிலும் ஐந்து முறை ஆழ்ந்த தியான அமர்வுகளை மேற்கொள்

கிறான். அவற்றில் அல்-பாத்திஹா என்ற அத்தியாயத்தை அவன் ஆழ்ந்த சிந்தனையோடு திரும்ப திரும்ப 17 தடவை ஓதுகிறான். அகிலத்தார்களைப் படைத்து போசிக்கும் இறைவனின் மகத் துவம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறான். பிரபஞ்சத்திலும் உயிர்களிலும் பரந்து கிடக்கும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் பற்றிச் சிந்தித்து அவனது நேர்வழியையும் மன்னிப்பையும் இறைஞ்சுகிறான். கடமையான தொழுகைகளோடு வலியுறுத்தப்பட்ட உபரித் தொழு கைகளையும் (ஸுனன் முஅக்கதா) அவன் தொழுகிறான் என்று வைத்துக் கொண்டால், அல்-பாதிஹாவை இரவிலும் பகலிலு மாக குறைந்தது 28 தடவை ஓதுவான். ''அல்லாஹ் பெரியவன்'' (அல்லாஹு அக்பர்) என்ற வாசகத்தை சுமார் நூறு தடவை தனது தொழுகையில் உச்சரிப்பான். ஒவ்வொரு தொழுகை முடிந்த பிறகும் கூட அதனை 33 முறை உச்சரிப்பான். இவற்றுக்கு அப்பால் பெரும்பாலான முஸ்லிம்கள் ஈடுபடுகின்ற வேறு உபரித் தொழு கைகளையும் துதி வாசகங்களையும் சேர்த்துப் பாருங்கள். ஆக, மதுவின் பிடியிலிருந்து விடுபட்ட ஒரு முஸ்லிம் தொழுகையை -வெறும் இயந்திரத் தனமாக நிறைவேற்றினால் கூட- அதனூடாக குறிப்பிடத்தக்க உள-ஆன்மீகப் பயனொன்றைப் பெறுகின்றான்.

உலகப் பற்றற்று வணக்கத்தில் திளைக்கக் கூடியவர்களைப் பொறுத்த வரை, இரவுத் தொழுகையில் அவர்கள் ஒரு சுவையை உணர்கிறார்கள். இரவில் நீண்ட நேரம் தொழுகையில் நிற்பதால் பாதங்களில் ஏற்படும் வீக்கத்தைக் கூட அவர்கள் மறந்து போகி றார்கள். ''நாங்கள் வணக்கத்திலும் தொழுகையிலும் அனுப விக்கும் இன்ப நிலையை அரசர்களும் ஆட்சியாளர்களும் அறி வார்களாயின், அதனை அடைந்து கொள்வதற்காக எங்களோடு வாளால் போராடி இருப்பார்கள்'' என அவர்களில் ஒருவர் கூறியதும் இதனால்தான்.

தம்மைச் சூழ நடப்பவற்றைக் கூட உணராமல் தொழுகையில் உள்ளச்சத்துடன் லயித்திருந்த பலரது சம்பவங்களை நமது இஸ்லாமிய பாரம்பரியம் பதிந்து வைத்துள்ளது. முஸ்லிம் இப்னு யஸார் என்பவர் தொழுகையில் லயித்திருந்தபோது மஸ்ஜிதின் தக்கையொன்று விழுந்ததைக் கூட அவர் உணரவில்லை.(11)

இன்னொரு வணக்கவாளியோ ''தொழுகை என்பது மறுமையைச் சேர்ந்தது; அதில் நுழைந்ததுமே உலகிலிருந்து வெளியேறி விடுவேன்'' என்கிறார்.[(12)]

இத்தகைய வணக்கவாளி ஒருவரது உடற் பகுதியொன்று வெட்டி நீக்கப்பட வேண்டி இருப்பதாக ஒரு மருத்துவர் சிபாரிசு செய்த போது, 'அவர் தொழுகையில் நுழைந்து விட்டால், தனக்கு நிகழும் எதனையும் உணர மாட்டார்' என்று சிலர் கூறினர். அவ்வாறே அவர் தொழுகையில் இருக்கும் போது, அப்பகுதி வெட்டி எடுக்கப்பட்டது என ஒரு பிரபல சம்பவம் பதியப்பட்டுள்ளது.[(13)]

தொழுகையின் உள-ஆன்மீகப் பயனைப் பெறுவதற்கு ஒரு முஸ்லிமின் தொழுகை இந்தளவு உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இவ்விடயத்தில் இறை விசுவாசிகள் மத்தியில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படலாம். ''தொழுகையில் ஓர் அடியானுக்கு கிடைப்பது அவன் பகுத்துணர்ந்து கொண்டது தான்''[(14)] என்பது நபி வாக்கு.

கலாநிதி பென்சன் தனது ஆய்வில் கூறுகிறார்: ''ஒரு தனி மனிதர் தனது நம்பிக்கையுடன் தொடர்பான வார்த்தைகளை ஆழ்ந்த உணர்வுடன் திரும்பத் திரும்ப மொழிகின்றபோது உள அமைதி அடைகிறார்''. இக்கூற்று ஒரு முஃமின் தான் தொழுகின்ற இடத்தில் அமர்ந்து அல்லாஹ்வை ஆழ்ந்து துதிப்பதை (தஸ்பீஹ்) விளக்குவது போன்றுள்ளது. மட்டுமன்றி, அவர் தனது பிரபலமான நூலில், ஒரு முஸ்லிம் தளர்வு நிலையின் போது திரும்பத் திரும்ப கூறக் கூடிய சில வாசகங்களையும் தெரிவு செய்து குறிப்பிடுகின்றார். நூலின் ஏழாம் அத்தியாயத்தில் 'நம்பிக்கைக் காரணியின் அடிப்படைகள்' (Fundamentals of the faith factor) பற்றி பேசும்போதுஅவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''முஸ்லிம்கள் சில வார்த்தைகளை திரும்பத் திரும்ப மொழிவார்கள். உதாரணமாக 'அல்லாஹ்' என்ற சொல்லை அல்லது ஆரம்ப முஸ்லிம் கூறிய 'அஹதுன்... அஹதுன்...' என்பது போன்ற சில சொற்களை அவர்கள் மொழிவார்கள்''. (கலாநிதி பென்ஸன்

இங்கு பிலால் (ரழி) மொழிந்த வார்த்தைகளையே சுட்டுகிறார். எனினும், 'அஹதுன்' என்பதை அவர் தவறுதலாக 'அஹதும்' என்று குறித்துள்ளார்.)

இவ்வகையான ஆய்வுகள் முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற தொழுகை மற்றும் தஸ்பீஹ் தொடர்பான மிக வரையறுக்கப் பட்ட, மேலெழுந்தவாரியான ஆய்வுகளாக இருந்த போதிலும், தமது உளவியல் சிறப்புத் துறை ஆய்வுகளை இஸ்லாமிய அடிப் படைகளின் மீது ஸ்தாபிக்க விரும்பும் முஸ்லிம் உளவியல் அறிஞர்களுக்கு அவை பெறுமதி மிக்கவை.

இந்தத் துறையில் கலாநிதி அஹ்மத் அல் காழி அவர்கள் அமெரிக்காவில் மேற்கொண்ட 'இயாதாத் அக்பர்' என்ற ஆய்வு மிக முக்கியமானதாகும். முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள், அரபுமொழி தெரிந்தவர்கள், அரபுமொழி தெரியாதவர்கள் முத லிய வேறுபட்ட மனிதர்களிடம் அல்-குர்ஆன் வசனங்கள் ஓதி காண்பிக்கப்படும் போது அவர்களது உடலிலும் மனதிலும் ஒரு வித தளர்வு நிலை ஏற்படுவதாக பரிசோதனை முறையினூடாக அவர் நிரூபித்தார். இந்நிலையை நுணுக்கமான விஷேட கருவிகள் மூலமாக அளவிடவும் முடிந்தது. அதே மனிதர்கள் அறபு மொழி யிலான வேறு இலக்கிய ஆக்கங்களை செவிமடுக்கும்போது இம் மாற்றம் ஏற்படுவதில்லை என்பதையும் அவர் நிரூபித்தார்.[15]

நோன்பு, ஹஜ் போன்ற ஏனைய வணக்கங்களும் கூட போதைக்கு அடிமைப் பட்டவர்களை அதிலிருந்து விடுபடச் செய்வதிலும், விடுபட்டவர்களை தொடர்ந்து இயல்பு வாழ்வுக்கு கொண்டு வருவதிலும் பெரும்பங்கு வகிக்கின்றன. போதையுடன் இருப்பவர்கள் புனித ரமழான் மாதத்தில் அதனை விட்டு பூரண மாக நீங்கிக் கொள்வதை அவதானிக்க முடியும். இது பூரணமாக களையச் செய்வதற்கான சிறந்த ஒரு சந்தர்ப்பமாகும். மது போதைக்கு அடிமையான முஸ்லிம்களை அதிலிருந்து விடுவிக் கச் செய்வதில் இஸ்லாத்தின் பங்கு குறித்து நான் செய்த ஓர் ஆய்வில் கீழ்வரும் விடயங்களைக் கண்டறிந்தேன். போதைக்கு அடிமையாய் இருந்த 31 பேரில் 25 பேர் (அதாவது 80%) ரமழானில்

மது அருந்துவதை தவிர்ந்து இருந்தார்கள். ஏனைய 6 பேரும் (20%) மது அருந்துவதைக் குறைத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் பகல் பூராக நோன்பு வைப்பதில் ஆர்வம் காட்டினார்கள். இரவில் கொஞ்சம் குடித்தார்கள். உணவையும் பானங்களையும் தவிர்ந்து கொண்டமை, கூட்டாக தராவீஹ் தொழுகை, உள அமைதியும் இறையச்சமும் நிறைந்த சூழல் போன்றன ஒருபலமான ஆன்மீக சக்தியை அவர்களுக்கு கொடுத்தன. அதனால் அவர்கள் மதுப் பாவனையை தவிர்ந்து கொண்டார்கள் அல்லது குறைத்துக் கொண்டார்கள்.(16)

ஹஜ், உம்ரா போன்றவற்றின் தாக்கம் மிகவும் தெளிவானது. மது அருந்துகின்ற அல்லது அதற்கு அடிமையான பலர் ஹஜ் அல்லது உம்ராவுக்கு செல்கிறார்கள். ஒன்றில் சுயமாக தூண்டப் பட்டு, அல்லது வயது முதிர்ந்த பெற்றோரை அழைத்துக் கொண்டு, அல்லது தொழில் தேடி அவர்கள் அங்கு செல்கிறார் கள். திரும்பி வரும்போது அவர்களது நிலைமை மாறியிருக்கும். நல்ல மனிதர்களாக மாறியிருப்பார்கள். மதுவையும் கெட்ட நண்பர்களையும் துறந்திருப்பார்கள்.

இஸ்லாத்தின் வழிகாட்டலையும் நுபுவ்வத்தின் ஒளியையும் விட்டு மிகத் தூரமாகி விட்ட இன்றைய சடவாதச் சூழலில் கூட வணக்கங்களுக்கும் கிரியைகளுக்கும் இத்தகைய தாக்கம் இருக்கு மெனில், அல்-குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்த அந்த முதல் தலைமுறையில், நபியவர்களது பிரசன்னத்தில் அவற்றின் தாக்கம் எப்படி இருந்திருக்கும்!

3. மதுவில் தங்கியிருப்பதற்குப் பதிலீடாக ஈமானும் இஸ்லாமிய வணக்கங்களும்

உண்மையில் சமூக உளவியல் ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது, ஈமான் என்ற நம்பிக்கையும் அதிலிருந்து பிறக் கும் இஸ்லாமிய வணக்கங்களும் ஒரு மாற்றீடாக (Alternative) காணப்படுகின்றன. போதைக்கு அடிமையாதலுக்கான 'மாற்றீடு' என்பது மதுவுக்கு மீளவும் செல்வது தொடர்பான உளவியல்

ஆய்வுகளில் முக்கியமானதும் புதியதும் ஆகும். மதுவிலிருந்து அல்லது போதைப் பொருட்களிலிருந்து விலகிக் கொண்டவர் கள் மீண்டும் அவற்றை நோக்கி செல்லாதிருக்கும் வகையிலான மாற்று சமூக-உளவியல் செயற்பாடுகளையும் ஊக்கிகளையும் உருவாக்குவதில் வைத்தியசாலைகளும் சிகிச்சை நிலையங்களும் பராமுகமாக இருந்தமையே அவர்களுள் 60% - 90% வீதத்தினர் மீண்டும் அவற்றை நோக்கி செல்வதற்கான பிரதான காரணம் என பல உளவியல் மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[17]

போதைப் பொருளில் தங்கியிருப்பதை தடுப்பதற்கான ஐந்தா வது சர்வதேச மாநாட்டில் இதுபற்றி கலாநிதி Hesse துணிச்ச லாகவும் தெளிவாகவும் தனது ஆய்வை முன்வைத்தார். அதனை சுருக்கமாக கீழே தருகின்றோம்:

‘‘போதையால் பாதிக்கப்பட்ட ஒருவரை அதிலிந்து தடுக்க முடியும் என்று நாம் நம்பிக் கொண்டு இருக்கின்றோம். இது வெறும் கற்பனைதான். நாம் போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்கின்றோம். இதனை ஒரு சாகசமாகவே கருதிக் கொள்கின்றோம். மதுவுக்கு அடிமையானவர் எமது சிகிச்சையின் பின்னர் வேறொரு மனிதராக மாறி விடுவதாக நினைக்கிறோம். ஆனால் உண்மை அப்படியல்ல. போதைக்கு அடிமையான 21 வயது இளைஞர் ஒருவரை நாம் சிகிச்சைக்காக கொண்டு வருவ தாக வைத்துக் கொள்வோம். ஓரளவு படித்திருக்கிறார். ஆனால் தொழில் இல்லை. திருட்டிலும் முடிச்சு மாறலிலும் (Pickpocket) ஈடுபடுபவர். நாம் அவருக்கு பாரம்பரிய மருத்துவ, உளவியல் வழிமுறைகள் மூலமாக சிகிச்சை வழங்குகிறோம். அவரது உடல் மதுவிலிருந்து தூய்மையடைகிறது. வைத்தியசாலையை விட்டு வெளியேற தயாராகிறார். இதன் பின்னர் ஏற்படும் விளைவு என்ன?... சிறிது நாட்களுக்குப் பின்னர் 21 வயது இளைஞனொ ருவர் மீண்டும் வருகிறார். அவன் ஓரளவு படித்திருப்பான். தொழில் இருக்காது. இப்போது அவர் வெற்றிகரமான ஒரு திருடனாக மாறியிருப்பார். மதுவுக்கு அடிமையானோர் குணப் படுத்தப் படுவதாக மக்களும் நம்ப வைக்கப்படுகிறார்கள்.

ஆனால் உண்மை என்ன? வைத்தியர்களும் உளவியலாளர்களும் உடல் ரீதியாக சிகிச்சை வழங்குவதில் வெற்றி பெறுகின்றார்கள். ஆனால் மதுவுக்கு பழக்கப்பட்டவர் மீண்டும் அதனை நோக்கிச் செல்வது தொடர் கதையாகிறது...''.

கலாநிதி Hesse தொடர்ந்து கூறுகிறார்: ''அதிக பயனுள்ள சிகிச்சையை நாம் விரும்பினால், போதைப்பொருளை அல்லது மதுவை மனிதர்கள் நாடுவதற்கான உண்மையான காரணங்களை கண்டறிய வேண்டும். மருத்துவமனையில் குணமடைந்து வெளியேறுவோர் மீண்டும் போதையை நாடிச் செல்வதை தடுக்கக் கூடிய மாற்றீடுகளை (Alternatives) நாம் முன்வைக்க வேண்டும்''.[18]

மதுவுக்கும் போதைக்கும் அடிமையாக இருந்து விடுபட்டவர்களுக்கு பொருத்தமான பதிலீடுகளை வழங்குவதற்கு போதைக்கு எதிரான சர்வதேச இயக்கங்கள் இப்போது முக்கியத்துவம் கொடுக்கின்றன. உளவியல் மருத்துவ நோக்குகளதும் செயல் வாதங்களதும் அடியாக தோன்றிய பாரம்பரிய அணுகுமுறைகள் மாற்றப்பட வேண்டும் என அவை ஏற்றுக் கொள்கின்றன. குடிப்பதற்கு தூண்டிய காரணிகள் இனங்காணப்பட்டு பதிலீடுகள் வழங்கப்படாவிட்டால், குறித்த நபர்கள் போதை என்ற சேற்றுக்குள் மீண்டும் சிக்குவதை தவிர்க்க முடியாது. அந்த வகையில், இத்தகைய நிறுவனங்கள் மதுவின் பிடியிலிருந்து விடுபட்டவர்களுக்கு சில சமூக செயற்பாடுகளையும் பொழுதுபோக்குகளையும் விளையாட்டுக்களையும் ஏற்பாடு செய்து கொடுக்கின்றன. இவற்றின்மூலம் அவர்களது ஓய்வு நேரங்கள் நிரப்பப்படுகின்றன; உளவியல் தேவைகள் ஈடுசெய்யப்படுகின்றன; தொழில் பயிற்சிகளும் கிடைக்கின்றன.

மதுவிலிருந்து விடுபட்ட முஸ்லிம்கள் மீளவும் அதன்பால் செல்லாத அளவுக்கு அற்புதமான ஒரு வெற்றியை இஸ்லாம் அடைந்ததன் பின்னணியில் ஈமானிய மாற்றீடுகளுக்கும் இஸ்லாமிய வணக்கங்களுக்கும் பெரும் பங்குண்டு.

மாற்றீடுகள் என்ற இந்த விடயம் உளவியல் மற்றும் உளவியல் மருத்துவம் சார்ந்த துறைகளுக்கு மிகவும் புதியவை. ஆனால்

நபியவர்கள் வாழ்ந்த காலத்திலும், பிற்பட்ட கால இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களிலும் இவ்வகை மாற்றீடுகளை தெளிவாக கண்டுகொள்ள முடியும்.

மது தடுக்கப்பட்ட வசனங்களை நாம் நோக்கினால், மதுப் பயன்பாட்டுக்கும் அதனால் ஏற்படும் நடத்தைப் பிறழ்வுகளுக்கு மான ஊக்கிகள், தொழுகை, இறை நினைவு (திக்ர்) மற்றும் அவற்றிலிருந்து பிறக்கும் நடத்தை என்பவற்றிலிருந்து முற்றிலும் முரண்பாடானவை என்பதை தெளிவாக அவதானிக்கலாம். அந்த வகையில்,தொழுகையும் திக்ரும் மதுவுக்கும் போதைக்குமான சிறந்த பதிலீடாக அமைகின்றன.

அல்லாஹ்வை நினைவு கூர தெளிந்த அறிவும், உணர்வுள்ள உள்ளமும் தேவை. அப்போதுதான் உள அமைதியும் நிம்மதியும் கிட்டும். ஆனால் போதை அறிவை போக்கி விடுகிறது. அல் லாஹ்வை மறக்கடிக்கிறது. உள்ளத்தில் ஸ்திரமற்ற தன்மையை யும் வெறுப்புணர்வையும் தோற்றுவிக்கிறது.

''ஈமான் கொண்ட விசுவாசிகளே! நீங்கள் பேசுவதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற வகையில் போதை வயப்பட்ட நிலை யில் தொழுகையை நெருங்க வேண்டாம்''. (அந்-நிஸா: 43)

''நிச்சயமாக ஷைத்தான் மதுவின் மூலமாகவும், சூதாட்டத்தின் மூலமாகவும் பகைமையையும் குரோதத்தையும் ஏற்படுத்தவும், திக்ரையும் தொழுகையையும் விட்டு தடுக்கவுமே விரும்புகிறான். எனவே நீங்கள் (அவற்றை விட்டு) விலகிக் கொள்வீர்களா?'' (அல்-மாயிதா: 91)

மாஸின் இப்னுல் கழூபா இப்னு குராப்(19) என்ற நபித் தோழர் முதுமை அடையும் வரை மது அருந்துவதிலும் சங்கீதத்திலும் கெட்ட பெண்களின் சகவாசத்திலும் அதிக விருப்புடையவராக இருந்தார். அவருக்கு குழந்தைகளும் இருக்கவில்லை. போதைக்கு அடிமைப் பட்டவராகவும் அவர் இருந்திருக்க வேண்டும். இந் நிலையில் அவர் நபியவர்களிடம் வந்து தனக்காக அல்லாஹ் விடம் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொண்டார். நபியவர்களும்

அவரது விருப்பங்களுக்கான சிறந்த மாற்றீடுகளை வழங்குமாறு அல்லாஹ்விடம் இவ்வாறு பிரார்த்தித்தார்கள்:

''யா அல்லாஹ், சங்கீதத்துக்கு பகரமாக அவருக்கு அல்குர்ஆன் பாராயனத்தை ஆக்கி விடுவாயாக! தடுக்கப் பட்டதற்கு பகரமாக ஆகுமானதை கொடுப்பாயாக! மதுவுக்குப் பகரமாக பாவமற்ற பானங்களை வழங்குவாயாக! விபச்சாரத்துக்குப் பகரமாக கற்புள்ள வாழ்வை வழங்குவாயாக! குழந்தைப் பாக்கியத்தையும் அவருக்கு அருள்வாயாக!''[(20)]

மதுவில் தனக்கிருந்த நாட்டம் அதன் பிறகு இல்லாமல் போனதாகவும், குடும்பத்தில் ஸ்திரத்தன்மையும் குழந்தைப் பாக்கியமும் கிடைத்தாகவும் மாஸின் (றழி) பின்னர் கூறினார். அருள் நிறைந்த இந்த அனுபவத்தை அழகான கவிதையாகவும் பாடினார். மதுவுக்கான பதிலீடுகள் பற்றிய நவீன புரிதலை அக்கவிதை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

இஸ்லாம் மனித இயற்கைக்கும் இயல்புகளுக்கும் எதிராக போரிடுவதில்லை என்பது மேற்குறிப்பிட்ட நிகழ்விலிருந்து தெளி வாகத் தெரிகிறது. இஸ்லாம் தீமைகளையும் அவற்றுக்கான தூண்டல் காரணிகளையும் கண்டறிந்து, நன்மையின்பாலும் தூய் மையின் பாலும் மென்மையாக வழி நடாத்துகிறது. மது அருந் துதல் போன்ற பெரிய பாவங்களைச் செய்யும்போது ஏற்படக் கூடிய இன்பத்தையும் சுவையையும் மிகைக்கின்ற மாற்றீடுகளை உள்ளத்திலே அது உருவாக்குகிறது.

இமாம் இப்னுல் கையிம் (றஹ்) தனது 'மதாரிஜுஸ் ஸாலிகீன்' என்ற நூலில்இதனை விளக்குகிறார். முஃமினின் உள்ளத்தில் ஊற்றெடுக்கின்ற 'ஆன்மீகப் பலம்' பற்றியும், ஒரு பாவி பாவ மீட்சி பெற முன்னர் பெரும் பாவங்களால் அனுபவித்த உடல் -உள இன்பத்தை மிகைத்த இன்பமொன்றை அந்த ஆன்மீகப் பலம் எவ்வாறு தோற்றுவிக்கிறது என்பதையும் அவர் விரிவாக பேசுகிறார். ''ஒரு விசுவாசியின் உள்ளத்தில் 'ஸகீனத்' என்ற அமைதி ஆட்கொண்டு விட்டால் அதன் ஒளியை நோக்கி உள்ளம் சாய்ந்து விடும்'' என அவர் கூறுகிறார்.

அவரது விளக்கத்தை கவனியுங்கள்: ''பாவங்களிலும் இச்சை களிலும் நாட்டம் கொண்டிருந்த முஃமினின் உள்ளத்தில் 'ஸகீனத்' குடிகொள்ளும் போது அந்த 'ஸகீனத்'தை நோக்கி உள்ளம் சாய் வடைகிறது. ஏனெனில் பாவங்களில் தான் தேடிக் கொண்டிருந்த இன்பத்தை இங்கே அது கண்டுகொள்கிறது. அந்தப் 'பேரமைதி' தரும் இன்பம் பாவச் செயல் தந்த இன்பத்துக்கு பகரமாகி விடு கிறது. அப்போது அது அனுபவிக்கும் ஆத்ம அனுபவத்துக்கும் இன்பத்துக்கும் இச்சை சார்ந்த உடல் இன்பத்துக்கும் இடையில் எந்த தொடர்பும் இருப்பதில்லை. முன்னர் உடல் சார்ந்து அது அனுபவித்த இன்பம் இப்போது ஆத்மார்த்த இன்பமாக மாறி விடுகிறது''.

முஃமினின் உள்ளத்தில் அவ்வப்போது தோன்றும் பாவத் தூண்டல்களுக்கும், அவற்றுக்குப் பதிலீடான ஆத்மீகத் தூண்டல் களுக்கும் இடையிலான உள்ளார்ந்த பலமான போராட்டம் பற்றி இமாம் இப்னுல் கையிம் தொடர்ந்தும் விளக்குகிறார். நவீன உளவியல் அறிஞர்களது எழுத்துக்களை விஞ்சும் நுணுக்கத்துடன் அழகிய இலக்கிய நடையில் அவரது விளக்கம் அமைந்துள்ளது. மதுவின் பிடியிலிருந்து இப்போதுதான் விடுபட்ட ஓர் இறை விசு வாசி அதன் கஷ்டங்களையும் மதுவுக்கான உள-உடல் தூண்டல் களையும் எவ்வாறு எதிர்த்துப் போராடுவார் என்பதை எடுத்துச் சொல்வது போல் அவரது விளக்கம் அமைந்துள்ளது.[21]

மதுவை நோக்கிதிரும்பிச் செல்வதை தடுப்பதில் ஈமானும் வணக்க வழிபாடுகளும் கொண்டிருக்கும் தாக்கம் பற்றிய விளக் கத்தை இந்தளவுடன் முடித்துக் கொண்டு இன்னொரு விடயம் பற்றி கலந்துரையாடுவோம்.

4. மீண்டும் போதைக்குச் செல்லாமல் தடுப்பதில் சமூகப் பிணைப்பின் பங்கு.

சரியான விசுவாசத்திற்கும் இறையச்சத்திற்கும் நல்ல பல விளைவுகள் உண்டு என்பதையும், அவை மதுவை விட்டு விலக்கு வதோடு மீண்டும் போதையை நோக்கி செல்லாமல் தடுக்கக் கூடியவை என்பதையும் இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில்

குறிப்பிட்டோம். அவற்றுள் முதன்மையாக, முஸ்லிம்கள் கட்டா யக் கடமையாகவும் உபரி வணக்கமாகவும் நிறைவேற்றுகின்ற இஸ்லாமிய கிரியைகளது விளைவுகள் அமைவதாகவும் குறிப் பிட்டோம்.

இறைவிசுவாசத்தின் இரண்டாவது விளைவாக அமைவது சகோதரத்துவம் ஆகும். இது விசுவாசிகளின் கொடியை உயர்த்திப் பலப்படுத்துகிறது. இஸ்லாமிய சமூகம் மீண்டும் மதுவை நோக்கிச் செல்லாமல் பாதுகாக்கும் முக்கியமான காரணி என்ற வகையில் சகோதரத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து சிறிது உரையாடுவோம்.

இஸ்லாமிய சகோதரத்துவமானது பலவீனமான விசுவாசிகளை பலப்படுத்தி பலம் வாய்ந்தோருடன் இணைத்தது. மட்டுமன்றி, நயவஞ்சகர்கள் உள்ளிட்ட எதிரிகளைக் கூட கட்டுப்படுத்தி பணிய வைத்தது. எனவே அவர்களில் யாரும் பகல் பொழுதில் பகிரங்க மாக மது அருந்த துணியவில்லை. மீண்டும் மதுவை நோக்கிச் செல்ல முனைவோருக்கு பக்க பலமாக இருக்கவும் அவர்களால் முடியவில்லை. அவர்கள் மதுவருந்த விரும்பினால் கூட இரவில் வீட்டினுள் மறைந்திருந்து போதை வெளித் தெரியாத அளவு சொற்பமாக அருந்தும் நிலையே காணப்பட்டது. உண்மையில் இப்பூமியில் இஸ்லாமிய சமூகமொன்று தோன்றுவதாயின், இத் தகைய இறை விசுவாசமும் இறையச்சமும் சகோதரத்துவமும் இன்றி தோன்ற முடியாது.

''நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை பலமாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; பிரிந்து விடாதீர்கள்!'' (ஆல இம்ரான்: 103)

சமூகப் பிணைப்பு என்ற கண்ணோட்டத்தில் சகோதரத்துவம் என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை முன்னர் போதியளவு கலந்துரையாடி உள்ளோம். அது பற்றி மீண்டும் இங்கு நாம் பேச வேண்டியிராது. ஆயினும், அல்லாஹ்வின் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்யும் நோக்குடன் -இரத்த உறவையும் இனத் தொடர்பையும் விஞ்சிய வகையில்- ஏற்பட்ட இப்பிணைப்புத்தான்

ஜாஹிலிய்ய நடத்தையை நோக்கி மீண்டும் செல்லாமல் விசுவாசி களை பாதுகாத்தது என்பதை இங்கு நாம் வலியுறுத்துகிறோம்.

கீழ்வரும் அல்-குர்ஆன் வசனத்தையும் அது அருளப்பட்ட பின்னணியையும் நோக்குவோம். மதீன சமூகம் மதுவிலிருந்து முற்றாக விலகியது மட்டுமன்றி மீளவும் அதன்பால் செல்லாத அற்புதம் எவ்வாறு சாத்தியமாகியது என்பதை அதன் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம்:

''நாம் மதீனாவுக்கு மீளச் சென்றதும் கண்ணியமானவர் இழி வானவரை வெளியேற்றி விடுவார் என அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் விசுவாசிகளுக்கும்தான் கண்ணியம் உள்ளது. ஆனால் நயவஞ்சகர்கள் இதனை அறிய மாட்டார்கள்''. (அல்-முனாபிகூன்: 8)

இந்த வசனம் அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் தொடர்பாக இறங்கியது என அல்-குர்ஆன் விரிவுரையாளர்கள் ஒருமித்து கூறுகின்றார்கள். வரலாற்றாசிரியர் இப்னு இஸ்ஹாக் இது பற்றி பின்வருமாறு கூறுகிறார்: இது பனூ முஸ்தலக் போராட் டத்தை தொடர்ந்து அருளப்பட்டது. உமர் (ரழி) அவர்களுடைய கூலியாளுக்கும் ஸினான் இப்னு வபர் அல் ஜுஹனி என்பவருக் கும் இடையில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அப்போது ஜுஹனி சப்தமிட்டு 'அன்சார்களே!' என்று உதவிக்கு அழைக்க, உமர் (ரழி) யின் கூலியாள் முஹாஜிர்களை உதவிக்கு அழைத்தார். இதனைப் பார்த்து நயவஞ்சகர்களின் தலைவரான அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் கோபமடைந்தார். அவரோடு அவரது குழு வினரும் இருந்தார்கள். அன்ஸார்கள் ஏழை முஹாஜிர்களுக்கு செய்த உதவிகளை நினைவுபடுத்திய அவர், ''உனது நாயை உணவு கொடுத்து கொழுக்க வை; பின்னர் அது உன்னை கடிக் கட்டும்!'' என்ற அரபு பழமொழியையும் உவமானமாக கூறினார். ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாம் மதீனாவுக்கு திரும்பிச் சென்றதும் கண்ணியமானவர்கள் இழிவானவர்களை அங்கிருந்து வெளியேற்றி விடுவார்கள்'' என்றும் கூறினார். இதனைக் கேள்விப் பட்ட நபி (ஸல்) அவர்கள் மக்களை அழைத்துக் கொண்டு

அங்கிருந்து புறப்பட்டார்கள். பயணம் தொடங்கிய நேரம் வழக்க மாக அன்னார் பயணம் செய்யத் தொடங்கும் நேரமில்லை. இதனால் அப்துல்லாஹ் இப்னு உபை தனது தவறை உணர்ந்து கொண்டார். அவர் தனது சமூகத்தினரால் மதிக்கப்படும் ஒரு வராக இருந்தார். நபியவர்களிடம் சென்ற அவர், குறித்த செய்தியை தான் கூறவில்லை என்று சத்தியம் செய்தார். அப்போது உஸைத் இப்னு ஹுழைர் (ரழி) அவ்விடம் வந்து, அந்த அகால வேளையில் திடீரென்று மதீனாவுக்கு திரும்பிச் செல்வதற்கான காரணத்தை நபியவர்களிடம் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''உங்கள் நண்பர் கூறியது உங்களுக்கு தெரியாதா? மதீனாவுக்குத் திரும் பியதும் கண்ணியமானவர்கள் இழிவானவர்களை அங்கிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்றல்லவா அவர் கூறினார்!'' என விடை பகர்ந்தார்கள். அதற்கு உஸைத்,''அல்லாஹ்வின் தூதரே, நீங்கள் விரும்பினால் நீங்கள்தான் அவரை வெளியேற்றுவீர்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர்தான் இழிவானவர்; நீங்கள் கண்ணியமானவர்'' எனக் கூறினார்.

தொடர்ந்து அவர் பின்வருமாறு கூறினார்: ''அல்லாஹ்வின் தூதரே, அவருக்கு தயவு காட்டுங்கள்; ஏனெனில் அவரது சமூ கத்தினர் அவருக்கு கிரீடம் அணிவிக்க தயாராகிக் கொண்டிருந்த போதுதான் அல்லாஹ் உங்களை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்தான். நீங்கள் அவரது ஆட்சியை பறித்து எடுத்துக் கொண்ட தாகவே அவர் எண்ணுகிறார்!''

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: அப்துல்லாஹ் இப்னு உபை யின் மகனான அப்துல்லாஹ் கண்ணியமான நபித் தோழராக இருந்தார். அவர் நபியவர்களிடம் வந்து,''அப்துல்லாஹ் இப்னு உபையை நீங்கள் கொலை செய்ய விரும்புவதாக கேள்விப் பட்டேன். அதனை கட்டாயம் செய்ய வேண்டுமாயின் எனக்கு ஏவுங்கள். நான் அவரது தலையை கொண்டு வருகிறேன்'' என்றார்.

இக்ரிமா மற்றும் இப்னு ஸைத் போன்றவர்கள் குறிப்பிடுகின் றார்கள்: மக்கள் மதீனாவுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அப்துல்லாஹ் (ரழி) மதீனாவின் வாயிலில் வாளை

உருவியவராக நின்று கொண்டிருந்தார். தனது தந்தையான இப்னு உபை மதீனாவை வந்தடைந்த போது அப்துல்லாஹ் (ரழி) அவரை உள்ளே அனுமதிக்கவில்லை. ''ஏன் தடுக்கிறாய்?'' என அவர் கேட்டபோது, ''அல்லாஹ்வின் தூதர் அனுமதிக்கும் வரை நீங்கள் உள்ளே செல்ல முடியாது. அவர் கண்ணியமானவர்; நீங்கள்தான் இழிவானவர்'' என அப்துல்லாஹ் (ரழி) பதிலளித் தார். நபியவர்கள் அனுமதி வழங்கும்வரை தந்தையால் மதீனா வினுல் நுழைய முடியவில்லை.(22)

இப்படித்தான் இஸ்லாம் அந்த நபித்தோழர்களை சகோதரத் துவமும் பரஸ்பர பிணைப்பும் கொண்ட சிகரத்தை நோக்கி நகர்த்திச் சென்றது. அப்பிணைப்பு தந்தை-தனயன் உறவையும் மிகைத்திருந்தது. அங்கு அல்லாஹ்வின் ஷரீஆவும் நபியின் வழி முறையும்தான் கண்ணியமானவையாக கருதப்பட்டன. ஜாஹி லிய்ய பாரம்பரியங்களும் பழக்க வழக்கங்களும் இழிவாக கருதப் பட்டன. அப்துல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் இப்னு உபை போன்றவர்கள் இந்த அற்புதத்தை நிகழ்த்தினார்கள். அவர்கள் விரித்து வைத்த பரந்த ஆன்மீகக் குடையின் கீழ் மதுவை களைந்த வர்கள் நிழல் பெற்றார்கள்; மீண்டும் மதுவை நாடாமலும் பாது காக்கப்பட்டார்கள்.

இதுபோன்ற உதாரணங்களைக் கேட்கும்போது, மதீனாவில் இஸ்லாம் எவ்வளவு பலமான பிணைப்பபையும் உறவையும் ஏற்படுத்தி இருந்ததுஎன்பதை நம்மால் உணர முடிகிறது. அத்த கைய சூழலில், முஃமின்களில் இருந்த பலவீனர்கள் மதுவை நாடிச்செல்ல எவ்வளவு அச்சமும் சங்கடமும் அடைந்திருப்பார் கள் என்பதையும் நம்மால் கற்பனை செய்ய முடிகின்றது. போதையோடு மக்கள் முன்னால் போவதை நிச்சயம் அவர்கள் இழிவாக கருதியிருப்பார்கள். அவ்வாறு செய்திருந்தால் அவர்கள் பெரும் துரோகமொன்றை இழைத்து விட்டதாக சமூகமும் அவர் களுக்கு உணர்த்தி இருக்கும். மட்டுமன்றி, உலகிலும் மறுமை யிலும் ஏற்படக்கூடிய அல்லாஹ்வின் கோபத்துக்கும் தண்டனைக் கும் கூட அவர்கள் அஞ்சி நடுங்கி இருப்பார்கள்.

மதுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்வதிலும், மதுவின்பால் செல்லாமல் அவர்களை காப்பதிலும் இறுகப் பிணைந்த சமூகமொன்று கொண்டிருக்கக் கூடிய பேராற்றல் குறித்து நவீன மேற்குலகு ஐம்பதுகளின் இறுதியில் அல்லது அறுபதுகளின் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தது என்பது ஆச்சரியமானதுதான். ஒரே வகையான நலன்களில் இணைந்து ஒரே இடத்தில் கட்டுக்கோப்புடன் வாழும் சமூகம் அல்லது விரிந்த குடும்பம் அல்லது சிறு கோத்திரம் தனது சமூகப் பிணைப்பினை பயன்படுத்தி போதைக்கும் மதுவுக்கும் எதிராக இயங்க முடியும். தனது அங்கத்தவர்களை போதையிலிருந்து விலக்கக் கூடிய உளவியல் அழுத்தங்களை பிரயோகிக்கவும் முடியும். அவர்கள் மீளவும் மதுவின் பால் செல்வதனை சமூகத்துக்கு இழைக்கப்படும் துரோகமாக காண்பிக்கவும் முடியும். சிலவேளை சமூகத்திலிருந்து தம்மை விலக்கி வைக்க அது காரணமாக அமைந்து விடும் என்ற பயத்தையும் அவர்களுக்கு ஏற்படுத்த முடியும்.

மேற்கில் இத்தகையதொரு கண்டுபிடிப்பு முற்றிலும் எதிர்பாராத விதமாக நிகழ்ந்தமை இன்னும் ஆச்சரியமானதாகும். பிரபல உளவியல் அறிஞரான Mowrer[(23)] சிகிச்சைச் சமூகங்களுக்கான முதலாவது மாநாட்டில் முன்வைத்த ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

Charles Dederich என்பவரே போதைப் பொருளுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்கும் சமூகக் குழுவைமுதன் முதலில் ஸ்தாபித்தார். இவர் சுமார் 20 வருடங்களாக மதுவுக்கு அடிமையாக இருந்தவர். அதனால் தனது தொழிலைக் கூட இழந்திருந்தார். தனது சேமிப்பையெல்லாம் மதுவில் அழித்து விட்ட அவரை அவரது மனைவி வீட்டிலிருந்தே துரத்தி விட்டார்.

அதன் பின்னர் அவர் Alcoholics Anonymous என்ற அமைப்பில் இணைந்து கொண்டார். அங்கு மதுவிலிருந்து முற்றாக விடுபட்ட அவர், அதன் கூட்டங்களில் பங்கேற்று, மதுவுக்கு அடிமையான பிறருக்கு உதவி செய்வதிலும் ஈடுபட்டார். ஆனால் அதிகமாக கதைக்கக் கூடிய ஒருவராக (Chatter box) அவர் இருந்தார்.

அமைப்பின் கூட்டங்களில் அவரே அதிகமாக பேசினார். பொறுப் பாளர்கள் அவரை கண்டித்தும் எச்சரித்தும் பார்த்தனர். எதுவும் பயனளிக்காது போகவே கூட்டங்களுக்கு சமூகமளிக்காது அவரை தடுத்து விட்டனர்.

எனினும் அவர் தனது பொழுதுபோக்கான கதையளப்பை விட்டுவிடவில்லை. நீண்ட காலமாக மதுவுக்கு அடிமைப்பட்டி ருந்த சிலரை அவர் தன்னோடு தனது சிறிய வீட்டில் வசிப்பதற்கு அழைத்தார். அதேவேளை தனது நீண்ட உரைகளை அவர்கள் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்றும் நிபந்தனையிட்டார். காலப்போக்கில் அவர்கள் அவரது பேச்சில் ஒரு தனியான சுவை யைக் கண்டனர். அவர் பிரபலமடைந்தார். அவரது உரைகளை கேட்க வரும் மதுப் பிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களில் பலர் அவரது வீட்டுக்குப் பக்கத்திலுள்ள இடங்களில் குடியேறினர்.

1958 ஆம் ஆண்டின் கோடை காலத்தில் Dederichs இன் நண் பர்கள் இட நெருக்கடியை உணர்ந்தனர். எனவே ஒரு தொகைப் பணத்தை சேர்த்து லொஸ் ஏன்ஜல்ஸின் புறநகர் பகுதியில் விசாலமான, விலை குறைந்த ஒரு இடத்தைவாடகைக்கு எடுத்த னர். அங்கு மதுவுக்கு அடிமைப்பட்ட 18 ஆண்களும் 14 பெண் களும் குடியேறினர். ஒரு 'சிறிய கோத்திரம்' போன்று இணைந்து வாழ்ந்த அவர்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள் வதில் பரஸ்பரம் உதவிக் கொண்டனர்.

இங்கு Dederichs ஓர் ஆச்சரியமான தோற்றப்பாட்டை அவ தானித்தார். மதுவுக்கு மிக மோசமாக அடிமைப்பட்டிருந்தவர்கள் கூட அங்கு தொடராக தங்கியிருக்கும்போது போதைப் பொருட் களை அல்லது மதுவை பயன்படுத்தாது இருந்தார்கள் என்பதே. இது உண்மையில் எதிர்பாராததாகவும் நம்ப முடியாததாகவும் இருந்தது. எனவே, அவர் மதுவை விட்டவர்களை தொடர்ந்து உற்சாகப் படுத்திக் கொண்டே இருந்தார். மீளவும் அதனை பயன் படுத்த முனைவோரை கண்டித்தார். இதில் நல்லதொரு மாற் றத்தை தொடராக அவதானித்தார். சிலர் பூரணமாக குண

மடைந்தார்கள். மதுவைக் களைதல் என்பது அந்தக் குழுவினரின் இலட்சியமாக மாறிவிட்டது. மதுவுக்கு அடிமையானவர்களை குணப்படுத்த வெற்றிகரமானதொரு வழியை தான் கண்டு பிடித்து விட்டதாக Dederichs அப்போது உறுதி செய்தார். பெறுமதியான ஒரு பொக்கிஷம் அவருக்கு கிடைத்துவிட்டது.

Mowrer(24) தனது ஆய்வில் தொடர்ந்து கூறுகிறார்: ''மதுவுக்கு அடிமையானோருக்கான பாரம்பரிய உளவியல் மருத்துவ சிகிச்சை மிகவும் மேலோட்டமானது. பிரச்சினையை மிக மேலெழுந்த வாரியாகவே அது பார்க்கிறது. சுமார் 2% முதல் 4% அளவு மாத்திரமே அது வெற்றியளித்தும் இருக்கிறது. அதற்காக அரசு மேற்கொள்ளும் செலவும் மிகப் பாரியது''.

Mowrer(25) தொடர்ந்து கூறுகிறார்: 'Dederichsஉம் அவரது உதவி யாளர்களும் மிக வேகமாக தமது நிறுவனத்தை கட்டியெழுப்பி னார்கள். பல சிகிச்சைக் குழுக்களை உருவாக்கினார்கள். சில வருடங்களிலேயே சிறிய சிகிச்சைக் கிராமங்களும் அவற்றைச் சேர்ந்த சமூகங்களும் உருவாகி விட்டன. இந்த அமைப்பை அவர்கள் Synon என்று அழைத்தார்கள். அமெரிக்காவில் மூலை முடக்குகளெங்கும் அது பரவியது. ஆயிரக்கணக்கானோருக்கு சிகிச்சை செய்யவும், பல மில்லியன் டொலர் செலவில் மேலும் பல நிறுவனங்களை உருவாக்கவும் அதனால் முடிந்தது''. போதைக்கு அடிமையானோருள் 40% முதல் 70% வரையானோரை மாற்றுவதில் இவ்வமைப்பினர் வெற்றியடைந்ததாக Mowrer(26) மேற்கொண்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

ஆயினும் இந்தக் குழுவின் 'பரந்த குடும்ப அமைப்பில்' இருக்கும்போது போதையிலிருந்து பூரணமாக விடுபட்ட பலர் பொது வாழ்வுக்கு வந்ததும் மீண்டும் மது அருந்த ஆரம்பித்து விடுவதாக Brill(27) போன்ற ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எவ்வாறாயினும், -மேற்குறித்த அனுபவம் உறுதிப்படுத்துவது போல்- போதைப் பொருளை நிராகரிக்கும் சமூகக் குழுவின் சகோதரத்துவப் பிணைப்பும் நெருக்கமும் அதிகரிக்க அதிகரிக்க, அங்கத்தவர்கள் தமது சமூகப் பெறுமானத்தை உணர்கிறார்கள்.

போதையை நாடினால் சமூகம் தம்மை வெளியேற்றி விடும் என்ற அச்ச உணர்வும் அவர்களிடம் ஆழப் பதிகிறது. இது மதுவை களைவதற்கும் அதன்பால் செல்லாமல் தடுப்பதற்குமான மிகப் பலமான தூண்டியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தத் தூண்டலோடு ஈமானிய ஆன்மீக காரணியும் இணைந்து விட்டால் மீண்டுமொரு மதீனா எளிய வடிவிலாவது தோன்ற முடியும். அமெரிக்காவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குழுக் களுக்கு நடந்ததும் இதுதான். ஈமானியப் பிரகாசமும் ஆன்மீகத் தூய்மையும் மட்டுமன்றி, சகோதரத்துவமும் ஒருவர் அடுத்தவரை பலப்படுத்தும் பிணைப்பும் கூட அவர்களுக்கு பயனளித்தன. இதனால்தான் அவர்களால் மதுவை களையவும் மீண்டும் அதன் பால் செல்லாமல் இருக்கவும் முடிந்தது. கடுமையாக மதுவுக்கு அடிமையாகி மிக மோசமான குற்றவாளிகளாக இருந்தவர்கள் கூட அங்கு திருந்தினார்கள். சனநெருக்கடி மிக்க அமெரிக்க நகரங்களின் மத்தியில் கூட இந்த அற்புதம் நடந்தேறியது. ஒழுக்க வரையறையற்ற கூட்டு வாழ்க்கையோ, புறநகர் பகுதிகளில் பிரத்தியேகமான குடியிருப்புகளோ இல்லாமலே இந்த அதிசயம் அவர்களுக்கு கைகூடியது.

5. மதுவுக்கான மூலங்களை முற்றாக ஒழிப்பதன் மூலம் மதுவை நோக்கி திரும்பாமல் தடுத்தல்.

சமூக அழுத்தம், வழக்காறு,உறுதியான சட்டம் என்பவற்றின் மூலமாக மதுப் பாவனையை முற்றாக தடுப்பதும், மது சமூகத் தினுள் நுழையக் கூடிய வழிகளை விடாப்பிடியாக அடைத்து விடுவதும் மதுவிலிருந்து விடுபட்டவர்கள் மீண்டும் அதற்குத் திரும்பாமல் தடுக்கின்ற முக்கியமான சில காரணிகளாகும். இஸ் லாம் மதுப்பயன்பாட்டுக்கான வட்டத்தை படிப்படியாக சுருக்கி யது. பொருத்தமான நேரம் வந்தபோது அதனை முற்றாக தடை செய்யும் அல்-குர்ஆன் வசனம் இறங்கியது. நாம் முன்னர் குறிப்பிட்டது போல், மதுப் பாவனைக்கும் விற்பனைக்கும் ஏதுவாக அமையக் கூடிய எல்லா சாளரங்களையும் அதன் பிறகு நபியவர்கள் மூடி விட்டார்கள்.

இன்று மதுவிலிருந்து விடுபட்டோருள் பெருமளவினர் (சில போது 90% பேர்) மீண்டும் மதுவை நோக்கிச் செல்வதற்கு முக்கியமான பல காரணங்கள் உள்ளன. பரவலாக காணப்படும் மதுபானக் கடைகள், தொடர்பு சாதனங்களில் காண்பிக்கப்படும் மது விளம்பரங்கள், மதுப் பிரியர்களுடனான பழைய நட்பு, சில சமூகப் பிரபலங்களின் பிழையான முன்மாதிரி என்பன அவற்றுள் சிலவாகும்.

தற்காலத்தில் மதுவுக்கு அடிமையாவதற்கும், மீளவும் மதுவை நாடிச் செல்வதற்கும் மூன்று சமூக-கலாசார காரணிகள் இருப்ப தாக Walton, Kesel ஆகியோர் வலியுறுத்துகின்றனர். ஊக்கிகள், சந்தர்ப்பங்கள், முன்மாதிரி என்பனவே அம்மூன்றும் ஆகும். உயர்ந்த வருமானமும் செல்வச் செழிப்பும் பாரிய வெறுமை நிலையும் காணப்படுகின்ற இன்றைய சமூக அமைப்பு மதுப் பயன்பாட்டுக்கான பாரிய சந்தர்ப்பத்தை வழங்குவதாக இவ்விரு வரும் கருதுகின்றனர். அதாவது நல்ல பண்பாட்டு ஊக்கியும் சிறந்த மாற்றீடுகளும் இன்றி, பணமும் ஓய்வும் தாராளமாக இருக்கும் போது அது மதுப்பாவனையை தூண்டும் என்பது இவர்களது கருத்தாகும். ஆனால் குறித்த சூழலில் மது காணப் படும் போதுதான் மது அருந்துவதற்கான தூண்டல் ஏற்படுகின் றது. சுற்றுச் சூழலில் மது அருந்தும் வாய்ப்பு அதிகமாக இருக்கும் போதெல்லாம் குடிப்பதற்கான தூண்டலும் அதிகமாக காணப் படும். அந்த வகையில், -இவ்விரு அறிஞர்களும் கூறுவது போன்று- மதுவுடன் தொடர்பான தொழில் துறைகளில் உள் ளோரே மதுவுக்கு அதிகமாக அடிமையாகின்றார்கள். மதுபானக் கடைகளிலும் மதுபான உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் பணி புரிவோர், மதுப் புழக்கமுள்ள இடங்களில் நிகழும் கூட்டங்களில் அடிக்கடி கலந்து கொள்ளும் வியாபாரிகள், இராணுவ வீரர்கள் போன்றவர்களிடையே மதுப்பாவனையின் விகிதாசாரம் அதிக மாக உள்ளது. மதுப்பாவனையில் முன்னணியிலுள்ள நாடுகள் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றன. அங்கு பகிரங்கமாக மது உற்பத்தி செய்யப்படுகிறது. ஏற்றுமதியும் செய்யப்படுகின்றது.

உதாரணமாக ஸ்கொட்லாந்தை எடுத்தால் பக்கத்திலுள்ள இங்கிலாந்தை விட மது அருந்துபவர்களின் விகிதாசாரம் அங்கு மிக அதிகமாகும்.[28]

மதுவும் போதைப் பொருளும் இலகுவாக கிடைக்கக் கூடிய வகையில் காணப்படுவது ஆபத்தானது என்பதை அண்மைய சில ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. வைத்தியர்கள், உளவியல் மருத்துவர்கள், தாதிகள் முதலானோருக்கு மத்தியில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகும் நிலை அதிகளவில் காணப்படுவதாக இவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் News Week சஞ்சிகையானது உளவியல் மருத்துவரான Dr. Morrison என்பவரது துணையுடன் இந்த ஆய்வுகளை முழுமையானதொரு கட்டுரையாக சுருக்கி வெளியிட்டது. இம்மருத்துவர் கூட மதுவுக்கு அடிமையாக இருந்து பின்னர் குணமாகியவர். கட்டுரைக்கு அவர் இட்டிருந்த வேடிக்கையான தலைப்பு Docs in need of Detox என்பதாகும். ''மருத்துவர்கள் போதைப்பொருட்களின் நச்சிலிருந்து சுத்தப் படுத்தப்பட வேண்டும்'' என்பது இதன் பொருள்.[29]

உண்மையில், வைத்தியர்களும் அவர்களோடு பணியாற்றுவோரும்தான் போதை மருந்துகளுடன் அதிகமாக தொடர்புபடுகின்றார்கள். அவர்கள் நோயாளிகளுக்குரிய மருந்துச் சீட்டை எழுதுவதன் மூலமாக இலகுவாக இம்மருந்துகளை பெற்றுக் கொள்கின்றார்கள். சில அபாயகரமான போதை மாத்திரைகள் கஷ்டப்படாமலே இவர்களுக்கு கிடைக்கின்றன. இத்தகைய மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்களது கவர்ச்சியான விளம்பரங்களும் அன்பளிப்புகளும் இவர்களது மருத்துவ நிலையங்களுக்கு அன்பளிப்புகளாகவே வந்து விடுகின்றன.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வைத்தியர்கள் மத்தியில் பரவியுள்ள போதைப்பொருள் பாவனை பற்றிய உண்மை பல வருடங்களாக மறைக்கப்பட்டிருந்தது. அவர்களது உயர் அந்தஸ்து காரணமாகவே அது மறைக்கப்பட்டிருந்தது என News Week குறிப்பிடுகின்றது. அவர்கள் ஏனையோரை விட தமது மானத்தை

மறைத்துக் கொள்ள சக்தி பெற்றிருந்ததாலும், தமது பலவீனங் களை இலகுவில் ஒப்புக் கொள்ளாததாலுமே இவ்வாறு அது மறைக்கப்பட்டிருந்தது. அனேகமான நவீன சமூகங்களில் அவர் கள் தனித்துவமான வர்க்கத்தினராகவே நோக்கப் படுகின்றனர்.

News Week இதுபற்றி தொடர்ந்து இப்படிக் கூறுகிறது: மருத் துவப் பணியின் தன்மை காரணமாக அவர்களிடம் ஒருவித மேலாண்மை உணர்வு ஏற்பட்டு விடுகிறது. மக்களது மிகப் பெறு மதியான செல்வமாகிய ஆரோக்கியம் தமது கைப்பிடிக்குள் இருப்பதாக அவர்கள் உணர்வதாலேயே இந்நிலை தோன்றுகிறது. இதன் காரணமாக போதைக்கு அடிமையான வைத்தியர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கென தனியான நிலையங்கள் அமெரிக்கா வில் உருவாக்கப்பட்டன. போதைக்கு அடிமைப்பட்ட பிற நோயாளிகளுடன் இம்மருத்துவர்களுக்கு சிகிச்சை வழங்கும் போது, அவர்கள் சிகிச்சை பெறுவோராக அன்றி சிகிச்சை வழங்குவோராக மாறிவிடுவதே இதற்கு காரணம்.

சிகிச்சை பெற மறுத்தல் என்ற இத்தோற்றப்பாடு குறித்து டாக்டர் Morrison கூறுவதாவது: வைத்தியர்கள் தங்களிடம் காணப்படும் இப்பிரச்சினையை தாங்களாகவே இனம் கண்டிருக் கிறார்கள். எனவேதான் அவர்கள் பல்கலைக்கழக மருத்துவத் துறைப் பட்டமான MD என்பதை ‘பெரு மறுப்பு’ என பொருள் படும் வகையில் Massive Denial என ஹாஷ்யமாக மாற்றிக் கொண்டார்கள்.

அமெரிக்காவில் 8 வைத்தியர்களில் ஒருவர் போதைக்கு அடி மைப்பட்டவராக அல்லது போதைப்பொருளை பயன்படுத்துப வராக இருக்கிறார். பலர் தமது போதைப்பொருள் பாவனையை ஒப்புக் கொள்வதில்லை என்ற வகையில், குறித்த விகிதாசாரத்தை விட அதிகளவில் இது காணப்படலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.[30]

மது மற்றும் போதைப்பொருட்களின் அபாயத்தை புரிந்து வைத்திருப்பது மாத்திரம் அவற்றை தவிர்ந்து கொள்ளப் போது

மானதல்ல; தவிர்ந்து கொள்வதற்கான தூண்டலும் இருக்க வேண்டும் என்று இவ்வாய்வு எமக்கு தெளிவாக உணர்த்துகின்றது.

தாராளமாக கிடைத்தல், ஊக்கிகள் என்பவற்றில் மட்டுமன்றி முன்மாதிரி என்ற அம்சத்திலும் Kesel உம் Walton உம் கவனம் செலுத்தியுள்ளனர். முன்மாதிரி என்பதில் பிரதான கூறாக அமைவது குடும்பம் ஆகும். Nylander(31) இது பற்றி குறிப்பிடும்போது, மதுவுக்கு அடிமையானவர்களின் பிள்ளைகள் ஏனையவர்களை விட அதிகமாக மதுவில் நாட்டம் கொள்வதாக தெரிவிக்கிறார். ஆயினும் முன்மாதிரிகளின் பாரிய தாக்கம் என்பது குடும்பம், சிறுபராயம் என்பவற்றுடன் மாத்திரம் சுருங்கியதன்று. வளர்ந்தவர்களும் தமது உள்ளங்களில் இடம்பிடித்திருக்கும் மனிதர்களை பின்பற்றுவதுண்டு. அந்த வகையில் அவர்களது மதுப் பழக்கத்தை இவர்களும் அப்படியே பின்பற்றலாம். இதற்கு மேலதிகமாக, வர்த்தக விளம்பரங்கள் பிரபலமான நடிகர்களையும் விளையாட்டு வீரர்ளையும் காண்பிக்கின்றன. அவர்கள் குடிக்கின்ற பானங்கள் அவர்களுக்கு உடல் வலிமையையும் பாலியல் கிளர்ச்சியையும் தருவதாக அவை நம்ப வைக்கின்றன. இது கட்டிளம் பருவத்தினரிடம் கவனிக்கத் தக்களவு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அந்த வகையில்,முன்பு மதுவுக்கு அடிமையாக இருந்து பின்பு உடல் ரீதியாக அதிலிருந்து விடுபடுபவர் மருத்துவமனையில் அல்லது சிகிச்சை நிலையத்தில் இடம்பெறுகின்ற சில உளவியல் சிகிச்சை அமர்வுகளில் கலந்து கொள்கிறார். பின்பு ஏலவே அவர் வாழ்ந்து கொண்டிருந்த சமூகத்துக்கு திரும்பி வருகிறார். அங்கு அவரை பழைய ஊக்கிகள் துரத்துகின்றன. தன்னைச் சூழ மது அருந்துவதற்கான பல சந்தர்ப்பங்களை தனது முன்மாதிரிகள் வாயிலாக காண்கிறார். இப்போது அவரிடம் மீண்டும் மது அருந்தும் ஆசை அதிகரிக்கிறது. வைத்தியசாலைச் சூழல் 'மது அருந்தாதே!' என்கிறது. வெளிச் சூழலோ மதுவை நோக்கி மிகப் பலமாக மீண்டும் அழைக்கிறது. இவ்வாறு அவர் சந்தர்ப்பம், முன்மாதிரி, ஊக்கி என்ற முத்தரப்பு அழுத்தத்திற்கு உட்படுகிறார்.

இந்த முரண்பாட்டின் காரணமாகத்தான் பலர் மீண்டும் மதுவை நாடிச் செல்கின்றனர். மதுப் பழக்கத்துக்கு இதய சுத்தியுடன் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களும் துறைசார் அறிஞர்களும் விரக்தியடைந்து, இம்முரண்பாட்டிலிருந்து விடுபடுவதற்கு வினோதமான தீர்வுகளை முன்வைப்பதும் இதனால்தான்.

சுவீடன் நாட்டின் பிரபல உள மருத்துவரும் ஸ்டெக்ஹோமின் Karolinska நிறுவனத்தின் ஆய்வாளருமான Bejrot(32) இவ்வாறு கூறுகிறார்: ''மது மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு 'முன்மாதிரி' என்ற பிரதான ஊக்கி காரணமாய் அமைகிறது. இது அதிக தாக்கம் கொண்டதும் கூட. மது அருந்துவதிலிருந்து விடுபட்டவர்கள் மீண்டும் அதனை நாட காரணமும் இதுதான். துறைசார்ந்தவர்கள் நினைப்பதனைவிட அதிக தாக்கத்தை இது ஏற்படுத்துகிறது... போதைக்கு அடிமையாவது அம்மை நோயைப் போன்றது. இரண்டும் பரவக்கூடிய நோய்கள்தான். ஆனால் ஒன்று கிருமிகளால் பரவுகிறது; அடுத்தது முன்மாதிரியால் பரவுகிறது. எனவே போதைக்கு அடிமையானோர் மீண்டும் அதனை நோக்கிச் செல்லாமல் தடுக்கும் வகையில் போதைப் பொருளற்ற 'கிராமங்களில்' தங்க வைக்கப்பட வேண்டும். ஏனெனில் போதைப்பொருள் பாவனையில் முன்மாதிரி என்பது போதைப்பொருள் வியாபாரத்தையும் போதைப் பொருள் கடத்தலையும் விட பாரதூரமானது.

இஸ்லாம் மதுவை ஒட்டு மொத்தமாக தடுத்த போது இத்தகைய முரண்பாட்டு நிலையிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுத்தது என்பது தெளிவு. மக்கள் தனியாகவோ சமூகமாகவோ மீண்டும் மதுவை நோக்கிச் செல்லாத வகையிலான நடவடிக்கையாக அது அமைந்திருந்தது. மது சபிக்கப்பட்டதுடன் அதனை அருந்துபவர், உற்பத்தி செய்பவர், வாங்குபவர், விற்பவர், எடுத்துச் செல்பவர் அனைவரும் சபிக்கப்பட்டனர். இதன் மூலம் மது அருந்துவதற்கான சந்தர்ப்பம், ஊக்கி, முன்மாதிரி முதலிய அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. அதன் பிறகு மதுத் தாகம் கொண்டோர் போய் வாங்கு

வதற்கு தெரு முனையில் மதுக்கடை இருக்கவில்லை. சமூகப் பிரமுகர்கள் சேர்ந்திருந்து மது அருந்தும் நிகழ்வுகள் இடம் பெறவில்லை. மாலை நேர விழாக்களில் ஒரு கோப்பை மது அருந்துமாறு தூண்டவும் எவருமில்லை.

6. 'நன்மையை ஏவி தீமையை விலக்குதல்' மூலமாக மதுவை மீண்டும் நாடாமல் தடுத்தல்.

மது தடுக்கப்பட்டதன் பின்னர் மதீனத்து சமூகத்தில் பெரும்பான்மையினர் ஈமானிய உயிரோட்டத்தை அனுபவித்தனர் என்று ஏற்கனவே நாம் நோக்கினோம். மதுவிலிருந்து அவர்களை விடுவித்து சீரமைப்பதற்கு சட்டங்கள் மூலம் பயமுறுத்தவோ, சமூக அழுத்தங்களை பிரயோகிக்கவோ வேண்டிய தேவை இருக்கவில்லை. மதுவில் திளைத்திருப்பவரைக் கண்டால் மக்கள் தூர விலகிச் சென்றனர். மதுவை சிலையாக வணங்கும் ஒருவ ராகவே அவரைநோக்கினர். சிறுநீர், பன்றி போன்ற அசுத்தங்களுள் ஒன்றாக மதுவையும் அவர்கள் கருதினர்.

ஆயினும் அந்த சமூகத்தில் இன்னும் பலப்படுத்தப்பட வேண் டிய நிலையில் ஒரு தொகை சராசரி விசுவாசிகளும் இருந்தனர். மதுவின் பிடியிலிருந்து விடுபட்ட அவர்களை இன்னும் உறுதிப் படுத்த வேண்டிய தேவை இருந்தது. இந்த உறுதியை அவர்கள் நபியவர்களைச் சுற்றியிருந்த முஹாஜிர்களதும் அன்சாரிகளதும் முன்மாதிரியில் கண்டு கொண்டனர். அந்த முன்மாதிரி ஒரு வகை யில் நன்மையை ஏவுவதாகவும் தீமையை தடுப்பதாகவும் அமைந்திருந்தது.

மதீனாவுக்கு நாட்டுப்புற அறபிகள் வந்து போகக்கூடியவர் களாக இருந்தார்கள். அல்லாஹ் அவனது தூதருக்கு அருளிய சட்டங்கள் பற்றி அறியாதவர்களாக அவர்கள் இருந்தனர். அங்கு நயவஞ்சகர்களும் மடையர்களும் கூட இருந்தனர். இறை நிரா கரிப்பிலும் நயவஞ்சகத்திலும் எல்லை மீறிச் சென்றோரும் காணப் பட்டனர். அவர்கள் தமது வாய்களால் முஃமின்களை திருப்திப் படுத்துவார்கள்; உள்ளத்தால் மாறுசெய்வார்கள். அவர்கள் ஜாஹி

லிய்ய சமூகத்தில் தாம் பெற்றிருந்த செல்வத்தையும் அந்தஸ் தையும் மீளப்பெறுவதற்காக தமது யூதக் கூட்டணியுடன் இணைந்து சதிசெய்து கொண்டிருந்தார்கள். மதுவை காய்ச்சி அல் லது இறக்குமதி செய்து விற்பனை செய்கின்ற மது வியாபாரி களும் அவர்களோடு இருந்தார்கள். தாம் இழந்த செல்வங்களை மீளவும் பெற வேண்டும் என்பதற்காக முஸ்லிம் சமூகம் மீண்டும் மதுவை நாடிச் செல்ல வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

இத்தகையோருக்கு நல்ல முன்மாதிரிகளும் அழகான உபதேசங் களும் மாத்திரம் போதுமாக இருக்கவில்லை. அவர்களுக்கு மத்தி யில் வாழ்ந்தஇறைத்தூதரை விட மகத்தான முன்மாதிரி இருக்க முடியுமா? காலையிலும் மாலையிலும் அவர்களுக்கு ஓதிக் காண் பிக்கப்பட்ட அல்லாஹ்வின் வசனங்களை விட உள்ளத்தில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வசனங்கள் இருக்க முடியுமா?

இத்தகைய மனிதர்கள் அனைத்து சமூகங்களிலும் இருப்பார் கள். இத்தகையவர்களை தடுத்து நிறுத்த வேண்டுமானால் நன் மைகள் தீர்க்கமான முறையில் ஏவப்படல் வேண்டும். தீமை களும் அத்துமீறல்களும் தடுக்கப்படல் வேண்டும். கட்டுக்கோப் பான, கட்டுப்பாடான முஸ்லிம் சமூகத்தின் மூலம் இது முன் னெடுக்கப்பட வேண்டும். அங்கு கட்டுப்படுபவர்கள் கண்ணியம் பெறுவார்கள்; பாவம் செய்பவர்கள் இழிவடைவார்கள்; அத்து மீறுபவர்கள் தடுத்து நிறுத்தப்படுவார்கள்.

அழகான தீர்வுகளை முன்வைப்பதன் மூலமாக மாத்திரம் மது என்ற அரக்கனை ஒழித்துக் கட்ட முடியாது என்பதனை நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்துவதனை ஏலவே நாம் நோக்கினோம். அதேபோன்று மதுவின்பால் மீள்வதனை தடுக்க வேண்டு மாயின், மது உற்பத்தியாகும் மூலங்களும், மது விற்பனையும், அதற்கான விளம்பரமும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது இங்கு உறுதியாகின்றது.

இந்த விடயத்தில் இஸ்லாம் முந்திக் கொண்டது. மது மொத்த மாக தடை செய்யப்பட்டதன் பின்னர் மருத்துவ நோக்கிலோ அல்லது வேறெந்த நோக்கிலோ மதுவை சிறிய அளவிலேனும்

பயன் படுத்துவதற்கான அத்தனை முனைவுகளையும் நபி (ஸல்) அவர்கள் நிராகரித்து விட்டார்கள். இது குறித்து அன்னாரது பதில் மிகத் தெளிவாக அமைந்திருந்தது:''அதிகமாகப் பயன்படுத்து வது போதையை ஏற்படுத்துமாக இருந்தால் அதனை கொஞ்சமாக பயன்படுத்துவதும் ஹராமாகும்''.[33] ''நிச்சயமாக அல்லாஹ் உங்க ளுக்குத் தடுத்த விடயங்களில் நிவாரணத்தை வைக்கவில்லை''.[34] ''நிச்சயமாக அது நோயே அன்றி மருந்தல்ல''.[35] ''யார் அல்லாஹ் வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் மது அருந்தாமல் இருக்கட்டும்; யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பு கிறாரோ அவர் மது பரிமாறப்படும் மேசைகளில் அமராதிருக் கட்டும்''.[36]

இஸ்லாத்தின் தூதர் சொன்ன விடயத்தை நவீன மருத்துவமும் உறுதிப்படுத்துகின்றது. மதுவின் மருத்துவ பயன்கள் என்று கூறப் படுபவை அடிப்படையற்ற கருத்துகளாகும். மாற்றமாக மது நோயையே அதிகப்படுத்துகிறது. குளிரிலிருந்து உடம்பை பாது காக்கும் நோக்கில் உடலை சூடேற்றுவதற்காக மது அருந்துவதும் போலியானதாகும். தோலின் கீழால் இரத்த ஓட்டத்தை அதி கரிக்கச் செய்வதன் மூலமாக ஆரம்பத்தில் சூடேற்றுவது போன்ற போலியான உணர்வை மது ஏற்படுத்துகிறது. ஆனால் இந்த போலியான சூடு அவசரமாகவே மறைந்து விடுகிறது. மதுவை அருந்துபவர் அதன் பின்னர் கடுமையான குளிரை உணர்வார். அதனால் அவர் நினைத்தும் பார்க்காத அபாயங்கள் அவருக்கு ஏற்படலாம்.

மதுப்பாவனையின் காரணமாக ஏற்படக்கூடிய மருத்துவ, சமூக, சட்ட பிரச்சினைகளை சர்வதேச சுகாதார நிறுவனத்தின் வெளி யீடுகளில் வில்ஷ், கிரான்ட் போன்ற அறிஞர்கள் பட்டியல் படுத்து கின்றார்கள். சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நூற்றுக் கணக்கான பரிசோதனை மற்றும் கள ஆய்வுகளை அவர்கள் இப்பட்டியலில் சுருக்கி தருகின்றார்கள். அவர்கள் கூறிய சில முக்கிய விடயங்களை கீழே நோக்குவோம்:

மதுப் பாவனையால் ஏற்படக்கூடிய மருத்துவ பிரச்சினைகள்

வாய், தொண்டை, உணவுக் குழல் புற்றுநோய், அஜீரண கோளாறுகள், குடற் புண் (ulcer), குடல் இரத்தப் பெருக்கு, நீரிழிவு, பாலியல் வீரியமின்மை[37] நாட்பட்ட தசை நார் சிதைவு, இதய நோய், புற நரம்பு வீக்கம், மனநோய், மூளைச் சிதைவு, மறதி, கல்லீரல் கொழுப்பு, கல்லீரல் வீக்கம், கல்லீரல் அழற்சி, ஈரல் புற்றுநோய், கீல்வாதம், வலிப்பு, மன அழுத்தம், பயம், பிதற்றல், நடுக்கம், மயக்கம், மதுப்பித்து, நஞ்சாதல், தற்கொலை முயற்சிகள்...[38]

சமூகப் பிரச்சினைகள்

சமூகத்தை விட்டு ஒதுங்குதல், வன்முறை நடத்தைகள், எதிர் மறை நடத்தைகள், குடும்ப உறுப்பினர்கள் மீது வன்முறையை பிரயோகித்தல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள், பிள்ளை களை கவனிக்காதிருத்தல், வீட்டிலும் தொழிற்சாலையிலும் அலு வலகத்திலும் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், வேலைக்கு செல்லா திருத்தல், வேலையிலிருந்து விலக்கப்படல்...

சட்ட ரீதியான பிரச்சினைகள்

வாகன விபத்துகள், பெருந்தெருக்கள் தொடர்பான விதிகளை மீறுதல், மது அருந்துவதால் செய்யக்கூடிய குற்றச் செயல்கள், கொள்ளையடித்தல், திருட்டு, சொத்துக்களுக்கு சேதம் விளை வித்தல், மோசடி, ஏமாற்றுதல், கொலை, அடுத்தவர்கள் மீது அத்துமீறல்.[39]

ஆக- மதுவை பயன்படுத்துவதும் அதற்கு அடிமையாவதும் உடலின் எந்த பாகத்தையும் நோயின்றி விட்டு வைக்காது. மனதை யும் அறிவையும் அது கோளாறுகளுக்கு உட்படுத்தும். இதனால் உடல் சமநிலை இழக்கும். மனச்சாட்சி செத்துப் போகும். பண்பாடும் ஒழுக்கமும் வீழ்ச்சியடையும். இத்தகைய மதுவை விட கொடிய நோயொன்று இருக்க முடியுமா?

இப்படித்தான் நவீன விஞ்ஞானம் ஹதீஸ்களை உண்மைப் படுத்துகிறது. மது ஒரு நோயே அன்றி மருந்தல்ல என்பதனை அது நிரூபிக்கிறது. மதுவைச் சார்ந்து முன்வைக்கப்படுகின்ற புதிய-பழைய சிகிச்சைகளும் தர்க்கங்களும் போலியானவை என்பதனையும் உறுதிப்படுத்துகிறது. நவீன உளவியல் மருத்துவ நிபுணர் ஒருவர் இதுபற்றி கூறும்போது, ''உலகளாவிய ரீதியில் பரிமாறுவதற்கு சலுகை வழங்கப்பட்ட ஒரேயொரு நச்சுப் பதார்த்தம் அல்கஹோல் மாத்திரமே!'' என்கிறார்.[40]

இவ்வகையில், மதுவை தவிர்ந்து கொள்ளுமாறு ஏவுவதும், அதனை அருந்துவதையும் விற்பதையும் தடுப்பதும், அது விடயத்தில் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளாதிருப்பதும் தீர்க்கமான இறை கட்டளைகளாகும். இவையின்றி தெய்வீக வழிகாட்டல் நிலை பெறாது. ''நன்மையை ஏவி தீமையை தடுத்து நல்லவற்றின்பால் அழைப்பு விடுக்கக் கூடிய ஒரு சாரார் உங்களில் இருக்கட்டும். அவர்கள்தான் வெற்றியாளர்கள்''. (ஆல இம்ரான்: 104)

பூமியில் அதிகாரம் பெற்ற ஓர் அரசு உருவாவதன் மூலமாகத் தான் இப்பொறுப்பு நிறைவேற்றப்பட முடியும். அந்த அரசு மதுவைவிட்டு விடவும் அதிலிருந்து பாவ மீட்சி பெறவும் மக்களை தூண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான அன்பு நிறைந்த நல்லதொரு சூழலை தயார்படுத்தித் தரும். நன்மையை தீமையாகவும் தீமையை நன்மையாகவும் கருதி, வழிபிறழ்ந்து, அத்துமீறுவோரை அது அச்சுறுத்தும். சகோதரத்துவத்தினால் பிணைந்து, அல்லாஹ்வின் கயிற்றை பலமாக பற்றிப் பிடித்து, நன்மைக்கும் இறையச்சத்துக்கும் பரஸ்பரம் ஒத்துழைக்கின்ற முஸ்லிம் சமூகத்துடன் இணைந்தே இப்பணியை அது மேற்கொள்ளும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் இத்தகைய பரஸ்பர ஒத்துழைப்பை தெளிவாகவே தூண்டியுள்ளார்கள்:

''எனது உயிர் எவனது கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நன்மையை ஏவுங்கள்; தீமையை தடுங்கள். இல்லாத போது அல்லாஹ் அவனது தண்டனையை உங்கள் மீது அனுப்புவான். பின்னர் நீங்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவீர்கள். ஆயினும் அதனை அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான்''.[41]

''நீங்கள் ஒரு தீமையைக் கண்டால் அதனை கரங்களால் மாற்றி யமையுங்கள். அது முடியாதபோது நாவினால் மாற்றுங்கள். அதுவும் முடியாதபோது உள்ளத்தால் அதனை வெறுத்து விடுங் கள். இதுவே ஈமானில் மிகப் பலவீனமான நிலையாகும்''.[42]

அப்படியாயின் மதுவை பயன்படுத்துபவர்கள் விடயத்திலும், மதுவை களைந்த பிறகு மீண்டும் அதனை நாடிச் செல்பவர்கள் விடயத்திலும் அசிரத்தையாக இருக்க முடியாது. வீதிகளில் தள் ளாடித் திரியும் மோசமான முன்மாதிரிகளுக்கு இடமளிக்கப் படலாகாது. அந்த வகையில், மதுவை விலக்கி அதன் தீமைகளை ஒழிப்பதற்கான ஒட்டுமொத்த சமுதாயத் தீர்மானத்துக்கு முரணாக செயற்படுவோரை தடுத்து நிறுத்த அரசும் சமூகமும் ஒன்றுபட்டு உழைப்பது அவசியம். தனிமனித சுதந்திம் என்ற பெயரிலோ அல்லது வேறொரு பெயரிலோ இதில் அசிரத்தை காண்பிக்கப் படுமாயின் துஷ்டர்களின் துணிச்சல் அதிகரித்து விடும். மீண்டும் மதுவை நாடிச்செல்வதற்கான பாதையையும் கொஞ்சம் கொஞ்ச மாக திறந்து விடும். இறுதியில் சமூகம் முற்றாக தடம்புரண்டு, மதுக் கடலில் மூழ்கி, அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகி விடும். அடிப்பாகத்தில் ஓட்டை விழுந்த கப்பலின் கதையாக அது ஆகி விடும்.

இந்த உதாரணத்தை நபியவர்களே கூறியுள்ளார்கள். காலம் -இடம் என்ற பெருங்கடலில் பயணிக்கும் இஸ்லாமிய சமூகம் என்ற கப்பலை பாதுகாப்பதற்கு தீமை தடுக்கப்படுவது அவசியம் என்பதை அன்னார்கூறிய மகத்தான உதாரணம் தெளிவு படுத்து கிறது:

''அல்லாஹ்வின் வரையறைகளை பேணுவோருக்கும் அதனை மீறுவோருக்குமான உதாரணம், ஒரு கப்பலில் செல்லும் பயணி களாவர். அவர்களுள் சிலர் கப்பலின் மேல் தட்டிலும் மற்றும் சிலர் கீழ் தட்டிலும் இருக்கின்றார்கள். கீழ் தட்டிலுள்ளோருக்கு நீர் தேவை ஏற்பட்டால் மேல் மாடிக்குச் சென்றே எடுக்க வேண்டி யிருந்தது. எனவே கீழ் தட்டில் உள்ளோர், 'நாம் கப்பலின் அடியில் ஒரு துளையை இட்டுக் கொண்டால் மேலுள்ளவர்களுக்கு

தொல்லை கொடுக்க வேண்டி ஏற்படாது' என பேசிக் கொள் கின்றனர். மேல் தட்டில் இருப்போர் இவர்களை விருப்பப்படி செயற்பட விட்டுவிடுவார்களானால், அனைவரும் அழிந்து விடுவர்; தடுப்பார்களானால் அனைவரும் தப்பி விடுவர்''.[43] இன்னொரு அறிவிப்பில், ''கீழ் தட்டிலுள்ள ஒருவர், இது எனது இடம் நான் நினைத்ததை செய்வேன்...'' என்று கூறுவதாகவும் வந்துள்ளது. தனிமனித சுதந்திரத்திற்கு புனிதத் தன்மை கொடுக் கின்ற இன்றைய பாஷை போன்றே இக்கூற்று அமைந்துள்ளது.

எனவேதான் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் சமூகத்தை எச்சரித்தார்கள். இஸ்ரவேலர்கள் பற்றி அன்னார் இவ்வாறு கூறி னார்கள்: ''இஸ்ரவேலர்கள் பாவச் செயல்களில் வீழ்ந்தபோது அவற்றை விட்டு விடுமாறு அவர்களது அறிஞர்கள் தடுத்தார்கள். ஆனாலும் அவர்கள் விடவில்லை. பின்னர் அவ்வறிஞர்கள் அந்த மக்களோடு அமரலானார்கள்; அவர்களோடு உண்டு பருகலா னார்கள். எனவே அல்லாஹ் அவர்களது உள்ளங்களில் பரஸ்பர பகைமையை ஏற்படுத்தினான். தாவூத் (அலை), ஸுலைமான் (அலை), ஈஸா இப்னு மர்யம் (அலை) ஆகியோரின் வாய் வழி யாக அவர்களை சபித்தான்''. அது வரை சாய்ந்திருந்த நபி (ஸல்) அவர்கள் பின்னர் எழுந்தமர்ந்து கொண்டு இவ்வாறு கூறினார் கள்: ''எனது உயிர் எவன் வசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! சத்தியத்தின் மீது நிலை நிறுத்தும் வரை அவர்களை நீங்கள் தடுத்துக் கொண்டிருங்கள்...''[44]

நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்ற விடயத்தை உணர் வுடன் நடைமுறைப்படுத்திய காரணத்தினால்தான் அன்றிருந்த சமூகம் சிறந்த சமூகமாக சித்தரிக்கப்பட்டது. ''மனித சமூகத்திற் காக தோன்றிய சமூகங்களில் சிறந்த சமூகத்தினர் நீங்கள்தான். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள்; தீமையை தடுக்கின்றீர்கள்; அல்லாஹ்வின் மீது விசுவாசமும் கொள்கின்றீர்கள்''. (ஆல இம்ரான்: 110)

7. தண்டனையை அமுல்படுத்துவதன் மூலமாக மதுவை நாடிச் செல்லாமல் தடுத்தல்

நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல், முன்மாதிரிகளை ஏற்படுத்தல், நாவினால் தடுத்தல், சமூக- உளவியல் அழுத்தங்களை பிரயோகித்தல் என்பன எத்துணை பலமாகவும் அழுத்தமாகவும் வினைமையாகவும் அமைந்திருந்தாலும், சமூகத்திலுள்ள அனைத்து தனிமனிதர்களையும் அவை கட்டுப்படுத்துவதில்லை. இவ்வுண்மை சிறந்த நூற்றாண்டில் வாழ்ந்த மதீனத்து சமூகத்துக்கும் பொருந்தும். புறநடையான சிலர் சமூகத்தில் எப்போதும் காணப்படலாம். அவர்கள் இரகசியமான வழிகளில் மதுவைப் பெற்று, அரசினதும் சமூகத்தினதும் கண்ணில் படாமல் அருந்தவும் கூடும். இத்தகையோருக்காகவே இஸ்லாம் உடல்-உள ரீதியான தண்டனைகளை விதியாக்கியது.

மதுவுக்கு அடிமையாதல் என்ற அதல பாதாளத்தில் அவர்கள் விழுந்து விடக் கூடாது என்ற அனுதாபத்தினால்தான் இத்தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன. பிறழ்வுகளிலிருந்து முழு சமூகமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது இத்தண்டனைகளின் பின்னாலுள்ள மற்றொரு நோக்கமாகும். பெரும் பாவங்களையும் குற்றங்களையும் செய்வோருக்கு இஸ்லாம் விதியாக்கிய இத்தகைய தண்டனைகள் மனித நலன்களையும் வாழ்வையும் ஈருலக சுபீட்சத்தையும் பாதுகாக்கின்ற மிகப் பெரிய சட்ட ஏற்பாடுகளாக உள்ளன.

''சிந்தனை செய்பவர்களே! பழிக்குப் பழி வாங்குவதில் உங்களுக்கு ஒரு வாழ்வு இருக்கிறது. நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்ச மாட்டீர்களா?'' (அல்-பகறா: 179)

''பூமியில் நிறைவேற்றப்படும் ஒரு தண்டனை பூமியில் உள்ளவர்களுக்கு நாற்பது நாட்கள் காலை வேளையில் மழை பொழிவதை விட சிறந்தது.''(45)

ஒரு சிறந்த முஸ்லிம் தலைவர் அல்லாஹ்வின் மார்க்க விடயத்தில் தயவு தாட்சண்யமின்றி தண்டனைகளை அமுல்படுத்தும்

போது அவர் கடும் போக்காளராக தோன்றலாம். ஆனால் அவர் முஸ்லிம்கள் மீது அருள் கூர்ந்தும், அவர்களுக்கு நன்மை நாடியும், அவர்களுக்கு தீங்குகள் நேராமல் தடுக்கவும் அந்த தண்டனை களை வழங்குகிறாரே தவிர பெருமைக்காகவோ வஞ்சம் தீர்க்கவோ அல்ல. கீழ்ப்படியாத மகனை தந்தை தண்டிப்பது போன்றதே இதுவும். நோயாளிக்கு மருத்துவர் மேற்கொள்ளும் சிகிச்சையும் இத்தகையதே. இச்சிகிச்சை சிலபோது நோயாளியின் உடலுறுப்பு ஒன்றை வெட்டி அகற்றுவதாக கூட அமையலாம். இவ்வாறான நடவடிக்கைகள் அறிவிலிகளுக்கு கடுமையாகவும் வன்முறையாகவும் தோன்றலாம். ஆனால் இவற்றில் இருப்ப தெல்லாம் நன்மையும் அருளுமே என்பதை நல்லறிவும் தெளிந்த பார்வையும் கொண்டோர் புரிந்து கொள்வர்.

மார்க்கத்தையும் மக்களது உரிமைகளையும் பாதுகாப்பதில் தண்டனைகள் வகிக்கும் பாத்திரம் குறித்து இமாம் மாவர்தி ஆழமான பகுப்பாய்வொன்றை செய்கிறார். அவர் கூறுவதாவது:

''அநீதியை தடுக்கும் காரணியாக அமைபவை நான்கு அம்சங் கள் மட்டுமே. அவை: பகுத்தறிவு, மதம், அதிகாரம், இயலாமை என்பனவாகும். இவற்றுக்கு அப்பால் ஐந்தாவதாக எதுவுமில்லை என்பதை நுணுக்கமாக நோக்கினால் புரிந்துகொள்ள முடியும். இவற்றுள் அதிக தாக்கம் உடையது அதிகாரமே. ஏனெனில் பகுத் தறிவும் மதமும் ஒடுக்குதலுக்கு உட்படக் கூடியவை அல்லது மனோஇச்சையால் தோற்கடிக்கப்படக் கூடியவை. ஆனால் அதி கார பயம் மிகப் பலமான தடுப்பு சக்தியாக நிற்கக் கூடியது... ''நிச்சயமாக அல்லாஹ் அல்-குர்ஆன் மூலமாக சாதிப்பதை விட அதிகமாக அதிகாரத்தின் மூலமாக சாதிக்கிறான்'' என்பது பிர பலமானதொரு கூற்றாகும். அதிகாரமே மனோ இச்சைகளிலி ருந்தும் திரிபுகளிலிருந்தும் மதத்தை பாதுகாக்கிறது. மார்க்கத் திலிருந்து தடம்புரள்வோரையும், பிடிவாதத்தினால் அதில் அத்து மீறுவோரையும், குழப்பம் விளைவிக்க முயல்வோரையும் இந்த அதிகாரமே தடுத்து நிறுத்துகிறது. பலமான அதிகாரத்தினாலும் நிறைவான கண்காணிப்பினாலும் இவ்விவகாரங்கள் தீர்க்கமாக

அணுகப்படாவிட்டால் மனோஇச்சையாளர்களது திரிபுகள் விரைவாகவே மதத்தினுள் நுழைந்து விடும். மதம் அதிகாரத்தை இழந்து விட்டால், அதன் சட்டங்கள் மாற்றப்பட்டு விடும் அடையாளங்கள் அழிக்கப்பட்டு விடும்''.(46)

8. வரையறுக்கப்பட்ட 'அல்-ஹத்' தண்டனைக்கும் நீதிபதி வழங்கும் 'தஃஸீர்' தண்டனைக்கும் இடையில் மது அருந்தியவருக்கான தண்டனை.

மது அருந்துதல் என்ற குற்றத்தை செய்தவருக்கு கட்டாயம் தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்பதில் முஸ்லிம்களின் அனைத்து மத்ஹப்களும் ஏகோபித்த கருத்தை கொண்டுள்ளன. என்றாலும் இது வரையறுக்கப்பட்ட (ஹத்து) அடிப்படையில் இருக்க வேண்டுமா, அல்லது நீதிபதியின் (தஃஸீர்) தீர்மானத்தின் படி அமைய வேண்டுமா என்பதில் அபிப்பிராய முரண்பாடு நிலவுகிறது. 'ஹத்து' அடிப்படையில்தான் அது வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுபவர்கள் மத்தியில் கூட தண்டனையின் அளவு குறித்து முரண்பாடு காணப்படுகிறது. ஒரு சாரார் 40 கசையடி என்கிறார்கள். இன்னொரு சாரார் 80 கசையடி என்கிறார்கள். மது அருந்தியவருக்கு கசையடி வழங்குதல் அல்லது அடித்தல் என்ற விடயத்தில் அனைத்து ஸஹாபாக்களும் தாபிஈன்களும் உடன்படுகின்றார்கள். எண்ணிக்கையில்தான் முரண்படுகின்றார்கள். இதுதான் இவ்வாய்வில் எமக்கு முக்கியமானது.

மது அருந்தியவருக்கு 40 கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்ற இமாம் ஷாபிஈ (ரஹ்) போன்றவர்கள் அனஸ் (ரழி) அறிவிக்கின்ற இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பதிந்து வைத்துள்ள பின்வரும் ஸஹீஹான ஹதீஸை ஆதாரமாக எடுக்கிறார்கள்: ''மது அருந்தியவருக்கு நபியவர்கள் ஈச்சை மரப்பட்டையாலும், செருப்பினாலும் 40 முறை அடிப்பவர்களாக இருந்தார்கள்''. முஸ்லிமில் வரும் இன்னொரு அறிவிப்பில், ''மது அருந்தியவருக்கு அபூபக்ர் (ரழி) அவர்கள் 40 கசையடி கொடுப்பார்கள்'' என்று வருகிறது. உமர் (ரழி) யின் காலத்தில் சாம்ராஜ்யம் விசாலமடைந்தது. மக்கள் கிராமங்களில் இருந்து நகரத்தை

நோக்கி வந்தார்கள். அப்போது காலித் இப்னு வலீத் (ரழி) அவர்கள் உமர் (ரழி) அவர்களுக்கு, ''மக்கள் மதுவுக்கு அடிமையாகி உள்ளனர். தண்டனைகளையும் 'ஹத்'தையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை'' என்று கடிதம் எழுதினார். உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தை ஆரம்பமாக ஏற்றோரிடமும் முஹாஜிர்களிடமும் அது குறித்து ஆலோசனை கேட்டார்கள். அதன்படி 80 கசையடி வழங்குவதற்கு அவர்கள் அனைவரும் உடன்பட்டார்கள். அலி (ரழி) அவர்களது பின்வரும் பிரபலமான கூற்றும் இவ்விடயத்துடன் உடன்படுகிறது: ''ஒரு மனிதன் மது அருந்தினால் போதை ஏற்படும். போதை ஏற்பட்டால் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றை பேசுவான். பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றை அவன் பேசும்போது அவதூறையும் பேசிவிடுவான். அவதூறுக்கான தண்டனை 80 கசையடியாகும்.''[47]

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களும், 'ஹத்து' தண்டனை 40 கசையடிதான் என்று கூறுவோரும் இந்த அதிகரிப்பை இமாமின் கருத்தாக -அதாவது 'தஃஸீர்' ஆக- கருதுகின்றனர். அந்த வகையில், முதலில் வழங்கப்படும் 40 கசையடிகளே 'ஹத்து' தண்டனை என்றும், அவையே கட்டாயம் வழங்கப்பட வேண்டியவை என்றும் இவர்கள் கருதுகிறார்கள். மேலும், அலி (ரழி) அவர்களது கூற்றும், உமர் (ரழி) அவர்களது காலத்தில் 80 கசையடி என்று ஸஹாபாக்கள் உடன்பட்டதும் அவதூறுக்கான 'ஹத்து' தண்டனையை இணைத்ததனால் வந்தது என்றும், உமர் (ரழி) மரணித்த பிறகு அந்நடைமுறை கைவிடப்பட்டு 40 கசையடியே நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதற்கு ஆதாரமாக முஆவியா இப்னு ஹஸீன் இப்னுல் முன்திர் ஒரு ஹதீஸை அறிவிக்கிறார்: ''நான் உஸ்மான் இப்னு அப்பான் (ரழி) அவர்களுடன் இருந்தேன். அப்போது வலீத் இப்னு உக்பா கொண்டு வரப்பட்டார். அவருக்கு எதிராக ஹஜ்ரான் என்பவரும் இன்னொருவரும் சாட்சி சொன்னார்கள். அவர் மது அருந்துவதைக் கண்டதாக ஒருவரும் அவர் வாந்தி எடுப்பதைக் கண்டதாக அடுத்தவரும் குறிப்பிட்டார்கள். அவர் குடித்ததனால்

தான் வாந்தியெடுத்தார் என்று கூறிய உஸ்மான் (ரழி), 'ஹத்'தை நிறைவேற்றுமாறு அலி (ரழி) அவர்களுக்கு கூறினார். அப்துல் லாஹ் இப்னு அபூ ஜஃபர் அதனை நிறைவேற்றினார். அவர் அடிக்கத் தொடங்கினார். அலி (ரழி) அவர்கள் எண்ணினார்கள். கசையடி நாற்பதை அடைந்தபோது ''நிறுத்துங்கள். நபி (ஸல்) அவர்கள் நாற்பதுதான் அடித்தார்கள். அபூபக்ரும் நாற்பதுதான் அடித்தார். உமர் (ரழி) எண்பது கசையடி கொடுத்தார். அனைத்தும் நபிவழிதான். ஆயினும் இதுதான் (அதாவது 40 கசையடிதான்) எனக்கு விருப்பமானது'' அலி (ரழி) கூறினார்.[48]

மது அருந்துவதற்கான 'ஹத்து'தண்டனை 80 அடிகள்தான் என்று கருதக்கூடிய ஹனபி சட்ட மரபினரும், மாலிகி சட்ட மரபினரும் உமர் (ரழி) காலத்தில் எட்டப்பட்ட ஏகோபித்த முடிவை ஆதாரமாகக் கொள்கிறார்கள்.

மது அருந்துவதற்கான தண்டனை 'தஃஸீரே' அன்றி 'ஹத்து' அல்ல என்று கருதக் கூடியவர்கள் வேறு சில அறிவிப்புகளை சான்றாக கொள்கின்றனர். மது அருந்துவோருக்கு வரையறுத்த தண்டனையொன்று விதியாக்கப்படவில்லை என்று அவர்கள் கருதுகின்றனர். எனினும் பல அறிவிப்புகள் தண்டனை வரை யறுக்கப் பட்டுள்ளமையை காட்டுகின்றன. அத்தகையதொரு அறிவிப்பே அபூ ஹுரைரா (ரழி) அவர்களது பின்வரும் அறிவிப் பாகும்:

''மது அருந்திய ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். 'அவருக்கு அடியுங்கள்!' என்று கூறப்பட்டது. சிலர் கையாலும் வேறு சிலர் செருப்பாலும் இன்னும் சிலர் ஆடை யாலும் அடித்தார்கள். மக்கள் திரும்பிச் செல்லும்போது சிலர், 'அல்லாஹ் உன்னை இழிவுபடுத்தட்டும்!' என்று கூறினர். அதற்கு நபியவர்கள், ''அவ்வாறு கூற வேண்டாம். அவரது விட யத்தில் நீங்கள் ஷைத்தானுக்கு உதவ வேண்டாம். 'யா அல்லாஹ், அவருக்கு கருணை காட்டு! அவரது பாவத்தை மன்னித்து விடு!' என்று கூறுங்கள்[49] என உபதேசித்தார்கள்.

இன்னொரு அறிவிப்பில், அவருக்கு அடித்த பின்னர் நபி யவர்கள் தோழர்களை நோக்கி, ''இவரது செயலை கண்டித்துப் பேசுங்கள்!'' என கூறினார்கள். எனவே நாம் அவரைப் பார்த்து, ''நீர் அல்லாஹ்வுக்கு பயப்படவில்லையா? அல்லாஹ்வின் தூத ருக்கு முன்னால் உமக்கு வெட்கம் வரவில்லையா? எனக் கேட்டோம்.[50]

மற்றொரு அறிவிப்பின் படி, நபி (ஸல்) அவர்கள் மது அருந்தி யவரின் முகத்திலே மண்ணை வாரி விட்டார்கள்.[51]

தண்டனை 'தஃஸீர்'தான் என்று கூறுபவர்கள் கீழ்வரும் ஆதா ரத்தையும் முன்வைக்கிறார்கள்:

இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார்கள்: மது அருந்தி போதை ஏற்பட்ட ஒருவர் பாதையில் தள்ளாடிக் கொண்டிருப்பதை மக்கள் கண்டார்கள். நபியவர்களிடம் அவர் அழைத்து வரப்பட்டார். ஆயினும் வழியில் அப்பாஸின் வீட்டுக்கருகில் வந்ததும் தப்பிச் சென்ற அவர் அப்பாஸிடம் ஒட்டிக் கொண்டார். நபி (ஸல்) அவர் களிடம் அது பற்றி தெரிவிக்கப்பட்டதும் அன்னார் சிரித்து விட்டார்கள். 'அப்படியா செய்தார்?' எனக் கேட்ட அன்னார், அவர் தொடர்பாக வேறெதுவும் கூறவில்லை.[52]

இந்த ஹதீஸை வைத்து மதுவுக்கான தண்டனை 'தஃஸீர்' தான் எனக் கருதுவோர் (குறிப்பாக சமகால அறிஞர்கள்), போதைக்கான வரையறுக்கப்பட்ட 'ஹத்து' தண்டனை கடமை யல்ல என்றும் வரையறுக்கப்படாத தஃஸீர் தண்டனையே அதற்கு வழங்கப்பட வேண்டும் என்றும் முடிவுக்கு வந்தனர்.

வரையறுக்கப்பட்ட தண்டனைதான் அதற்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறுவோர் அடுத்த சாராருக்கு பின்வருமாறு சிறந்த முறையில் பதிலளிக்கின்றனர்:

'தஃஸீர்'தான் என்று கூறுவோர் ஆதாரமாக கொள்கின்ற (தண் டனையின் அளவு குறிப்பிடப்படாத) அறிவிப்புகள் ஏற்புடையன அல்ல. ஏனெனில் 40 கசையடிகள் என வரையறுத்துக் குறிப் பிடும் வேறு சில அறிவிப்புகள் ஆதாரபூர்வமாக வந்துள்ளன. பல

அறிவிப்புகளுக்கிடையில் முரண்பாடு காணப்பட்டால், -அவற்றுக் கிடையில் இணக்கம் காண முடியுமாயின்- இணக்கம் காண வேண்டும் என்பதும், அவற்றுள் எதனையும் ரத்துச் செய்யக் கூடாது என்பதும் அடிப்படையானதொரு விதியாகும்.[(53)] மது அருந்தியவருக்கான தண்டனையைப் பொறுத்தவரை, அது தொடர்பான அறிவிப்புகளுக்கிடையே உண்மையான முரண்பாடு எதுவும் கிடையாது. சில அறிவிப்புகளில் தண்டனையின் அளவு குறிப்பிடப்படவில்லை. மற்றும் சில அறிவிப்புகளில் அது நாற்பது கசையடி என வரையறுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. அபூ பக்ர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), அலி (ரழி) ஆகியோரின் வேறுபட்ட நடவடிக்கைகளும் இதனை உறுதி செய்கின்றன.

அப்பாஸ் (ரழி) யின் வீட்டில் நுழைந்து வெளியேறாமல் இருந்த நபர் தொடர்பான அறிவிப்பை ஆதாரமாகக் கொண்டு, நபியவர்கள் 'ஹத்து' தண்டனையை நிறைவேற்றவில்லை என்றோ, போதைக்கு வரையறுக்கப்பட்ட தண்டனை வழங்கு வது கடமையில்லை என்றோ, 'தஃஸீர்' முறையில் மாத்திரமே தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றோ கூறுவது ஏற்புடைய தல்ல. நபி (ஸல்) அவர்களின் முன்னால் குறித்த குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஷரீஆ சொல்லும் அடிப் படையில் அவரது குற்றம் நிரூபிக்கப்படவும் இல்லை. எனவே தான் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. மக்கள் சொன்னார் கள் என்பதற்காக ஒருவர் தண்டிக்கப்படமுடியாது. தலைவர் அதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சந்தேகத்தின் அடிப்படை யில் தண்டனை வழங்கப்படுவதை தடுப்பதற்கும் முஃமின் களின் மானத்தை மறைப்பதற்கும் இது அவசியமானதாகும்.

இவ்வாறுதான் உமர் (ரழி) அவர்கள் நாற்பதை எண்பதாக மாற்றினார்கள். எனவே இது தஃஸீர் தண்டனை என்று கூறுவது ஏற்புடையதன்று. தஃஸீர் தண்டனையாக இருப்பின் காலித் இப்னுல் வலீத் உமர் (ரழி) அவர்களுக்கு இதுபற்றி எழுதிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. உமர் (ரழி) அவர்களும் ஸஹாபாக்களோடு ஆலோசனை செய்ய வேண்டிய தேவை

இல்லை. குற்றம் செய்பவரை கண்டிப்பது தண்டனையின் நோக்கங்களில் ஒன்றாகும். அவர் மீண்டும் அந்த குற்றத்தின்பால் சென்று விடாத பிரகாரம் தண்டனை காணப்பட வேண்டும். தண்டனையின் இன்னொரு நோக்கம் பொதுவானது. அது மக்களுக்கான எச்சரிக்கையாகும். குறித்த பாவத்தை செய்தவருக்கு தண்டனை வழங்குவதன் மூலம் மக்கள் படிப்பினை பெற வேண்டும். இத்தகைய நோக்கங்கள் நிறைவேறாதபோது நீதிபதி தண்டனையை அதிகரிக்கலாம். உமர் (ரழி) இதனைத்தான் செய்தார். மக்களிடையே மதுப் பழக்கம் அதிகரித்தபோது மது அருந்துபவரது தலையை மொட்டை அடித்தார்; நாடு கடத்தினார். மதுவுக்கு அடிமையாயிருந்த சக்தியுள்ள இளைஞனுக்கு 80 கசையடியும், பலவீனனுக்கு 40 கசையடியும் வழங்கினார்.(54)

பெரும்பான்மை அறிஞர்கள் உடன்பட்ட பிற குற்றங்களுக்கான குறைந்த பட்ச ‘ஹத்து’ தண்டனைகளில் கூட கருத்து முரண்பாடுகளை காண்கிறோம். உதாரணமாக, விபச்சாரம் செய்தவருக்கான ‘ஹத்து’ தண்டனையை நிறைவேற்றிய பிறகு அவரை நாடு கடத்துவதும் குறித்த ‘ஹத்து’ தண்டனையினுள் அடங்குமா அல்லது அது மேலதிக தண்டனையா என்பதில் கருத்து முரண்பாடு நிலவுகிறது. அதேபோன்று, திருமணம் முடித்திருந்தும் விபச்சாரம் செய்தவரை கல்லெறித் தண்டனைக்கு உட்படுத்த முன்பு கசையடி கொடுப்பது அக்குற்றத்துக்கான ஹத்தின் ஒரு பகுதியா அல்லது தஃஸீரா என்திலும் அபிப்பிராய பேதம் நிலவுகிறது. எனினும் இந்த அற்ப முரண்பாடுகளை முன்னிறுத்தி விபச்சாரம் செய்தவருக்கான தண்டனை தஃஸீரே அன்றி ஹத்து அல்ல என்று எவரும் வாதிக்கவில்லை.

இந்த அனைத்தையும் வைத்து நோக்கும் போது, மது அருந்தியவருக்கான தண்டனை 40 கசையடிகளே என அறிஞர்கள் ஏகோபித்த நிலைப்பாட்டை கொண்டிருந்தார்கள் என்ற முடிவுக்கு நாம் வர முடிகிறது. அந்த வகையில், 80 கசையடிகள் என்பது தஃஸீர் அடிப்படையிலான தண்டனை என கூறலாம். அல்லது ஸஹாபாக்களின் ஏகோபித்த முடிவின் படி மது அருந்துவதற்கான தண்டனை 80 கசையடிகள் என்று கூறலாம்.

மது அருந்துபவருக்கு இஸ்லாம் உடல், உள ரீதியான தண் டனைகளை வழங்கியது. இது மதீனத்து சமூகத்தை மீண்டும் மதுவின்பால் சென்றுவிடாது பாதுகாத்தது. நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஏழு நபர்களுக்கு மட்டுமே ஹத்து தண்டனை நிறை வேற்றப்பட்டது.[55]

அக்கால முஸ்லிம்களிடம் காணப்பட்ட உயர்ந்த ஆன்மீகப் பெறுமானங்களாலும் பண்பாடுகளாலுமே இந்த மகத்தான வெற்றி கிடைக்கப் பெற்றது எனினும், இஸ்லாம் விதித்தஉடல் ரீதியான தண்டனைகள் தொடர்பான சமூக-உளவியல் ஆய்வுகள் மற்றோர் உண்மையையும் உறுதிப்படுத்துகின்றன. எல்லை மீறி மது அருந்துவோருக்கும் மதுவுக்கு அடிமைப்பட்டோருக்கும் சிகிச்சை அளிப்பதற்கு இன்றைய துறைசார் நிபுணர்களால் பயன் படுத்தப்படும் நவீன உள, சமூகவியல் அணுகுமுறைகளை விட இஸ்லாமிய சட்டவாக்கம் அதில் முந்திக் கொண்டு விட்டது என்பதே அந்த உண்மையாகும்.

மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதிலும் அவர் களுக்கு ஏற்படும் உள நெருக்கீடுகளை குறைப்பதிலும் உளவியல் அறிஞர்களும் துறைசார் நிபுணர்களும் நீண்ட பல வருடங்களாக பல்வேறு 'மனிதாபிமான' வழிமுறைகளை கையாண்டு வந்தனர். ஆயினும் அவை தோல்வியடைந்ததனால், வேதனை தரக்கூடிய தண்டனைச் சிகிச்சை முறையை அவர்கள் அமுல்படுத்த தொடங் கினர். அந்த வகையில், -ஏற்கனவே நாம் விளக்கியது போன்று- விரும்பி ஏற்கச் செய்தல் மற்றும் சமூக அழுத்தங்கள் என்பவற் றுக்கு மேலாக, மின்சார அதிர்ச்சி வைத்தியம், இரசாயனத் தாக்க வழிமுறைகள், உளவியல் தண்டனைகள் போன்றவற்றையும் சிகிச்சை முறைகளாக இவர்கள் இன்று பயன்படுத்தி வருகி றார்கள். முக்கியமான இவ்விடயம் குறித்து தனியான அத்தியாயம் ஒன்றில் நாம் கலந்துரையாடுவோம்.

அத்தியாயம்: 07

மது அருந்துவதற்கான இஸ்லாமிய தண்டனைக்கும் போதைக்கு அடிமையானோருக்கு வழங்கப் படும் நவீன உளவியல் சிகிச்சைக் கும் இடையிலான ஒப்பீட்டாய்வு.

உணர்வு, அறிவு, உடல் சார்ந்த பல நோய்களை உருவாக்கு வதில் உள்ளத்தின் செல்வாக்கு குறித்து பழைய இஸ்லாமிய அறிஞர்களும் வைத்தியர்களும் கண்டறிந்துள்ளார்கள். இமாம் இப்னு ஸீனா போன்றவர்கள் நவீன உள சிகிச்சை முறைகள் குறிப்பிடுகின்ற முறைமைகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். இன் றைய சொற்களை அவர்கள் பயன்படுத்தவில்லை ஆயினும் பலர் குணமாக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய மேற்குலகு இவ்வகை அறிவை சற்று தாமதித்தே பெற்றுக் கொண்டுள்ளது. சார்கோஜானே, புரோயர் போன்ற முன் னோடிகள் கடந்த நூற்றாண்டில் இது பற்றிக் கூறிய பின்னர்தான் மேற்குலகு உளவியல் காரணியின் முக்கியத்துவம் பற்றி கவனம்

செலுத்தியது. அவ்வாறே இந்த விடயத்தில் புரொய்டின் பங்களிப் புக்களுக்கும் பாரியதொரு பங்கு இருந்தது. உளவியல் பிரச்சினை களை இனங்காண்பதற்கும் அவற்றுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மான கோட்பாட்டு மற்றும் பிரயோக அடிப்படைகளை உரு வாக்குவதற்கு அவை பங்களிப்புச் செய்தன.

கடந்த காலங்களில் இப்படிக் கூறப்பட்ட போதிலும்,புரொய் டின் உளப்பகுப்பாய்வு தொடர்பான கருத்துக்கள் உளக் குழப்பங் களுக்கு சிகிச்சை செய்வதில் பாரியளவு தோல்வியைத் தழுவி யுள்ளன என்பதனை உளவியல் சிகிச்சை தொடர்பான நவீன பிரயோக அறிவும் ஆய்வுகளும் சுட்டி நிற்கின்றன. எனினும், பொதுவாக உள ரீதியான விடயங்களில் கவனம் செலுத்துவதற் கும், பின்னர் சிந்தனைப் பள்ளிகளின் வளர்ச்சிக்கும், வித்தியாச மான புதிய உளவியல் வழிமுறைகளின் தோற்றத்திற்கும் புரொய்ட் பாரிய பங்களிப்புச் செய்துள்ளார். போதையால் பாதிக்கப்பட்டோ ருக்கு உதவுவதிலும் உள நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதிலும் அவரது ஆய்வுகள் அதிக பயன் கொடுத்துள்ளன என்பது உறுதி யான விடயமாகும். புரொய்ட் தனது உளப் பகுப்பாய்வு சிந்தனை யையும் உளச் சிகிச்சை முறைகளையும் முன்வைத்த பிறகே உள வியல் சிகிச்சையாளர்கள் மனிதனது நோய் சார் நடத்தையை சீராக்கும் விடயத்தில் நனவிலி மனம் சார்ந்த பகுதிகளுக்கு முக் கியத்துவம் அளிக்க தொடங்கினர். அவ்வாறே போதைக்கு அடி மையாகும் நிலையைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக உளப் பகுப்பாய்வுக் கோட்பாடுகளிலும் அவர்கள் கவனம் செலுத்தினர்.

உளவியல் நோய்க்குறிகள் என்பவை உள்ளார்ந்த நனவிலி மனப் போராட்டங்களின் இணக்கமான எதிர்வினையாகும் என உளவியல் பகுப்பாய்வு கருதுகிறது. அந்த வகையில், உள நோயாளி யின் Ego எனும் தன்னுணர்வால் வெளிப்படும் எதிர்ப்பையும் (Resistance) தாண்டி இப்போராட்டங்களை இனங்காண வேண் டிய கட்டாயம் உளவியல் பகுப்பாய்வாளனுக்கு இருக்கிறது. புரொய்ட் இதற்காக ஆரம்பத்தில் அறிதுயில் (Hypnotism) முறை யைப் பயன்படுத்தினார். எனினும் விரைவாகவே அதிலிருந்து

விலகிக் கொண்டார். ஏனெனில் தனது நோயாளர்களுள் ஒரு சிறு தொகையினரை மாத்திரமே அவரால் துயில் நிலைக்கு கொண்டு செல்ல முடிந்தது.

புரொய்டும் அவரது ஆசிரியரான புரோயரும் Catharsis எனப் படும் ஆழ்ந்த உணர்ச்சித் தூய்மையாக்க செயற்பாட்டை தமக்கு முன்பிருந்த சில உளவியல் சிகிச்சை முன்னோடிகள் அறிந்து வைத் திருந்ததாக கண்டறிந்தனர். இதனை இன்று நாம் வேறு பல நவீன சிகிச்சை முறைகளிலும் காண்கிறோம். எனினும் நோயாளி தனது முழுமையான உணர்வு நிலையில் வெளிப்படுத்த முடியாத பிரச் சினைகளையும் உணர்வுகளையும் இலகுவாக வெளிப்படுத்த உதவுவதற்கு இச்சிகிச்சை முறைகளில் சில வகையான மூலிகை கள் பயன்படுத்தப் படுவதுண்டு.

ஆனால் உளவியல் பகுப்பாய்வு முறையோ நனவு மனச் சுவரை ஊடறுத்து நனவிலி மனச் சிக்கல்களையும் போராட்டங்களையும் கண்டடைவதில் கவனம் செலுத்துகிறது. மட்டுமன்றி அவற்றை புரொய்ட் விளக்கிய பாலியல் மற்றும் வன்ம ஊக்கிகளின் அடிப் படையில் அது வியாக்கியானப்படுத்தி பகுப்பாய்வு செய்கிறது.

அறிதுயில் முறை தோல்வியைத் தழுவிய பிறகு, முன்னைய அறிஞர்களின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு கனவுகள் பகுப்பாய்வு மற்றும் சுதந்திரமான தொடர்பு (Free Association) என்பவை போன்ற புதிய முறைகளை புரொய்ட் உருவாக்கினார். ‘சுதந்திரமான தொடர்பு’ என்பது நோயாளி ஒருவர் சாய்வு நாற் காலியில் தளர்வாக அமர்ந்து கொண்டு தனது சிந்தையில் சுழலும் அனைத்தையும் பற்றி சுதந்திரமாகப் பேசுவதை குறிக்கிறது. இவ் வாறு பேசிக் கொண்டிருக்கும் போது அவரது உள்ளார்ந்த நனவிலி மனப் போராட்டங்களுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளுக்கு அல் லது நினைவுகளுக்கு வந்ததும் பேச்சின் சரளமான ஓட்டம் தடைப்பட்டு விடும். ஏனெனில் Ego எனும் தன்னுணர்வானது நனவிலி மனதுடன் தொடர்புற்ற அம்சங்கள் வெளிப்படுத்தப் படுவதை அனுமதிப்பதில்லை. குறித்த நோயாளி தனது முழுமை யான பிரக்ஞை நிலையில் இருக்கும் போது ஏற்றுக்கொள்ள

வெட்கப்படும் நினைவுகளும், பாலியல் மற்றும் வன்மம் சார்ந்த அம்சங்களும் அவற்றில் நிறைந்திருப்பதே இதற்குக் காரணம் என உளப் பகுப்பாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மனிதனது பல செயற்பாடுகள் -அவை சீரியவை ஆயினும் புறநடை ஆயினும்- வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ பாலியல் மற்றும் வன்ம அடிப்படை கொண்டவை என புரொய்ட் கருதினார். அந்த வகையில், மேற்குறித்தவாறான எதிர்ப்பு நிலை நோயாளியிடம் வெளிப்படுமாயின், சிகிச்சை செய்பவர் அந்த மனப் பிராந்தியத்தை ஆழமாக பகுப்பாய்வு செய்து மோதல் நிகழும் முடிச்சை கண்டுபிடிக்க வேண்டும். அப்போதுதான் நோயாளி தனது சிறு வயதில் வாழ்ந்த நினைவுகள் அவற்றின் (Oedipal என்னும்) பாலியல் சிக்கல்களோடு வெளி வரும் என உளப்பகுப்பாய்வாளர்கள் கருதுகிறார்கள். மறதி என்னும் இருளி லிருந்து உணர்வின் வெளிச்சத்துக்கு வரும் இந்நினைவுகள் அவரது சிறுபராயத்தின் வேதனை மிக்க உணர்வுகளுடன் கலந் திருக்கும் எனவும் அவர்கள் கருதுகிறார்கள்.

ஆக, -குர்விட்ஸ் (Gurvitz)[(1)] குறிப்பிடுவது போல் -சிகிச்சை யளிப்பவர் இந்த உளப்பகுப்பாய்வின் மூலம் நோயாளியின் சிறு பராயத்தையும் அதன் இயல்பூக்கங்களையும் போராட்டங்களை யும் அப்போராட்டங்களை நனவிலி மனதில் புதைப்பதற்கு உதவிய ஊக்கிகளையும் நோக்கிச் செல்ல நோயாளியின் தன்னு ணர்வுடன் ஒத்துழைக்கிறார். அதன் விளைவாக நோயாளியுடைய சுயத்தின் இரு பாகங்களும் இணக்கமடைந்து யதார்த்தத்துடன் தொடர்பாடக் கூடிய பலமான ஒற்றைச் சுயம் உருவாகிறது.

உளப்பகுப்பாய்வு முறைமையும் அதனால் தாக்கமடைந்த பிற சிகிச்சைப் பள்ளிகளும் அரை நூற்றாண்டுக்கும் அதிக காலம் உளவியல் சிகிச்சைத் துறையை முழுமையாக ஆக்கிரமித்திருந்த மையே இக்கோட்பாடுகளை இவ்வளவு விரிவாக நாம் விளக்கு வதற்குக் காரணமாகும். நோயாளியாக இருப்பவர் நனவிலி மனப் போராட்டங்களுக்கும் சூழல் பிரச்சினைகளுக்கும் பலியானவர் என இந்த உளவியல் பள்ளிகள் அனைத்தும் ஏகோபித்த கருத்தை

கொண்டிருந்தன. எனவே இப்போராட்டங்களிலிருந்து அவரை விடுவிக்க மென்மையான 'மனிதநேய' உளவியல் வழிமுறை களை அவை பயன்படுத்தின. இச்சிந்தனைகள் உண்மையிலேயே முழு மேற்குலகையும் பாதித்தன. இதன் விளைவாக அங்கு ஒரு மன நோயாளி மனப் போராட்டங்களுக்களுக்கு பலியானவர் என்று நோக்கப்பட்டது மட்டுமன்றி, போதைக்கு அடிமையான வர்களும் குற்றவாளிகளும் கூட உளவியல் சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளிகளாக பார்க்கப்பட்டனர். அவர்கள் சமூக விழுமியங்களை மீறியவர்கள் என்றோ தண்டனைக்குரியவர்கள் என்றோ பார்க்கப்படும் நிலை ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது. மேற்குலக சிந்தனையால் கவரப்பட்ட சில முஸ் லிம்களும் கூட இதே சுலோகங்களை தூக்கிப் பிடித்தனர். மது அருந்துவோருக்கு வழங்கப்படும் கசையடி காட்டுமிராண்டித் தனமானது என்றும், உளப்பகுப்பாய்வு மூலமும் மனிதநேய அணுகுமுறைகள் ஊடாகவும் அவர்களுக்கு சிகிச்சையளிக்கலாம் என்றும் கூறுமளவுக்கு அவர்கள் சென்றனர்.

மேற்குலகு உள மருத்துவத் துறையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக உளப்பகுப்பாய்வு அணுகுமுறைகளையும் மானுட நேய அணுகுமுறைகளையும் பயன்படுத்தியது. சிறுபராய பாதிப்புகளே ஒருவரது ஆளுமையைத் தீர்மானிக்கின்றன என்ற கருதுகோள் அங்கு நீண்ட காலம் நிலவியது. ஆயினும், மதுவுக்கும் போதைக் கும் அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் உளவியல் மருத்துவம் அடைந்த பெறுபேறுகள் என்ன?

மதுவைச் சார்ந்திருந்தோருக்கும் அதற்கு அடிமையானோருக் கும் உதவுவதில் இந்த சிகிச்சை முறை மொத்தமாக தோல்வி அடைந்துள்ளதாக கள ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. மட்டு மன்றி, மதுவுக்கு அடிமையானோருக்கு இந்த உளவியல் சிகிச்சை முறைமை பலபோது தீங்கையே செய்துள்ளதாகவும் சில ஆய்வு கள் சுட்டிக்காட்டுகின்றன. போதைக்கு அடிமையானவர் தனது கடந்த காலத்தையும் எதிர் காலத்தையும் நுணுக்கமாக பிரித்துப் பார்க்க மாட்டார். மிலாம்(2) குறிப்படுவது போல், இத்தகையவ

ருக்கு அவரது இழிவான பக்கங்கள் உணர்வற்ற நிலையில் ஞாபக மூட்டப்படும் போது அவரது நோய்நிலை இன்னும் அதிகரிக் கின்றது. மனத்தடுமாற்றம் குறைவதற்குப் பதிலாக பாவம் செய்து விட்டேன் என்ற உணர்வே மேலிடுகின்றது. இந்நிலையில் அவர் இன்னும் அதிகமாக போதையை நாடிச் செல்வார்.

போதைப்பொருளால் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை பலன் அளிக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்ததையே பெறுபேறுகள் வெளிப்படுத்தின. 'மதுவை அல்லது போதைப் பொருளை உட்கொள்பவரின் உணர்வு நிலை பலவீனப்பட்டுப் போயிருக்கும். உளப் போராட்டம் நலிவடைந்திருக்கும். இந் நிலையில் உணர்வற்ற நிலையில் நடைபெறுகின்ற போராட் டத்தை நோக்கிப் போவது இலகுவாக இருக்கும். அவரது ஆளு மையின் அடிப்படைகளை அறிந்து கொள்வதும் சுலபமாக இருக்கும்...' என உளப்பகுப்பாய்வு சார்ந்தவர்கள் கருதினார்கள். எனவேதான் அத்தகைய சிகிச்சை முறையை அவர்கள் எல்லை மீறி நம்பினார்கள்.(3)

அளவு மீறிய அல்கஹோல் பாவனையையும் அவர்கள் இவ் வாறே நோக்கினர். புரொய்டின் பாலியல் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்ட அவர்கள், ''மது அருந்தியவர் உணர்வற்ற நிலையில் தனது சிறுபராயத்தை நோக்கி மீளவே (Regression) விரும்புவார். ஏனெனில் அதுவே சுயத்தை காதலித்த பருவமாகும் (Nirvana). அங்குதான் தாயின் கதகதப்பான மார்பிலும் வாரிக் கொடுக்கும் முலைகளிலும் அவர் முழுமையாக தங்கியிருந்தார்...' என விளக்கம் அளித்தனர்.(4) மட்டுமன்றி, அதிகமாக மது அருந்து வது வாய்வழிக் காம நுகர்வுக் கட்டத்தை உறுதிப்படுத்தும் செயலே (Fixation) எனவும் அவர்கள் கூறினர். ஏனெனில் புரொய்டின் கருத்துப்படி, ''குழந்தைப் பருவத்தில் பாலுணர்வானது (Libido) வாய்ப் பகுதியிலேயே மையம் கொண்டிருக்கும். உறிஞ்சுதல், பால் குடித்தல், வாய் வழிக் கிளர்ச்சி என்பவற்றின் மூலமாக குழந்தை தனது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறது. குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகு மதுவருந்த நேரும்போது

இந்த வாய் வழிக் கிளர்ச்சி மீண்டும் உறுதிபெறுகிறது. அதிகமாக போதைப்பொருள் அருந்தும் பழக்கம் இப்படித்தான் உருவாகிறது''.

இந்த உள ரீதியான வழிமுறைகளையும் உளப்பகுப்பாய்வு சிகிச்சை முறைகளையும் மேற்குலகு பல வருடங்களாக மதுவுக்கு அடிமையானோரை விடுவிக்கப் பயன்படுத்தியது. ஆனால், எவ்விதப் பிரயோசனமும் கிடைக்கவில்லை. எனவேதான், வில்ஸன், ஒலீரி (Wilson, O'leary) போன்றோர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

''மதுப் பாவனைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் அல்லது அவர்களை விளங்கிக் கொள்வதில் பாரம்பரிய உளவியல் அணுகுமுறையானது பல வருடங்களை ஆய்வு, சிகிச்சை என்று கடத்திவிட்டது. ஆனாலும் மிக பலவீனமான முன்னேற்றமே கிடைத்தது. ஆய்வு முயற்சிகள் ஒட்டு மொத்தமாக தோல்வியைத் தழுவிவிட்டன. போதைக்கு அடிமையானோரின் பண்புகளையும் சாதாரண நிலையில் உள்ளோரின் பண்புகளையும் அவை பிரித்து நோக்கவில்லை. மனக் குழப்பம் உள்ளோரையும் சாதாரண நிலையில் உள்ளோரையும் கூட அவை பிரித்து நோக்கவில்லை''.

அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ''சிகிச்சைக்காக உளப்பகுப்பாய்வு முறை நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்தாலும் கூட விளைவுகளை நோக்கும்போது கனவுகளை அவை சிதறடித்துவிட்டன. இது இன்று அனைவரும் உடன்படும் விடயமாகும்''.(5)

மேலும், இன்று அனைவரும் உடன்படுகின்ற பின்வரும் கருத்தை Haglund, Scahuckit ஆகிய அறிஞர்கள் போதைக்கு அடிமையாவதற்கான காரணங்கள் பற்றிய தமது ஆய்வில் பின்வருமாறு வலியுறுத்துகின்றனர்:

''மதுவுக்கு அடிமையாதல் என்ற தோற்றப்பாட்டை வியாக்கியானப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சித்தாந்தங்கள் சரியான

வையா என்று உறுதிப்படுத்துவது மிகக் கஷ்டமானது. ஏனெனில், அவை நுணுக்கமாக வரைவிலக்கணப்படுத்த முடியாத சொற்பிரயோகங்களையும் கருத்தாக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை. அவ்வாறே குறித்த நபர் போதை வயப்பட முன்புள்ள குழந்தைப்பருவத்தின் பழைய நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி அவை விளக்கப்படுகின்றன. அந்த நிகழ்வுகள் குறித்தோ அவற்றின் தாக்கம் குறித்தோ உறுதிப்படுத்துவதும் முடியாத காரியம்''.

இரு ஆய்வாளர்களும் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்: ''உளப் பகுப்பாய்வாளர்கள் மதுவுக்கு அடிமையானோரை தம்மைத் தாமே காதலிப்பவர்களாக (Narcissitic) அல்லது ஓரினச் சேர்க்கை செய்பவர்களாக அல்லது மறைவான பாலியல் நடத்தைகளில் ஈடுபடுபவர்களாக (Latent Homo Sexuality) சித்தரிக்கிறார்கள். உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடுகளில் இப்பிரயோகங்களுக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கலாம். ஆனால் யதார்த்தத்தில் இவற்றுக்கு எத்தகைய சான்றுகளும் இல்லை. எந்தவொரு சிகிச்சை நோக்கத்துக்கும் அவை பயன்படப் போவதுமில்லை. உளவியல் பகுப்பாய்வு முறையானது மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை அளிப்பதில் உண்மையாகவே தோல்வியடைந்துவிட்டது''.[(6)]

மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் உளவியல் சிகிச்சை முறை இவ்வாறு தோல்வியடைந்த அதேவேளை, போதைக்கு அடிமையானோரின் நட்புச் சங்கங்கள் ஒப்பீட்டளவில் வெற்றி அடைந்திருக்கின்றன. இச்சங்கங்கள் சமூக அழுத்தம், நல்ல முன்மாதிரி, ஆன்மீகம் சார்ந்த விடயங்கள் என்பவற்றை இதற்காக பயன்படுத்துகின்றன. Alcoholics Anonymous போன்ற இத்தகைய சங்கங்கள் குறித்து ஏலவே நாம் விளக்கியுள்ளோம். போதைக்கு அடிமைப்பட்டவர்கள் இச்சங்கங்களது அமர்வுகளுக்கு சமூகமளிப்பார்கள். படிமுறை ரீதியாக அவர்களது உள்ளம் தெளிவடையத் தொடங்கும். அதன் பின்னர் அவர்கள் தமது பிரச்சினையை சபையோருக்கு எடுத்துக் கூறுவார்கள்.

அவரது பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர்களும் உதவுவார்கள். இது அவர்களிடம், ''போதைக்கு அடிமைப்பட்டவர்கள் நம்பிக்கை யிழக்கத் தேவையில்லை; பிழையான வழியில் செல்ல வேண்டிய தேவையில்லை'' என்ற உணர்வை தோற்றுவிக்கும். எனவே அவர் கள் தமது பிழையான செயல்கள் குறித்து மீள்பரிசீலனை செய்யத் தொடங்குவார்கள்.

இது போதைக்கு அடிமையானவருக்கு நேரடியாக சிகிச்சை செய்யும் முறையாகும். இங்கு உளப்பகுப்பாய்வுகளோ, பாலியல் கற்பனைகளோ, புறநடையான எதிர்ப்புணர்வுகளோ இருப்பதாக கருதப்படுவதில்லை.

இந்த கூட்டுச் செயற்பாடு மூலமாக போதைக்கு அடிமை யானோருக்கும் அதனை சார்ந்திருப்போருக்கும் பெரும் பயன் உள்ளது. அது மருத்துவமனைகளில் வழங்கப்படுவது போன்று சமூக-உளவியல் சட்டகத்தினுள் வழங்கப் படுவதாயினும் சரி; போதைக்கு அடிமையானோருக்கு உதவும் அமைப்புகளில் வழங் கப்படுவது போன்று மத-ஆன்மீக சட்டகத்தினுள் வழங்கப்படு வதாயினும் சரி. இவை பாரம்பரிய சிகிச்சை முறையை விட அதிகம் வெற்றி கண்டுள்ளன என்பது உண்மை.

மேற்சொன்ன கட்டத்தை அடுத்து, பாரம்பரிய மருத்துவ முறை களுக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள். நோயாளியின் உடம் பில் உள்ள அல்கஹோல் என்ற நஞ்சை நீக்குவதற்கான முயற்சி கள் எடுக்கப்படும். இது படிமுறை ரீதியாக மெது மெதுவாக நடைபெறும்.

மாத்திரைகள், உணவு, தூண்டுதல் வார்த்தைகள் (Motivation), கூட்டான உள மருத்துவ அமர்வுகள், மதுவால் பாதிக்கப்பட்ட வர்களைப் பாதுகாக்கும் நிறுவனங்களில் பணியாற்றுதல் போன்ற வழிமுறைகள் மூலம் அவர்கள் மதுவின் தாக்கத்திலிருந்து பாது காக்கப்படுவார்கள்.

பாரம்பரிய தனியாள் உளவியல் சிகிச்சை முறைகளைப் பொறுத்தவரையில், அவை தமது அந்தஸ்தை இழந்துவிட்டன.

மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்கும் நிறுவனங் களில் இப்போது அவற்றுக்கு இடமில்லை. உளவியல் மருத்துவம் தொடர்பான நூல்களை எழுதுபவர்கள் கூட உளப்பகுப்பாய்வு முறையையோ உளவியல் மருத்துவ முறையையோ சிகிச்சைக் கான தெரிவுகளுள் ஒன்றாக இப்போது குறிப்பிடுவதில்லை.

1950 களை போதைக்கு அடிமையாதல், மனக் குழப்பங்கள், அவற்றுக்கான சிகிச்சைகள் என்பவை தொடர்பான புரட்சி யொன்று ஏற்பட்ட காலமாகக் குறிப்பிடலாம். இக்காலப் பகுதி யில் ''தனியாள் உளவியல் சிகிச்சை முறை'' உளப் பகுப்பாய்வு முறைமைகளின் தோல்வியால் முன்னர் தான் இழந்திருந்த அந் தஸ்தை மீளப் பெற்றுக் கொண்டது. நடத்தைசார் சிகிச்சை முறை யின் தோற்றத்துடனேயே (Behavior Therapy) இப்புரட்சி நிகழ்ந் தது எனலாம். அனைத்து உளவியல் நோய்க் குறிகளுக்கும் நனவிலி மனத் தொடர்புகள் இருப்பதாகக் கூறும் பகுப்பாய்வுக் கருத்தாக் கத்தை இந்த நடத்தை சார் சிகிச்சை முறை நிராகரிக்கிறது. புரொய்டின் பாலியல் வியாக்கியானங்களையும் இது நிராகரிக்கிறது.

இந்த நவீன சிந்தனையானது கல்வி உளவியல், பரிசோதனை உளவியல், உடற்கூற்று உளவியலின் கண்டுபிடிப்புகள் என்ப வற்றின் அடியாக எழுந்ததாகும். அந்த வகையில் இது சித்தாந்த ரீதியாகவும் நடைமுறையிலும் உளப் பகுப்பாய்வுச் சிந்தனைக்கு முற்றிலும் முரணானது.

உளப் பகுப்பாய்வாளர்கள் நனவிலி மனம் பற்றிப் பேசுகின்ற போது, நடத்தை சார் சிகிச்சையாளர்களோ போதைக்கு அடிமைப் பட்டவர்கள் மோசமான பழக்கத்தின் ஊடாகவே அதனை கற்றுக் கொள்கிறார்கள் எனக் கூறுகின்றனர். அவ்வாறே நல்ல விடயங் களையும் பழக்கத்தின் ஊடாகவே இவர்கள் கற்றுக் கொள்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய பல பழக்கங்களை கற்றுக்கொள்வதன் ஊடாகவே மனிதர்கள் பெற்றுக் கொள்கிறார்கள் என்று ரஷ்யாவைச் சேர்ந்த பாவ்லோவும், அமெரிக்காவைச் சேர்ந்த வொட்சன், ஸ்கின்னர்

போன்றோரும் தெரிவிக்கிறார்கள். தூண்டல்-துலங்கல் தொடர்பு கள், வெகுமதிகள் மூலம் ஒன்றை செய்யத் தூண்டுதல், கடும் தண்டனைகள் மூலம் விட்டுவிடத் தூண்டுதல் போன்ற விட யங்களில் இவர்கள் கவனத்தைக் குவித்தனர்.

இவ்வாறு நடத்தை அடிப்படையில் சிகிச்சை செய்பவர்கள் நோயாளியின் சிறுபராய விவகாரங்கள் குறித்தோ, நனவிலி மனப் போராட்டங்கள் குறித்தோ ஆய்வு செய்து நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். மாற்றமாக தூண்டல்-துலங்கல் அடிப்படையில் வெளிப்படும் நோய்க் குறிகளை அவதானித்து சிகிச்சை செய்ய வும், நோயாளியை நோய்க்கு ஏதுவான பழக்கங்களிலிருந்து விடுவித்து ஆரோக்கியமான பழக்கங்களை நோக்கி கொண்டு செல்லவுமே அவர்கள் முயல்வர்.

உளநோயை இனங்காண்பதற்கும் சிகிச்சை செய்வதற்கும் இவர்கள் எளிமையான வழிமுறைகளைப் பயன்படுத்தினார்கள். உளப்பகுப்பாய்வுகள் மூலம் தோல்வியடைந்த பல நோய் நிலை களுக்கும் சிகிச்சை செய்தார்கள். குறைந்த நேரமும் மிகக் குறை வான முயற்சியுமே இங்கு செலவளிக்கப்பட்டன. வெகுமதியும் தண்டனையும் வழங்குவதன் மூலம் நோயாளியின் பழக்கங் களை இவர்கள் மாற்றியமைத்தார்கள். அதற்கான பல துணைச் சாதனங்களையும் உருவாக்கியுள்ளார்கள்.

Mowrer கண்டறிந்த சாதனத்தை இதற்கு உதாரணமாகக் குறிப் பிடலாம். இரவில் சிறுவர்கள் தமது படுக்கை விரிப்பில் சிறுநீர் கழிப்பதற்குத் தீர்வாக வெகுமதி அல்லது தண்டனைக் கோட் பாட்டை அவர் பயன்படுத்தினார். இக்கண்டுபிடிப்பு அறிமுகப் படுத்தப்பட்டு பல தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும், பகுப் பாய்வுச் சிகிச்சைக்கும் நடைமுறைச் சிகிச்சைக்கும் இடையிலான வேறுபாட்டை அவரது விளக்கம் தெளிவாக முன்வைக்கிறது.

கலாநிதி ஸலாஹ் முகைமிர் அவர்கள் எகிப்தின் ஐன் ஷம்ஸ் பல்கலைக்கழகத்தில் மனோ வைத்தியத் துறையில் பேராசிரிய ராகக் கடமை புரிந்தவர். உளப் பகுப்பாய்வுத் துறையில் மிக

முக்கியமானவர். புரொய்டின் சிந்தனையில் மிகை ஆர்வம் கொண்டவர். இரவில் படுக்கையில் சிறுநீர் கழிக்கும் நோய்க் கான நனவிலி மனம் சார்ந்த காரணங்கள் பற்றி அவர் கீழ்வரு மாறு குறிப்பிடுகிறார்:

படுக்கையில் சிறுநீர் கழித்தல் என்பது ஒரு வகையில் சிறுபராய பாலியல் உணர்வை தீர்க்கும் செயற்பாடாகும். ஆண்பிள்ளை தாயிடம் தூங்கும் போது அல்லது பெண்பிள்ளை தந்தையிடம் தூங்கும்போது இது ஏற்படுகிறது (Oedipus and Electrical Complexes). சிலவேளை பெண் குழந்தைகள் அரைத் தூக்கத்தில், கழிப்பறைக்குப் போகும் வழியிலேயே சிறுநீர் கழித்து விடு வார்கள். இது ஆண்கள் நின்ற நிலையில் சிறுநீர் கழிப்பது போன்று தானும் சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வினால் ஏற்படு கிறது. ஆண் குழந்தைகளிடம் இப்பழக்கம் தொடருமாயின், அது அவர்களிடமிமுள்ள பெண்ணியத் தூண்டல்களை தீர்த்துக் கொள் ளும் விருப்பத்தைக் காட்டும்.(7)

Mowrer இவ்வாறு படுக்கையில் சிறுநீர் கழிக்கின்ற குழந்தை பற்றி உளவியல் ரீதியாக பகுப்பாய்வு செய்யவோ பாலியல் அல் லது வன்முறைக் காரணங்களை கற்பிக்கவோ முற்படாமல் வேறு கோணத்தில் இதனை அணுகுகிறார்.

Mowrer விஷேடமான படுக்கை ஒன்றை தயார் செய்தார். அதனுள்ளே இரண்டு வெண்கல உலோகத் துண்டுகளையும் அவற்றின் நடுவே திரவங்களை உறிஞ்சிக் கொள்ளக்கூடிய ஸ்பன்ச் போன்ற துண்டொன்றையும் பொருத்தினார். உலோகத் துண்டு களை வயர்கள் மூலமாக உலர் மின்கலம் ஒன்றுடனும், மின்மணி ஒன்றுடனும் தொடர்பு படுத்தினார். இரவில் இப்படுக்கை மீது தூங்குகின்ற குழந்தை சிறுநீர் கழிக்க ஆரம்பித்துவிட்டால், ஆரம் பச் சொட்டுகளிலேயே இரு உலோகத் துண்டுகளிலும் உள்ள மின்சாரம் தொடர்புபட்டு மின்மணியானது உயர்ந்த சப்தத்தில் ஒலிக்கத் தொடங்கும். இதனால் சட்டென்று விழித்துக் கொள்ளும் குழந்தை எஞ்சிய சிறுநீரை கழிப்பறைக்குச் சென்று கழிக்கும். இவ்வாறு தொடர்ந்து நிகழும்போது அந்தக் குழந்தை இப்பழக்

கத்திலிருந்து விடுபட்டு விடும். அதன் பிறகு சிறுநீர்ப்பை நிரம்பி யதை உணர்ந்த மாத்திரத்திலேயே தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ள பழகி விடும்.

Mowrer இதனைப் பரிசோதனை செய்து பார்த்த போது பரி சோதனைக்கு உட்பட்ட அனைவரும் சுகமடைந்தார்கள். ஆனால் உளப்பகுப்பாய்வு முறையில் சிகிச்சை செய்யப்பட்டபோது 40% அளவினரே குணமடைந்தனர். அதுவும் பல மாதங்கள், பல வருடங்கள் தொடர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் உளப் பகுப் பாய்வுச் சிகிச்சை மூலமாக பிள்ளை குணமாகியது என்று கூறு வதனை விட பிள்ளையின் முதிர்ச்சி அதிகரித்தமையினால் அது மாற்றமடைந்தது என்று கூறுவதே பொருத்தமானது.

ஆனால் நடத்தைச் சிகிச்சை மூலம் ஓரிரு வாரங்களிலேயே நோயாளரை குணப்படுத்த முடிந்தது. நடத்தைச் சிகிச்சை முறை யைச் சார்ந்தவர்கள் சிறுவர்கள் இரவில் சிறுநீர் கழிப்பதனை ஒரு சாதாரண பழக்கமாகவே பார்க்கின்றனர். பிள்ளை தூக்கத்திலிருக் கும் போதே சிறுநீர்ப்பை நிரம்பிவிட்டால் சிறுநீர் கழிக்கும்படி தூண்டப்படும். சிறுநீர் கழிக்கும் உணர்வு வரும் போது தானாகவே எழும்பும் பழக்கத்தை குழந்தையிடம் ஏற்படுத்துவதே சிகிச்சை செய்பவரது பணியாகும்.

நடத்தையியலாளர்களுள் மற்றொரு சாரார் இப்படிக் கூறுகி றார்கள்: குழந்தை இரவில் படுக்கையில் சிறுநீர் கழிக்கும்போது, திடுக்கிட்டு விழிக்கச் செய்யும் மணியோசையின் வடிவில் தண் டனை ஒன்றை பெற்றுக் கொள்கிறது. இந்தத் தண்டனை தொடர் கின்ற போது படுக்கையில் சிறுநீர் கழிப்பதனை அது நிறுத்தி விடுகிறது.

இக்கருதுகோள் ஸ்கின்னர் கூறிய நடத்தை சார் கற்றல் கோட் பாட்டுக்கு நெருக்கமானதாகும். கருதுகோளானது பாவ்லோவ் அல்லது ஸ்கின்னர் அல்லது அறிகை உளவியல் (Cognitive) முத லிய எவ்வகை சார்ந்ததாயினும், பெறுபேறு நமக்கு தெளிவாகத் தெரிகிறது. நடத்தைசார் சிகிச்சைதான் மிகச் சிறந்த சிகிச்சை முறை என்பதே அந்தப் பெறுபேறாகும்.

இதே வழிமுறையில் பலதரப்பட்ட நவீன வழிமுறைகள் தோன்றிவிட்டன. சிறுவர்கள் இரவில் சிறுநீர் கழிக்கும் விடயம் தொடர்பான பல ஆய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கான மருந்தும் பயன்படுத்தப்படுகிறது. என்றாலும், பாரம்பரிய முறைக் கும் நடத்தை சார் அணுகுமுறைக்கும் இடையிலான வேறு பாட்டை நாம் இலகுவான முறையில் விளக்கியுள்ளோம். குறிப் பாக நடத்தை சார் அணுகுமுறையானது போதைக்கு அடிமை யானோருக்கு வழங்கும் சிகிச்சை முறைகளை இத்துறை சாராத வாசகர்கள் புரிந்துகொள்வதற்கு இது உதவும் என எதிர்பார்க்கி றோம்.

இப்பொழுது நாம் மதுவுக்கு அடிமையானோர் மற்றும் அதனை அதிகமாகப் பயன்படுத்துவோருக்கான சிகிச்சை முறை கள் தொடர்பாக நோக்குவோம்.

நடத்தை சார் சிகிச்சை முறையானது போதைக்கு அடிமைப் பட்டவரின் ஆளுமைப் பண்பு பற்றியோ, அவரது மதுப் பழக் கத்திற்குப் பின்னால் நனவிலி மனதில் மறைந்திருக்கும் இச்சை சார்ந்த தூண்டிகள் பற்றியோ ஆராய்ந்து நேரத்தை வீணடிப்ப தில்லை.

மிகையாக மது அருந்துபவர்கள் தமது பதட்டத்தை தணிக்கவும் உடனடி இன்பத்தைப் பெறவுமே அவ்வாறு அருந்துகிறார்கள் என நடத்தையியலாளர்கள் கருதுகின்றனர். இது மது அருந்து வோரிடம் பொதுவாகக் காணப்படும் ஏக பண்பு என்பது அவர் களது அபிப்பிராயம். எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய துன்பங் களையும் தண்டனைகளையும் பாதகமான விளைவுகளையும் விட, உடனடியாகக் கிட்டும் இன்பங்களாலும் வெகுமதிகளாலும் ஒருவரது நடத்தை இலகுவாக தாக்கமடைகிறது என இவர்கள் கூறுவர்.

போதைக்கு அடிமையானவர்கள் அவசரமாக கிட்டும் போதை யின் இன்பத்தில் தொடர்ந்து திளைத்திருக்கிறார்கள். இறுதியில் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற தீங்குகள் குறித்து

அவர்கள் சிந்திப்பதில்லை. எனவேதான், நடத்தை சார் சிகிச்சை யானது போதைக்கு அடிமைப்பட்டோருக்கு தண்டனை வழங்கும் அல்லது வெறுப்பு ஏற்படுத்தும் (Aversion Therapy) முறைமை யைப் பயன்படுத்துகிறது. இது அவர்களது மதுப் பழக்கத்தை வெறுக்க வைக்கும் முறைமையாகும்.

வெறுப்பை ஏற்படுத்தும் இந்த அணுகுமுறையானது ஏலவே 'நாகரிக பரிமாற்றுத் தடை' பற்றியும் சமூக அச்சங்களோடு (Social Phobia) அதற்குள்ள தொடர்பு பற்றியுமான உரையாடலில் நாம் குறிப்பிட்ட படிமுறையான தற்காப்பு (Systematic Desen sitization) முறைக்கு மாற்றமான வடிவமாகும். ஏனெனில், சமூக பயம் மற்றும் மன உறுத்தல் போன்றவை ஒருவர் விட்டொழிக்க விரும்பும் உளவியல் நோய்க் குறிகளாகும். இந்த உளவியல் நோய்க் குறிகளோடு பயமும் கவலையும் எப்போதும் ஒட்டி யிருக்கும். இந்நிலையில் சிகிச்சையாளர் நோயாளியிடம் மன அமைதி, இன்பம், மனத்தளர்வு என்பவற்றுக்கான துலங்கல்களை தூண்டுவார். அதனால் படிப்படியாக அவரது நிலை சீராகத் தொடங்கும்.

ஆனால் போதைப் பொருளுக்கு அல்லது மதுவுக்கு அல்லது சூதாட்டத்துக்கு அல்லது ஒரு பால் உறவுக்கு அடிமையானவரைப் பொறுத்த வரை, அவருக்கு படிமுறையான தற்காப்பு முறைக்கு மாற்றமான முறைகளிலேயே சிகிச்சை அளிக்கப்படும். இச்சி கிச்சை முறைகள் நோயாளி ஏலவே இன்பமாகக் கண்ட தூண்டல் களோடு இணைந்த வகையில் வேதனையும் வெறுப்பும் ஊட்டக் கூடிய தூண்டல் ஒன்றையும் பயன்படுத்துகின்றன. அதன் மூல மாக குறித்த நபர் முன்னர் இன்பமாகக் கண்ட அதே தூண்டல் கள் வேதனையையும் பயத்தையும் ஏற்படுத்துவதாக உணர்வார்; அல்லது அத்தூண்டல்கள் குறைந்த பட்சம் தமது வீரியத்தை யாவது இழந்து விடும்.

ஒரு பாத்திரத்திலிருந்து மதுவை வாய்க்குள் எடுக்குமாறு மது வுக்கு அடிமையான நோயாளி வேண்டப்படுவார். பின்பு, நேரடி யாக உள-உடல் ரீதியான தண்டனை வழங்கப்படும். இந்தப்

பழக்கத்தைத் தொடரமாட்டேன் என்ற உறுதி மொழி ஏற்படும் வரை தண்டனை தொடரும். உதாரணமாக, மின்சாரத் தாக்கு தலுக்கு உட்படுத்தப்படுவார். அது கொஞ்சம் கொஞ்சமாக அதி கரிக்கும். வாயிலிருந்து மதுவைத் துப்பும் வரை அது தொடரும். அல்லது சூது விளையாடும் அட்டைகளை வீசும் வரை இது தொடரும். ''மது அருந்த மாட்டேன்... பாலியல் துர்நடத்தை களில் ஈடுபடமாட்டேன்'' என்று சப்தமெழுப்பும் வரை இது தொடரும். இந்த வேதனை தரும் அணுகுமுறையுடன் வெளிச்சம், சப்தம் போன்ற துணைத் தூண்டற் காரணிகளையும் சிகிச்சை செய்பவர் பயன்படுத்துவார். அது நோயாளிக்கு பயத்தையும் வேதனையையும் ஏற்படுத்தும்.

போதை அல்லது மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்யப்படும்போது மின்சாரத் தாக்கம் மூலம் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். நோயாளியின் கையில் அல்லது புயத்தில் சில வயர்கள் பொருத்தப்படும். ஓர் அறையில் அவர் தனியாக வைக் கப்பட்டிருப்பார். அவர் சிறப்பாகக் கருதும் மது அவருக்கு குடிப் பதற்காக வழங்கப்படும். சிகிச்சை செய்பவர் பக்கத்திலுள்ள இன்னொரு அறையில் இருப்பார். அங்கு ஒரு கண்ணாடி யன்னல் காணப்படும். அதனூடாக அவர் நோயாளியை அவதானிப்பார். தேவையானபோது வேதனை ஏற்படுத்தும் விதமாக மின்சார தாக்கத்தை ஏற்படுத்துவார். மீண்டும் மதுவை வாய்க்குள் எடுக்கு மாறு நோயாளியை அவர் வேண்டுவார். ஆனால் அதனைக் குடிக்க அனுமதிக்க மாட்டார். மீண்டும் மின்சாரத் தாக்கம் கொடுப்பார். அதனைத் துப்பிவிடும் வரை இவ்வாறு செய்வார். இப்படியாக தொடர்ந்து சிகிச்சை செய்யப்படும். மதுவின் வாசத்தையும் சுவை யையும் நுகர்கின்ற போது தடுமாற்றமும் பயமும் ஏற்படும் வரை இது தொடரும். நோயாளியின் உடல் மதுவிலிருந்து தூய்மை யடைந்து அதன் அடையாளங்களும் மறைந்த பின்பே நடத்தை யியலாளர்கள் இந்தத் தண்டனை முறையை ஆரம்பிப்பர்.

நோயாளிக்கு தொடராகத் தண்டனை கொடுப்பது இடைக் கிடை விட்டு விட்டுத் தண்டனை கொடுப்பதனை விட தாக்கத்தை

ஏற்படுத்துகிறது என்று ஆய்வுகூடப் பரிசோதனைகள் உறுதிப் படுத்துகின்றன. அதாவது மின்சாரத் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டு சிறிது காலம் அதனை வழங்காமல் இருப்பது குறைந்த பாதிப்பையே ஏற்படுத்தும்.

வெறுப்பை ஏற்படுத்தும் அணுகுமுறையில் மின்சாரத் தாக்கம் மாத்திரமே வழங்கப்படுவதில்லை. சிலவேளை வைத்தியசாலை களில் இரசாயன ரீதியிலான தண்டனைகளுக்கும் போதைக்கு அடிமையான நோயாளி உட்படுத்தப்படுவார். போதைக்கு அடி மையானவருக்கு Apomorphine போன்ற மருந்துகள் ஊசி மூலம் ஏற்றப்படும். இது மூளையில் பல இடங்களில் பாதிப்பை ஏற் படுத்தும். அது அருவருப்பு (Nausea) உணர்வை ஏற்படுத்தும். தீவிர கண்காணிப்பின் கீழ் தொடராக இது நிறைவேற்றப்படும். சுமாராக இரு வாரங்களில் 07 முறையளவு இப்படியான மருந்து கள் கொடுக்கப்படும். அதன் பின்னர் மதுவைக் காணும்போது அவருக்கு ஏற்படும் அருவருப்பு, தலைவலி போன்றவை கவ னிக்கப்படும்.

இந்த இரண்டு தண்டனை முறைகளுக்கும் பழைய வரலாற்று வேர்கள் காணப்படுகின்றன. கிரேக்க நாகரிகத்தின் முன்னோர் கள் மதுக் கிண்ணத்தில் நீர்ப்பாம்பைப் போட்டு வைப்பார்கள். மது அருந்துபவர் இதனைப் பார்த்து விரண்டோடுவார்.

நவீன வரலாற்றிலும் சில சான்றுகள்; உள்ளன. 1927 களில் பாவ்லோவ் இதுபற்றிக் கூறியுள்ளார். அவரது உதவியாளர் ஒரு நாயைக் கட்டிவைத்து ஒரு குறிப்பிட்ட ஓசையை ஒலிக்கச் செய் தார். அப்போது அந்த நாய் வாந்தியெடுக்க முனைந்தது. ஏனெ னில், அந்த நாய் Apomorphine என்ற மருந்து ஏற்றப்பட்ட நிலை யில் அந்த சப்தத்தை செவிமடுத்தது. சப்தத்திற்கும் மருந்தின் தாக்கத்துக்குமிடையில் இவ்வாறு தொடராக ஓர் இணைப்பு ஏற் படுத்தப்பட்டது. அதன் பிறகு மருந்து இன்றி வெறும் சப்தத்தை கேட்கும்போது கூட நாய்க்கு அதே அருவருப்பு ஏற்படலானது.(8)

ரஷ்யாவைச் சேர்ந்த Kantorovich மதுவுக்கு அடிமையானோ ருக்கு தண்டனை முறையைப் பயன்படுத்திய ஆரம்ப கர்த்தாக்

களில் ஒருவர். அவர் 1930 களில் பலமான வேதனை தரக்கூடிய மின்சாரத் தாக்கத்தைக் கொடுத்தார். போதையில் பாதிக்கப்பட்ட 20 பேருக்கு அவர் சிகிச்சை செய்தார். ஒரு மாத சிகிச்சையின் பின் அவர்களில் பலர் மதுவிலிருந்து விலகியிருந்தார்கள் என்று அவர் குறிப்பிடுகிறார்.(9)

இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளில் மேற்குலகம் ஒப்பீட்டு ரீதியாக இந்தளவு விளைவுகளை தெரிந்து வைத்திருக்கவில்லை. அப்பொழுதெல்லாம் அவர்கள் உளவியல் சிகிச்சை, உளப் பகுப் பாய்வு போன்ற விடயங்களில் மூழ்கி இருந்தார்கள். புரொய்டை அடிப்படையாக வைத்து தோன்றிய கண்ணோட்டங்களின் பொற் காலமாக அது காணப்பட்டது.

''மறைவான பாலியல் உணர்வுகள்'', ''நனவிலி மன மோதல் கள்'' போன்ற கண்ணோட்டங்கள் மூலம் மனிதனை மதுவிலி ருந்தும் நடத்தைப் பிறழ்வுகளிலிருந்தும் விடுவித்து, அவனை சந்தோஷப்படுத்தவும் குணப்படுத்தவும் முடியுமென அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தண்டனை வழங்காத, மனிதாபி மான முறையில் சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பதுவே அப்போதைய பொது அபிப்பிராயமாக இருந்தது.

இத்தகைய மனிதாபிமான வழிமுறைகள் தோல்வியைத் தழுவிய பின்னர், வேதனை தரக்கூடிய தண்டனை முறைகள் புரட்சிகரமாக வெற்றியடைந்து பாரிய வரவேற்பைப் பெற்றன. மின்சாரத் தாக்கம் மூலமாக தண்டனை வழங்கும் சிகிச்சை முறை போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்யும் வைத்திய சாலைகளிலும் பரவலடையத் தொடங்கியது. அத்தோடு பல தரப்பட்ட இரசாயனத் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைமைகளும் பரவின. நடத்தையியலாளர்கள் சில ஆச்சரியமான வழிமுறை களையும் கண்டறிந்தார்கள். துர்நாற்றம், உயர்ந்த சப்தம் போன்ற வற்றைக்கூட அவர்கள் பயன்படுத்தினார்கள். உடம்புக்கு ஏற் படும் வலியின் தாக்கத்தை ஸ்திரப்படுத்துவதற்காக உள ரீதியான தண்டனைகளையும் வழங்கினார்கள். சில நேரங்களில் மனைவி, பிள்ளைகளின் குரல்களைப் பதிவுசெய்து மதுவின்பால் செல்ல

வேண்டாம் என அவர்கள் கெஞ்சிக் கேட்கும் வேண்டுதல்களை செவி மடுக்கச் செய்தார்கள். கடுமையான ஏச்சுகள், அழுகையை வரவழைக்கும் வார்த்தைகள், மதுவை விட்டு விடத் தூண்டும் வார்த்தைகள் போன்றனவும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. இவை உணர்வு பூர்வமான தாக்கங்களை நோயாளியிடம் ஏற்படுத்தின. சிகிச்சை வழங்குபவர் தண்டனையின் போதும், அதன் பிறகும் இம்முறைகளை தொடர்ந்து பயன்படுத்தினார்.

நவீன காலத்தில் வெட்கம், வேதனை என்பவற்றை ஏற்படுத்தக்கூடிய வீடியோ காட்சிகள் அதற்காக பயன்படுத்தப்படுகின்றன. இதுபற்றி கலாநிதி Yalom[(10)] என்ற ஆய்வாளர் தனது கூட்டு சிகிச்சை பற்றிய பிரபலமான நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''வீடியோக்களை பயன்படுத்தி சிகிச்சை செய்வதில் பல பயன்களை நான் கண்டுள்ளேன். ஒருமுறை நான் கூட்டு சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்தபோது மதுவுக்கு அடிமையான ஒருவரை போதையுடன் இருக்கும் நிலையில் சிலர் எம்மிடம் கொண்டு வந்தார்கள். நான் எனது கூட்டு அமர்வை ஆரம்பித்தபோது அவர் பேசத் தொடங்கினார். அவர் அற்பத்தனமாகவும், வரம்பு மீறியும், இழிவாகவும் நடந்து கொண்டார். எனது அமர்வுகளில் போதையுடன் இருப்பவர்களுக்கு பெரும் பயன்கள் இல்லை. ஏனெனில் அத்தகைய நிலையில் உள்ளவர்கள் சிந்திக்கும் நிலையிலோ நுணுக்கமாக பகுப்பாயும் நிலையிலோ இருப்பதில்லை. ஆனால் இந்த நிகழ்வை காமிராக்கள் பதிந்திருந்தன. சில நாட்களின் பின்னர் அந்த இளைஞன் அந்த காட்சிகளை பார்த்தபோது கடுமையாக வெட்கப்பட்டார். போதையின் தீங்குகளை உணர்ந்து கொண்டார். இது அவரது நடத்தையை மாற்றவும், நோயிலிருந்து விடுபடவும் காரணமாகியது''.

கலாநிதி யாலூம் தொடர்ந்து கூறுகிறார்: ''ஒருமுறை நான் போதையால் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை அமர்வொன்றில் இருந்தேன். பேச முடியாத நிலையில் ஒருவர் வந்தார். ஆசனத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்டார். அவர் அறிவையும்

உணர்வையும் இழந்திருந்தார். போதையின் காரணமாக ஆழமாக தூங்கினார். அவரைச் சுற்றி நோயாளிகள் சூழ்ந்து அவரது மோச மான நிலைபற்றி பேசிக் கொண்டார்கள். இவை வீடியோவில் பதியப்பட்டிருந்தன. பின்னர் இதனை அவர் பார்த்தபோது கடு மையாகச் சங்கடப்பட்டார். மது அருந்தியதற்காக வாழ்வில் முதல் முறையாக உண்மையாக வெட்கப்பட்டார். உண்மையில் அவர் கொஞ்சம் கொஞ்சமாக தன்னை தற்கொலை செய்து கொண்டிருந்தார். தனது மடமையை எண்ணி அவர் கவலைப் பட்டார். தனது இழிநிலையை நொந்து கொண்டார்''.

தண்டனை ரீதியிலான சிகிச்சையின் போது அல்லது அந்த சிகிச்சைக்கு முன் உள்ளத்தை தளர்வாக்கி சாந்தப்படுத்தல், அறி வூட்டல், உற்சாகப்படுத்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சிகள் நடாத்தப்படும். இது ஒருவர் தன்னைத்தானே மதிப்பீடு செய்து கொள்ளவும், புதிய பழக்கங்களை தன்னில் ஏற்படுத்திக் கொள்ள வும், நல்ல முயற்சிகளை முன்னெடுக்கவும் வழிவகுக்கும். இதன் மூலம் பிரயோசனமான விடயங்களில் அவர் நேரத்தை கழிப்பார். அவரது நாட்ட சக்தி (Will power) அதிகரிக்கும். மதுவின்பால் மீளச் செல்வதனை அவர் தவிர்ந்து கொள்வார்.

தண்டனை மூலமான சிகிச்சை பற்றி Rachman[11] என்பவர் இவ்வாறு விளக்குகிறார்: ''இது உண்மையில் சிகிச்சை பெறுப வருக்கு மாத்திரமன்றி, சிகிச்சை செய்பவருக்கும் தாதிமார்களுக் கும் கூட வேதனையானது; வெறுப்பானது. எனவேதான் இத் தகைய வைத்தியசாலைகளில் பணியாற்றக் கூடிய பலர் அமர்வு களில் கலந்து கொள்ளாது ஓடிவிடுகின்றார்கள். நோயாளிக்கு அரு வருப்பை ஏற்படுத்தும் இரசாயனத் தாக்க சிகிச்சையை இதற்கு எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம். இது பொருத்தமான வழிமுறை யல்ல என்றும் தெரிவிக்கப்படுகிறது''.[12]

ஆனால் நடத்தைவாத அணுகுமுறையில் சிகிச்சை செய்பவர் கள் இந்த வேதனையும் திடுக்கமும் பயமும் சிகிச்சையின் வெற் றிக்கு இன்றியமையாதவை என்று கருதுகிறார்கள். தண்டனை ரீதியான தூண்டல் அதிகரிக்கும் போதெல்லாம் கற்கின்ற வேகம்

அதிகரிக்கும் என்று இவர்கள் கருதுகிறார்கள். மனிதர்கள் மீதும் விலங்குகள் மீதும் மேற்கொள்ளப்பட்ட பல பரிசோதனைகள் இதனை நிரூபிக்கின்றன. மனித வாழ்வில் ஏற்படும் பயங்கர அனர்த்தங்களும் கூட இதனை உறுதிப் படுத்துகின்றன.

மதுவுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை செய்வதில் மின் சார அதிர்ச்சி வைத்தியமானது நேர அடிப்படையில் அதிக நியம மும் ஒழுங்கும் கொண்டதாக இருப்பினும், இரசாயன ரீதியான தண்டனையின் பயங்கரத் தன்மையே அதனை அதிக வெற்றிகர மான வழிமுறையாக ஆக்கியது எனலாம். மின்சாரம் மூலம் உட லுக்கு தண்டனை வழங்குவதை விட, அருவருப்பையும் வாந்தி யெடுக்கும் உணர்வையும் ஏற்படுத்துவதன் மூலமாக மதுவின் மீது அதீத வெறுப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்பது அவ தானிக்கப்பட்டுள்ளது. Nathan, Steffen போன்றவர்கள் இரசாயன தாக்கம் மூலமான சிகிச்சை முறை அதிக வெற்றியை ஈட்டியுள்ள தாக உறுதிப்படுத்துகின்றார்கள்.

இரசாயன ரீதியிலான தண்டனை மூலம் சிகிச்சை பெற்ற பின்னர் மதுவிலிருந்து விலகிக் கொண்டவர்களின் விகிதாசாரம் 60% ஆகும். இந்த சிகிச்சை முறைக்கு வழங்கப்படும் நேரம் மிக குறைவானதாக இருந்த போதிலும், அதிக வெற்றியடைந்துள்ள மையை இரு அறிஞர்களும் ஆச்சரியமாக நோக்குகிறார்கள். இதற்கு Rachman கூறிய காரணங்களையே இவர்களும் கூறுகின் றனர். அத்தோடு இது வைத்தியசாலைக்குள்ளே நடைபெறும் விடயமுமாகும். ஆனால் மின்சாரத் தாக்கம் என்பது வைத்திய சாலைக்கு வெளியிலும் வழங்கப்படலாம்.

இதன்படி நோக்கும்போது, மதுவுக்கு அடிமையானோருக்கு தண்டனை முறையில் சிகிச்சை வழங்குவது மிகவும் வெற்றிகர மானது என்பது தெளிவு. இதன் விகிதாசாரம் 51% முதல் 74% வரையாகும்.[14] இது பாரம்பரிய உளவியல் சிகிச்சை முறை யினால் கிடைக்கும் விளைவை விட மிக உயர்ந்ததாகும். ஏனெ னில் அதன் வெற்றி விகிதாசாரம் 10 - 19% மட்டுமே. அதாவது 90% சிகிச்சை முயற்சிகள் அங்கு வெற்றியளிக்கவில்லை.

மதுவிலிருந்து விடுபட்டவர்கள் மீண்டும் மதுவையே நாடிச் சென்றனர். அத்தோடு பாரம்பரிய முறையின்படி சிகிச்சை செய்வ தற்கு 6 மாதங்கள் முதல் ஒரு வருடம் அளவு காலம் தேவைப் படுகிறது. மதுவை மீண்டும் நாடிச் சென்றவர்களுக்கு உளவியல் சிகிச்சை வழங்குவது கஷ்டமானதொரு பணியும் கூட.

ஆனால் நடத்தையியல் அடிப்படையில் வெறுப்பூட்டும் சிகிச்சை வழங்கப்படுவதற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் போதுமானது. குறிப்பிட்ட சில அமர்வுகளிலேயே அவர் மீண்டும் மதுவை நாடிச் செல்வது நின்று விடுகிறது. அனேகமாக நான்கு அமர்வுகள் மாத்திரம் இதற்கு போதுமானவை. அதன் பிறகு சரி யான பாதைக்கு அவர் திரும்பி விடுவார்.

Voegtlin[15] என்பவரும் அவரது உதவியாளரும் 285 பேரை வைத்து ஓர் ஆய்வை மேற்கொண்டனர். அவர்கள் அனைவரும் ஏற்கனவே மதுவுக்கு அடிமையாக இருந்து இரசாயனத் தாக்கம் மூலமாக சிகிச்சை செய்யப்பட்டவர்கள். அவர்களது உடல் மது விலிருந்து சுத்தமானதன் பின்னர் ஒரு வைத்தியசாலையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நடத்தையியல் அடிப்படையில் அவர்கள் சிகிச்சை செய்யப்பட்டு ஒரு வருடத்தின் பின்பே இவ் வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களுள் சிலர் Booster Treatment எனப்படுகின்ற வலுப்படுத்தல் அமர்வுகளிலும் கலந்து கொண்டவர்கள். அவை சிகிச்சை முடிந்த பின்னர் ஒரு மாதம் அல்லது இரு மாதங்களுக்கு ஒரு தடவை வழங்கப்பட்டது. ஒரு வருடத்தின் பின்னர் பெறுபேறு இவ்வாறு காணப்பட்டது: வலுப் படுத்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் 90% பேரும், அதில் கலந்து கொள்ளாதோரில் 74% பேரும் மதுவை பூரணமாக விட்டிருந்தார்கள்.

Voegtlin உம் அவரது உதவியாளரும் 4096 பேரை மையப் படுத்தி மற்றோர் ஆய்வும் செய்தார்கள். அவர்கள் அனைவரும் இரசாயன அடிப்படையிலான வெறுப்பூட்டலுக்கு உட்படுத்தப் பட்டவர்கள். அவர்களில் 51% பேர் மதுவை விட்டிருந்தார்கள். 1 வருடம் முதல் 10 வருடங்கள் வரை சிகிச்சை செய்யப்பட்ட வர்களே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.[16]

'ஒருவரது சிறுபராய அனுபவங்களும், நனவிலி மனப் போராட்டங்களுமே மது அருந்துவதை தூண்டுகின்றன. குழம்பி போன நிலையில்தான் அவர் மதுவை நாடுகிறார். எனவே அவ ரைத் தண்டிப்பது கடும்போக்காகும்...' என்று கூறுகின்ற மனி தாபிமான அணுகுமுறை நேரத்தை வீணடிக்கிறது என்பதுதான் மேலுள்ள ஆய்வுகள் சுட்டி நிற்கின்ற விடயமாகும்.

மனோஇச்சையின் தூண்டல்களால் செயல்படக்கூடிய மனிதன் அதில் ஆழ்ந்து போகின்றபோது அது பழக்கமாக மாறி விடு கின்றது. அதற்கு அவன் அடிமையாகின்றான். அதற்கு முரணான ஒன்றின் மூலம்தான் அதிலிருந்து அவனை மீட்டெடுக்கலாம். இதனைத்தான் பரஸ்பர எதிர்த் தடுப்பு (Reciprocal Inhibition) என்பார்கள். அதாவது ஒரு நோயாளிக்கு வழங்கப்படுகின்ற தண் டனையாலும் வேதனையாலும் அவரது சுவை நாட்டத்தை மாற்றி விடுவதை இது குறிக்கிறது. பழைய பழக்கமும் புதிய தண்டனை யும் ஒன்றிணைவதன் மூலமாக இம்மாற்றம் ஏற்படுகிறது.

குறைந்த பட்சம் இது அவரது சுவையுணர்விலாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. பழைய பழக்கத்தின் பால் இட்டுச் சென்ற தூண்டல்களை அது பலவீனப்படுத்துகிறது. இந்த வகை யில் மது அருந்துபவரும், சூது விளையாடுபவரும் அப்பழக் கத்தை விட்டு விடுகின்றனர். பிறழ்வான பாலியல் நடத்தை கொண்டவர் தன்னை மாற்றிக் கொள்கிறார். இவ்விடயத்தை அறி வியல் ஆய்வுகள், பரிசோதனைக்கூட செயல்பாடுகள், கள ஆய்வு கள் என்பவற்றின் மூலமாக ஐரோப்பா கற்றுக் கொண்டிருக்கிறது.

எனினும் சிலர் (அவர்களுள் அனேகமானோர் துறைசாராத பொதுமக்கள்) இத்தண்டனை அணுகுமுறையை கடுமையாக விமர்சிக்கிறார்கள். இது மனிதாபிமானமற்றது; கடுமையானது; இது ஒரு மூளைச்சலவை அணுகுமுறை. மனிதனின் அந்தஸ்தை இது குறைக்கிறது; ஜனநாயகப் பெறுமானங்களுடன் மோது கிறது... என்றெல்லாம் அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய விமர்சனங்களுக்கு உளவியலாளர்களும் மனோ வைத்தியர்களும் மறுப்பு தெரிவிக்கிறார்கள். தண்டனை அணுகு

முறை சரியானதே என்றும், தண்டனை அணுகுமுறையின் விளைவு களுக்கும் அறிவியல் ஆய்வுகளுக்கும் முன்னால் இத்தகைய விமர் சனங்கள் அர்த்தமற்றவை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

Lovaas, Schaeffer, Simmons[17] ஆகிய ஆய்வாளர்கள் நடத்தை மாற்றத்தில் தண்டனை ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய தமது ஆய்வில் பொது மக்களது மறுப்பு குறித்து தமது ஆச்சரியத்தை வெளிப்படுத்துகின்றனர். அனைத்து வகையான தண்டனைகளும் எமது அன்றாட வாழ்வில் இயல்பாகவே காணப்படுவதுதான் என்ற போதிலும், நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அத் தகைய தண்டனைகளையோ வேதனை தரும் தூண்டல்களையோ பயன்படுத்துவதற்கு சில உளவியலாளர்கள் தயங்குவதையும் அவர்கள் ஆச்சரியமாக நோக்குகின்றனர். சமூக வாழ்வை கட்ட மைப்பதில் இத்தகைய தண்டனைகளும் வலிகளும் தொடர்ந்தி ருப்பது அத்தியாவசியமானது என்றும், அவை உரிய முறையில் அமுல்படுத்தப் பட்டால் எதிர்பார்க்கப்படும் விளைவைத் தரும் என்றும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். மேலும், தண்டனை முறையை விமர்சிப்பவர்கள் சமூகத்தில் நிலவும் கருத்தியல் மற்றும் விழுமியம் சார்ந்த கருத்தாக்கங்களால் உந்தப்பட்டே அதனை விமர்சிக்கிறார்கள். ஆனால் திரும்பத் திரும்ப மேற் கொள்ளப்படும் பரிசோதனை மற்றும் களஆய்வுகள் அவர்களது நிலைப்பாட்டுக்கு சாதகமாக அமையவில்லை. நடத்தையை மாற்றியமைப்பதில் வினைத்திறன் மிக்க சாதனமாக தண்டனை அமைந்திருப்பதையே அந்த ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவர்கள் விளக்குகின்றனர்.

Rimm மற்றும் Masters[18] ஆகிய ஆய்வாளர்கள் தண்டனை முறையை பயன்படுத்துவது சரியானது என்று கருதும் அறிஞர் களின் கருத்துக்களை இரண்டு வகையில் சுருக்கித் தருகின்றார்கள்.

1. உடலில் பாதகமான தாக்கங்கள் எதுவுமின்றியே போதை க்கு அடிமையானவர்களது நடத்தையை மாற்றுவதில் தண்டனை முறை பயன் மிக்கது.

2. தண்டனை முறையை பயன்படுத்தாது இவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வேறு அணுகுமுறைகள் கிடையாது.

மிகக் கடுமையான தண்டனை முறைகளைக் கூட பலமாக ஆதரிப்பவர்களுள் ஒருவர். அவரது பிரபல்யமான நூலான "Fact and Fiction in Psychology" என்ற நூலில், ஒரு வகை பாலியல் பிறழ்வு கொண்டிருந்த 38 வயதான ஒரு இளைஞருக்கு வழங்கப் பட்ட தண்டனைச் சிகிச்சை பற்றி விளக்குகிறார். அந்த இளை ஞரின் பிரச்சினை குறித்தும், அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முறை குறித்தும், அதிலிருந்து பேராசிரியர் Eysenk தண்டனைச் சிகிச்சைக்காக கண்டடைந்த நியாயங்கள் பற்றியும் இங்கு விரி வாக நோக்குவது பயனளிக்கும் என்று நினைக்கிறேன். ஏனெ னில், போதைப் பாவனைக்கு அடிமைப்பட்டோருக்கு இரசா யனத் தண்டனை மூலமாக சிகிச்சை செய்யப்படும்போது என்ன நிகழ்கிறது என்பதை விரிவாகப் புரிந்து கொள்ள இது உதவியாக அமைய முடியும்.

Eysenk[(19)] கூறுகிறார் ''அவர் 10 வயதாக இருக்கும் போது சிறு வர்களின் தள்ளுவண்டிகளையும் பெண்களின் கைப் பைகளையும் சேதப்படுத்துபவராக இருந்தார். ஒரு நாளில் பல முறை இதனைத் செய்தார். சிலபோது இரகசியமாகவும் செய்தார். கைப்பையை வைத்திருக்கும் பெண் பார்க்காத வகையில் கட்டை விரலால் அதில் கீறினார். மிகவும் ஊதிப் பருத்த கைப்பைகளே அவருக்கு அதிக பாலியல் கிளர்ச்சியை ஏற்படுத்தின. இந்த நோயாளி நீண்ட நாட்களாக உளப் பகுப்பாய்வு முறையிலும் உளவியல் முறை யிலும் சிகிச்சைக்கு உற்படுத்தப்பட்டார். அதன் பிரகாரம் இந்த பாலியல் பிறழ்வுக்கான காரணமாக இரு நிகழ்வுகள் அடையாளப் படுத்தப்பட்டிருந்தன. சிறுவயது நிகழ்வுகள்தான் அவரை இதற்குத் தூண்டின என்று கூறப்பட்டது.

ஒன்று: அவரது சிறிய படகின் முன்பகுதி சிறுவர்களின் தள்ளு வண்டியுடன் மோதும்போது பெண்களுக்கு ஏற்படும் அச்சம்.

இரண்டாவது: தனது சகோதரியின் கைப்பையை காணும் போது அவருக்கு பாலியல் கிளர்ச்சி ஏற்படுகிறது.

உளவியல் பகுப்பாய்வு அடிப்படையில் அவரது பாலியல் பிறழ்வுகளுக்கான அடையாளம் சிறுவர்களது தள்ளு வண்டியும் கைப்பையும்தான் என்று கூறப்பட்டது. ஆனால் அவரது நிலையை மாற்றியமைப்பதில் உளப் பகுப்பாய்வு முறை முழுத் தோல்வியை தழுவியது. சிறுவர்களது தள்ளுவண்டிகளை சேதப் படுத்துவதும் அதனோடு ஒட்டிய இரகசிய கைப்பழக்கமும் அவரிடம் தொடர்ந்தன. திருமணம் முடித்திருந்தும் கைப்பைகள் மற்றும் தள்ளுவண்டிகள் என்பவை பற்றிய கற்பனையின் உதவி யுடனேயேமனைவியுடன் அவரால் பாலுறவு கொள்ள முடிந்தது.

குழந்தைகளுக்கான தள்ளுவண்டியொன்றை ஒரு பெண் தள்ளிச் சென்றபோது அவர் அதில் எண்ணெய்யை ஊற்றி தீ வைத்தார். அவர் மேற்கொண்ட பன்னிரண்டாவது நிகழ்வாக அது அமைந்தி ருந்தது. எனவே அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார். அதற்கு முன்னர் இரண்டு தள்ளுவண்டிகளை சேதப்படுத்தி தீ மூட்டிய காரணத்தினாலும் கைது செய்யப்பட்டிருந்தார். சிறையிலும் வைக்கப்படிருந்தார். நீண்டகாலம் வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்றார். எனினும் வெளியேறிய உடனேயே தனது மோட்டார் வண்டியால் நேரடி யாக குழந்தைத் தள்ளுவண்டி ஒன்றை மோதித் தகர்க்க முயற்சித் தார். தள்ளுவண்டி தகர்க்கப்பட்ட போதும் உள்ளே இருந்த குழந்தை எந்த ஆபத்தும் நேராமல் தப்பியது.

இந்த இறுதி நிகழ்வின் பின்னர் மன நோய் மருத்துவ மனை யில் அவர் அனுமதிக்கப்பட்டார். அவரது மூளையில் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும், அது மிகவும் அபாயகரமான சிகிச்சை என்பதால், தண்டனைச் சிகிச்சை முறைக்கு அவர் உட்படுத்தப் பட்டார்.

சிகிச்சையின் நோக்கம் நோயாளிக்கு தெளிவுபடுத்தப்பட்டது. தள்ளுவண்டி, கைப்பை என்பவற்றின் மீதான ஆசையை மாற்றி யமைப்பதுதான் அந்த நோக்கம். அவரது பழைய மனப்பதிவுகளை

நீக்கி புதிய பதிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் சிகிச்சை ஆரம் பிக்கப்பட்டது. அருவருப்பு உணர்வையும், வாந்தியையும் ஏற் படுத்தக் கூடிய Apomorphine மருந்து பயன்படுத்தப்பட்டது. இரவு பகலாக சிகிச்சை தொடர்ந்தது. ஒவ்வொரு இரண்டு மணித் தியாலங்களுக்கும் ஒரு முறை மாத்திரை வழங்கப்பட்டது. சிகிச் சைக் காலத்தில் அவருக்கு உணவு வழங்கப்படவில்லை.

Amphetamine மாத்திரை மூலமாக இரவில் தூங்காமலும் தடுக்கப்பட்டார். வாந்தி வரும் சந்தர்ப்பத்தில் அவரைச் சூழ தள்ளுவண்டிகளும், கைப்பைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு வாரம் முடிவடைந்த போது வீட்டுக்குச் செல்ல அவர் அனு மதிக்கப்பட்டார். சந்தோஷமாக வீடு திரும்பிய அவர், பழைய கற்பனைகள் இன்றி முதன் முறையாக மனைவியுடன் பாலியல் செயல்பாட்டில் ஈடுபட்டார். சிகிச்சை வழங்கப்பட்டு ஐந்து நாட் களின் பின்னர் தள்ளுவண்டிகளையும் கைப்பைகளையும் காணும் போது அருவருப்பு ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார். அதன் பின்னரும் சிகிச்சை தொடர்ந்தது. ஒன்பதாவது நாள் திடீரென்று நோயாளி கடுமையாக அழத் தொடங்கினார். உணர்ச்சி வசப் பட்டார். மணியை அடித்தார். தள்ளுவண்டிகளையும் கைப்பை களையும் அப்புறப்படுத்துமாறு அலறினார். அவரை ஆசுவாசப் படுத்த யாராலும் முடியவில்லை.

இந்த வேதனை மிகுந்த சிகிச்சையின் பின்னர் அவருக்கு சிகிச்சை வழங்கிய வைத்தியரால் நீண்டகாலமாக அவதானிக்கப் பட்டார். அதன் மூலம் அவர் பூரணமாக குணமடைந்து விட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. மீளவும் பாலியல் பிறழ்வு நடத்தை களுக்கு அவர் திரும்பவே இல்லை.

பேராசிரியர் Eysenk பதிவு செய்துள்ள இந்த சிகிச்சையிலே தண்டனை முறையை பயன்படுத்துவது தொடர்பான நுணுக்க மான விடயங்களை ஏற்கனவே நாம் விளக்கினோம். பாலியல் பிறழ்வுகள், போதைப் பாவனை, மதுவுக்கு அடிமையாதல் போன்றவற்றால் பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கும் இவற்றை மொத்தமாக பயன்படுத்த முடியும். சாதாரண குற்றச் செயல்கள்,

தடுக்கப்பட்ட அம்சங்களில் ஈடுபட்டவர்களுக்கு கூட இதனை பிரயோகிக்கலாம்.

இந்த நிகழ்வு சமூகத்தின் மீதும் அப்பாவிச் சிறுவர்கள் மீதும் ஏற்படுத்திய பாரிய பாதிப்பின் காரணமாகவே Eysenk இதனை உதாரணமாக எடுத்துக் காட்டினார். இவ்வாறன்றி, போதைப் பொருளுக்கு அடிமைப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை யொன்றை அவர் உதாரணம் காட்டியிருந்தால், மதுப்பாவனை என்பது அன்றாட விவகாரமாக மாறி விட்ட ஐரோப்பிய வாசகர்கள் மீது இதேயளவு பாதிப்பை அது ஏற்படுத்தி இருக்காது. இவ் வளவுக்கும் மதுப்பழக்கத்தின் தீங்கானது பல சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட பாலியல் பிறழ்வின் தீங்கை விட மிகப் பார தூரமானது என்பது தெளிவு.

Eysenk முன்வைத்த பகுப்பாய்வுகளையும், பெறுபேறுகளை யும் நோக்குவோம். இங்கு அவர் தண்டனை முறையின் நியா யங்களை விளக்குவதுடன் தனக்கு வந்த விமர்சனங்களுக்கும் பதிலளிக்கிறார். இது தொடர்பாக அவர் குறிப்பிடுவதாவது:[(20)]

''இந்த சிகிச்சை முறையை சிலர் மூளைச்சலவை என்று கருதக்கூடும்; அல்லது மனித படைப்புகளுடன் கடுமையாக நடந்துகொள்வதாக நினைக்க முடியும். ஆனால் இப்பிரச்சினையை நாம் பல கோணங்களில் நோக்க வேண்டியுள்ளது. எமது தனிப் பட்ட உணர்வுகளை கட்டுப்படுத்தி மாற்று சிகிச்சைக்கான சாத்தி யங்களை சிந்திக்க வேண்டியுள்ளது. மாற்று சிகிச்சை முறைகள் உளப் பகுப்பாய்வு அடிப்படையிலோ அதற்கு மாற்றமாகவோ இருக்க முடியும். என்றாலும், தண்டனை முறையல்லாத ஏனைய சிகிச்சை முறைகள் பயனற்றவை என்பதனை உளவியல் ஆய்வு கள் சந்தேகமின்றி நிரூபித்துள்ளன.

இத்துறையில் தண்டனை முறையல்லாத ஏனைய அணுகு முறைகளின் வெற்றி மிக குறைவானது. குறைந்த காலத்துக்கே பயனளிக்கக் கூடியது. மட்டுமன்றி மதுவால் ஏற்படும் பிறழ்வுகள் அல்லது மதுவுக்கு அடிமையானவர் இன்பமாக உணரும் அம்சங் கள் தாமாகவே மறையக் கூடியவையன்று. அவை சிலபோது

ஒருவருக்கு ஏற்படக் கூடிய கவலை, பயம் போன்ற துன்பங் களைப் போன்றவையுமல்ல. அந்த வகையில், தண்டனையற்ற மனிதாபிமான உளவியல் சிகிச்சை அமுல்படுத்தப் பட்டாலும் படா விட்டாலும் மதுவுக்கு அடிமைப்படுவதன் அல்லது பாலியல் பிறழ்வின் நோய்க் குறிகள் மறைவது மிக அரிது. எனவே எவ் விதப் பயனுமின்றி நீண்ட காலத்தை வீணாக்கி விட்ட உளவியல் சிகிச்சை மூலமாக நோயாளியை குணப்படுத்தி விடலாம் என்றோ, அல்லது எவ்வித சிசிக்சையும் இன்றி இயல்பாகவே அவர் குண மடைவார் என்றோ எண்ணுவதை நாம் கைவிட வேண்டியுள்ளது.

ஆயின்- இரண்டாவது மாற்றீடு என்ன?... கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்குவதுதான் இரண்டாவது மாற்றீடு. இது ஒரு கடுமையான தீர்மானம். இதனால் அவரது தீங்கிலிருந்து சமூகம் பாதுகாக்கப் பட முடியும். ஆயினும் சிறையிலிருந்து வெளியேறிய பின்னர் மீண்டும் பிறழ்வு நடத்தைகளின்பால் அவர் மீளவே செய்வார். இது போன்ற இளைஞர்களுக்கு சிறையில் சிறிது காலம் தடுத்து வைத்து தண்டனை கொடுப்பது அவர்களை இன்னும் அதிகமாகத் தூண்டும் என்பதனை அனுபவம் உணர்த்தியுள்ளது. எனவே இந்த நிலைக்கு சிகிச்சை செய்வதற்கு சிறைச்சாலை பொருத்தமான இடமல்ல என்று கூறலாம்.

மூன்றாவது மாற்றீடு அவரை சுதந்திரமாக நடமாட விட்டு அவ தானிப்பதாகும். இது சமூகத்தை பாதிக்கக் கூடியது. இத்தகைய பிறழ்வு நடத்தையுள்ள இளைஞர்களின் தீங்கிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை சமூகத்துக்கு உள்ளது. இத்தகைய நோயாளிகளை சுதந்திரமாக விட்டு விடுவது பாரதூரமான விளை வுகள் ஏற்பட காரணமாகலாம். சிலவேளை சிறுவர்களையோ அவர்களது தாய்மார்களையோ இவர்கள் கொன்று விடவும் கூடும். ஒரு நோயாளி தனது மோட்டார் வண்டி மூலம் இரு உயிர்களை கொலை செய்ய முயன்றது பற்றி ஏலவே விளக்கி னோம். சமூகத்தின் தனி மனிதர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர் கள். குற்றவாளிகளோடும் நடத்தைப் பிறழ்வு கொண்டவர்களோ டும் அன்பாக இருப்பதானது நடத்தைப் பிறழ்வற்ற நிரபராதிகள் விடயத்தில் அசிரத்தையாக நடப்பதாக அமைந்து விடக்கூடாது.

ஆக- இவைதான் நம் முன் உள்ள தெரிவுகள். நாம்தான் அறிவு பூர்வமாக அவற்றுள் ஒன்றை தெரிவுசெய்ய வேண்டும். ஒன்றில் குறுகிய காலத்துக்கு வேதனை தரக்கூடிய -இரண்டு வாரங்கள் அளவு நீடிக்கக்கூடிய- தண்டனை முறை. அல்லது நீண்ட நாள் சிறைவாசம். இல்லாதபோது விளைவுகளை அனுமானிக்க முடியாத மூளைச் சத்திர சிகிச்சை. அல்லது சுதந்திரமாக விட்டு விடுதல். அல்லது நீண்ட காலம் எடுக்கின்ற குறைவான பயன் கொண்ட மனிதாபிமான உளப்பகுப்பாய்வுச் சிகிச்சை. எல்லா சாத்தியப்பாடுகளும் மொத்தமாக இவைதான் என்றால்,தண்டனைச் சிகிச்சையை -அது வேதனையும் கடுமையும் மிக்கது என்ற வாதத்தின் பேரில்- ஓரம்கட்டுவது மிகச் சிரமம்தான்.(21)

தண்டனை முறையின் பயன்களை Rimm என்பவரும் உறுதிப் படுத்துகிறார். பிறழ்வு நடத்தையுள்ள நோயாளியின் செயற்பாடுகளை தண்டனைச் சிகிச்சை கட்டுப்படுத்துகிறது என அவர் கூறுகிறார். இத்தகைய நடத்தையுள்ளவர்கள் தமது செயல்பாடுகளை தாமே ரசிக்கிறார்கள். அதில் ஒரு இன்பத்தை காண்கிறார்கள். மனநிறைவடைகிறார்கள். ஆனால் உண்மையில் இந்த நடத்தைகள் அவர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் அநீதியாகும். இத்தகைய உளநோய்களின் காரணமாக சிலர் தமது தோல்களை தமது நகங்களாலே கீறிக் கொள்கிறார்கள். தமது மூக்கை காயப் படுத்திக் கொள்கிறார்கள். தலையை சுவரில் மோதிக் கொள்கிறார்கள். தண்டனை மூலமான சிகிச்சை முறை இவர்களது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் தமக்குத் தாமே அநியாயம் செய்வதனை தவிர்ந்து கொள்கிறார்கள்.

Rimm தொடர்ந்து கூறுகிறார்: ‘‘இந்த வேதனை தரக்கூடிய தண்டனை முறைக்கான மாற்றீடு தோல்வியடைந்த மனிதாபிமான அணுகுமுறைதான். அந்த அணுகுமுறையின்படி நோயாளி நீண்ட வருடங்களுக்கு வைத்தியசாலையில் வைக்கப்படுவார். அங்கிருந்து விடுவிக்கப்பட்டாலும் அவரது வாழ்நாளின் எஞ்சிய காலம் கட்டிலைச் சார்ந்தே கழியும். எலும்புகளும் சதையும் பலமிழந்து விடும். அவரால் இயல்பாக இயங்க முடியாது போகும்.

இவ்வகையில் நோக்கும்போது, நோவினை தரக்கூடிய தண்டனை முறை மனிதாபிமான முறையை விட மனிதத் தன்மையில் உயர்ந்ததே''.

பின்னர் சமூகத்தில் காணப்படும் தெளிவான முரண் நகை ஒன்று குறித்து Rimm கேள்வியெழுப்புகிறார். அதாவது ஒருவருக்கு வேண்டுமென்றே வலி ஏற்படுத்தப்படுவதை சமூகம் நிராகரிக்கும் அதேவேளை, சமூகத்திலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை அடிக்கிறார்கள்; சிலபோது உணவு உண்ண விடாமல் தடுக்கிறார்கள்; பல களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடாமலும் தடை செய்கிறார்கள். தனக்குக் கட்டுப்படாத பிள்ளையை தந்தை கொன்றால் கூட அதற்காக அவரைத் தண்டிக்காத சட்டங்கள் அமெரிக்காவின் சில மாநிலங்களில் அண்மைக்காலம் வரை நடைமுறையில் இருந்தன.[22]

இந்த நீண்ட விளக்கத்தை தொடர்ந்து, இஸ்லாமியத் தண்டனைகளை 'விநோதமாக நோக்கும்' சில முஸ்லிம்கள் குறித்து அல்லது முஸ்லிம் பெற்றோருக்குப் பிறந்ததால் அனிச்சையாக இஸ்லாத்தில் இருப்போர் குறித்து இங்கு நோக்குவோம். இவர்கள் மதுவுக்கான இஸ்லாமிய தண்டனையை நிராகரிக்கிறார்கள். கசையடி என்பது மனிதாபிமானமற்றது என வாதிடுகிறார்கள். கடும்போக்கு என்றும் மனித உரிமை மீறல் என்றும் அதனை சித்தரிக்கிறார்கள்.

இத்தகையவர்கள் முஸ்லிம் சமூகத்தில் மிக அரிதாகவே உள்ளனர். அவர்களிலும் பலர் உள்ளே அடக்கிப் பேசுபவர்களே அன்றி வெளிப்படையாக கருத்துக் கூறுபவர்கள் அல்ல. இவர்கள் மேற்குலக கோஷங்களின் உண்மையான உள்ளடக்கத்தை புரிந்து கொள்ளாதவர்கள். ஐரோப்பாவுக்கு ஐரோப்பியர்களை விட விசுவாசமாக இருக்க இவர்கள் முயற்சிக்கிறார்கள். இவர்களுள் மிகவும் சொற்ப தொகையினரே இது பற்றி வெளிப்படையாக பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்; அல்லாஹ்வின் ஷரீஅத்தையும் அதன் எல்லைகளையும் எவ்வித மரியாதையோ வெட்கமோ இன்றி விமர்சிக்கின்றார்கள்.

இத்தகைய ஒருவர்தான் சூடானைச் சேர்ந்த வழக்கறிஞர் தாஹா ஜர்பூஃ.[(23)] இஸ்லாமிய ஷரீஆவின் நடைமுறை குறித்தும், அது வாழ்க்கைக்கான வழிகாட்டி என்ற கருத்து குறித்தும் அவர் தனது ''ஹாதா அவ் அத்-தகல்லுப்'' என்ற புத்தகத்திலே விமர் சிக்கிறார். மது மற்றும் பிற குற்றங்களுக்கான இஸ்லாமிய கசையடித் தண்டனை தொடர்பாக அவர் எழுதியுள்ளவற்றை மாத்திரம் இங்கு நாம் நோக்குவோம். ஒற்றை வார்த்தையில் அவர் இப்படிக் கூறுகிறார்:

''கசையடித் தண்டனை ஷரீஆ தண்டனைகளில் மிக பிரதான மானதாகும். இது மனித கௌரவத்தை பாதிக்கிறது. அத்தோடு வேதனைப்படுத்தக் கூடிய கடுமையான வடிவமாகவும் அது உள்ளது. இதன் காரணமாகத்தான் சர்வதேச மனித உரிமை சாச னத்தின் ஐந்தாம் ஷரத்து இப்படிக் கூறுகிறது: எந்த மனிதனும் வேதனை செய்யப்படவோ, தண்டனைகளுக்கு உட்படுத்தப் படவோ, கடுமையாக அல்லது காட்டுமிராண்டித் தனமாக அல்லது கண்ணியம் பாதிக்கப்படும் வகையில் நடாத்தப்படவோ கூடாது''.

மது மற்றும் போதைப் பிரச்சினைக்கு இஸ்லாம் முன்வைத்த தீர்வை இங்கு நாம் பாதுகாத்து பேச வேண்டிய அவசியம் இல்லை. இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐரோப்பாவில் பயன் படுத்தப்பட்ட தண்டனை முறை பற்றி எம்மிடம் உள்ள தகவல் களே பேசுவதற்குப் போதுமானது. இங்கு Eysenk சொன்ன விடயங்களை மீண்டும் குறிப்பிடுகிறேன். 'சமூகம் பாதுகாக்கப் பட வேண்டும். பிறழ்வு நடத்தையுள்ளவர்களோடும் குற்றவாளி களோடும் அன்பாக நடந்து கொள்வது அப்படி இல்லாதவர்கள் விடயத்தில் பொடுபோக்காக நடப்பதாய் இருக்கக் கூடாது' என அவர் கூறுவார். நுனிப்புல் மேயக் கூடியவர்கள் மனிதாபிமானம் என்று கருதக்கூடிய பாரம்பரிய முறையை விட தண்டனை முறை அதிகம் மனிதாபிமானது என்று மேற்குலக அறிஞர்கள் பலர் உறுதிப்படுத்துகின்றார்கள்.

மது அருந்தியவர்களுக்கு இஸ்லாம் வழங்கும் கசையடி, முழு ஆடை அணிந்திருக்கும் நிலையில், நோவு தரக்கூடிய விதமாகவும் காயம் வராத அமைப்பிலும் வழங்கப்படுகிறது. ஐரோப்பாவில்

வழங்கப்படுகின்ற இரசாயன தண்டனை முறை வேதனை, அருவருப்பு உணர்வு, வாந்தியெடுக்கச் செய்தல் போன்றவற்றை அடிப்படையாக கொண்டது. இரண்டையும் ஒப்பிட்டு நோக்கி னால் இஸ்லாம் வழங்குகின்ற தண்டனை முறை காட்டுமிராண் டித்தனமானது அல்ல என்பதனை புரிந்து கொள்ள முடியும்.

இன்னொரு வகையான இரசாயன முறை சிகிச்சையும் காணப் படுகிறது. கடந்த காலங்களில் இம்முறையை குறைவாகவே பயன்படுத்தினார்கள். இம்மருந்தை பயன்படுத்தினால் மூச்சு விடுவதில் ஒரு கஷ்டம் ஏற்படும். Scoline என்ற இம்மருந்து ஊசி மூலம் நோயாளிக்கு ஏற்றப்படும். பின்னர் அவர் விரும்பு கின்ற மது அவருக்கு வழங்கப்படும். அதனை அவர் அருந்துவார். அதன் மணத்தையும் நுகர்வார். அதனைத் தொடர்ந்து அவருக்கு பயங்கரமான ஒரு உணர்வு ஏற்படும். அது மரண வேதனை போன்றிருக்கும். மூச்செடுப்பதற்கும் முடியாது போய்விடும். இது சுமாராக ஓரிரண்டு நிமிடங்கள் வரை காணப்படும். இந்த கடு மையான பயப்பீதியின் காரணமாக நோயாளி மதுவை நெருங் கவே மாட்டார். இது ஒரு கடுமையான முறைமையாகும்.

லண்டனிலுள்ள Middlesex வைத்தியசாலையில் கற்பித்த Dr. V. Meyer அவர்கள் என்னிடம் தனிப்பட்ட முறையில் கூறிய ஒரு விடயத்தை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கனடாவைச் சேர்ந்த ஒரு நோயாளி இந்த முறையில் சிகிச்சை செய்யப்பட்டார். அவருக்கு கடுமையான பயம் ஏற்பட்டது. அதன் காரணமாக அவரது ஆண்மையை இழந்து விட்டார்.இந்த மருந்தை ஊசியால் ஏற்றிய தாதி ஒரு அழகான பெண். அவளை மனதால் அவர் நேசித்திருந்தார். இந்த பயங்கர அனுபவத்தின் பின்னர் அவரிடமிருந்து போனது மதுவின் மீதிருந்த ஆசை மாத்திர மல்லை. அவரது பாலியல் ஆற்றலும் சேர்ந்து சென்றுவிட்டது. மதுவின் மீதான ஆசையும், தாதியின் மீதான காதலும் பயங்கர அனுபவத்துடன் இணைக்கப்பட்ட காரணத்தினால் இது ஏற்பட் டது. இது வைத்தியசாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் நிலைக்கும் சென்றது.

மின்சாரத்தின் மூலம் வெறுக்க வைப்பதும் இப்படித்தான். அதனை சிறப்பாக பயன்படுத்தினாலும் கூட வேதனை மிக்கது. ஒருவர் சாதாரண நிலையில் இருக்கும் நிலையில் ஈத்த மட்டையால் அடிப்பதனை விட இது வேதனை மிக்கதாகும்.

நான் சிறிய மாணவனாக இருக்கும்போது அழகான கசைகளினால் எத்தனை முறை அடி வாங்கியிருப்பேன். இன்றும் கூட மின்சாரம் பாய்ச்சப்படுவதனை விட ஈத்த மட்டையால் அடிக்கப்படுவதனையே நான் விரும்புகிறேன். லண்டனிலுள்ள Middlesex வைத்தியசாலையில் உளவியல் பிரிவில் இதே முறைமையைத் தான் நானும் பயன்படுத்தினேன்.

இன்று கசையடி அதன் சிறிய மென்மையான வடிவத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. வெறுக்க வைக்கும் தண்டனை முறையில் இன்று சாதாரணமாக பயன்படுத்தப்படும் ஒரு நுட்பம்தான் ரப்பர் பட்டியை (Rubber Band) மணிக்கட்டில் வைத்து அடிக்கும் முறைமை ஆகும் (An Elastic Band around the wrist). அப்போது சிகிச்சை செய்யப்படுபவர் நோவை உணர்வார். இது சிறிய வடிவிலான கசையடியாகும்.

Dr. Garfield[24] அவர்கள் தனது பிரபலமான நூலில் உள மற்றும் நடத்தை சிகிச்சைகள் பற்றி இவ்வாறு விளக்குகிறார்: மணிக்கட்டில் ரப்பர் பட்டியினால் அடிப்பதை மின்சார தாக்கத்தை விட சிறந்த முறையாக அவர் கருதுகிறார். மின்சாரத்தை பாய்ச்சும் சாதனம் இங்கு தேவையில்லை. நோயாளி பாரிய அபாயத்துக்கு உட்படத் தேவையில்லை. அவர் இந்த முறைமையை வீட்டிலிருந்தே பயன்படுத்தலாம். தனக்குத் தானே பிரயோகிக்கலாம். இதன் மூலம் தான் அடிமைப்பட்டிருந்த பழக்கங்களை மாற்றியமைக்கலாம். தன்னை கட்டுப்படுத்திக் கொண்டிருந்த சிந்தனைகளிலிருந்தும் விடுபடலாம்.

உடலுக்கு வழங்கப்படுகின்ற தண்டனைகள் மனிதனை இழிவுபடுத்துபவை. மனிதாபிமானமற்றவை என்றவாறான கோசங்கள் தொடர்பாகவும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இவை மிகப்

பலவீனமான பொதுமைப்படுத்தல்களின் மீது உருவாக்கப்பட்ட கோஷங்களாகும். ஏனெனில் தண்டனை வழங்கப்படும் கலாசாரச் சூழமைவினாலேயே தண்டனை பற்றிய கருத்தாக்கம் தாக்க மடைகிறது என சமூக உளவியல் மற்றும் சமூக மானிடவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உதாரணமாக சூடானை எடுத்துக் கொண்டால் -குறிப்பாக 90 களில்- ஆசிரியர்கள் பிள்ளைகளை உடல் ரீதியாக தண்டிப்ப தனால் மனித கௌரவத்துக்கு எவ்வித தீங்குகளோ குறைபாடு களோ ஏற்பட்டதில்லை. கடுமையாக வேதனை தரும் விதமாக அடித்த போதிலும் கூட ஆசிரியர்களின் அடிக்கு எதிராக பெற்றோர் கோபப்படுவதில்லை. பெற்றோர் கூட தமது பிள்ளைகள் தொடர் பாக ஆசிரியர்களிடம் இவ்வாறு கூறுவார்கள் எனவும் அங்கு ஒரு பழமொழி கூறப்படுவதுண்டு: ''சதை உங்களுக்கு; எலும்பு எங்க ளுக்கு!''.

அடியின் வேதனையை சகித்துக் கொள்வது ஆண்மையும் மன பலமும் பூரணமாக உள்ளதை நிரூபிப்பதாகவே இங்கு கருதப் பட்டது. சூடானில் அண்மைக் காலம் வரை திருமண விழாக் களில் மணமகனிடம் சாட்டையடி வாங்குவதற்கு இளைஞர்கள் போட்டி போட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அடியினால் அவர்களது முதுகில் இரத்தம் வழிந்தோடும். யுவதிகள் அவர்களது தைரியத்தையும் தாங்கு சக்தியையும் கண்டு குலவை இடுவார்கள்.

உள ரீதியான தண்டனை உடல் தண்டனையை விட அதிக வலியை ஏற்படுத்தக் கூடியது. அடிப்பதனைவிட அது மனித கௌரவத்தை பாதிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்த வர்கள் தாம் விரும்பக் கூடிய, தங்களை கண்ணியப்படுத்தக் கூடியவர்களின் முன்னிலையில் கண்டிக்கப்படுவதனை விட கடுமையான உடல் ரீதியான தண்டனை வழங்கப்படுவதனை மேலாக கருதுகின்றார்கள்.

மது அருந்துவதை தடுப்பது தனிமனித விவகாரத்தில் தலை யிடுவதாகும்; அது அவனது சுதந்திரம்; அதனை தடுக்கக் கூடாது...

என்ற வாதங்களை ஒரு புத்திசாலி ஏற்க மாட்டான். அக்கருத்துக் களை பாதுகாக்கவோ, அவற்றை மையப்படுத்தி சிந்தனைகளை உருவாக்கவோ முற்படவும் மாட்டான். அதிகமான ஐரோப்பிய சிந்தனையாளர்கள் மது அருந்துவதனை அனுமதிப்பது பாரதூர மானது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அபின், மோர்பின் (Morphine) போன்ற போதைப் பொருட்களைப் போன்றே மதுவைக் கருத வேண்டும் என்கிறார்கள். இவற்றை அனைத்து நாடுகளும் தடுத் துள்ளன. இவற்றை பயன்படுத்துவதையும், கடத்துவதையும், விற்பதையும் தடை செய்துள்ளன. சில நாடுகளில் அவற்றை விற்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகும்.

மன வளர்ச்சி குன்றியவர்கள், மனத் தடுமாற்றம் உள்ளவர்கள், மனநோயாளர்கள் போன்றோரை தண்டனை முறையில் சிகிச் சைக்கு உட்படுத்துவது பொருத்தமானது என்று பல ஐரோப்பிய உளவியல் அறிஞர்கள் கருதுகின்றார்கள். குறிப்பாக அவர்களுக் கும் சமூகத்துக்கும் பாதிப்பாக அவர்களது நடத்தைகள் அமையும் போது இந்த அணுகுமுறையை அவர்கள் பரிந்துரைக்கிறார்கள் என்பதை மேலே நோக்கினோம்.

மேற்குறித்த உரிமைக் கோஷங்களை எழுப்புவோர் தண்டனை முறையை விடவும் பாதிப்பான தீமைகளையோ, உடலையும் உள்ளத்தையும் சமூகத்தையும் பாதிக்கின்ற விடயங்களையோ கண்டுகொள்வதில்லை. ஒருவர் மதுவை அருந்தும்போது அவர் நஞ்சையே அருந்துகிறார். அது அவரது அனைத்து உடல் உறுப்பு களையும் பாதிக்கிறது. அவரது குடும்பமும் பிள்ளைகளும் மிகக் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். இது மருத்துவ ரீதியாக உறுதிப் படுத்தப்பட்ட விடயமாகும்.

நாளை மேற்குலகு மொத்தமாக போதைக்கும் மது உற்பத்திக் கம்பனிகளின் ஆதிக்கத்துக்கும் பலியாகத்தான் போகிறது. அங்கு ஒருவர் மது அருந்தத் தொடங்குவார். பின்னர் படிப்படியாக அதில் எல்லை மீறுவார். இறுதியில் மொத்தமாகவே அதற்கு அடிமைப்பட்டு விடுவார். ஆனால் யாரும் எதனையும் கண்டு கொள்ள மாட்டார்கள் ஏனெனில், அது அவரது தனிப்பட்ட

வாழ்வு. அவர் விரும்பியவாறு அதனை வாழலாம். ஏனெனில் அவர்கள் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் புனிதப்படுத்துப வர்கள்.

மதுவுக்கு அடிமையாகின்றவர் தனக்கும் வாழ்வுக்கும் தீமையே ஏற்படுத்திக் கொள்கிறார். குடும்ப வாழ்வை பாழாக்கிக் கொள் கிறார். மனைவி பிள்ளைகளை கடுமையாக அடிக்கிறார். நிர்க் கதியான மனைவி-பிள்ளைகளுக்கு அபயமளிக்கும் நிறுவனங்கள் நிரம்பி வழிகின்றன. மது அருந்துபவர் தனது பிள்ளைகளுக்கு பிழையான முன்மாதிரியொன்றை வழங்குகிறார். இதனால் பெற் றோர் பற்றி இழிவான ஒரு கருத்தையே பிள்ளைகள் உருவாக்கிக் கொள்கிறார்கள். மனக் குழப்பங்களோடு அவர்கள் சமூகத்துக்குச் செல்கிறார்கள். பெற்றோரின் போதைப் பழக்கம் அனந்தரமாக பிள்ளைகளிடம் தொற்றிக் கொள்கிறது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் செய்யப்பட்ட அனைத்து ஆய்வுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. போதைக்கு அடிமை யானோரின் பிள்ளைகள் -பேரப் பிள்ளைகள் கூட- போதைக்கு அடிமையாகும் விகிதம் மிக உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. போதைப் பழக்கமற்ற குடும்பங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது ஆண் பிள்ளைகள் இங்கு சுமார் 50% அளவு போதைக்கு அடிமையாகின்றார்கள்.[25]

இந்த உயர்ந்த விகிதாசாரம் பரம்பரை அலகுகள் தொடர்பான ஆய்வாளர்களையும் தூண்டி விட்டுள்ளது. ஒருவர் தனது பெற் றோரிடமிருந்தும் பாட்டன்மாரிடம் இருந்தும் பெறுகின்ற பரம் பரை அலகுகள் எவ்வாறு மதுவுக்கு அடிமைப்பட வழியமைக் கின்றன என்ற ஆய்வை அவர்கள் மேற்கொண்டனர்.

Blum, Noble ஆகிய ஆய்வாளர்கள் பரம்பரை அலகுகள் தொடர் பாக பகுப்பாய்வு செய்தார்கள். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி மரணித்தவர்களின் கலங்களையும் திசுக்களையும் வேறு காரணங்களால் மரணித்தவர்களின் கலங்களோடும் திசுக்க ளோடும் ஒப்பிட்டு ஆராய்ந்தார்கள். American Medical Association இன் சஞ்சிகையில் அவர்களது ஆய்வு பிரசுரிக்கப்பட்டுள்ளது.[26]

மனித உடலில் DopomineD2 receptor gene என்றொரு நிறமூர்த்தம் காணப்படுவதாகவும், மூளையிலுள்ள Dopomin neuro-transmitte என்ற சுரப்பின் செயற்பாட்டை கட்டுப்படுத்தும் சாத்தியத்தையும் கண்டறிந்தனர். Dopomin சுரப்பும், Schizophrenia என்னும் மனச் சிதைவு நோயும், Parkinson's Disease என்னும் பக்கவாதமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும். Schizophreniaவின் போது Dopomin சுரப்பு அதிகரிப்பதாகவும், Parkinson's Disease இன் போது அந்தச் சுரப்பு குறைவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை சமநிலைப்படுத்த மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. சிலபோது இன்ப உணர்வுக்கும் நிம்மதி உணர்வுக்கும் கூட இந்த Dopomine உடன் தொடர்பு இருக்கலாம் எனவும் சில நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றன.(27)

சில வகையான போதைப் பொருட்களை அல்லது மதுவை உட்கொள்ளும்போது மூளையிலுள்ள Dopomin neuro-transmitte இன் செயற்பாடு அதிகரிக்கிறது என்ற வகையில், பரம்பரையாக Dopamine குறைபாடுள்ளவர்கள் பிறரை விட விரைவாக மதுவுக்கு அடிமையாகிறார்கள் என Noble கருதுகிறார். மூளையில் Dopamine இன் அளவு அதிகரிக்கும்போது ஏற்படும் இன்பமே இதற்குக் காரணமாகும். என்றாலும் இந்த விடயம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மதுப்பாவனையிலும் மதுவுக்கு அடிமையாதலிலும் சமூக-உளவியல்மற்றும் பயிற்றுவித்தல் சார் அம்சங்கள் ஏற்படுத்தும் தாக்கத்துடன் ஒப்பிடும் போது, பரம்பரை அலகு சார்ந்த அம்சங்கள் மிகக் குறைவான அளவே முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில், பாரம்பரிய அலகு ஒருவரை மதுக் கடைக்கு கட்டாயப் படுத்தி அழைத்துச் செல்வதில்லை. மதுவின் முதல் கோப்பையை அருந்தக் கொடுத்து அதற்கு அடிமையாக்குவதும் இல்லை. அதிகபட்சமாக அதனால் செய்ய முடிவதெல்லாம், குறித்த நபருக்கு மதுவின் மீது ஏனையோரை விட அதிக நாட்டத்தை ஏற்படுத்துவதுதான். தொடர்ந்து மதுவை அருந்துவதும் அடிமையாவதும் அவர்தான்.

இத்தகைய பாரம்பரிய அலகைக் கொண்டோருள் மிகச் சொற்ப தொகையினர் மது அருந்திய போதும் அதற்கு அடிமையாக வில்லை என Blum, Noble ஆகியோர் தமது ஆய்வில் கண்டறிந்த னர். அவ்வாறே இப்பாரம்பரிய அலகை கொண்டிராத ஒரு தொகையினர் கூட மதுவுக்கு அடிமையாகி இருப்பதாக அவர்கள் கண்டனர். இப்பாரம்பரிய அலகு ஆண்களிலும் பெண்களிலும் காணப்பட்ட போதிலும், அமெரிக்காவில் போதைக்கு அடிமை யான ஆண்களின் தொகை பெண்களின் தொகையை விட ஐந்து மடங்காக காணப்பட்டுள்ளது.

எனவே, மதுப்பாவனை இப்போது ஒரு நோய் (Disease) என்று பார்க்கப்படுவதில்லை. மாற்றமாக அது ஒருவரது பழக்கமாகவே நோக்கப்படுகிறது. அல்லது அவர் உடல் ரீதியாக தனக்குத்தானே இழைத்துக் கொள்ளும் தீமையாக கருதப்படுகிறது. பிழையான முன்மாதிரி, பெற்றோர், நண்பர்கள், சமூகம் போன்ற காரணிகள் மது பரவுவதில் பொதுவாக செல்வாக்குச் செலுத்துகின்றன.

மதுவுக்கு அடிமையான பெற்றோர்களும் உறவினர்களும் பிள் ளைகள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினால் பிள்ளைகளின் அன்பில் அல்லது வெறுப்பில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை என்றே தோன்றுகிறது. Sheila, Blume ஆகியோரது ஆய்வும் இதனையே பின்வருமாறு வலியுறுத்துகிறது:

''போதைக்கு மருத்துவம் செய்ய வரும் மிக அதிகமானோரது பெற்றோர் அல்லது பெற்றோரின் பெற்றோர் அல்லது உடன் பிறப்புகள் மதுவுக்கு அடிமைப் பட்டிருந்தவர்களாவர். இந்த நோயாளிகள் பெரியவர்களாகும் போது தமது உறவினர்களுள் ஒருவரை தீவிரமாக பின்பற்றுகின்றனர். இது சிகிச்சையை சிரமத் துக்கு உள்ளாக்குகிறது. உதாரணமாக ஒருவரது தந்தை போதை யின் காரணமாக மரணித்திருந்தால் பிள்ளையும் அதே காரணத் தால் மரணிக்க வேண்டும் என்று இயல்பாகவே நினைக்கின்றார். தான் திருந்துவது அல்லது குணமடைவது பெற்றோருக்குச் செய் யும் துரோகம் என்று அவர் நினைக்கிறார். இன்னொரு கோணத் தில், மதுவுக்கு அடிமையான பெண் ஒருவர் சிகிச்சைக்காக

கொண்டு வரப்படுகிறார். அவர் சிகிச்சைக்கு தன்னை உட்படுத்த மறுக்கிறார். தான் மதுவுக்கு அடிமையாகி இருப்பதையும் ஏற்க மறுக்கிறார். ஏனெனில் அவர் மதுவுக்கு அடிமையான தனது பெற்றோரை வெறுக்கிறார். அவர்களைப் போன்று இருக்க அவர் விரும்புவதில்லை.(28)

ஒரு மனிதர் மது அருந்துவதில் அல்லது போதைப் பொருள் பாவனையில் எல்லை மீறுகிறார். மன வளர்ச்சி குன்றிய ஒரு சிறு வன் தலையை சுவரில் மோதிக் கொள்வது போன்று அவர் குடி வெறியில் தனது தலையை அடித்துக் கொள்கிறார். பிறழ்வான பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டு சிறுவர்களையும் பெண்களை யும் அபாயத்துக்கு உட்படுத்துகிறார். இது எத்துணை பெரிய தீமை! கிழக்குலகும் மேற்குலகும் இன்று மது அரக்கனால் ஆட்டிப் படைக்கப்படுகின்றன. தனிமனித சுதந்திரம் என்ற பெயரில் மது வுக்கு அடிமையானவர் அப்பாவிப் பிள்ளைகளுக்கும் அன்பான மனைவிமாருக்கும் தான் விரும்பியதை செய்ய விட்டுவைக்கப் படலாமா? அல்லது அவரது கைகளைப் பிடித்து தேவையான சிகிச்சைகளை வழங்கி அவரை பாதுகாக்க வேண்டுமா?

மதுவில் திளைத்தவர்களாக இருந்து கொண்டு சிகிச்சைக்கு வருவது அல்லது நிர்ப்பந்தமாக சிகிச்சைக்கு கொண்டு வரப்படு வது நிலமை சீராகி விட்டதையோ அல்லது அவர் குணமடைந்து விட்டதையோ காட்டாது என்று பல ஆய்வுகள் சுட்டிக் காட்டு கின்றன.(29)

போதை மற்றும் மதுப்பாவனைக்கான சிகிச்சையாக உள-உடல் தண்டனைகள் அமுல்படுத்துவதை ஐரோப்பிய மேற்குலகு இறுதி யில் நிர்ப்பந்தமாக ஏற்றுக் கொண்டுவிட்டது. ஆனால் ஒருவர் மதுவுக்கு அடிமையாகி, பாதையில் விழுந்து கிடந்து, அனைத்துத் தீங்குகளும் ஏற்பட்டதன் பின்னரே அங்கு தண்டனை முறை அல்லது சமூக-உளச் சிகிச்சை முறை அமுல்படுத்தப்படுகிறது. போதைப் பொருள் மற்றும் மதுப்பாவனை ஒரு கட்டத்தை தாண்டிய பிறகே இரசாயனப் பதார்த்தம், மின்சாரம், அடக்கிப் பணிய வைத்தல், விரும்பி ஏற்கச் செய்தல் போன்ற அணுகு முறைகள் அங்கு பயன்படுத்தப் படுகின்றன.

இஸ்லாம் போதையையும் மதுப்பாவனையையும் தடுத்ததன் மூலம் பிரச்சினைக்கான வேர்களையே பிடுங்கியெடுத்தது. ஒருவர் போதைக்கு அடிமையாகும்வரை அது எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அவர் மதுவை பயன்படுத்த ஆரம்பிக்கும்போதே தண்டனை வழங்கி சிகிச்சை செய்கிறது.

சமூக அழுத்தங்களும், அழகிய முன்மாதிரிகளும்தான் மதுவை தடுப்பதற்கும் தவிர்ப்பதற்குமான சிறந்த வழி என்பதை நவீன உளவியல் மருத்துவமும் மானிட ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.

போதைப்பாவனையால் பாதிக்கப்பட்டவர்களை அங்கத்தவராக கொண்டு இயங்கிய 'போதைக்கு அடிமைப்பட்டவர்களின் நட்புறவுச் சங்கம்' (ஜம்இய்யது அஸ்திகாஇல் முத்மினீன்) என்ற அமைப்பும் இதனைத்தான் செய்தது. சமூக அழுத்தத்தையும் ஆன்மீக வழிமுறைகளையும் அது பயன்படுத்தியது. போதைக்கு அடிமையானவர் தனது பலவீனத்தை ஏற்றுக் கொண்டு அதிலிருந்து விடுபட தெய்வீக உதவியொன்று தேவை. மதுவால் பாதிக்கப்பட்டவரை பூரணமாக குணப்படுத்த உள, உடல் தண்டனைகளும் அவசியம். மேற்கூறிய உண்மைகள் இதனையே உறுதி செய்கின்றன.

மதுவை சார்ந்திருத்தல் என்ற பிரச்சினைக்கு இஸ்லாம் முன்வைத்த தீர்வானது அத்தனை ஆய்வுகளினதும் சாரமாக அமைந்துள்ளது. மட்டுமன்றி, போதைக்கு அடிமையாக முன்னரே அதன் வேர்களை அறுத்து மதுப் பழக்கத்தை இல்லாமலாக்கும் விதமாக அமைந்துள்ளது. இஸ்லாம் தனது அடிப்படைகளுக்கு மக்களை கட்டுப்படச் செய்யக் கூடிய சமூக-ஆன்மீக விடயங்களில் கவனம் செலுத்துகிறது. சமூகத்தில் பெரும்பான்மையினரின் கொள்கைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் மாற்றமாக ஒருவர் மது அருந்தினால் அவரது தவறை உணர்த்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இதனை காண்பிக்கின்றன. இவ்வழிமுறையின் வினைத்திறனை நவீன ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.[30]

நபி (ஸல்) அவர்கள் மது அருந்தியவரை கண்டித்தமை, அத்தகையவர்களோடு கடுமையாக நடந்து கொண்டமை, முகத் திலே மண்ணை வாரி அடித்தமை போன்ற செயற்பாடுகள் எத னைக் காட்டுகின்றன? மது அருந்துதல் என்ற குற்றத்தின் பார தூரத்தையே மது அருந்தியவருக்கு உணர்த்துவதும், அவரது செயல் தொடர்பாக முஸ்லிம் சமூகம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதுமே அச்செயல்களின் நோக்கமாக இருந்தது.

வேதனை தரக்கூடிய சிகிச்சை முறையானது மது அருந்தியவ ருக்கு வழங்கப்படும் கசையடியை குறிக்கிறது. அல்லது ஈத்த மட்டையால் வழங்கப்படும் தண்டனையை குறிக்கிறது. இது செயல்திறன் கூடிய ஒரு முறையாகும். ஒரு புறம் மக்கள் முன்னி லையில் அது அவமான உணர்வை ஏற்படுத்துகிறது. மறுபுறம் கசையடியுடன் கண்டனத்தைப் பெற்றுத் தருகிறது.

நடத்தையியலாளர்கள் வழங்கியுள்ள தூண்டல்-துலங்கல் தொடர்பான விளக்கங்கள் மிருகங்கள் மீதான பரிசோதனை களுக்கு வேண்டுமானால் முக்கியமாக இருக்கலாம். ஆனால் மனிதனைப் பொறுத்தவரையில் அவை அவ்வளவு முக்கியமான வையல்ல. ஏனெனில் அல்லாஹ் அவனுக்கு புத்தி, அறிவு, சிறந்த நினைவாற்றல், பாரிய கற்பனைத்திறன் என்பவற்றை வழங்கி யுள்ளான். அவற்றினூடாக மனிதன் பலதரப்பட்ட அனுபவங் களை பெற்றுக் கொள்கிறான். தனது பிழையான நடத்தைக்கும் அதிலிருந்து விலகச் செய்கின்ற தண்டனைக்கும் இடையில் நுணுக்கமாக தொடர்புபடுத்திப் பார்க்க அவனால் முடியும்.

அந்த வகையில், மது அருந்திய ஒருவருக்கு தண்டனை வழங் கப்படும்போது தூண்டல்-துலங்கல் அனுபவம் இயல்பாகவே அவருக்கு கிடைக்கிறது. ஒவ்வொரு சாட்டையடிக்கும் இடையில் அவர் சில மிடறு மதுவை உறிஞ்சவோ முகரவோ சுவைக்கவோ வேண்டிய அவசியம் எதுவும் அங்கு இல்லை. மிருகங்கள் மீதான பரிசோதனைகளை மனித அனுபவங்கள் மீது முழுமையாக ஏற்றும் இம்முயற்சியானது உண்மையில் மனித நடத்தை பற்றிய குறுகிய, உயிரோட்டமற்ற கருத்தாக்கங்களைக் கொண்ட

நடத்தையியல் கோட்பாடு சார்ந்தவை ஆகும். ஆனால் 'அறிவாற்றல் சார் உளவியல் விஞ்ஞானப் புரட்சி' ஏற்பட்ட பிறகே மனிதன் என்பவன் சிந்திக்கும் திறனும், அபார ஞாபக சக்தியும், தான் பெறுகின்ற தகவல்களையும் தூண்டல்களையும் பகுப்பாய்ந்து வகைப்படுத்துவதற்கான எல்லையற்ற ஆற்றலும் கொண்டவன் என்ற பார்வை உருவானது.

தூண்டல்-துலங்கல்களுக்கு இடையிலான நேர நியம நோக்கில் மின்சார சிகிச்சை முறை அதிக நுணுக்கம் உடையது என்பதையும், இரசாயன சிகிச்சை முறையானது நேர நியம விடயத்தில் குறைபாடுடையதாக இருந்த போதும் போதைக்கு அடிமையானவருக்கு சிகிச்சை செய்வதில் அதுவே செயல்திறன் மிக்கது என்பதையும் மேலே கண்டோம்.

மதுவுக்கு இஸ்லாம் வழங்கும் தண்டனை வரையறுக்கப்பட்ட (ஹத்) தண்டனையாகவோ அல்லது நீதிபதி தீர்மானிக்கும் (தஃஸீர்) தண்டனையாகவோ இருக்கலாம். பலதரப்பட்ட இஸ்லாமிய சமூகங்களின் சூழ்நிலையை வைத்தே அது தீர்மானிக்கப்படும். பெரும்பான்மையான முஸ்லிம்கள் மதுவுக்கும் அதன் தீங்குகளுக்கும் எதிராக பலமாக இணைகின்ற போது போதை வயப்பட்டவரை சமூக மயப்படுத்துவதற்கு சாதாரண சமூக அழுத்தமோ சாதாரண தண்டனையோ போதுமானதாகும்.

நபியவர்களின் காலத்தில் மதீனா சமூகத்தில் இதுதான் இடம் பெற்றது. மது அருந்துபவரை மீட்டுக் கொண்டு வர சிறிதளவு சமூக அழுத்தமும் சிறிதளவு தண்டனையும் அங்கு போதுமாக இருந்தது. அந்த தூய்மையான சமூகத்தில் அனைவரும் ஒரு நிறுவனம் போன்று செயற்பட்டனர். இன்றிருக்கும் பாரிய நிறுவன அமைப்பை அது ஒத்திருந்தது. மட்டுமன்றி அது சமூகம் தனது ஆன்மீக சக்தியாலும், உண்மையான சகோதரத்துவத்தாலும், ஒளி வீசும் விசுவாசத்தாலும், அதிகார பலத்தாலும் இன்றைய நிறுவனங்களை விட சக்தி மிக்கதாக இருந்தது.

ஆனால் இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து, கலீபா உமரின் காலத்தில் எகிப்து, ஈராக், பலஸ்தீன் போன்ற நாடுகளையும்

உள்ளடக்கும் வகையில் விசாலித்தபோது, ஆன்மீக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மாத்திரம் தாக்கம் ஏற்படுத்தும் ஆற்றல் பல வீனமடைந்தது. அந்நிலையில், மது அருந்துவதற்கான தண்டனை 80 கசையடியாக அதிகரிக்கப்பட்டது. அத்தோடு நாடு கடத்தும் தண்டனையும் அமுல்படுத்தப்பட்டது.

போதைக்கு அடிமையான வரை சீர்திருத்துவதற்கான சிறந்த வழிமுறை அவரது சிந்தனையிலும், நம்பிக்கைகளிலும், அகப் பார்வையிலும், சூழமைவிலும் தீவிர மாற்றங்களை ஏற்படுத்து வதே என நவீன அறிஞர்கள் பலர் வலியுறுத்துகின்றனர். அந்த வகையில், நாடு கடத்துவதென்பது மதுவுக்கு அடிமையானவரை சீர்திருத்துவதற்கான சிறந்த முறைமையாகும். இது அவரை கெட்ட சகவாசத்தை விட்டும் தூரமாக்குகிறது; மதுவற்ற புதியதொரு வாழ்வை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை கொடுக்கிறது.

மது போதைக்கு சிகிச்சை அளிப்பதில் நாடு கடத்துவதன் பயனை நாம் இன்று நன்றாக அறிந்து கொள்ள முடிகின்றது. முஸ்லிம் நாடுகளில் மதுவுக்கு அடிமையாகி அதற்கான உள சிகிச்சைகளைச் செய்து கொள்ள மறுக்கும் பெருந்தொகையினர் கூட, மதுவருந்த தடை விதித்திருக்கும் வளைகுடா நாடுகளுக்குள் காலடி வைத்ததுமே மது அருந்துவதை முற்றாக விட்டு விடுகி றார்கள். பலருக்கு இத்தகைய திடீர் மாற்றத்துக்கு தேவைப்படும் காலம் தமது நாட்டிலிருந்து அடுத்த நாட்டுக்கு விமானப் பயணம் செய்ய எடுக்கும் நேரம் மாத்திரமே. அவர்களுள் அனேகர் சொந்த நாட்டுக்குத் திரும்பிய பிறகும் கூட மதுவை நாடுவதில்லை.

மது, போதை, புகைத்தல் போன்றவற்றிலிருந்து விடுவிப்பதற் கான சிகிச்சைக்கு துறை சார்ந்தவர்கள் சில சுவாரசியமான முறைகளை முயன்றிருக்கிறார்கள். குறித்த நபரை இப்பழக்கங்க ளுக்கு அடிமையாக்கிய தூண்டல்கள் காணப்படாத புதிய சூழ லொன்றுக்கு திடீரென்று மாற்றுவது (Stimulus Deprivation) அத் தகைய முயற்சிகளுள் ஒன்றாகும். அந்த வகையில், பிரத்தியேக அறையில் அவர் வைக்கப்பட்டிருப்பார். அங்கு வெளிச்சம், சப்தம் எதுவும் இருக்காது. எத்தகைய தொந்தரவும் இருக்காது. அவரது

கட்டிலருகில் இரண்டு பைகள் காணப்படும். ஒன்றில் நீரும் மற்றையதில் திரவ உணவும் இருக்கும். கழிவறையும் அங்கு காணப்படும். நோயாளி அடிமைப்பட்டிருந்த பழக்கத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் வாசகங்கள் மட்டுமே அங்கு ஒலிக்கும். சிகிச்சை செய்பவர் அவ்வப்போது அவற்றை நோயாளி இருக்கும் அறையில் ஒலிக்கச் செய்வார். சிலபோது எந்த ஒலியும் இருக்காது. வெளியுலகத் தொடர்பும் இருக்காது. நேரம் பற்றிய கணக்கும் அவருக்குத் தெரியாது.

நோயாளி தன்னை சுய விசாரணை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பமாக அது அமையும். வாழ்க்கையில் முதல் தடவையாக தனது துர்ப்பழக்கத்தின் தீங்குகளை நேரடியாக அங்கு அவர் உணரத் தொடங்குவார். குணமடையவும் நாட்ட சக்தியை பலப் படுத்தவுமான தன்னம்பிக்கையை மீளப் பெறுவார். தனது உள்ளத் துடன் அதிகமாக உரையாடுவார். சமூக உளவியல் பிரச்சினைகள் பற்றியும் தன்னை இந்த நிலைக்கு இட்டுச் சென்ற காரணிகள் பற்றியும் சிந்திப்பார். இவற்றை வெளியுலகில் உணர்வதற்கான சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்திருக்காது. இந்த அமைதியும் அவ காசமும் உறுத்தலும் வெளியில் ஏற்பட்டிருக்காது. புகைத்தலுக்கு அடிமையாகியிருந்த பலர் இச்சிகிச்சைக்குப் பிறகு அதனை விட்டு விட்டதாக அல்லது குறைத்துக் கொண்டதாக இப்பரிசோத னையை மேற்கொண்ட ஆய்வாளர்(31) உறுதிப்படுத்துகிறார்.

அத்தியாயம்: 08

போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் இறை நம்பிக்கையின் பங்கு

உள நோயாளிகளுக்கும், மது மற்றும் போதைப் பொருட்க ளுக்கு அடிமையான முஸ்லிம்களுக்கும் சிகிச்சை செய்வதில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை ஏற்படுத்துகின்ற தாக்கம் மகத்தா னது; பல அற்புதங்களை நிகழ்த்தக் கூடியது. போதைக்கு அடி மைப்பட்டு, நாட்ட சக்தியை இழந்து, உடலாரோக்கியம் குன்றி, பிள்ளைகளைக் கைவிட்டு, பண்பாடு கெட்டுப் போய்க் கிடந்த ஒருவர் ஈமானிய சிகிச்சையை பெற்றுக் கொள்கிறார். ஒரு சில நாட்களிலேயே அவர் நல்ல மனிதராக, வணக்கவாளியாக, சிறந்த கணவனாக, சிரமப்பட்டு உழைக்கும் தந்தையாக மாறி விடுகிறார். போதையோடு இருந்த காலத்தில் சீர்கெடுத்தவற்றை சீராக்கு வதற்கு கடுமையாக முயற்சிக்கிறார். இத்தகையோர் அனேகமாக ஏற்கனவே மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சைகளில் எவ்வித பிரயோசனமும் இன்றி நீண்ட நாட்களை கழித்தவர்களாகவே இருப்பர்.

இஸ்லாமிய நாடுகளில் உளவியல் மருத்துவத்தை மேற் கொள்கின்ற பலர் மேற்குலக ஐரோப்பிய, அமெரிக்க சிந்தனை களால் தாக்கமுற்றவர்கள். போதைக்கு அடிமைப்பட்டவரின் ஆன்மாவிலும் உள்ளத்திலும் ஈமான் என்ற தூண்டற் காரணி ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அவர்கள் எதுவும் அறியாமல் இருக் கிறார்கள். தம் முன் வந்திருப்பவர் அல்லாஹ் தடுத்த பெரும் பாவம் ஒன்றைச் செய்த குற்ற உணர்வுடன் வந்திருக்கிறார் என்று அவர்களில் பலருக்கு தோன்றுவதே இல்லை.

உண்மையில் அம்மனிதரது மனச்சுமை குறைக்கப்பட வேண் டும். அல்லாஹ்வின் அருளிலும் மன்னிப்பிலும் நம்பிக்கையிழந் துள்ள அவருக்கு யாராவது கை கொடுக்க வேண்டும். அவரது உள்ளத்தில் ஒரு மீள் சிந்தனை தோற்றுவிக்கப்பட வேண்டும். அவரது ஆன்மாவும் இறையச்சமும் நாட்ட சக்தியும் பலப்படுத் தப்பட வேண்டும். அவநம்பிக்கையும் போதைக்கு அடிமைப் பட்ட நிலையும் படிப்படியாக களையப்பட்டு உள ஆரோக்கியத் தையும் நிம்மதியையும் நோக்கி அவர் வழிகாட்டப்பட வேண்டும்.

போதைக்கு அடிமையான ஒருவரின் ஆன்மீகப் பகுதியை புறமொதுக்கி விட்டு அவரது பிரச்சினையை இனங்காண முனை கின்ற துறை சார் அறிஞர்கள், மனித உறுப்புகளுடன் அல்லது குறுகிய சமூக உளவியல் கண்ணோட்டங்களோடு மாத்திரம் தம்மை சுருக்கிக் கொள்கின்றனர்.

இத்தகையோர் போதைப்பொருளின் அல்லது மதுவின் நச்சுத் தன்மையை உடலிலிருந்து நீக்கி அதனை தூய்மைப்படுத்து வார்கள். அல்லது போதையை கைவிட்டதால் உடலில் ஏற்படும் பக்க விளைவுகளை மாத்திரைகளைக் கொடுத்து சரி செய்ய முனைவார்கள். ஆனால், குறித்த நோயாளி மீளவும் மதுவை நோக்கிச் செல்வதை இவர்கள் அனேகமாக பொருட்படுத்துவ தில்லை. மட்டுமன்றி, மீண்டும் மதுவை நோக்கிச் செல்லும் தோற்றப்பாட்டை பரம்பரை இயல்பு என்று நியாயப்படுத்தி, சிகிச்சையோ உபதேசமோ பயமுறுத்தலோ பயனற்றது என்று

கூறுவதோடு இவர்கள் நிம்மதியடைந்து விடுகிறார்கள். சிலபோது அவரை 'மன நோயாளி' (Psychopath) என்றோ 'சமூகப் பிணக்கம் கொண்டவர்' (Sociopath) என்றோ வகைப்படுத்தி, சிகிச்சை தோல்வியடைந்தமைக்கான பொறுப்பிலிருந்து மனநல மருத்து வரை விடுவித்து விடுகிறார்கள்.

ஒருவர் போதைக்கு அடிமையாக முன்னர் அவரது ஆளுமை எவ்வகையானது என்பதை வரையறுப்பதில், நவீன உளவியல் அறிவாய்வுகளும் பரிசோதனைகளும் இதுவரை தோல்வியே கண் டுள்ளன. போதைக்கு அடிமையானவரை 'சமூகப் பிணக்கம்' என்ற நோயுடன் தொடர்புபடுத்துவதா, அல்லது வேறு ஆளுமைப் பிறழ்வுடன் தொடர்புபடுத்துவதா என்ற ஐயப்பாடு அவற்றுக்கு இன்னும் உண்டு. ஆயினும், போதைக்கு அடிமையானோர் பற்றிய மேற்குறித்தவாறான நியாயமற்ற வகைப்பாட்டையே இத்துறை சார்ந்த பலரும் விடாப் பிடியாக கொண்டிருக்கின்றனர்.

உடலுறுப்புகள் சார்ந்த நோய்க் குறிகளில் தீவிர கவனம் செலுத்தி சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள் அந்நோய்க் குறிகளை தணிக்கக் கூடிய மருந்துகளை தாராளமாக நோயாளிக்கு கொடுக் கிறார்கள் என்பதை பல நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. அம்மருந்துகள் பிரயோசனமானவையா அல்லது தீங்கானவையா அல்லது எந்தத் தாக்கமும் அற்றவையா என்று அவர்கள் கவ னிப்பதில்லை. இது மிக அபாயகரமான விடயமாகும். ஏனெனில் மதுவை கைவிட்டதன் பின்னர் அதன் வலியை மறப்பதற்கு வழங் கப்படும் மருந்துகள் தீங்காகவோ அல்லது முற்றாக குணமடை வதை தடுப்பவையாகவோ அமைய முடியும் எனவும் அவ்வாய் வுகள் உறுதிப்படுத்துகின்றன.(1)

இவ்வகையான மருந்துகள் நோயாளியின் ஆளுமையை மீள கட்டியெழுப்பும் பணியை பலவீனப்படுத்தி விடும். அவரது விழிப்பு நிலையையும் உற்சாகத்தையும் நாட்ட சக்தியையும் குறைக்கும். குணமடைய வேண்டும். மதுவை நோக்கி மீளக் கூடாது. வலிகளைத் தாங்கி வெற்றி பெற வேண்டும். என்றவா

றான உறுதிகளை அவரிடமிருந்து தகர்த்து விடும். மட்டுமன்றி, கஷ்டத்திலிருந்து விடுபட உட்கொள்ளும் மாத்திரைகளுக்கே இறுதியில் அவர் அடிமைப்படும் நிலை உருவாகி விடும்.[2]

போதைக்கு அடிமையாதல் என்பது ஆன்மீகத்துக்கோ சமய நம்பிக்கைக்கோ தொடர்பற்ற ஒரு சமூக-உளவியல் பிரச்சினை என்று கருதுவோர் பற்றி ஏலவே நாம் விரிவாக விவரித்துள்ளோம். எனவே இங்கு ஒரு விடயத்தை மாத்திரம் நினைவுபடுத்த விரும்புகிறோம். அதாவது, மதுவுக்கு அடிமையான ஒரு முஸ்லிமின் நோயை இனங்காண்பதற்கு மேற்கு மைய சமூக-உளவியல் கண்ணோட்டங்களை பயன்படுத்துவதும் அவற்றின் ஒளியில் சிகிச்சை வழிமுறைகளை தீர்மானிப்பதுவும் மேற்குலக கண்ணோட்டங்களுடனேயே முரண்படக்கூடிய ஒரு விடயமாகும்.

போதைக்கு அடிமையான முஸ்லிமின் மனோநிலையையும், பாவம் குறித்த குற்ற உணர்வையும் தீர்மானிப்பது அவனது நம்பிக்கைகளும் அவன் வளர்ந்த இஸ்லாமிய கலாசாரமும்தான். இஸ்லாம் என்பது உள்ளம், உடல், சமூகம், ஆன்மா போன்ற அனைத்துக்குமான சம்பூரணமான வழிகாட்டல் என்பது என்றுமே மாறாத ஒன்று. இந்த சூழமைவில்தான் சிறுவர்கள் வளர்கிறார்கள்; ஒட்டு மொத்த சமூகமும் வளர்க்கப்படுகிறது.

மனித நடத்தையில் மூன்று விடயங்கள் உள்ளடங்கியிருப்பதாக நவீன உளவியல் குறிப்பிடுகிறது. அவை உயிரியல், உளவியல், சமூக நாகரிகவியல் என்பவையாகும். இதனை நாம் ஏற்றுக் கொள்ளும்போது, மதுவுக்கு அடிமையான முஸ்லிமின் நடத்தையை உளவியல் மற்றும் சமூக நாகரிகவியல் நோக்கில் வடிவமைப்பதில் இஸ்லாத்தின் பங்கை புறக்கணிப்பது நவீன சமூக-உளவியல் விஞ்ஞானமே ஏற்றுக் கொள்ளாத ஒரு விடயமாகி விடுகிறது. அந்த வகையில், இஸ்லாமிய நாடுகளில் வாழும் துறை சார்ந்தவர்களாகிய நாம், மதுவுக்கு அடிமையான முஸ்லிமின் பிரச்சினையை அடையாளப்படுத்தும் போதும் சிகிச்சையளிக்கும் போதும் (இஸ்லாம் பற்றிய நமது நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருப்பினும்) இஸ்லாமிய நோக்கில் அதனை மேற்கொள்வதே அறிவுடைமையாகும்.

1987ஆம்[3] ஆண்டு அம்மான் நகரில் நடைபெற்ற மன நல மருத்துவர்களின் மூன்றாவது மாநாட்டில் தென்கிழக்காசிய நாடான புரூணையில் போதை மற்றும் மதுப்பாவனைக்கு அடி மையானவர்களுக்கு தனியாகவும் கூட்டாகவும் சிகிச்சை செய் கின்ற ஐரோப்பிய மன நல மருத்துவர் ஒருவர் முன்வைத்த திட்டங்கள் கவர்ச்சியாக அமைந்திருந்தன. மதுவுக்கு அடிமை யானோருக்கு சிகிச்சை செய்வதில் பல இஸ்லாமிய செயற்பாடு களையும் அவர் இணைத்திருந்தார். மதுவுக்கு அடிமையானோரை அவர் சுபஹ் தொழச் செய்வதிலிருந்து ஆரம்பிப்பார். ஏனைய தொழுகைகளையும் ஜமாஅத்துடன் தொழுமாறு பணிப்பார். துறை சார்ந்த மார்க்க அறிஞர்களின் மாலை நேர நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளச் செய்வார். இஸ்லாமிய நிலையங்களில் உள்ள புத்தகங்களை வாசிக்க வைப்பார். அத்தோடு அவரது சிறப்புத் துறையான மின்சார தூண்டல் (Electro stimulation) சிகிச்சையை யும் வழங்குவார்.

இத்தகைய சமயம் சார்ந்த விடயங்களை இணைத்துக் கொண்ட மைக்கான காரணத்தை அறபு உள மருத்துவர்கள் அவரிடம் கேட்டபோது, ''நான் ஒரு முஸ்லிம் அல்லன். ஆனால் முஸ்லி முடைய ஆளுமையை தீர்மானிப்பதில் இஸ்லாத்துக்கு பங்குண்டு என்று கருதுகிறேன். எனது கள ஆய்வுகளின் படி இது நல்ல பல விளைவுகளை தந்துள்ளமையை நான் உறுதிப்படுத்துகிறேன். இதனைத்தான் நாம் செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

எகிப்தைச் சேர்ந்த பிரபல உள மருத்துவரான கலாநிதி ஜமால் மாழி என்பவரும் இதே அணுகுமுறையை கையாண்டுள்ளார். எகிப்தின் கெய்ரோவைச் சேர்ந்த போதைக்கு அடிமையானோரை சிகிச்சை செய்யும் போது அவர்களது சமய உணர்வை அவர் பயன்படுத்திக் கொண்டார். அதனூடாக ஆரோக்கிய வாழ்வை நோக்கி அவர்களுக்கு வழிகாட்டினார்.

தனிமனிதர்களதும் குழுக்களதும் சமூக-உளவியல் பிரச்சினை களை தீர்ப்பதில் நவீன மானிட அறிவியல் கலைகளும், சிகிச்சை உளவியலும் தோல்வி அடைந்தமைக்கு ஒரு பிரதான காரணம்

உண்டு. மனித நடத்தைகளை அவை உடல் (உயிரியல்), உள வியல், சமூக நாகரிகவியல் சார்ந்த ஊக்கிகளுடன் மாத்திரம் குறுக் கியமையே அந்தக் காரணமாகும். தனிமனிதனது நடத்தையை கட்டமைப்பதிலும் நெறிப்படுத்துவதிலும் சமய நம்பிக்கை மற் றும் ஆன்மீகம் சார்ந்த தாக்கத்தை அவை தூர விலக்கி விட்டன.

'ஊக்கிகள்', 'தூண்டல்கள்', 'சமூக இணக்கம்', 'நேர் நிலையான அல்லது எதிர்மறையான வலுவூட்டல்' என்பவை பற்றிய கதை யாடலின் போது, நவீன நடத்தை சார் உளவியலும் நவீன சமூக வியலும் தனிமனிதனின் அல்லது குழுவின் நடத்தை குறித்து ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையில் நின்றே பேசுகின்றன. ஆனால் 'ஏற்கச் செய்தல்' அல்லது 'இணக்கம்' என்ற கருத்தியலானது விசுவாசிகளின் மீது 'வஹி' என்னும் இறைவழிகாட்டல் ஏற் படுத்தும் தாக்கத்தின் அளவுக்கு உயரும் போது இவ்வாறான காரணிகளின் பலம் பன்மடங்காகி விடும். மட்டுமன்றி, நவீன நடத்தை சார் விஞ்ஞானத்தின் எதிர்பார்ப்புகளையும் அது விஞ்சி விடும்.

தூண்டல் அல்லது வலுவூட்டலானது (அது நேர் நிலையாகவோ எதிர்மறையாகவோ அதாவது வெகுமதியாகவோ தண்டனையா கவோ இருக்கலாம்) இந்த உலகத்தின் பௌதிக எல்லைகளைத் தாண்டி ஆழமாக ஊடுருவக் கூடியது. இறை நெருக்கத்துடன் கூடிய ஆன்மீக இன்பத்துக்கு இட்டுச் செல்லக் கூடியது. அல் லாஹ்வின் தன்டனை பற்றிய பயத்தையும், அவனுடன் தனித் திருந்து உரையாடும் இன்பம் பறிபோகுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடியது.

அல்லாஹ்வுடன் தனித்து இருக்கும் ஏகாந்த இன்பமானது அனைத்து உலக இன்பங்களையும் பின் தள்ளி விடும். அந்த இன்பம் பறிபோகும் வேதனைக்கும், அல்லாஹ்வின் உலக- மறுமைத் தண்டனை பற்றிய அச்சத்துக்கும் முன்னால் வாழ்வில் ஏற்படும் அனைத்து உடல்-உளத் துன்பங்களும் அற்பமாகி விடும். அந்த ஆன்மீக இன்பம் ஓர் இறை விசுவாசியை உயர்ந்த படிநிலைகளுக்கு அழைத்துச் செல்கிறது. நவீன உளவியல் விஞ்

ஞானம் என்ற சீசாவுக்குள் தங்களை சிறைப்படுத்திக் கொண்ட வர்கள் அதனை புரிந்து கொள்ள மாட்டார்கள்.

'திக்ர்' என்னும் இறை நினைவிலும் வணக்கங்களிலும் திளைத்த சில மனிதர்களது கூற்றுக்களை இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) பதிவு செய்துள்ளார். அத்தகைய கூற்றுகளுள் ஒன்று இவ் வாறு அமைகிறது: ''...நான் ஒரு நிலையை அடைந்தேன். சுவன வாசிகள் அத்தகையதொரு நிலையில்தான் சுவனத்தில் இருப்பார் கள் போலும். நிச்சயமாக அவர்களது வாழ்வு இன்பமானதுதான்!''.

இன்னொருவர் இப்படிக் கூறுகிறார்: ''உள்ளம் இன்பத்தால் களிநடனம் புரியும் சில நேரங்கள் சம்பவிக்கத்தான் செய்கின்றன!''.

மற்றொருவர் கூறுகிறார்: ''கேளிக்கையில் திளைத்திருப்போர் அனுபவிக்கும் இன்பத்தை விட இரவில் இறை வணக்கத்தில் திளைத்திருப்போர் அனுபவிக்கும் இன்பம் பெரியது''.(4)

இவை நேர்நிலையான ஆன்மீகத் தூண்டல்களால் ஏற்படும் விளைவுகளாகும். அவ்வாறே, வெறுப்பூட்டும் தண்டனை சார்ந்த ஆன்மீகத் தூண்டல்களும் எவ்வகையிலும் குறையாத தாக்கமுடை யவை. அந்த வகையில், அல்லாஹ்வின் கோபம் பற்றியும் தண் டனை பற்றியுமான அச்சமானது உணர்வுள்ள ஒரு முஃமினை உடலாலும் உள்ளத்தாலும் தாக்குப் பிடிக்க முடியாத ஒரு நிலைக்கு கொண்டு செல்ல முடியும். உலகின் நெருப்பு தோலையும் உட லுறுப்புகளையும் பொசுக்கக் கூடியவை. சிலவேளை இந்த உலக நெருப்பின் வெம்மைதான் ஒரு சாதாரண மனிதன் கற்பனை செய்யக் கூடிய மிகக் கடுமையான வேதனையாகவும் இருக்க முடியும். ஆனால் கூருணர்ச்சி கொண்ட இறை அடியார்கள் மறுமை நெருப்பை நிஜமாகக் காணும் தீட்சண்யப் பார்வை கொண்டவர்கள். அத்தகையோர் உலக நெருப்பின் சுவாலையைக் காணும் போது மலை போன்ற கங்குகளை கக்கும் மறுமை நெருப்பை நினைத்து நடுங்குவர்.

இது பற்றி இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''அப்துல்லாஹ் இப்னு முஸ்லிமும், ரபீஃ இப்னு ஹைஸமும் யூப்ரடீஸ் நதிக்கரையில் இருந்தார்கள். அப்போது இரும்பு உப கரணங்களை தயாரிக்கும் கொல்லர்களின் உலை நெருப்பைக் கண்ட ரபீஃ அங்கேயே மயங்கி விழுந்து விட்டார். நண்பகல் நேரத்தில் மயங்கிய அவர் அடுத்த நாள் அதிகாலையில்தான் மயக்கம் தெளிந்தார்''.(5)

அல்லாஹ்வுடைய வஹியின் மூலம் ஒரு முஃமின் இந்தளவு தாக்கத்தை அடைகிறான்; தன்னைத்தானே கண்காணித்துக் கொள் கிறான். இதனை நவீன உளவியல் மொழியில் 'சுய வலுவூட்டல்' (Self Reinforcement) என்பார்கள்.

அல்லாஹ்வுடனான தொடர்பினால் கிட்டும் இன்பம் மற்றும் அவனது தண்டனை மீதான அச்சம் என்பவை போன்ற உயர்ந்த ஈமானிய அம்சங்களை வரையறுக்கப்பட்ட நடத்தை உளவியல் கோட்பாடுகளின் (நேர்நிலையான அல்லது எதிர்மறையான) வலு வூட்டல் சட்டகத்தினுள் வைத்து இவ்வாறு நாம் பேச முனைவது மிகவுமே நியாயமற்ற செயல் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இத்தகைய சட்டகங்களுக்குள் தம்மை சிறைப்படுத்திக் கொண்டி ருக்கும் சில உளவியல் சிறப்புத் துறையாளர்களுக்கு இறை விசு வாசம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த அம்சங்களை அவற்றின் உள வியல் நிலைக்களனில் இருந்து விளக்குவதற்காகவே இம்முறை மையை நாம் பின்பற்றுகிறோம். அத்தகையோருக்கு நாம் கூற விரும்புவது இதுதான்: ஆன்மீக வலுவூட்டல் என்பது சட ரீதியான வலுவூட்டலை விட செயல்திறன் கூடியது; அதிக தாக்கம் கொண் டது. இதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாக கல்வி உளவியல் துறையின் நவீன பரிசோதனை ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. வெகுமதியின் தாக்கம் அல்லது தண்டனையின் வேதனை அதி கரிக்க அதிகரிக்க நேர் நிலையான வலுவூட்டலின் பலம் அதி கரிப்பதாக அந்த ஆய்வுகள் பொதுவாக விளக்குகின்றன.

சட ரீதியிலான வலுவூட்டல் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தாக இருப்பினும், அதனை ஆன்மீக இன்பத்துடனோ அல்லாஹ் வின் தண்டனை மீதான அச்சத்துடனோ ஒப்பிட முடியாது.

மதுப்பழக்கம் உமர் (ரழி), அபூ மூஸா (ரழி), மவ்ரிக் (ரழி) போன்றோர் குறித்து ஏலவே குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளை இங்கு நாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இவர்களில் சிலர் ஜாஹ்லிய்யா காலத்தில் எல்லை மீறி மது அருந்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், மது அருந்துவதற்காக இரு தோட்டங்களின் நில வரியை தருவதாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாரற்றவராக அபூ மூஸா (ரழி) மாறினார். மது அருந்துவதை விட கழுதையின் சிறுநீரை அருந்துவது சிறந்தது என்று கருதுபவராக மவ்ரிக் (ரழி) மாறினார். அல்லாஹ் ஹரா மாக்கிய, அவனது கோபத்தை ஏற்படுத்தக் கூடிய மதுவினால் வயிற்றை நிரப்புவதை விட ஈட்டியால் திரும்பத் திரும்ப குத்தப் படுவதை உமர் (ரழி) மேலாகக் கருதினார்.

இங்கு நபித் தோழர்கள் அனுபவித்த ஈமானியச் சுவைக்கு நிகரான வெகுமதி அல்லது நேர்நிலையான வலுவூட்டல்தான் என்ன? அல்-குர்ஆன் மதுவைத் தடுத்த போது இந்த ஈமானியச் சுவைதான் அவர்களை அதற்கு கட்டுப்பட வைத்தது. அவர்களிட மிருந்த இறையச்சத்துடன் ஒப்பிடும்போது வெறுப்பூட்டும் சிகிச் சையோ, மின்சாரத் தாக்கமோ, இரசாயனப் பதார்த்தமோ எம் மாத்திரம்! அந்த இறையச்சத்தினால்தானே மதுவுக்குப் பதிலாக வேறு அசூயையான பானங்களை அருந்துவதையும், ஈட்டியால் வயிறு குத்தப்படுவதையும் அவர்கள் மேலாகக் கருதினார்கள்!

ஆக- சட ரீதியான வலுவூட்டல்களை விட இறை விசுவாசமும் ஆன்மீக ரீதியான வலுவூட்டலுமே இம்மாற்றத்துக்கான முதல் காரணி என்பது தெளிவு. ஆன்மீக ரீதியான சுய வலுவூட்ட லானது சடரீதியான வலுவூட்டலை விட செயல்திறன் மிக்கதாக அமைவதை தீர்மானிக்கும் இரண்டாவது காரணி, அந்த வலுவூட் டல் எந்தளவு வேகத்தில் இடம்பெறுகிறது என்பதாகும். தூண் டல்களுக்கும், துலங்கல்களுக்கும், அவற்றின் வலுவூட்டிகளுக்கும் இடையிலான கால இடைவெளி பெறுகின்ற இம்முக்கியத்து வத்தை பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. பாரம்பரிய நிபந்த னைக் கற்றலின் (Classical Conditional Learning) கோட்பாடுகளுள்

ஒன்றாகவும் இன்று அது மாறியுள்ளது. எடுத்துக் காட்டாக, பாரம் பரிய நிபந்தனைக் கற்றல் கோட்பாட்டின் படி, நிபந்தனைத் தூண்டிகளுக்கும் (உதாரணமாக மதுவின் சுவை/மணம்), வலு வூட்டலுக்கும் (உதாரணமாக மின்சாரத் தூண்டல்/ வெறுப்பூட்டும் மருந்துகள்) இடையிலான நேர இடைவெளி ஒரு வினாடியை தாண்டக் கூடாது. வெகுமதி மூலமான நேர் நிலை வலுவூட்டல், மருந்து மூலமான எதிர்மறை வலுவூட்டல் ஆகிய இரண்டுக்கும் இது பொருந்தும். அந்த வகையில், இவ்வலுவூட்டலில் ஏற்படும் எந்தத் தாமதமும் நிபந்தனைக் கற்றல் செயற்பாட்டை பாதிக்கும்: ஒன்றில் அங்கு கற்றல் இடம்பெறாது; அல்லது தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையிலான தொடர்பு பலவீனமாக இருக்கும். மதுவுக்கு அடிமைப்பட்டவருக்கு சிகிச்சை அளிப்பதில் மின்சாரத் தூண்டலுக்கும், வெறுப்பூட்டும் மருந்துகளுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒப்பிட்டு ஏலவே நாம் விளக்கியுள்ளோம். மின் சாரத் தாக்கத்தை விட இரசாயன மருந்துகள் தமது வெறுப்பூட் டும் இயல்பால் மனக் குமட்டலையும் வாந்தியையும் ஏற்படுத்தி னாலும், நேர அடிப்படையில் மின்சார சிகிச்சையே அதிக நியமம் கொண்டதும் இலகுவாக கையாளத் தக்கதும் என்பதை அங்கு விளக்கினோம்.

ஆனால் ஆன்மீக ரீதியான சுய வலுவூட்டலே மேற்குறித்த இரண்டையும் விட பலமான தாக்கம் கொண்டது; கண்ணிமைப் பொழுதில் நிகழக் கூடியது. இங்கு தண்டனை ரீதியான வலு வூட்டலுக்கு மின்சாரத் தொடுப்போ ஊசி மருந்தோ அவசிய மில்லை. ஒரு முஸ்லிம் ஒரு மிடறு மதுவை அருந்தி விட்டால், அல்லது ஒரு கோப்பை மதுவை அருந்தும் எண்ணம் தோன்றி விட்டால், அல்லது போதையோடு இருந்த நாட்கள் ஞாபகம் வந்து விட்டால், அம்மாத்திரத்திலேயே கைசேதமும் குற்ற உணர் வும் அவரை ஆட்கொண்டு விடும்; அல்லாஹ்வின் கோபம் தன் மீது சாட்டையடியாய் விழுவதை அவர் உணர்வார். அந்த வகை யில், இந்த 'ஆன்மீக வலுவூட்டல்' அவருக்குள்ளிருந்து உயிருள்ள மனச்சாட்சியாய் தொழிற்படும்.

அறிவாற்றல் உளவியலின் (Cognitive Psychology) நவீன கருத்தாக்கங்களுடன் இந்த ஆன்மீக நோக்கு ஒத்திசைகிறது என லாம். அறிவாற்றல் உளவியலானது, குறுகிய நடத்தையியல் கோட்பாடு போன்று மனிதனை வெறும் சட இயந்திரமாக நோக்கி வெளிப்படையான தூண்டல்-துலங்கல்களில் கவனம் குவிக்கா மல், தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் தீர்மானம் எடுப் பதற்கும் அவன் கொண்டுள்ள உள்ளார்ந்த ஆற்றல்கள், சிந்தனை கள், உணர்வுகள் என்பவற்றிலேயே கவனம் செலுத்துகிறது.

இஸ்லாமிய நாடுகளில் மதுவுக்கு அடிமையானவர்களது விகி தாசாரம் மிகவும் குறைவானது. ஐரோப்பிய கலாசாரத் தாக்கத் துக்கு உட்பட்டு மது விற்பனை மற்றும் மது அருந்துதல் மீதான தடையை நீக்கிய முஸ்லிம் நாடுகளில் கூட இதனை அவதா னிக்கலாம். முஸ்லிமிடம் காணப்படுகின்ற 'உள்ளார்ந்த ஆன்மீகக் காவல் வீரனே' இதற்குக் காரணமாகும். இந்த உணர்வு சிலபோது அசிரத்தை நிலையிலோ தூங்கிய நிலையிலோ இருக்கலாம்; ஆனால் இறந்து விடுவதில்லை. சூழ்நிலைகள் மாறி, விசுவாசிகள் அல்லாஹ்வை நோக்கி மீண்டு வரத் தொடங்கி விட்டால், அந்த உணர்வு உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கத் தொடங்கி விடும்.

ஒரு நபிமொழி குறிப்பிடுவது போல்,(06) இறை விசுவாசிக்கான உதாரணம், ஒரு நீண்ட கயிற்றில் கட்டி விடப்பட்ட கால்நடை போன்றதாகும். அது அங்குமிங்கும் அலைந்து திரிந்தாலும், இறுதி யில் கட்டப்பட்ட இடத்துக்கே திரும்பி விடும்.

ஒரு முஃமினின் நிலைகளில் மாற்றம் ஏற்படலாம். அவனுக் குள்ளிருக்கும் 'காவல் வீரன்' தூங்கி விடலாம். மதுவை அருந்தி போதையில் ஆழ்ந்து விடலாம். ஆனால் அவனது உள்ளத்தின் ஈமானிய நெருப்பு முற்றாக அணைந்து விடுவதில்லை. அவனது மனச்சாட்சி அவ்வப்போது வேதனையுறும். குற்ற உணர்வு உள் ளத்தில் கனக்கும். ஒரு முஸ்லிம் உளவியல் மருத்துவரால் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். அவனுக்குள்ளிருக்கும் 'காவல் வீரனை' அவரால் எழுப்பி விட முடியும். அப்போது

இருள் விலகும். பார்வையை மறைத்திருந்த கறை விலகும். நீண்ட கயிற்றில் கட்டி விடப்பட்ட கால்நடை மீண்டும் தன் இடத்துக்கு திரும்பும். மதுவை அவன் விட்டு விடுவான். அவனது நிலைமைகள் அனைத்தும் சீராகி விடும்.

மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் எனக்குக் கிடைத்த அனுபவத்தின் படி இது படிப்படியாக நிகழவும் முடியும்; ஒரேயடியாக திடீரென்று நிகழவும் முடியும். மதுவுக்கு அடிமையாகி இருப்பவரிடம் இந்தச் சந்தர்ப்பத்தில் பாவம் குறித்து அல்லாஹ்வுக்குப் பயப்படுதல், அல்லாஹ்வின் கோபம், அவனது தண்டனை என்பவற்றை நினைவுபடுத்தி அவரது பழக்கத்தை மாற்ற முயலலாம். அல்லது இறை நம்பிக்கையை கட்டியெழுப்பி, ஈமானிய உணர்வைத் தூண்டி, அல்லாஹ்வின் அருளையும் மன்னிப்பையும் நினைவுபடுத்தி அவரை மாற்றலாம்.

இந்த உள ரீதியான, ஈமானிய சிகிச்சையை சில துறை சார்ந்தவர்கள் அரிதாகக் கையாள்கிறார்கள். வைத்தியசாலைகளில் நீண்ட காலம் சிகிச்சை பெற்று, மீண்டும் மதுவுக்கு அடிமையாகிக் கொண்டிருந்த முஸ்லிம்கள் சிலர் இந்த முறையின் கீழ் -வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாமலே- பூரண குணமடைந்துள்ளார்கள்.

நான் இது தொடர்பாக ஆய்வு செய்தேன். 31 நபர்களை ஆய்வுக்கு உட்படுத்தினேன். போதைக்கு அடிமைப்பட்டிருந்தவர்கள் அனைவரும் சூடான் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மது அருந்துவதிலிருந்து தங்களை ஏலவே விடுவித்துக் கொண்டிருந்தார்கள். சுமார் ஒரு வருடத்துக்கும் அதிக காலம் இவர்கள் மீண்டும் மதுவின் பால் செல்லவில்லை. இவர்கள் யாரும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ளவுமில்லை.

இந்த ஆய்வுக்கு தகவல் திரட்டுவதற்காக சிறியதொரு வினாக்கொத்தை (Questionaire) நான் பயன்படுத்தினேன். அதனை மதுவுக்கு அடிமையாகி இருந்தோருக்கு விநியோகித்தேன். அவர்கள் ஆண்களாகவும் சூடானின் தலைநகரில் வாழ்வோராகவும் காணப்பட்டார்கள். அவர்கள் சிகிச்சை பெற்றதன் பின்னர் சுமார் ஒரு

வருட காலமாக மதுவை நாடிச் செல்லாதவர்கள். சிலர் 40 வருடங்களாக மதுவுக்கு அடிமையானவர்கள். சிலர் 20 வருடங்கள். 2 வருடங்களாக மதுவுக்கு அடிமையானோரும் காணப்பட்டார்கள். இவர்களில் சிலர் 30 வருடங்களாக அதிலிருந்து விடுபட முயற்சித்துள்ளார்கள். அது அதிகபட்ச காலமாக இருந்தது. சிலர் 8 வருடங்களாக முயற்சித்திருந்தார்கள். அது குறைந்தபட்ச காலமாக இருந்தது.

கேள்விக் கொத்து சுருக்கமானதாகவும் எளிமையானதாகவும் காணப்பட்டது. ஒருவர் போதையாகும் அளவு, போதை ஏற்படும் நேர அளவு, மது அருந்தத் தூண்டிய காரணி, மதுவிலிருந்து விடுபட எடுத்த முயற்சிகள், எடுத்த முயற்சி தோல்வியடையக் காரணம், மதுப்பாவனையிலிருந்து விடுபட வழி, இறுதி முயற்சியில் வெற்றியடையக் காரணம் முதலிய அம்சங்கள் குறித்து கேள்விகள் அமைந்திருந்தன.

மது அருந்துவதற்கான தூண்டற் காரணிகளை குறித்த நபரே முக்கியத்துவத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்த வேண்டும். மேலும், வைத்தியசாலையில் உள்ள மருத்துவரிடம் உதவி கோரப்பட்டதா? அல்லது சமூக மருத்துவரான ஒரு 'ஷைக்' இடம் உதவி கோரப்பட்டதா? என்ற கேள்வியும் வினாக் கொத்தில் உள்ளடங்கியிருந்தது. எந்த வழிமுறை பயன் தந்தது என்று அவர்களிடம் நாம் கேட்டோம். அதாவது உள மருத்துவமா? அல்லது 'ஷைக்' இன் வழிமுறையா? அல்லது இரண்டுமா? என்று கேட்டோம். மதுவைக் களைந்த பின்னரான அவர்களது உணர்வுகளையும் கேட்டோம். போதை வயப்பட்ட நண்பர்களுக்கு அவர்கள் கூறும் உபதேசங்களையும் கேட்டறிந்தோம்.

கருத்துத் தெரிவித்த பலர் இஸ்லாமியத் தூண்டல்தான் தம்மை மதுவிலிருந்து தடுத்த ஒரேயொரு காரணியும் உண்மையான காரணியும் என்று குறிப்பிட்டனர். வேறு சிலரைப் பொறுத்தவரை, ஏனைய காரணிகளோடு சேர்த்து இஸ்லாமியத் தூண்டலும் ஒரு காரணியாக இருந்துள்ளது.

ஆரம்பத்தில் மதுவிலிருந்து முற்றாக தங்களை விடுவித்துக் கொள்ள உதவிய காரணிகளை மனம் திறந்து கூறுமாறு அவர் களிடம் வேண்டப்பட்டது. அவர்கள் கூறுபவற்றை பதிந்து கொள்ளுமாறு ஆய்வாளர்களிடமும் வேண்டப்பட்டது. பின்னர் காரணிகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் அல்லது தாக்கம் ஏற்பட்ட அளவின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துமாறு வேண் டப்பட்டது. அங்கு 6 விடைகள் காணப்பட்டன. ஒவ்வொரு பதிலையும் பலர் திரும்பத் திரும்ப கூறியிருந்தார்கள்.

சுமார் அரைவாசிப் பேர் இஸ்லாமும் ஈமானுமே தம்மைத் தூண்டிய முழுமுதல் காரணி என குறிப்பிட்டிருந்தார்கள். ஈமானி யத் தூண்டல்தான் தமது நாட்ட சக்தியை பலப்படுத்தியதாகவும், வேதனையான உணர்வுகளை மிகைக்க அதன் மூலம்தான் முடியுமாய் இருந்ததாகவும், அது வாழ்வுக்கு புதிய அர்த்தத்தை கொடுத்ததாகவும் அவர்கள் கூறினர். ஏனைய ஐந்து காரணிகளும் அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இவ்வாறு வரிசைப் படுத்தப்பட்டிருந்தன:

ஆரோக்கியம் சார்ந்த காரணங்கள், குடும்ப அழுத்தங்கள், பொருளாதாரக் காரணங்கள், நாட்ட சக்தி வலுவூட்டப்பட்டமை, அதிர்ச்சி தரும் வகையில் ஏற்பட்ட நிகழ்வுகளும் அனுபவங்களும்.

சில மனிதர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அவர்களது சிறுநீரகம் (Kydney) பாதிக்கப்பட்டிருந்தது. போதை யுடன் தொடர்பான உடல் நோய்களும் காணப்பட்டன. அப்படி யிருந்தும் மது அருந்த வேண்டாம் என்ற வைத்தியர்களின் ஆலோ சனையை அவர்கள் பொருட்படுத்தி இருக்கவில்லை. எனினும் தமது வாழ்வுக்கு புதிய ஆன்மீக அர்த்தம் கிடைத்தவுடன் மது அருந்துவதை அவர்கள் விட்டு விட்டார்கள். சிலர் ரமழான் மாதத்தை இதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார்கள். அதன் பிறகு மதுப் பழக்கத்தை மொத்தமாகவே விட்டு விட் டார்கள்.

அவர்களில் இருவர் ஹஜ்ஜை நிறைவேற்றியதன் பின்னர் இந்தத் தவறை விட்டு விட்டனர். இன்னொருவர் இதிலிருந்து

விடுபட 'உம்றா' தனக்கு உதவியதாக குறிப்பிட்டிருந்தார். அந்த மனிதர் 20 வயதாக இருந்த போது மது அருந்த தொடங்கியவர். 25 வருடங்களாக தொடர்ந்து மது அருந்தி இருக்கிறார். ஐந்து வருடங்களுக்கு முன்பு அவரது நிலை இனங்காணப்பட்டுள்ளது. அவர் போதையில் அபாயகரமான நிலைகளை எட்டியிருந்தார். கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் மக்காவுக்குச் சென்ற அவர் அதிலிருந்து மதுவைத் தொடவில்லை.

அவர் சொன்னவற்றை கீழே குறிப்பிடுகிறேன்:

''ஏதோ ஒரு விதமாக உம்றாவை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றேன். மஸ்ஜிதுல் ஹராமில் கஅபாவுக்கு அருகில் நின்றேன். அங்கு தொழுகை யையும் உம்றாவின் ஏனைய கிரியைகளையும் நிறைவேற்றிய பின்னர், எனது பிரச்சினைகளை நானே நேருக்கு நேராய் எதிர் கொண்டேன். அந்த நிலை எனக்கு மிகப் பெரும் ஆன்மீக ஊக் கத்தை தந்தது. அதன் பிறகு மது என்ற பெரும் பாவத்தை நாட வேண்டிய தேவை இன்றி, எனது பிரச்சினைகளை நானே எதிர் கொள்ளும் ஆற்றல் எனக்குக் கிட்டியது''.

சமூக-குடும்ப அழுத்தங்கள் கூட ஒருவகையில் சமயக் காரணி தான் என்பதனை நாம் மறக்கக் கூடாது. சமூகம் இஸ்லாமிய மாக இருந்தால் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் கூட மதுவுக்கு அடிமையானவரை கரை சேர்ப்பதற்கு தேவையான அழுத்தங்களை பிரயோகிப்பார்கள்.

என்றாலும் அவர்கள் ஈமானியத் தூண்டல்களுக்கும், சமூக, -குடும்ப அழுத்தங்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தைக் கண்டார்கள். இஸ்லாமியத் தூண்டலை அவர்கள் ஆன்மீக ரீதி யான சுயமான உள்ளுணர்வாக அனுபவித்தார்கள். ஒரு பக்கம் பெரும் பாவமொன்றைச் செய்த குற்ற உணர்வு; மறு பக்கம் இறையன்பும் மன்னிப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை; அவனது விசாலமான அருள் மீதான எதிர்பார்ப்பு. அனைத்தும் இணைந்த உணர்ச்சிக் கலவையாய் அது அவர்களுக்குத் தோன்றியது.

குடும்ப-சமூக அழுத்தங்கள் உண்மையில் புறத் தூண்டல் காரணிகளாகளாகவே பார்க்கப்படுகின்றன. சிலபோது அவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதும் உண்டு. எமது ஆய்வில் கூட ஒருவர், ''எனது தந்தையும் மனைவியும் மது அருந்துவதை விட்டு விடுமாறு என்னை கண்டிக்கும் போது நான் வீட்டை விட்டு வெளியேறி மதுவில் மூழ்கி விடுவேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

சிலர் மது அருந்துவதை விட்டு விடக் காரணம் அதிர்ச்சி தரும் திடீர் நிகழ்வுகளாகும். ஆனால் இங்கும் அவர்கள் மதுவை விட்டு விட எடுத்த தீர்மானத்துக்குப் பின்னால் சமயக் காரணமே இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. எமது ஆய்வில் ஒருவர் திடீர் விபத்தொன்றின் காரணமாக மது அருந்துவதை நிறுத்தி விட்டதாக குறிப்பிட்டிருந்தார். இன்னொருவர் நெருங்கிய உறவினரின் திடீர் மரணம் காரணமாக அதனை நிறுத்தி விட்டார். இங்கு ஏற்பட்ட மாற்றம் உண்மையில் ஆன்மீக மாற்றம்தான். அவரில் மாற்றத்தை ஏற்படுத்தியவை அந்த அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளல்ல. மாறாக அந்த நிகழ்வுகள் தொடர்பாக அவரிடம் காணப்பட்ட நம்பிக்கை தான் மாற்றத்தை நிகழ்த்தியது. ஒரு முஃமினுடைய உள்ளம் அப்படித்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இந்த மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இரு நபர்கள். அவர்களில் ஒருவர் மக்கள் கூட்டமாக மது அருந்தும் இடத்தில் நண்பர்களோடு கொலைக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டார். பொலிஸ் நிலையத்திலும் நீதி மன்றத்திலும் இழிவுபடுத்தப்பட்டார். மக்கள் இதனைப் பார்த்தார்கள். குடும்பத்தவர்கள், பிள்ளைகள் முன்னிலையில் அவர் அவமானப்பட நேர்ந்தது. அவர் நிரபராதி என்று தீர்ப்புக் கூறப்பட்ட பின்பு கூட இந்நிகழ்வு அவரில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அவரது நாட்ட சக்தியை இது பலப்படுத்தியது. மதுவை கைவிட வேண்டும் என்று உறுதியாக தீர்மானித்தார். மதுவைத் தொட மாட்டேன் என்று சத்தியமும் செய்தார். இதுவும் கூட ஆன்மீகப் பாதிப்பை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அடுத்த மனிதரோ ஒரு நாள் இரவு போதையில் இருக்கும் போது, துணி துவைக்கக் கூடிய ஏழைத் தொழிலாளி ஒருவரது (கயிறு, பலகைத் தூண்கள் போன்ற) சில உடமைகளை சேதப் படுத்தி அழித்து விட்டார். மறுநாள் கவலையில் தோய்ந்திருந்த தொழிலாளியைக் கண்ட அவருக்கு குற்ற உணர்வு ஏற்பட்டது. தன்னைத் தானே அவர் நொந்து கொண்டார். தனது குற்றத்தை ஒப்புக் கொள்ள முடியாத நிலையிலும் அவர் இருந்தார். எனவே அதன் பிறகு மது அருந்துவதில்லை என அவர் சத்தியம் செய்து கொண்டார்.

இந்த நிகழ்வுகள்தான் தமது வாழ்வில் மாற்றம் ஏற்படக் காரணம் என்று இந்த இருவரும் கூறிய போதும், இந்தக் குற்ற உணர்வும், வெட்கமும், தன்னைத்தானே நொந்து கொண்டமை யும் இஸ்லாமிய உருவாக்கத்தினால் ஏற்பட்டவையாகும்.

எதிர் பாராமல் நிகழக்கூடிய சாதகமான சம்பவங்கள் கூட மதுவிலிருந்து ஒரு முஃமினை விடுபட வைக்கலாம். ஒரு நிகழ்வு இதற்கு உதாரணமாகக் காணப்பட்டது. ஒருவர் மது அருந்துவதில் எல்லை மீறியிருந்தார். அவது நண்பர்கள் அவரை தூக்கிக் கொண்டு தான் வீட்டுக்கு வருவார்கள். அவர் தினமும் குடி யினால் உணர்விழந்திருந்தார். இப்படி 20 வருடங்கள் ஓடிவிட்டன. இதற்குள் அவருக்கு ஐந்து பெண் பிள்ளைகள் பிறந்திருந்தார்கள். ஓர் ஆண் குழந்தை கிடைக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கி ருந்தது. விரும்பியது போலவே ஆண் குழந்தை பிறந்த போது அவர் சந்தோஷப்பட்டார். தனது மோசமான நடத்தையைக் கூட பொருட்படுத்தாது அல்லாஹ் அவனது அருளின் காரணமாக தனக்கு ஆண் குழந்தையைத் தந்ததாக அவர் கருதினார். இப் பொழுது அந்த மகனுக்கு 30 வயது ஆகிவிட்டது. அவர் பிறந்த தினம்தான் தந்தை தனது இறுதி மதுக் கிண்ணத்தை மூடி வைத்த தினம்.

ஈமான் என்ற காரணியை தூண்டி விடுவதன் மூலமாக மதுவுக்கு அடிமையான முஸ்லிமுக்கு பாரிய அளவில் உதவ முடியும் என் பதையும், திட்டமிட்டு சிகிச்சை வழங்க முடியும் என்பதையும்,

அந்தத் திட்டம் உள-ஆன்மீக அடிப்படையில் அமைய முடியும் என்பதையும் இது வரை விரிவாக நோக்கினோம்.

அந்த வகையில், மதுவுக்கு அடிமையான ஐரோப்பியர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது ஐரோப்பிய சிகிச்சையாளர்கள் எதிர் கொள்ளும் மிகப் பெரிய தடையானது இஸ்லாமியப் பிராந்தி யங்களில் வாழும் உளவியல் சிகிச்சையாளர்களுக்கு உண்மையில் ஒரு பிரச்சினையல்ல என்பதை இங்கு நாம் வலியுறுத்துவது அவசியமாகும். போதைக்கு அடிமைப்பட்டவர், தான் போதை யில் எல்லை மீறிச் சென்று விட்தையும், தனக்கு உடல்-உள ரீதியான சிகிச்சை தேவை என்பதையும் ஏற்றுக் கொள்ளாதிருப் பதே அந்தத் தடையாகும்.

ஒருவர் தவறை ஏற்றுக் கொள்ளவோ சிகிச்சை பெறவோ தயாரற்ற நிலையில் சிகிச்சை பயனளிக்காது என்பதனை பல ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர். இதற்காக வேண்டி மதுவுக்கு அடிமையானவரை எதிர்கொள்வதற்காக Confrontation (அதாவது மறைமுகமான கேள்விகள் மூலம் தவறை தானாகவே ஏற்றுக் கொள்ளச் செய்தல்) என்ற முறைமையை அவர்கள் பயன்படுத்தி னார்கள். இதன் மூலம் மது என்ற அரக்கனின் முன்னால் அவரது பலவீனத்தை ஒப்புக்கொள்ளச் செய்து, அவர் சிகிச்சைக்கு உட்பட வேண்டியவர் தான் என பலமாக உணரச் செய்தார்கள். மேற் குலகில் போதையால் பாதிப்படைந்தவர்களுக்கு வெற்றிகரமான சிகிச்சைகளை வழங்குகின்ற Alcoholics Anonymous கழகம் இந்த முறைமையைத்தான் பின்பற்றுகிறது. அதன் 12 நிபந்தனைகளுள் முதல் நிபந்தனையாகவும் இதுவே அமைந்துள்ளது. போதைக்கு அடிமையானவர் அல்கஹோலின் முன்னால் தனது இயலாமை யையும், தான் இருக்கும் நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றக் கூடிய பாரிய சக்தியொன்று காணப்படுவதையும் அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அந்த நிபந்தனை குறிப்பிடுகிறது.

மேற்குலகில் மதுவுக்குப் பழக்கப்பட்ட எவரும் மது அருந்து வதைப் பாவமாக கருதுவதில்லை. ஏனெனில் அது அவர்களது கலாசாரத்தில் இயல்பானதொரு விடயம். 'வைன்' போன்ற சில

மது வகைகளை அவர்கள் தமது மத அனுஷ்டானங்களில் கூட அருந்துவார்கள். சமநிலை குலையாது மது அருந்துவதை அவர்கள் தடுக்கப்பட்டதாகவோ பாவமாகவோ கருதுவதில்லை.

சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு மதுவில் தங்கியிருப்பவருக்கும், 'இயல்பாக' மது அருந்துபவருக்கும் இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறிவது மிகக் கடினமானது. அந்த வகையில், மதுவில் தங்கியிருப்பவர் தனது கவலைக்கிடமான நிலையை ஏற்க மறுக்கும் வாய்ப்பை இங்கு பெறுகிறார். இதனால் அவரது நிலை படிப்படியாக மோசமடைந்து, அனைத்து அபாயகரமான நோய்க்குறிகளுடன் கூடிய அடிமை நிலைக்கு இலகுவாகச் சென்றடைந்து விடுகிறது.

ஆனால் ஒரு முஸ்லிமைப் பொறுத்த வரையில், மது அருந்துவதே பாவமானது என்ற உணர்வு அவரிடம் காணப்படும். மதுவுக்கு அடிமையாவதும், அதனை பழக்கமாக்கிக் கொள்வதும் இழிவை ஏற்படுத்தி விடும் என்று அவர் உணர்வார். இத்தகைய மனிதருக்கு தனது மோசமான நிலையை ஒப்புக் கொள்வதும் சிகிச்சையை நாடுவதும் -ஐரோப்பிய மனிதர் போன்று- கடினமாக இருக்காது. ஏனெனில் -போதைக்கு அடிமையானாலும் ஆகாவிட்டாலும்- வெறுமனே மதுவை அருந்துவது கூட பெரும் பாவம் என்பது அவருக்குத் தெரியும்.

சமநிலை தவறாது குடித்தல் என்றும், எல்லை மீறிக் குடித்து மதுவுக்கு அடிமையாதல் என்றும் இஸ்லாம் பிரித்து நோக்குவதில்லை. எனினும், போதைக்கு அடிமையான ஒரு முஸ்லிம் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளி என்றே சில இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகின்றனர். ஏனெனில் -இமாம் இப்னு தைமியா கூறுவது போன்று- ஒருவர் போதைவஸ்தை உட்கொள்ளும் போது, அது உடலில் ஒரு சிதைவை ஏற்படுத்தி விடுகிறது. அதே வஸ்தின் மூலமாகத்தான் மீண்டும் அது சீர் செய்யப்படுகிறது. ''அதற்குப் பழக்கப்பட்டவரை அதிலிருந்து விலக்குவது கடினமானது''.[7]

பகுத்தறிவும் மன நிலையும் பலமாக இருக்கும் நிலையில் ஒருவர் சமநிலை தவறாது குடிப்பதானது தனது சுயநினைவை இழந்து குடிப்பதனை விட சிலபோது பாரதூரமான பாவமாக அமையலாம். ஏனெனில் சுய நினைவை இழந்தவனின் மன வலிமை அவனது கைகளில் இல்லை. சிலபோது அவன் தன்னிலை உணர்ந்ததும் அதிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்கு வந்து விடவும் முடியும்.

ஆக- போதைக்கு அடிமையானவர் முஸ்லிமாக இருக்கும் பட்சத்தில் கிட்டும் பயன்களுள் ஒன்றாக இது அமைகிறது. அவரை இலகுவாக சிகிச்சைக்கு உட்படுத்த உளவியல் மருத்துவருக்கு இது உதவுகிறது. சிகிச்சை வழங்குவோர் பயன் பெறத்தக்க மற்றோர் அம்சம், இஸ்லாமியக் கருத்தாக்கத்தின் அடியான குடும்ப அமைப்பின் அழுத்தமும், நண்பர்கள் மற்றும் சகோதரர்களது அழுத்தமும் ஆகும்.

மேற்கு நாகரிகம் தனது சட ரீதியான தத்துவத்தின் மூலம் தனி மனிதனுக்கு அபரிமிதமான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. மனித இயல்பை அது சடரீதியாக மாத்திரமே நோக்குகிறது. மனித நடத்தையை தீர்மானிப்பதில் சூழலின் பங்கை அளவுக்கு அதிகமாக முன்னிறுத்தி, இறை நம்பிக்கையின் ஆன்மீகப் பங்கை அது புறமொதுக்கி விடுகிறது.

அங்கு குடும்பக் கட்டுக்கோப்பு பலவீனப்பட்டுள்ளது. உறவுகள் முறிவடைந்துள்ளன. அனைவரும் சட ரீதியான முனைவுகளிலேயே ஈடுபாடு கொண்டிருக்கின்றனர். போதைக்கு அடிமையான ஒரு நோயாளிக்கு உண்மையாக உதவக் கூடிய நண்பர்களோ குடும்பமோ அங்கு கிடைப்பதில்லை. அவரது நிலைமை மோசமாகி விட்டால், மனைவி அவனை விட்டுச் சென்று விடுவாள். பிள்ளைகளும் கைவிட்டு விடுவர். நண்பர்கள் இருந்தால் கூட அவரது தனிப்பட்ட விவகாரத்தில் அவர்கள் தலையீடு செய்வதில்லை. அவர்களைப் பொறுத்த வரை ஒருவர் நினைத்த படி வாழ அவருக்கு பூரண சுதந்திரம் உண்டு.

இத்தகைய சமூக சூழல்தான் ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்குவதற் கான மருத்துவ-உளவியல் முறைமைகளை வடிவமைத்தது. இந்த கலாசார வேறுபாடுகளை கவனத்திலெடுக்காமலும், எந்தவித மாற்றங்களோ திருத்தங்களோ செய்யாமலும் உளவியல் துறை சார்ந்த முஸ்லிம் மருத்துவர்கள் ஐரோப்பிய முறைமைகளை பின்பற்றுவது உண்மையில் கவலைக்குரியதாகும்.

மதுவுக்கு அடிமையானோர் அதிலிருந்து முழுமையாக விடுபட உதவுவதில் குடும்ப அழுத்தங்கள் பெறும் முக்கியத்து வத்தை ஏலவே நாம் முன்வைத்த உதாரணங்கள் தெளிவு படுத்து கின்றன.

இங்கு இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிட விரும்புகிறேன்:

அவர் சூடானைச் சேர்ந்த ஓர் இளைஞர். வாசனைக்காக பயன் படுத்தப்படும் 'கொலோன்' (Cologne) திரவத்தை அருந்தும் பழக்கத்துக்கு அவர் அடிமையாகி இருந்தார். 20 வருடங்களுக்கு முன்னர் ரியாத் நகரில் பிரபல உளவியல் மருத்துவர் பழ்ல் அல் ஹானியின் ஒத்துழைப்புடன் அவருக்கு நாம் சிகிச்சை செய்தோம். அதீதமாக அல்கஹோலில் தங்கி நிற்கும் கட்டத்தை அவர் அடைந்திருந்தார். வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அவர் போதைக்கு அடிமையாகி இருப்பதை பகிரங்கப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. ஏனெனில் அவ்வாறு செய்தால் அவர் வேலை யிலிருந்து நீக்கப்பட்டு சூடானுக்கு திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலையே அன்றிருந்தது. 1970களின் ஆரம்பத்தில் சூடானிய சட்டங்கள் மதுபானசாலைகளை திறக்கவும், பகிரங்கமாக மது அருந்தவும் அனுமதித்திருந்தன. எனவே அவர் சூடானுக்குத் திரும்புவது அவரது நிலையை மேலும் மோசமாக்கும் என்று நாம் கருதினோம். எனவே எமது வீட்டிலேயே அவருக்கு சிகிச்சை செய்யத் தீர்மானித்தோம். அவர் மீது பரிவு கொண்ட அவரது சூடானிய நண்பர்கள் சிலரையும் துணைக்கு அழைத்துக் கொண்டோம். இரவிலோ பகலிலோ எல்லா நேரங்களிலும் இருவர் அவருடன் இருக்கத்தக்க வகையில் ஒரு நாளின் 24

மணித்தியாலங்களை அவர்களுக்கு மத்தியில் பிரித்துக் கொடுத்தோம். Cologne வாங்குவதற்காக அவர் வெளியேறிச் சென்று விடாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

எம்மால் முடியுமான அனைத்து அழுத்தங்களையும் அவருக்கு கொடுத்தோம். அன்பு, உற்சாகப்படுத்தல் அல்லாஹ்வை நினைவு படுத்தல், அவன் குறித்த அச்சத்தை ஏற்படுத்தல், மனைவிக்கும் பெண் குழந்தைக்கும் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் அவர் ஆற்ற வேண்டிய கடமைகளை நினைவுபடுத்தல் என எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டோம். சிகிச்சை பெறுவதற்கு கொள்கையளவில் உடன்பட்டிருந்தாலும், அல்கஹோலை தவிர்க்கும் போது ஏற்படக்கூடிய பக்க விளைவுகளின் வீரியத்தை குறைக்கும் மாத்திரையை உட்கொள்ள அவர் மறுத்தார். எனவே நீரில் கரையக்கூடிய ஒரு மருந்தை நாம் தெரிவு செய்தோம். அவருக்குத் தெரியாமல் அதனை தோடம் பழச்சாற்றுடன் கலந்து கொடுக்க விசுவாசம் மிக்க அவரது மனைவியும் உடன்பட்டார். எதிர்பார்க்கப்பட்ட கால இடைவெளியில் குருதியில் அல்கஹோலின் அளவு குறைவடைந்ததால் அவரது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. வீட்டிலிருந்து பலாத்காரமாக வெளியேற முற்பட்டார். நண்பர்களுக்கு கடுமையாக ஏசினார். உரத்து சப்தமிட்டார். தலையால் சுவரில் மோதினார். அல்கஹோலை தவிர்ந்து கொள்ளும் இக்கட்டத்தில் ஏற்படக் கூடிய பக்க விளைவுகள் குறித்து ஏலவே நண்பர்களுக்கு நாம் கூறியிருந்ததால், அவரது தொந்தரவுகளை அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள். குறித்த சில நாட்களிலேயே அவர் அமைதியடையத் தொடங்கினார். அதன் பிறகு அல்கஹோலை விட்டு விலகும் பயணத்தை துணிச்சலோடும் உறுதியோடும் ஆரம்பித்தார்.

தன்னை நினைத்து அவர் கடுமையாக வெட்கப்பட்டார். சில போது தனது கோபத்தைக் கண்டு தனது மூன்று வயது மகள் இருந்த இடத்திலேயே சிறுநீர் கழிக்க ஆரம்பித்து விட்டதாக அறிந்த போது கடுமையாக கவலை அடைந்தார். அல்கஹோலை இனி தொடுவதில்லை என சத்தியமும் செய்து கொண்டார். அதன்

பிறகு அவரது பல வருட வெளிநாட்டு வாழ்க்கை அந்த உறுதி யான தீர்மானத்தை உண்மைப்படுத்தியது. போதையின் எல்லா வடிவங்களையும் தவிர்ந்து கொண்ட அவர், தனது பணிகளையும் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றலானார்.

1970களில் ஜெனீவாவில் நடைபெற்ற போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுப்பதற்கான சர்வதேச மன்றத்தின் மாநாட் டில் இந்த அனுபவம் குறித்தும் இது போன்ற வேறு அனுப வங்கள் குறித்தும் நான் பேசினேன். குடும்பங்களதும் நண்பர் களதும் ஒத்துழைப்பு குறித்து அங்கு நான் குறிப்பிட்டவை ஐரோப்பிய உளவியல் விற்பன்னர்களையும் துறைசார் அறிஞர் களையும் பிரமிப்பில் ஆழ்த்தின. நாம் பின்பற்றிய வழிமுறையே சிறந்தது எனவும் அவர்கள் வழிமொழிந்தனர். ஏனெனில் குடும்ப மும் நண்பர்களும் குறித்த நபரோடு கொண்டிருக்கும் தொடர்பு நிலையானது. பூரணமாக குணமடைந்த பிறகும் அவர் மீது தொடர்ச்சியாக சமூக-உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வர்களும் அவர்களே.

குறித்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும்போது துறை சார்ந்த நிபுணர்களோடும் தாதியரோடும் நெருக்கமான உறவை கொண்டிருக்கலாம். போதையை விட்டு விலகுவதற்கான உறுதி யையும் பெற்றிருக்கலாம். ஆனால் அவர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி தனது பழைய சமூகத்துக்குத் திரும்பிய மாத்திரத்திலேயே இந்த உறவு துண்டிக்கப்பட்டு விடுகிறது. மீண்டும் மது அருந்தத் தூண்டும் நபர்களைத்தான் அவர் தனது சமூகத்தில் காண்கிறார்.

ஐரோப்பாவின் சூழமைவானது போதைக்கு அடிமையான வரை வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை செய்யவே நிர்ப் பந்திப்பதாக அந்த ஐரோப்பிய நிபுணர்கள் குறிப்பிட்டனர். ஏனெனில் அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் -தங்களுக்கு நேரம் இருந்தாலும்- இப்படியான ஆயாசமான பணிகளை மேற் கொள்ள அங்கு விரும்புவதில்லை.

மதுவுக்கு அடிமையான முஸ்லிமுக்கு இலகுவாக சிகிச்சை அளிப்பதற்கு இறை விசுவாசம் ஏற்படுத்தித் தரும் மூன்றாவது வசதி பல்வேறு முரண்களுக்கு மத்தியில் அது பேணும் நுணுக்க மான சமநிலையாகும். குற்ற உணர்வு, வெட்கம், இறை கோபத் துக்கும் தண்டனைக்கும் அஞ்சுதல், அவனது அருளையும் மன் னிப்பையும் எதிர்பார்த்தல், மாற்றத்துக்காக உறுதியோடும் நம்பிக்கையோடும் பயணித்தல் ஆகிய முரண்களுக்கிடையிலான நுணுக்கமான சமநிலையாக அது அமைகிறது.

பயத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் இடையில்... குற்ற உணர்வுக் கும் இறையருள் மீதான நம்பிக்கைக்கும் இடையில்... பேணப் படுகின்ற இந்த நுணுக்கமான சமநிலை பற்றிய அறிவு மதுவுக்கு அடிமையானோருக்கு இஸ்லாமிய நோக்கில் சிகிச்சை செய்பவ ருக்கு இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அல்-குர்ஆன் ''தன்னைத்தானே நொந்து கொள்ளும் ஆன்மாவின் மீது சத்தியமாக'' (அல்-கியாமா: 2) என்று குறிப்பிடும் அதேவேளை, ''அல்லாஹ்வுடைய அருளில் நம்பிக்கை இழக்க வேண்டாம். நிச்சயமாக நிராகரிக்கும் கூட்டம்தான் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்கும்'' (யூஸுப் 87) என்றும் குறிப்பிடுகிறது.

எனவேதான் இஸ்லாமிய அறிஞர்கள் அல்லாஹ்வின் மீதான அச்சத்தையும் அவனது அருளில் ஆதரவு வைப்பதையும் பறவை யின் இரு சிறகுகளுக்கு ஒப்பாக கூறுவர். இந்த இரண்டும் சமமாக இருந்தால்தான் பறக்க முடியும். தன்னைத் தானே கடுமையாக நொந்து, தன்னை இழிவாகக் கருதி, அல்லாஹ்வின் கோபமும் தண்டனையும் தனக்கு நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று எண்ணிக் கொண்டு, இறையருளிலும் அன்பிலும் நம்பிக்கையிழந்திருப்ப வரே மதுவில் திளைத்திருப்பார். அந்த தோல்வியுணர்வை மறப்ப தற்காக இன்னும் அதிகமாக அவர் குடிப்பார். குடிக்க குடிக்க தன்னைப் பற்றிய இழிவுணர்வு அவரிடம் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

மறுபுறத்தில், ஒருவர் பாவத்தைக் கணக்கிலெடுக்காமல் இருப் பதோ, குற்ற உணர்வு அற்றிருப்பதோ மதுவிலிருந்து விடுபட

துணை புரிய மாட்டாது. மட்டுமன்றி, எந்தவொரு பாவத்தையும் செய்யத் துணிந்த சமூகப் பிணங்கியாக (Sociopath) அவரை அது மாற்றி விடும். தேவையான போதைப் பொருளை வாங்குவதற் கான பணத்தை பெறுவதற்காக அவர் களவு, ஏமாற்று, பொய், அச்சுறுத்தல் முதலிய எதனையும் செய்யத் துணிந்து விடுவார்.

துறைசார்ந்த முஸ்லிம் சிகிச்சையாளரே மதுவுக்கு அடிமை யாகிருக்கும் குறித்த நபருக்கு தேவையானது எது என்பதை வரை யறை செய்ய வேண்டும். குற்ற உணர்வை அதிகரிக்க வேண்டு மாயின், அதனை அவர் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருளி லும் மன்னிப்பிலும் நம்பிக்கையூட்ட வேண்டுமாயின், அதற்கு அவர் முக்கியத்துவம் வழங்க வேண்டும். அடியான் பாவ மன்னிப்புக் கேட்கும்போது அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான் என்பது நோயாளிக்கு உணர்த்தப்பட வேண்டும்.

சிலபோது நோயாளியின் குற்ற உணர்வை அதிகரிக்கச் செய்வ தற்கு அல்லது குறைப்பதற்கு பரிச்சயமற்ற சில வழிமுறைகளைக் கூட கைதேர்ந்த உளவியல் சிகிச்சையாளர்கள் கையாள முடியும். இந்த இடத்தில் ஒரு நிகழ்வு எனது நினைவுக்கு வருகிறது. மருத்துவர் பழ்ல் அல் கானியிடம் சவூதி அரேபியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மதுவுக்கு அடிமையான நிலையில் கொண்டு வரப் பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்க மருத்துவர் எடுத்துக் கொண்ட சாத்தியமான எல்லா வழிமுறைகளும் தோல்வியில் முடிந்தன. பல தடவை செயற்படுத்தப்பட்ட தண்டனை முறை யிலான உளவியல் சிகிச்சை கூட மதுவை விட்டு அவரைத் தடுக்கவில்லை.

அந்த இளைஞருக்கு ஒரு விதவைத் தாய் இருந்தார். தனது முழு எதிர்பார்ப்பையும் அவர் தனது மகன் மீதே வைத்திருந்த போதிலும், தாயின் நம்பிக்கை வீணாயிற்று. அந்த இளைஞர் தனது தாயுடன் மிக மோசமாக நடந்து கொண்டார். இரகசியமாக மது தயாரித்து விற்பவர்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்குவதற்காக தாயின் பணத்தை எல்லாம் அவர் பிடுங்கினார்.

ஒருநாள் எதிர்பாராத வகையில் தாய்க்கு ஏற்பட்ட உடல் உபாதை ஒன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக டாக்டர் கானியிடம் அவர் தாயை அழைத்து வந்திருந்தார். அந்தத் தாய் தனது 'முரட்டு' ஆளுமையினாலும் வெளிப்படைத் தன்மையினாலும் தனது நோய்க் குறிகளை மிகைப்படுத்திக் காட்டினார். இதனால் அந்த இளைஞர் வெளிப்படையாகவே உடைந்து போயிருந்தார். இதனை அவதானித்த மருத்துவர், சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்த இளைஞருக்கு மதுவிலிருந்து விடுபடுவதற்கான சிகிச்சையை வழங்கத் தீர்மானித்தார். எனவே தாயின் நிலைக்காக கவலையை வெளிப்படுத்தியவராக பரிசோதனைக் கட்டிலில் அவரை அமர வைத்தார். முடிந்த வரை தனது முகத்தை சீரியஸாகவும் கவலை வெளிப்படும் விதமாகவும் வைத்துக் கொண்டு ஸ்டெதாஸ்கோப்பினால் அவரை பரிசோதித்தார். சந்தர்ப்பம் வாய்த்தாற் போல கடுமையான இந்த அக்கறையை பயன்படுத்திக் கொண்ட 'முரட்டுத்' தாயாரும் தன் பங்குக்கு வேதனையை பன்மடங்காக்கிக் காட்டினார். பிறகு அந்த இளைஞரை ஓர் ஓரமாக அழைத்த மருத்துவர் இவ்வாறு கூறினார்:

''உங்கள் தாயார் மிக அபாயகரமான கட்டத்தில் உள்ளார். இந்த நோயினால் அவர் இறந்து விடவும் கூடும். ஏனெனில் அவர் உடல் நோயுடன் கடுமையான மனத் துன்பத்துக்கும் ஆளாகியுள்ளார். உங்கள் குடிப் பழக்கமும் துர் நடத்தையுமே இதற்குக் காரணம். தந்தை மரணித்ததன் பிறகு தாயார் உங்கள் மீது வைத்திருந்த முழு நம்பிகையையும் நீங்கள் பாழாக்கி விட்டீர்கள். இந்த நிலையில் தாயார் மரணித்து விட்டால் அதற்கு முழுப் பொறுப்பு நீங்கள்தான். அல்லாஹ்விடமும் மனிதர்களிடமும் நீங்கள்தான் அதற்கு வகை கூற வேண்டும். ஏனெனில் அவருக்கு இவ்வளவு துன்பத்தையும் நிராசையையும் ஏற்படுத்தியவர் நீங்கள்தான்..!''.

இதனைக் கேட்ட அந்த அப்பாவி இளைஞர் முதல் தடவையாக உடைந்து போனார். இறுக்கம், பொருட்படுத்தாமை முதலிய திரைகள் அவரை விட்டு விலகின. கண்களில் இருந்து தாரை தாரையாக பெருகிய கண்ணீர் அவரது முகத்தையும் தாயின் கைகளையும்

நனைத்தது. தாயை முத்தமிட்டு தன்னை மன்னிக்குமாறு வேண்டி னார். அல்லாஹ்விடமும் மன்னிப்புக் கேட்டு மன்றாடினார். அல்லாஹ் தனது தாயை காப்பாற்றித் தந்தால் மீண்டும் மதுவை நெருங்கவே போவதில்லை என்று சத்தியமும் செய்தார். அதன் பிறகு நீண்ட பல வருடங்களாக அந்த இளைஞரை மருத்துவர் அவதானித்தார். இளைஞர் தனது வாக்கை நிறைவேற்றியதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே இச்சிகிச்சை பற்றி அவர் கூறினார்.

கடந்த 25 வருடங்களாக உளவியல் பாதிப்புக்கு உட்பட்டவர் களுக்கும், போதைப் பொருட்களுக்கு அடிமையானோருக்கும் நான் சிகிச்சை செய்து வருகின்றேன். இவர்களில் மிக அதிக மானவர்கள் குற்ற உணர்வால் பீடிக்கப் பட்டவர்கள். இவர்களது குற்ற உணர்வு குறைக்கப்பட்டு நம்பிக்கை ஊட்டப்பட வேண் டும். தாம் மனிதர்கள் என்ற உயர்ந்த எண்ணம் அவர்களிடம் வலுப்படுத்தப்பட வேண்டும். அல்லாஹ்வின் அருளும் மன்னிப் பும் வலியுறுத்தப்பட்டு, பாவ மன்னிப்புக் கேட்பது இலகு படுத்தப்பட வேண்டும்.

பொதுவாக இஸ்லாமிய உலகிலுள்ள அழைப்பாளர்களும் 'ஷெய்க்'மார்களும் போதைப்பொருள் பாவனையாளர்கள் குறித்து எல்லை மீறிய பயத்தையும் இழிவான எண்ணத்தையுமே விதைத் திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. மதுவுக்கு அடிமையானவர் களில் பலர் சமூக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் ஒதுக்கப்பட்ட வர்களாகவும், அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி அவனது அருளிலிருந்து துரத்தப்பட்டவர்களாகவும் தங்களை கருதிக் கொள் ளும் அளவுக்கு இந்நிலைமை சென்றிருக்கிறது.

மதுவுக்கு அடிமையானவர்கள் குறித்த இத்தகைய மிகைப்படுத் தும் அணுகுமுறையானது குற்ற உணர்வு என்ற 'இறக்கையை' பலப்படுத்தி, இறையருள் என்ற 'இறக்கையை' பலவீனப்படுத்தி விடுகிறது. இதனால் இரண்டுக்கும் இடையிலான சமனிலை கெட்டு விடுகிறது. இது இஸ்லாமிய சமூக மரபில் இருக்காத ஓர் அணுகுமுறையாகும். நபி (ஸல்) அவர்களின் காலத்திலும்

கலீபாக்களின் காலத்திலும் மதுவுக்கு அடிமையானோருக்கு உதவு வதில் இறை விசுவாசிகள் எவ்வாறு வாஞ்சையுடன் ஒத்துழைத் தார்கள் என்பதை ஏலவே நாம் விரிவாக விளக்கினோம். மது அருந்தியதற்கு தண்டனை வழங்கப் படுவதற்காக பல முறை கொண்டு வரப்பட்ட நபித்தோழரைக் கூட எவரும் ஏச வேண் டாம் என நபி (ஸல்) அவர்கள் தடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய பாவத்தை செய்திருந்த போதிலும் அவர் அல்லாஹ்வை யும் அவனது தூதரையும் நேசிப்பவர்களுள் ஒருவர் என்று அல்லது அல்லாஹ்வினாலும் அவனது தூதரினாலும் நேசிக்கப்படுபவர் என்று அன்னார் குறிப்பிட்டார்கள்.

உமர் (ரழி) தொடர்பான பிரபல நிகழ்வொன்றை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மதீனாவில் ஒருநாள் இரவு நகர சோதனைக்காக அவர் சென்ற போது, சில இளைஞர்களின் கூக் குரலையும் பாடலையும் செவி மடுத்தார். உடனே பின்சுவர் பக்கமாக உள்ளே நுழைந்த அவர், போதையுற்றிருந்த அந்த இளைஞர்களை கைது செய்தார். அப்போது அவர்களுள் ஓர் இளைஞன் அமீருல் முஃமினீனை நோக்கி இவ்வாறு கூறினான்:

''முஃமின்களின் தலைவரே! நாங்கள் செய்தது ஒரு குற்றம் தான். ஆனால் நீங்களோ மூன்று குற்றங்களைச் செய்து விட்டீர்கள். நீங்கள் எங்களை உளவு பார்த்துள்ளீர்கள். அல்லாஹ் அதனை தடுத்திருக்கிறான். வீட்டின் வாயிலால் பிரவேசிக்குமாறு அல் லாஹ் கூறியிருக்க, நீங்கள் சுவரேறிக் குதித்திருக்கிறீர்கள். ஸலாம் கூறி அனுமதி பெற்று வீட்டில் பிரவேசிக்குமாறு அல்லாஹ் கூறியிருக்க, நீங்கள் அனுமதியின்றி பிரவேசித்துள்ளீர்கள்!''.

இந்நிலையில் மன்னிப்பு கோரி வெளியேறுவதைத் தவிர அமீருல் முஃமினீனுக்கு வேறு வழி இருக்கவில்லை. போதை யோடு இருந்தவர்களுடனான அக்காலத்து அணுகுமுறை இவ் வாறிருக்க, அளவு கடந்த பயமுறுத்தலையும் நம்பிக்கை இழக்கச் செய்யும் குற்ற உணர்வையும் இவர்கள் எங்கிருந்து ஊட்டினார்கள்?

தற்காலத்தில் மதுப் பழக்கம் உள்ளவரின் அல்லது போதைக்கு அடிமையானவரின் குடும்பத்தில் 'பாரம்பரிய' சமயப் பற்றாளர்

ஒருவர் இருந்து விட்டால் போதும். அவர் மது அருந்துபவரது மோசமான நிலையையும், இம்மையிலும் மறுமையிலும் காத்தி ருக்கும் கைசேதத்தையும் இரவு பகலாக சொல்லிக் கொண்டே இருப்பார். குறித்த நபரது குற்ற உணர்வையும் அவநம்பிக்கை யையும் இது இன்னும் மோசமாக்கி விடும். இந்நிலையில் வீட்டை விட்டு வெளியேறி விடும் அவர், அனேகமாக நடுநிசி யில் போதை தலைக்கேறிய நிலையில்தான் திரும்பி வருவார்.

இறையருள் பற்றிய பேச்சுக்கள், குற்ற உணர்வை குறைக்கும் வகையிலான உரையாடல்கள், இழிவுபடுத்தாமை, (மீண்டும் மதுவை நோக்கிச் செல்லும் சாத்தியப்பாடுகள் காணப்பட்ட போதும்) முழுமையான சிகிச்சை மீதான நம்பிக்கையை பலப் படுத்தல்.. என்பனவே இத்தகையோருக்கு சிகிச்சை அளிப்பதில் பெரும் பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

உளவியல் -ஆன்மீக சிகிச்சைத் திட்டம் குறித்து மதுவுக்கு அடிமையானவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு -குறிப்பாக அவர் களிலுள்ள சமயப் பற்றாளர்களுக்கு- தெளிவு படுத்துவது பிர மிக்கத் தக்க விளைவுகளைத் தருவதை நான் கண்டிருக்கிறேன். ஏனெனில் போதைக்கு அடிமையானவர் தன்னை முற்றிலும் மாற்றிக் கொள்ளாமல், அல்லது அவர் வாழும் சூழல் பாரிய மாற்றம் காணாமல் உண்மையான சிகிச்சை பெரும்பாலும் சாத் தியமாவதில்லை.

பரஸ்பர விட்டுக் கொடுப்பும் சுப எண்ணமும் நிலவுகின்ற இத்தகைய உணர்வுச் சட்டகத்தினுள்தான் நடத்தைச் சிகிச்சை யும், தண்டனைச் சிகிச்சையும், உளவியல் சிகிச்சையும், அனைத் தும் இணைந்த சிகிச்சையும், ஆன்மீகச் சிகிச்சையும் முழுமையாக சாத்தியமாகும். பயனுள்ள ஒத்துழைப்பு நிறைந்திருக்கும் இந்தச் சூழல்தான் மதுவுக்கு அடிமையானோருக்கு சிகிச்சை வழங்குதல் தொடர்பாக நவீன அறிவியல் கண்டடைந்த மிகப் புதிய உண்மை களையும் முன்வைக்கும். உயர்ந்த இறை விசுவாசமும், ஆன்மீக ஊக்கிகளுமே இந்தக் கட்டமைப்பின் அத்திவாரமாக இருக்கும்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் போதைக்கு எதிரான போராட்டம் தோல்வியைத் தழுவ பிரதான காரணம், அது மனித னது உள்ளார்ந்த -இறை விசுவாசப் பரிமாணத்தை மறந்து, போதைப்பொருளை கடத்துவோருக்கும் விற்பனை செய்வோ ருக்கும் எதிரான போர் முறைகளில் மாத்திரம் கவனத்தைக் குவித் தமைதான். மேற்குலகம் மனிதனை ஒரு சட இயந்திரமாக (Machanistic) நோக்கியதன் விளைவே இது. நடத்தையியலாளர் கள் கூறுவது போல் சூழலின் சுழல் காற்றில் அகப்பட்ட இற காகவே மனிதனை அது நோக்கியது. தண்டனை முறையினால் மதுவை விட்டு விலகியவர்கள் கூட மீண்டும் மதுவை நாடிச் செல்லக் காரணமும் இந்த மனப்பாங்குதான். ஏனெனில் பரிபூரண கோட்பாட்டுச் சட்டகமொன்று இல்லாத போது தண்டனை முறை யினால் நல்ல விளைவுகளை தர முடியாது. ஆனால் இஸ்லாமோ சூழல் மாற்றத்துக்கு முன் நிபந்தனையாக அமையும் உள மாற் றத்திலேயே முதலில் கவனம் செலுத்துகிறது.

மதுவுக்கு சிகிச்சை செய்வதில் இறை விசுவாசம் ஏற்படுத்திய இந்த தாக்கமானது தூய நபித்துவக் காலத்துக்கு மாத்திரம் பிரத்தி யேகமான விடயம் என்றோ, குறிப்பிட்ட சில வரலாற்றுச் சூழமைவுகளில் மாத்திரம் நிகழ்ந்த ஒன்று என்றோ, நவீன சட வாத உலகில் மீண்டும் நிகழ முடியாதது என்றோ எவரும் நினைத்து விடலாகாது. மதுவையும் போதைப் பொருளையும் முற்றாக களைந்து விடும் அற்புதம் இந்த நூற்றாண்டிலும் நிகழ்ந் துள்ளது. சடவாதத்திலும் நாகரிகத்திலும் மிகவும் முன்னேறிய ஒரு நாட்டில், எல்லா விதமான பழைய-புதிய கோட்பாடுகளை யும் விஞ்சுமளவு போதைப் பொருள் பரவிய ஒரு சமூகத்தில் அது நிகழ்ந்தது. அமெரிக்காவே அந்த நாடு. இஸ்லாத்தில் நுழைந்த இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் மதுவையும் போதைப் பொரு ளையும் முற்றாக விட்டு விட்டார்கள். இஸ்லாத்தை ஏற்ற பிறகு அவர்களது வாழ்வே சீரடைந்து விட்டது.

அவர்களில் பலர் குற்றச் செயலுக்கும் போதைக்கும் வன் முறைக்கும் பழக்கப்பட்ட கறுப்பின அமெரிக்கர்களாவர். ஆனால்

அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற போது அவர்களது நிலை வெகுவாக மாற்றம் கண்டது. அவர்களது அளவுகோல்கள் தலைகீழாக மாறிப் போயின. தொழுது, நோன்பு நோற்று, தூய வாழ்வு வாழும் நல்லடியார்களாக அவர்கள் மாறினர். அதன் பிறகு மதுவையோ போதைப் பொருளையோ அவர்கள் நெருங்கவில்லை. விபச்சாரம் செய்யவில்லை. அவர்களது கரங்கள் ஹராமான செல்வங்களைத் தொடவில்லை. பலர் சிறைச்சாலைச் சுவர்களுக்குப் பின்னால் இருந்துதான் இம்மாற்றங்களை நிகழ்த்தினார்கள். அதன் மூலமாக, சிகிச்சை செய்ய முடியாத 'சமூக விரோதிகள்' என்றும், 'மன நோயாளர்கள்' என்றும் தம்மை விவரித்த மருத்துவ-உளவியல் அளவுகோள்களை அவர்கள் தகர்த்தெறிந்தார்கள்.

சிறையிலிருந்து அவர்கள் வெளியேறிய போது வேறு மனிதர் களாகவே வெளியேறினர். மதுவைத் தடுப்பதற்காக அமுல் படுத்தப்பட்ட அமெரிக்கச் சட்டம் தோல்வி கண்ட அதே பிராந்தி யத்தில்தான் மதுவை கூட்டாக தவிர்ந்து கொண்ட அந்த அற்புதம் நடந்தேறியது.

இறுதியாக இந்த ஆய்வினை தாக்கம் மிக்க சில வார்த்தை களோடு நிறைவு செய்ய விரும்புகிறேன். மேற்குறித்த புதிய முஸ்லிம்கள் பற்றி பிரபல அமெரிக்க எழுத்தாளர் James Baldwin தனது The Fire Next Time என்ற பிரபலமான நூலில் சாஸ்வதமாக பதிந்து வைத்த வார்த்தைகள் அவை. இஸ்லாத்தை ஏற்ற பின்னர் தமது வாழ்வமைப்பையே தலைகீழாக மாற்றிக் கொண்ட கறுப் பின முஸ்லிம்கள் பேசுவது போன்று இவ்வார்த்தைகளை அவர் அமைத்திருந்தார்:

''நீங்கள் சத்திய மார்க்கத்துக்கு திரும்பி விடுங்கள். சாத்தானும் வெள்ளை மனிதனும் இறுகப் பூட்டிய அடிமைத் தளைகளை தகர்த்தெறிந்து, உங்கள் வேர்களை நோக்கித் திரும்புங்கள். அவர் களது மதுவையும் போதைப் பொருளையும் விட்டு விடுங்கள். உங்களது பெண்களின் கற்பைக் காத்து அவர்களை காப்பாற்றுங் கள். அழுக்கு நிறைந்த பன்றி இறைச்சியை உண்ணாதீர்கள்...''.

Baldwin தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்:

''இப்பொழுது நாம் சட்டென்று சில மக்கள் திரள்களை காண் கிறோம். அவர்கள் இந்தத் தூது பற்றி முன்னர் கேள்விப்பட்ட தில்லை. எனினும் கேள்வியுற்ற மாத்திரத்திலேயே அதனை விசு வாசம் கொண்டு முற்றாக மாறிப் போனார்கள். அந்த வகையில், தலைமுறை தலைமறையாகத் தோன்றிய சமூக விற்பன்னர் களும், பல்வேறு சங்கங்களும், அரசாங்கத் தீர்மானங்களும், அறிக்கைகளும், குடியிருப்புத் திட்டங்களும், விளையாட்டுக் கழகங்களும் தோல்வி கண்ட ஒரு விடயத்தை இஸ்லாம் சாதித்து விட்டது. ஏனெனில் உள்ளங்களுக்கு நிவாரணம் அளிக்க அதனால் முடிந்தது. போதையில் மூழ்கியவர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் அவர்களது மனிதப் பண்பை அது மீட்டுக் கொடுத்தது. சிறை யிலிருந்து வெளியேறிய குற்றவாளிகளை கற்புள்ள ஆண்களாக வும் சிறந்த பெண்களாகவும் மாற்றியமைத்தது. கண்ணியத்தை யும் ஆத்ம அமைதியையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தது. அந்த ஆத்ம அமைதி அவர்களது சிரசுக்கு மேல் ஒளி வட்டமாய் என்றும் அணையாமல் இலங்கிக் கொண்டிருக்கிறது''.[8]

உசாத்துணைகள்

அத்தியாயம் - 01

நிச்சயமாக மது தடைசெய்யப்பட்டு விட்டது என அறிந்து கொள்ளுங்கள்!

(1) அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி), தப்ஸீருல் குர்ஆன் அல்அழீம், இப்னு கஸீர், தாருல் பிக்ர், பெய்ரூத் 1970, இரண்டாம் பாகம், 638-639.

(2) மது என்பது போதை தரக்கூடிய அனைத்தையும் குறிப்பதாக சட்ட அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இதற்கு அல்குர்ஆனிலும் ஸுன்னா விலும் ஆதாரம் காட்டுவார்கள். மது என்பதற்கு பயன்படுத்தப்படும் 'ஃகம்ரு' என்றால் அரபு மொழியில் மறைப்பு, திரை என்ற கருத்தை தரும். அது அறிவுக்கு திரையிடுகிறது; அறிவை மூடி மறைக்கிறது, அறிவின் விளைவை இல்லாமல் ஆக்குகிறது என்ற கருத்தில் இவ்வாறு பெயரிடப்பட்டிருக்கலாம். போதையைஏற்படுத்தும் அனைத்தும் மது வாகும். ''போதையை ஏற்படுத்தும் அனைத்தும் மதுவாகும். அனைத்து மதுவும் ஹராமாகும் (தடுக்கப்பட்டுள்ளது). (அபூ தாவூத், அஹ்மத். பார்க்க: முக்னி-இப்னு குதாமா. பாகம் 8 பக்கம் 303)

(3) அபூ புரைதா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ், தப்ஸீர் இப்னு கஸீர், முன்னையது பக்கம் 637.

(4) அனஸிடமிருந்து ஸாபித். அவரிடமிருந்து ஹம்மாத் இப்னு ஸைத். முன்னையது.

(5) அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னு உமர் - தப்ஸீர் இப்னு கஸீர், இரண்டாம் பாகம்.பக்கம் 636 முன்னையது.

(6) அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னு உமர் - நபி (ஸல்) அவர்கள் ஸஃத் (ரலி) அவர்கள் வுழூ செய்துகொண்டிருக்கும்போது அவரை கடந்த சென்றார்கள். அப்போது ''ஏன் இந்த வீண் விரயம்?'' என்று கேட்டார்கள். அதற்கவர் ''வுழூ செய்வதிலும் வீண்விரயம் இருக் கிறதா?'' என்றார்கள். அதற்கு நபியவர்கள் ''ஆமாம் ஓடுகின்ற ஆற்று நீரில்கூட'' என்றார்கள். சுனன் இப்னு மாஜா, ஈஸா அல் ஹலபி, கெய்ரோ, முதல் பாகம். பக்கம் 146.

(7) அறிவிப்பவர் அப்துல்லாஹ் இப்னு உமர் - தப்ஸீர் இப்னு கஸீர் - முன்னையது : பக்கம் 640, 641 (பைஹகி)

(8) கலாநிதி முஹம்மத் ஸலீம் அல் உவா : நழரிய்யதுல் உகூபா பில் இஸ்லாம்: ஒப்பீட்டாய்வு, 1972 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழக கலாநிதி பட்டத்துக்கான ஆய்வு (பிரசுரிக்கப்படவில்லை)

The Theory of Punishment in Islam: A comparative study, an unpublished Ph.D. Thesis submitted to the university of London, 1972.

அத்தியாயம் - 03

மதுவும் ஜாஹிலிய்யா கால பழக்க வழக்கங்களும்

(1) ஜுன்துப் இப்னு அன்பர் என்ற ஜாஹிலிய்ய கால அறபிதான் முதலில் இக்கூற்றைக் கூறினார் என்று இமாம் இப்னு ஹஜர் தனது பத்ஹுல் பாரியில் குறிப்பிடுகின்றார். (மாதா கஸிரல் ஆலம் பின்ஹிதாதில் முஸ்லிமீன்,அபுல் ஹஸன் நத்வி).

(2) முன்னையது, அபுல் ஹஸன் நத்வி.

(3) உம்தாவில் இப்னு ருஷைக் இதனைக் குறிப்பிடுகிறார். பாகம் 1 பக்கம் 51 தாருல் ஜீல் பெய்ருத் 1972

(4) ஸிஹாபுத்தீன் நுவைரி: ''நிஹாயதுல் அரப் பீ புனூனில் அதப்'' பாகம் 3பக்கம் 272, தாருல் குதுப் அல் மிஸ்ரிய்யா, கெய்ரோ 1924

(5) ஸிஹாபுத்தீன் நுவைரி: ''நிஹாயதுல் அரப் பீ புனூனில் அதப்'' பக்கம் 272, தாருல் குதுப் அல் மிஸ்ரிய்யா, கெய்ரோ 1924

(6) தப்ஸீர் தபரி, பாகம் 4, பக்கம் 208, இமாம் நத்வி முன்னைய நூலின் பக்கம் 68.

(7) முன்னையது.

(8) ஹைதும் இப்ன் அதி (நத்வி) முன்னையது பக்கம் 69

(9) ஸிஹாபுத்தீன் நுவைரி : ''நிஹாயதுல் அரப் பீ புனூனில் அதப்'' பக்கம் 126 - 127

(10) ஆயிஷா (ரழி) அறிவிக்கும் பிரபலமான ஹதீஸைப் பார்க்க. திருமண முறைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதனை புகாரி, அபூதாவுத் போன்றோர் அறிவித்துள்ளார்கள்.''ஜம்உல் பவாஇத் மின் ஜாமிஇல் உஸூல் வ மஜ்மஇ ஸவாஇத்'' என்ற நூலில் பாகம்1 பக்கம் 628 இல் காணலாம். பிரசுரம் பைஸல் இஸ்லாமிய வங்கி - சைப்ரஸ் 1405 ஹிஜ்ரி

(11) முன்னையது

(12) முன்னையது

(13) அலி ஜுன்தி, தீவான் தர்பா இப்னு அப்த், கெய்ரோ 1958 பக்கம் 45 - 49

(14) நுவைரி மேலது பாகம் 4 பக்கம் 86

(15) தீவானுல் அஃஷி அல் கபீர், கலாநிதி முஹம்மத் ஹுஸைன் விரிவுரை ஃமக்தபதுல் அதாப் 1950 பக்கம் 35

(16) நுவைரி முன்னையது

(17) நுவைரி முன்னையது பாகம் 4 பக்கம் 95

(18) தீவானுல் அஃஷி கபீர் முன்னையது பக்கம் 83, 84

(19) தீவான் இம்ரஉல் கைஸ், தாருல் மஆரிப், எகிப்து, பக்கம் 71

(20) அப்துல் ரஹ்மான் அல் பர்கூகி, ஹஸ்ஸான் இப்னு ஸாபிதின் கவிதைகள், விளக்கவுரை, மக்தபா திஜாரிய்யா, கெய்ரோ 1929. பக்கம் 3,4

(21) முன்னையது பக்கம் 3

(22) J. Coleman,et,al., Abnormal Psychology and Modern Live, Soctt Foresman and Co, London, 1984

(23) Horton, “The Functions of Alcohol in primitive Societies: A Cross Cultural Study. “Quarterly Journal for the study of Alcohol.4, 1943

(24) J.Schaefer, Drunkenness and Culture Stress, Transcultural Psychiatry Review, 11, 1974.

(25) Chagnon, “Beastly or Manly”, Time Megazine, May 10,1976 p.49

(26) Ibid

அத்தியாயம் - 04

மதுப் பழக்கத்தை மதீனாவாசிகள் கூட்டாக கை விட்டமை

(1) R.Mc Carthy and E.Doglass, Alcohol and Social Responsibility, N.Y. Yale Plan Clinic, 1949

(2) M.Badri, “Customs, Traditins and Psychopathlogy : A Study on Arab Sudanese Culture”, Sudan Medical Journal, vol.10,No. 3, 1972

(3) சையித் குத்ப்: பீ ழிலாலில் குர்ஆன், பாகம் 3, பக்கம் 33. தார் இஹ்யாஉத்துராஸ் அல் அரபி, ஐந்தாம் பாகம், பெய்ரூத் 1967

(4) முஃஜமுஷ் ஷுஅரா - மிர்ஸுபானி : தஹ்கீக் அப்துஸ் ஸத்தார் அஹ்மத் பர்ராஜ் : தார் இஹ்யாஉல் குத்ப் அல் அரபிய்யா : கெய்ரோ 1960, பக்கம் 199

(5) தீவான் தர்பா இப்னுல் அப்த் : முன்னையது : பக்கம் 45 - 49

(6) தீவானுல் அல்-அஅஷ்ஷி அல் கபீர் : முன்னையது, பக்கம் 69 - 71

(7) N. Kessel and H.Walton, op. cit, p. 100

(8) தீவானுல் அல்-அஅஷ்ஷி அல் கபீர் : முன்னையது : பக்கம் 10

(9) தீவான் தறபா இப்னுல் அப்த் : முன்னையது : பக்கம் 142

(10) அல் கம்ர் பைனத்திப்பி வல் பிக்ஹ் - கலாநிதி முஹம்மத் அலி அல் பார், தாருஸ் ஸுஊதிய்யா லின்னஷ்ரி வத்தவ்ஸீஃ, ஐந்தாம் பாகம், பக்கம் 226 - 230

(11) முன்னையது : பக்கம் 239 - 241

(12) அந்நுவைரி, பாகம் 4 பக்கம் 84

(13) முன்னையது

(14) A, Fisher, “Danger : Social Drinking : Recent Experiments Prove That it Can Cost More Than You Realize”, Readers Digest, July 1979

(15) Ibid

(16) புஹாரி, முஸ்லிம் இவ்விடயம் விரிவாக அல்முக்னி : இப்னு குதாமா, முன்னையது, பக்கம் 313

(17) அறிவிப்பவர் அபூ ஹுரைரா (றழி) நூல் : அஹ்மத் : இப்னு குதாமா, பாகம் 8, முன்னையது, பக்கம் 313

(18) பார்க்க அல்பதாவா - இப்னு தைமிய்யா, பாகம் 28 பக்கம் 261, ரியாழ் பதிப்பகம், 1963

(19) மார்க்கத்தில் தொழுகை முக்கியமானதல்ல என்ற நம்பிக்கையில் தொழுகையை விடுவது மார்க்கத்தை விட்டு மதம் மாறியதாகவும் அல்லாஹ்வை நிராகரித்ததாகவும் கருதப்படும் என்பது அனைத்து முஸ்லிம் சட்ட அறிஞர்களதும் கருத்தாகும். தொழுகையின் முக்கி யத் துவத்தை உணர்ந்தும் சோம்பலாக தொழுகையை விட்டுவிடுவது கூட மதம் மாறியதாகவே கருதப்படும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றார்கள்

(20) அஹ்மத். இப்னு கஸீரின் முன்னைய நூலை பாரக்க, பாகம் 2 பக்கம் 636

(21) J.Coleman, Abnormal Psychologyand Modern Life, Scott, Foresman Co, 1976

(22) New York Times, as quoted by Malcolm X, Autobiography of Malcolm X, Grove Press, 1966, p. 259

(23) Malcolm X, Ibid,

(24) கலாநிதி டிகிர் : அல் அஸ்ல் - தாருல் குதுப் அல் அரபிய்யா - டமஸ்கஸ் : 1974, பக்கம் 111 - 114

(25) M. Larsen, British Medical Journal, August 1954, as quoted by Digir, Ibid

(26) L.malpus, ed, Social behavior, Mc Graw Hill Book Co, 1967.

(27) Ibid

(28) இப்னு அப்பாஸ் (றழி) அறிவிக்கும் ஹதீஸ் : பார்க்க : மஜ்மஉல் பவாஇத் : முன்னையது, முதல் பாகம், பக்கம் 612

(29) பார்க்க : மஜ்மஉல் பவாஇத் : முன்னையது, முதல் பாகம், பக்கம் 240

(30) புஹாரியில் பதியப்பட்டுள்ள ஆயிஷா (றழி) அறிவிக்கும் ஹதீஸ் பார்க்க : பத்ஹுல் பாரி, ஷரஹ் ஸஹீஹ்அல் புஹாரி - பாகம் 9 பக்கம் 38, 39 அஸ்ஸலபிய்யா பதிப்பகம், கெய்ரோ. ஹதீஸ் எண் 4993

அத்தியாயம் - 05

மது தடுக்கப்பட்டமை தொடர்பான நவீன சமூகவியல் கருத்தாக்கமும் படிப்பினைகளும்

1. அல் காலிதூன மிஆ அஃலமுஹும் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்), மைகல் ஹார்ட், அரபு மொழிபெயர்ப்பு அனீஸ் மன்சூர், அல் மக்தப் அல் மிஸ்ரி அல் ஹதீஸ், ஐந்தாம் பதிப்பு 1984, பக்கம் 13-19

2. முன்னையது

3. Max Weber, The Protestant Ethic and the Spirit of Capitalism, Charles Scribner’s Sons, New York, 1958

4. முஹம்மத் புஆத் ஹிஜாஸி (அத்ஃயீர் அல் இஜ்திமாஇ), மக்தபா வஹ்பா, கெய்ரோ, 1978

5. W.Deaux, Social Psychology in the Eighties, Brooks Cole, Los Angeles, 1981.

6. S.Asch, Social Psychology, Prentice-Hall, 1952

7. L. Festinger, as Quoted by Malpass, op. cit, p. 171.

8. D.Popenoe, Sociology, Appleton, N.Y., 1971.
9. Ibid
10. திர்மிதி, அபூ தாவூத்
11. புகாரி, திர்மிதி, அபூ தாவூத்
12. புகாரி, முஸ்லிம்
13. அபூ தாவூத், திர்மிதி
14. சையித் குத்ப் (பீ ழிலாலில் குர்ஆன்) பாகம் 8, பக்கம் 40
15. புகாரி, முஸ்லிம், திர்மிதி
16. புகாரி, முஸ்லிம்
17. இப்னு உமர் (ரழி) அறிவிக்கம் இந்த ஹதீஸை ஏற்கனவே விரிவாக நாம் நோக்கியுள்ளோம்
18. Encyclopedia Brittannica, Vol. 18, William Benton Publishers, London, 1963.
19. Ibid, Vol. 18.
20. Ibid
21. Ibid
22. Ibid
23. J. Mc Connel, Understanding Human Behaviour, Holt, Rinehart and Winston, N.Y., 1977
24. J. Coleman, et. al, Abnormal Psychology and Modern Life, Scott, Foresman Co., London, 1984
25. J. Milam, op. cit., p. 45.
26. Encyclopedia Brittannica, op. cit, Vol. 18, p. 567-571.
27. Ibid.
28. Coleman, op, cit, p. 416
29. Kessel and Walton, op.cit, p.411
30. Ibid
31. Coleman, op.cit, p. 411.
32. Ibid

அத்தியாயம் - 06

மதீனத்து சமூகம் மீண்டும் மதுவை நாடிச் செல்லாமல் பாதுகாக்கப்பட்டமை

1. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்: கிதாபுல் அஷ்ரிபா, தஹ்கீக் அப்துல்லாஹ் இப்னு ஹஜ்ஜாஜ், அல் மர்கஸு ஸலபி லில்கிதாப் பதிப்பகம், கெய்ரோ, 1981
2. அறிவிப்பவர் முஸ்அப் இப்னு ஸஃத் இப்னு அபீ வக்காஸ் நூல் நஸாஇ
3. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் : கிதாபுல் அஷ்ரிபா, முன்னையது
4. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் : கிதாபுல் அஷ்ரிபா, முன்னையது
5. நஸாஇ
6. இதனை விரிவாக கீழ்வரும் நூலில் காணலாம் H.Benson, Beyond the Relaxation Response, Berkley Books, N.Y., 1985.
7. சையித் குத்ப் : பீ ழிலாலில் குர்ஆன், முன்னையது, பாகம் நான்கு
8. H. Blooffield, et. al. Transcendental Meditation: Discovering Inner Energy and Overcoming Stress, Delacorte, 1973
9. Time Magazine, October 13, 1975.
10. H.Benson, op. cit.
11. இமாம் அபூ ஹாமித் கஸ்ஸாலி, (இஹ்யாஃ உலூமித்தீன்), முதல் பாகம், தாருல் கலம், பெய்ரூத்.
12. முன்னையது
13. முன்னையது
14. இமாம் அஹ்மத் அறிவிக்கும் ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசை சஹீ ஹானது
15. கலாநிதி அஹ்மத் அல் காழி: தஃஸீருல் குர்ஆன் அலா வழாஇபில் ஜிஸ்மில் பஷரி வ கியாஸிஹி பி வாஸிததில் அஜ்ஹிஸதில் இலக்திரூனிய்யா : (இயாதாத் அக்பர்), புலோரிடா : 1984.
16. மாலிக் பத்ரி ‘‘அத் தௌருன் நப்ஸி வர் ரூஹி லில் இஸ்லாமி பீ முஸாஅததி மன் யுத்மினுல் கம்ர மினல் முஸ்லிமீன’’, இஸ்லாமும் உளவியலும் என்ற தலைப்பில் ரியாத் பல்கலைகழகத்தில் 1979 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை

17. L. Brill and L. Liebrman, Authority and Addiction, Little, Brown Co., Boston 1969

18. R. Hesse, (Issues in Drug Abuse Management), Fifth International Institute on the Prevention and Treatment of Drug Dependence, I.C.A.A., Lausanne, 1974.

19. இப்னு ஹஜர் அல் அஸ்கலானி, (கிதாபுல் இஸாபா பீ தம்யீஸி அஸ்ஸஹாபா) மூன்றாம் பாகம், பக்கம் 336, ஸஆதா பதிப்பகம், கெய்ரோ, 1328ஹி

20. ஹதீஸ்துறை அறிஞரான காழி பத்ருத்தீன் அபீ அப்துல்லாஹ் அஷ்ஷலபி அவரது நூலில் இந்த ஹதீஸை கண்டுகொள்ள முடியும் (அராஇபுன் வ அஜாஇபுல் ஜின்னி கமா யுஸவ்விருஹல் குர்ஆனு வஸ் ஸுன்னா), மக்தபதுல் குர்ஆன் லித்தபஃ, கெய்ரோ, 1928

21. இப்னுல் கையிம் அல் ஜவ்ஸிய்யா, (தஹ்தீபு மதாரிஜிஸ் ஸாலிகீன்), தஹ்தீப் அப்துல் முன்இம் ஸாலிஹ் அல் அலி, ஐக்கிய அரபுராச்சி யத்தின் நீதி மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சின் பதிப்பகம்: 1402ஹி.

22. கதையின் விரிவை பூரணமாக பார்க்க உஸ்தாத் சையித் குத்ப் அவர்களின் பீ ழிலாலில் குர்ஆனின் சூறதுல் முனாபிகூனுக்கான விரிவுரையை பார்க்கவும் (முன்னையது)

23. O. Mowrer, (Therapeutic Groups and Communities in Retrospect and Prospect), Proceedings of the First World Conference on Therapeutic Communities, The International Council on Alcohol and Addiction, Sweden, 1976.

24. Ibid

25. Ibid

26. Ibid

27. Brill, et. al, op. cit.

28. Kessel and Walton, op.cit.

29. D. Gelmanet, al, (Docs in Need of Detox) Newsweek, May 29,1989, Issue.

30. Ibid

31. I. Nylander, (The Children of AlcoholicFathers), Acta Peadiatrica Scandinavica, 49, Supplement 121, 1960.

32. Interview With the New York Times Published by Time Magazine, May 22, 1972 Issue.

33. அறிவிப்பவர் ஜாபிர்
34. புகாரி
35. முஸ்லிம்
36. தப்ரானி
37. மதுப்பாவனை ஆண்களிடம் பாலியல் தூண்டலை ஏற்படுத்துகிறது என்ற பொய்யான ஒரு கருத்து பாமரர்களிடம் பரவிக் காணப்டுகிறது. பாலியல் நடவடிக்கைகளை தொடங்குவதில் கடுமையான வெட்க உணர்வு உள்ளவர்களுக்கு மது துணை நிற்கிறது. ஆனால் அதனை தொடராக பயன்படுத்தும்போது திடீரென்று மலட்டுத்தனம், பெண் தன்மைகள், ஆண்மைக் குறைவு, பாலியல் பலவீனம் போன்றவை ஏற்படலாம் என்ற கருத்து காணப்படுகிறது
38. கர்ப்பிணித்தாய் மது அருந்தும்போது கருவிலுள்ள சிசு அதன் பாதிப்பை பெற்று பிறக்கும்போது அதற்கு அடிமையான நிலையில் பிறக்கிறது
39. பேர்நார்ட் வுல்ஷ் மற்றும் மார்கோஸ் க்ரான்த் : (ஆஸாரு இன்தாஜி அல்கஹோல் வல இத்திஜார் பிஹி அலஸ் ஸிஹ்ஹதில் ஆம்மதி): உலக சுகாதார நிறுவனத்தின் வெளியீடு இல 88, ஜெனீவா, 1985
40. கலாநிதி லுவிஸ், லன்டன் பல்கலைகழகத்தின் உளநோய்கள் பிரிவின் தலைவர், அதே போன்று பிக்ரி அஹ்மத் உக்காஸ் அவர்களும் தனது (அல் கம்ரு பில் பிக்ஹில் இஸ்லாமி), ஷரிகது உக்கஸ் லின்னஷ்ர் 1982, பக்கம் 66
41. திர்மிதி
42. முஸ்லிம்
43. புகாரி
44. அபூ தாவூத், திர்மிதி
45. புகாரி, முஸ்லிம்
46. அபுல் ஹஸன் அலி மாவர்தி : (அதபுத் துன்யா வத் தீன்) தஹ்கீக் முஸ்தபா அஸ்ஸகா, தாருல் குதுப் அல் இல்மியா, பெய்ரூத் 1955, பக்கம் 137
47. நஸாஇ, தார குத்னி. பார்க்க அப்துஸ்ஸலாம் தவீலாவுடைய (பிக்ஹுல் அஷ்ரிபா வஹத்திஹா), தாருஸ்ஸலாம் லித்தபாஅதி வன்னஷ்ர், கெய்ரோ 1986 : பக்கம் 270.

48. அஷ்ஷெய்கானி: (நய்லுல் அவ்தார்) மக்தபதுல் பாபி அல் ஹலபி, கெய்ரோ, திகதி குறிப்பிடப்படவில்லை, பாகம் 7 பக்கம் 157

49. புகாரி, அபூ தாவூத்: பார்க்க அஷ்ஷௌகானி : முன்னையது, பாகம் 7 பக்கம் 156.

50. புகாரி, அபூ தாவூத் : பார்க்க (மஜ்மஉல் பவாஇத்), முன்னையது, பாகம் 1 பக்கம் 819.

51. அபூ தாவூத், முன்னையது, பக்கம் 817

52. பார்க்க (அல் கம்ர் பில் பிக்ஹில் இஸ்லாமி) கலாநிதி பிக்ரி அஹ்மத் உக்காஸ் (முன்னையது)

53. பார்க்க முன்னையது பக்கம் 138

54. பார்க்க பிக்ஹுஸ் ஸுன்னா, ஸையத் ஸாபிக், தாருல் குதுப் அல் அரபி, 1983, இரண்டம் பாகம் பக்கம் 396.

55. அல் உவ்வா : முன்னையது.

அத்தியாயம் - 07

மது அருந்துவதற்கான இஸ்லாமிய தண்டனைக்கும் போதைக்கு அடிமையானோருக்கு வழங்கப்படும் நவீன உளவியல் சிகிச்சைக் கும் இடையிலான ஒப்பீட்டாய்வு.

1. M. Gurvitz in G. Goldman and D. Milman, ed., psychoanalytic psychotherapy, Addison – Welsy, 1978

2. James Milam, The Emergent Comprehensive Concept Alcoholism, ACA Press, Washington, 1976

3. Goldman and Milmam,op. cit.

4. Ibid.

5. K. O’Leary and G. Wilson, Behavior Therapy, prentice Hall Inc., 1975.

6. Schuckit and haglund, in estes and Heinemann, Alcoholism, The C.v. Mosby Co., London, 1982.

7. கலாநிதி ஸலாஹ் முகைமிர், அல் மத்ஹல் இலஸ் ஸிஹ்ஹதின் நப்ஸிய்யா. மூன்றாம் பதிப்பு ஏன்ஜலோ பதிப்பகம் 1979, பக்கம் 262,263

8. S.Rachman and J. Teasdale, Aversion Therapy and Behaviour Disorders, Routledge and Kagan Paul, 1969

9. Ibid.

10. Yalom, The Theory and Practice of Group Psychotherapy, 3rd ed., Basic Books, Inc., New York, 1985, p. 435-36

11. Rachman, op. cit, p. 16.

12. Ibid.

13. Steffen and Nathan, "Behavioral Approaches to Alcohol Abuse" in Estes and Heinemann, op. cit, p. 16

14. Rachman, op. cit, p. 16

15. Rachman, Ibid.

16. W. Voegtlin, et. al., "An Evaluation of the Aversion Treatment of Alcoholism" ,. Quarterly Journal of Studies on Alcoholism, 11:73641, 1950

17. O. Lovaas et. al, "Building Social Behaviour in Autistic Children by the Use of Electric Shock" , in Richard Walters et.al,ed,. Punishment, Penguin Publishers, London, 1972

18. D. Rimm and J. Masters, Behaviour Therapy, Academic Press, London, 1979.

19. H.J. Eysenk, Fact and Fiction in Psychology, pelican Books, 1965. இப்புத்தகம் கதரி ஹப்னி மற்றும் ரஊப் நழ்மி போன்றவர்களால் ''அல் ஹகீகா வல் வஹ்ம்'' என்று அரபு மொழியில் பெயர்க்கப் பட்டுள்ளது

20. நழ்மி ரஊபின் மொழிபெயர்ப்பிலிருந்து சுருக்கமாக

21. நழ்மி ரஊபின் மொழிபெயர்ப்பிலிருந்தும் அய்சென்கின் புத்தகத்தி லிருந்தும் சுருக்கமாக

22. Rimm and Masters, op. cit., p. 319-321

23. தாஹா இப்றாஹூம் ஜர்பூஃ : ஹாதா அவ் அத்தகல்லுப், அல் மர்கஸ் அத்திபாஇ காடூம், 1986. பக்கம் 119, 120

24. S. Garfield and A. bargin, Handbook of Psychotherapy and Behaviour Change, 2nd. ed., John Wiley & Sons, Toronto, 1978, p. 526-27

25. N. Estes and E. Heinemann, op. cit.

26. "The Gene and the Bottle : Scientists Link Alcoholism to Flawed Bit of DNA", Summarized from Blum and Noble, Journal of the American Medical Association Newsweek, April 30, 1990

27. R. Atkinson, et. at, Introduction to Psychology, 10th ed. HBJ Publishers, London, 1990
28. Sheila Blume, "Psychodrama in the Treatment of Alcoholism", in Estes and Heinemann, op. cit.
29. Milam, op. cit.
30. Festinger, op. cit.
31. Estes and Heinmann, op. cit.

அத்தியாயம் - 08

போதைக்கு அடிமையானோருக்கு சிகிச்சை செய்வதில் இறை நம்பிக்கையின் பங்கு

1. 1.J.Milam, op.cit.
2. Ibid
3. Dr.Karl Schmidt, The Electro-stimulation Rehabilitation Programme and Its Adapations to Islamic Culture, Third Pan Arab Congress on Psychiatry, Amman, april,1987
4. மஜ்மூஃ பதாவா ஷைகுல் இஸ்லாம் அஹ்மத் இப்னு தைமிய்யா, பத்தாம் பாகம் பக்கம் 647
5. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் : கிதாபுஸ் ஸுஹ்த், தாருல் குதுப் அல் இல்மிய்யா, பெய்ரூத் 1983 பக்கம் 398
6. ஹதீஸ் அறிவிப்பவர் அபூ ஸஈத் அல் குத்ரி : மஜ்மஉ ஸவாஇத் வ மன்பஉல் பவாஇத், ஐந்தாம் பாகம், தாருல் குதுப் அல் அரபி, பெய்ரூத் 1982 பக்கம் 201
7. இப்னு தைமிய்யா
8. James Baldwin, The Fire Next Time, Penguin Books London, 1962, p. 39 and p.68



1932 ஆம் ஆண்டு சூடானின் ருபர்ஆவில் பிறந்த பேராசிரியர் மாலிக் பத்ரி, பெய்ரூத்தின் அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் தனது இளமானி, முதுமானிப் பட்டங்களையும், இங்கிலாந்தின் Leicester பல்கலைக்கழகத்தில் 1961ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தையும் ஈட்டிக் கொண்டார். பல பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ள அவர், உளவியல் சார்ந்த துறைகளை நிறுவிக் கொள்வதில் மத்திய கிழக்கின் சில பல்கலைக்கழகங்களுக்குப் பேருதவி புரிந்துள்ளார். UNESCO, WHO முதலிய சர்வதேச நிறுவனங்களும் இவரது சேவையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளன. மலேசியாவின் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் கௌரவமிக்க இப்ன்-கல்தூன் பீடத்தை அலங்கரித்துள்ளார் பேராசிரியர் மாலிக் பத்ரி.

சகோதரர் கலாநிதி மாலிக் பத்ரி அவர்கள் உளவியல் துறைப் பேராசிரியர். அதன் பல்வேறுபட்ட பிரிவுகளிலும் அவருக்கு ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் உண்டு. உள்ளத்தைக் கட்டியெழுப்புவதிலும் நெறிபிறழும் போது அதனை சீரமைப்பதிலும் இஸ்லாத்தின் எல்லையற்ற ஆற்றல்களை நிரூபிப்பதற்கு பெரு முயற்சியையும் நீண்ட காலத்தையும் அவர் செலவிட்டிருக்கிறார். இன்றைய உலகில் குற்றச் செயல்களதும் பிறழ்வுகளதும் வரிசையில் கொலை மற்றும் பணம் சார்ந்த குற்றங்களை அடுத்து மூன்றாவது அபாயகரமான விடயமாக ஆய்வாளர்கள் கணிக்கின்ற -அதேவேளை துர்ச் செயல்களின் தாய் என நாம் கருதுகின்ற- சமூக, உளவியல் பிரச்சினையொன்று குறித்த ஆய்வாக அவரது இந்நூல் அமைந்துள்ளது. இதுபோன்ற பிரச்சினைகளை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் எவ்வாறு ஆய்வு செய்வது என வழிகாட்டும் ஆக்கமாக இது அமைந்துள்ளது.

-கலாநிதி தாஹா ஜாபிர் அல் அல்வானி-



Published by
Fuzin Texts
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-61-6